தமிழ் 6

தமிழ்நாட்டுப்
பாட நூல் நிறுவனம்

தமிழ்ப் பாடநூல்

ஆறாம் வகுப்பு

தீண்டாமை ஒரு பாவச் செயல்

தீண்டாமை ஒரு பெருங்குற்றம்

தீண்டாமை மனிதத்தன்மையற்ற செயல்

தமிழ்நாட்டுப்
பாடநூல் நிறுவனம்
சென்னை

© தமிழ்நாட்டு அரசு

முதல் பதிப்பு 1982

ஆசிரியர்கள்:

புலவர் தணிகை உலகநாதன்,
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்,
இராசாசி நகர், வில்லிவாக்கம்,
சென்னை-600 049

புலவர் நெல்லை ஆ. கணபதி,
தமிழாசிரியர்,
அறிஞர் அண்ணா அரசு
மேல் நிலைப் பள்ளி,
சென்னை-600 090

மேலாய்வாளர்கள்:

புலவர் கோ. வில்வபதி,
ஓய்வுபெற்ற தமிழாசிரியர்,
ஏஜ 49, அண்ணா நகர்,
சென்னை-600 040

திரு. கு. சோ. முருகன்,
தமிழாசிரியர்,
சர்வ ஜன மேல் நிலைப் பள்ளி,
கோயமுத்தூர்-641 004

விலை: ரூ. 2·50

இந்நூல் இந்திய அரசு சலுகை விலையில் வழங்கிய 60 ஜி. எஸ். எம். தாளில் அச்சிடப்பட்டுள்ளது.

அச்சிட்டோர் :
டயோசீசன் அச்சகம், சென்னை-600 007

தேசிய கீதம்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா.
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா.
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே!

—மகாகவி இரவீந்திரநாத தாகூர்

நாட்டுப்பண் — பொருள்

இந்தியத் தாயே! மக்களின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற நீயே எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செய்கிறாய்.

நின் திருப்பெயர் பஞ்சாபையும், சிந்துவையும், கூர்ச்சரத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக்கிளர்ச்சி அடையச்செய்கிறது.

நின் திருப்பெயர் விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது; யமுனை, கங்கை ஆறுகளின் இன்னொலியில் ஒன்றுகிறது; இந்தியக் கடலலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன; நின் புகழைப் பரவுகின்றன.

இந்தியாவின் இன்ப துன்பங்களைக் கணிக்கின்ற தாயே, உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

'நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்' என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

'ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும் பூசல்களுக்கும் ஏனைய அரசியல் - பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்' என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.'

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடைந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
தெக்கணமும் அதிற்சிறந்த திரவிடநல் திருநாடும்
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே!
உன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே!

—'மனோன்மணீயம்' பெ. சுந்தரம் பிள்ளை

இந்தியாவின் வருங்காலம் அதன் வகுப்பறைகளில் உருவாக்கப்படுகிறது.

—கல்வி அறிக்கை

பொருளடக்கம்

செய்யுட்பகுதி

		பக்கம்
I.	வாழ்த்து ...	1
II.	நீதிப் பகுதி	
	1. திருக்குறள் ...	3
	2. நன்னெறி ...	8
	3. நீதி நெறி விளக்கம் ...	10
III.	கதைப் பகுதி	
	1. பஞ்ச தந்திரப் பாடல் ...	13
	2. ஆசிய ஜோதி ...	17
	3. குடும்ப விளக்கு ...	20
IV.	மறுமலர்ச்சி இலக்கியம்	
	1. முப்பெருந்தேவியர் வாழ்த்து ...	23
	2. கொடி வணக்கம் ...	23
	3. தமிழ்நாடு ...	26
	4. மொழி ...	27
	5. குழந்தை இலக்கியம் ...	28
V.	தேசிங்கு ராசன் கதை ...	30
VI.	நாட்டுப்புறப் பாடல்கள் ...	33

மனப்பாடப் பகுதி

1.	திருவருட்பா	8	வரிகள்
2.	திருக்குறள்	40	,,
3.	நன்னெறி	20	,,
4.	நீதி நெறி விளக்கம் (1, 2, 3, 5)	16	,,
5.	முப்பெருந்தேவியர் வாழ்த்து	8	,,
6.	கொடி வணக்கம் (1—10 வரிகள்)	10	,,
		102	,,

உரைநடைப் பகுதி

			பக்கம்
1.	தாய்மொழியின் தனிச்சிறப்பு	...	35
2.	கவரி வீசிய காவலன்	...	42
3.	தந்தையன்பு	...	48
4.	காவிரி வழங்கும் கவின்மிகு காட்சிகள்	...	56
5.	பர்மியர்	...	64
6.	பசும்பொன் உ. முத்துராமலிங்கத் தேவர்	...	71
7.	எங்கள் தஞ்சைப் பயணம்	...	80
8.	பழந்தமிழ் நாடு	...	88
9.	உள்ளம் கவர்ந்த நல்ல பரிசு (உரையாடல்)	...	97
10.	புகைவண்டி கண்ட பொறியாளர்	...	105
11.	கரடி	...	112
12.	இளம் பெருவீரன்	...	118
13.	குழந்தை உள்ளம்	...	125
14.	தமிழ்நெறிக் காவலர்	...	132
15.	சிறு சேமிப்பு (கடிதம்)	...	140
16.	பிறர்க்கென வாழ்ந்த பெரியோன்	...	148
17.	ஊராட்சி மன்றமும் ஒன்றியமும் (உரையாடல்)	...	155
18.	முக்கனிகள்	...	162
19.	கைவிளக்கேந்திய காரிகையார்	...	170
20.	நல்லவர் நட்பு (நாடகம்)	...	178

செய்யுட்பகுதி

I. வாழ்த்து

திருவருட்பா

பொன்னாகி, மணியாகிப் போக மாகிப்
புறமாகி, அகமாகிப் புனித மாகி,
மண்ணாகி, மலையாகிக் கடலு மாகி,
மதியாகி, ரவியாகி, மற்று மாகி,
முன்னாகிப் பின்னாகி, நடுவு மாகி,
முழுதாகி, நாதமுற முழங்கி யெங்கும்
மின்னாகிப் பரவியின்ப வெள்ளம் தேக்க
வியன்கருணை பொழிமுகிலாய் விளங்குந் தேவே!

— இராமலிங்க அடிகளார்

குறிப்புரை

நூல்: திரு + அருள் + பா = திருவருட்பா. கடவுள் திருவருளால் பாடப்பட்ட பாடல்களின் தொகுதி என்பது இதன் பொருள். இந்நூல் ஆறு பிரிவுகளாக அமைந்துள்ளது. ஒவ்வொரு பிரிவுக்கும் 'திருமுறை' என்பது பெயர். இந் நூலில் அமைந்த பாடல்கள் இனிமையும் எளிமையும் நிறைந்தவை; உள்ளத்தை உருக்கி, உயர்ந்த நெறி காட்டுபவை.

ஆசிரியர்: 'திருவருட்பா' இயற்றியவர் இராமலிங்க அடிகளார். இவர் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள மருதூரில் கருணீக வேளாளர் மரபில் இராமையா பிள்ளைக்கும் சின்னம்மையாருக்கும் பிறந்தவர்; வடலூரில் சத்திய ஞான சபையை நிறுவிச் சமரச சன்மார்க்கத்தைப் பரப்பப் பாடுபட்டவர்; 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்னும் உயர் நெறியைப் பரப்பியவர். மனு முறை கண்ட வாசகம், சீவகாருணிய ஒழுக்கம் என்னும் உரைநடை நூல்களையும் இவர் இயற்றியுள்ளார் காலம் கி.பி. 1823–1874.

அருஞ்சொற்பொருள்

பொன் - தங்கம்; மணி - நவமணி; போகம் - இன்பம்; புறம் - வெளியே; அகம் - உள்ளே; புனிதம் - தூய்மை; மதி - சந்திரன்; ரவி - சூரியன்; நாதம் - ஒலி; தேக்க - தேங்கி நிறைய; முகில் - மேகம்.

பயிற்சி

கருணை மழை பொழிகின்ற முகிலாகிய இறைவன் எவ்வா றெல்லாம் விளங்குகிறான்?

II. நீதிப் பகுதி

1. திருக்குறள்

அறன் வலியுறுத்தல்

மனத்துக்கண் மாசிலன் ஆதல்; அனைத்தறன்
ஆகுல நீர பிற. 1

அழுக்கா றவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்ற தறம். 2

அன்புடைமை

என்பில் அதனை வெயில்போலக் காயுமே
அன்பில் அதனை அறம். 3

புறத்துறுப் பெல்லாம் எவன்செய்யும், யாக்கை
அகத்துறுப் பன்பி லவர்க்கு? 4

இனியவை கூறல்

இன்சொல் இனிதீன்றல் காண்பான் எவன்கொலோ
வன்சொல் வழங்கு வது? 5

இனிய உளவாக இன்னாத கூறல்
கனிஇருப்பக் காய்கவர்ந் தற்று. 6

செய்ந்நன்றி அறிதல்

காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது. 7

எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு. 8

அடக்கமுடைமை

அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும். 9

எல்லார்க்கும் நன்றாம் பணிதல்; அவருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து. 10

பொறையுடைமை

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார்ப் பொறுத்தல் தலை. 11

ஒறுத்தார்க் கொருநாளை இன்பம்; பொறுத்தார்க்குப்
பொன்றும் துணையும் புகழ். 12

புறங்கூறாமை

கண்ணின்று கண்ணறச் சொல்லினும் சொல்லற்க
முன்னின்று பின்னோக்காச் சொல். 13

ஏதிலார் குற்றம்போல் தம்குற்றம் காண்கிற்பின்
தீதுண்டோ மன்னும் உயிர்க்கு? 14

தீவினை அச்சம்

மறந்தும் பிறன்கேடு சூழற்க; சூழின்
அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு. 15

தீயவை செய்தார் கெடுதல் நிழல்தன்னை
வீயா தடியுறைந் தற்று. 16

ஒப்புரவறிதல்

ஊருணி நீர்நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு. 17

பயன்மரம் உள்ளூர்ப் பழுத்தற்றால் செல்வம்
நயனுடை யான்கண் படின். 18

ஈகை

வறியார்க்கொன் றீவதே ஈகை; மற்றெல்லாங்
குறியெதிர்ப்பை நீர துடைத்து. 19

அற்றார் அழிபசி தீர்த்தல்; அஃதொருவன்
பெற்றான் பொருள்வைப் புழி. 20

—திருவள்ளுவர்

குறிப்புரை

நூல்: குறள் என்பது இரண்டடிகளாலாகிய வெண்பா என்னும் ஒரு பாட்டு வகை. இந்நூல் முழுதும் அவ்வகைப் பாட்டு களாலேயே பாடப்பட்டுள்ளமையால் 'திருக்குறள்' என்று பெயர் பெற்றது. இஃது உலக மக்கள் அனைவருக்கும் பொதுவான உயர்ந்த நீதிகளைக் கூறுவதால், 'உலகப் பொது மறை' எனப் போற்றப்படுகிறது. இந்நூல் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்று மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளது. உட்பிரிவுகளுக்கு 'அதிகாரம்' என்பது பெயர். 133 அதிகாரங்களும் அதிகாரத்துக்குப் பத்துப் பாடல்களாக 1,330 பாடல் களும் இந்நூலில் உள்ளன. 'எல்லாப் பொருளும் இதன் பால் உள; இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை' என்று பாராட்டப்படும் பெருமையுடையது இந்நூல்.

ஆசிரியர்: இந்நூலை இயற்றியவர் திருவள்ளுவர். இவர் இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்தவர். இவருடைய வரலாறு தெளிவாக விளங்கவில்லை. இவர் மயிலாப் பூரில் வாழ்ந்தவர் என்பர். அதனால் மயிலாப்பூரில் இவருக்கு ஒரு கோயில் அமைக்கப்பட்டுள்ளது. இவர் நூலறிவும் உலகியல் அறிவும் நிரம்பியவர்; அறம் உரைப்பதில் வல்லவர்; விரிந்து பரந்த கருத்துகளையும் சுருங்கிய சில சொற்களால் சொல்லும் திறம் மிக்கவர். சென்னை நுங்கம்பாக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள வள்ளுவர் கோட்டம் இவருக்குரிய அழியாத நினைவுச் சின்னமாகும்.

அருஞ்சொற்பொருள்

1. மாசிலன் (மாசு + இலன்) - குற்றம் இல்லாதவன்; அனைத்து - அவ்வளவினது; ஆகுல நீர - ஆரவாரத்தன்மை யுடையவை; பிற - சொல்லும் வேடமும்.
2. அழுக்காறு - பொறாமை; அவா - ஆசை; வெகுளி - கோபம்; இன்னாச்சொல் - கொடுஞ்சொல்; இழுக்கா - விலக்கி; இயன்றது - செய்யப்படுவது.
3. என்பு - எலும்பு; அறம் - அறக்கடவுள்; காயும் - துன்புறுத் தும்; 'அன்புஇல் அதனை அறம் காயும்' என இயைக்க.
4. புறத்து உறுப்பு - உடம்பின் வெளி உறுப்புகளாகிய கண், காது, கை, கால் போன்றவை; இடம், பொருள், ஏவல்

முதலியனவுமாம்; யாக்கை - உடம்பு; அகத்து உறுப்பு - உள்ளுறுப்பு; எவன் செய்யும் - என்ன நன்மையைச் செய்யும்?

5. இன்சொல் - இனிய சொல்; இனிது ஈன்றல் - நன்மை தருதல்; வன்சொல் - கடுஞ்சொல்; காண்பான் - அறிபவன்; வழங்குவது - சொல்லுவது; எவன் கொல் - ஏன்?

6. இனிய - இனிமையான சொற்கள்; உளவாக - இருக்க; இன்னாத - துன்பம் தரும் கடுஞ்சொற்கள்; கனி - அவ்வை உண்ட நெல்லிக்கனி போன்ற இனிய பழங்கள்; காய் - எட்டிக்காய் போன்ற நஞ்சான காய்கள்; கவர்ந்தற்று (கவர்ந்தால் + அற்று) - உண்டதைப் போன்றது.

7. காலத்தினால் - ஒருவனுக்குத் துன்பம் வந்த நேரத்தில்; நன்றி - உதவி; ஞாலம் - உலகம்; மாணப் பெரிது - மிகப் பெரிது.

8. நன்றி - அறம்; கொன்றார் - அழித்தவர்; (உய்வுண்டாம் - உய்வு + உண்டாம்) உய்வு - தப்பிப் பிழைக்கும் வழி; செய்ந் நன்றி - பிறர் செய்த உதவி; கொன்ற மகற்கு - அழித்த வனுக்கு.

9. அமரருள் - தேவர்களுள்; உய்க்கும் - செலுத்தும்; ஆர்இருள் - தாங்குவதற்கு அரிய இருள், நிறைந்த இருளுமாம் (நரகம்).

10. பணிதல் - அடக்கம்; செல்வம் தகைத்து - மற்றொரு செல்வமாகும் சிறப்புடையது.

11. அகழ்வாரை - தன்னைத் தோண்டுபவரை; இகழ்வார் - தம்மை இகழ்ந்தவரை; தலை - சிறந்தது.

12. ஒறுத்தார்க்கு - தண்டித்தவர்க்கு; ஒரு நாளை - தண்டித்த அவ்வொரு நாள்மட்டும்; பொன்றும்துணையும் - உலகம் அழியும்வரை.

13. கண் நின்று - எதிரே நின்று; கண் அற - தாட்சணியம் இல்லாமல்; முன் இன்று - முன்னே இல்லாமல்; பின் நோக்கா - பின்னால் நேரக்கூடிய குற்றத்தை எண்ணிப் பாராத.

14. ஏதிலார் - அயலார்; மன்னும் உயிர்க்கு - நிலை பேறுடைய உயிர்களுக்கு; தீது உண்டோ - துன்பம் உண்டோ? இல்லை; காண்கிற்பின் - காண வல்லவராயின்.

15. சூழற்க - எண்ணாது ஒழிக; அறம் - அறக்கடவுள்; சூழ்ந் தவன் கேடு - அங்ஙனம் எண்ணியவனுக்குக் கேட்டினை; சூழும் - எண்ணும்.

16. வீயாது - தன்னைவிட்டு நீங்காது; அடியுறைந்தற்று - காலடியில் தங்கிய தன்மையுடையது; உறைந்தால் + அற்று.

17. ஊருணி (ஊர் + உணி) - ஊராரால் நீர் உண்ணப்படும் குளம்; உலகு - உலகநடை, ஒப்புரவு; அவாம் - விரும்பும்; திரு - செல்வம்.

18. பயன்மரம் - பழுத்துப் பயன்படும் மரம்; நயன் உடை யான் - ஒப்புரவு செய்பவன்; படின் - பொருந்துமாயின்; உள்ளூர் - ஊர் நடுவே; பழுத்தற்று - பழுத்தாற்போன்றது.

19. வறியார்க்கு - ஒரு பொருளும் இல்லாதவர்க்கு; ஒன்று ஈவதே - அவர் விரும்பும் ஒரு பொருளைத் தருவதே; குறி எதிர்ப்பு - அளவு குறித்து வாங்கி, வாங்கிய அளவே திருப்பிக்கொடுப்பது; அஃதாவது பயனை எதிர்பார்த்துக் கொடுப்பது; நீரது உடைத்து - தன்மையுடையது.

20. அற்றார் - கைப்பொருள் ஒன்றும் இல்லாத வறியார்; அழி பசி - மிக்க பசி; தீர்த்தல் - நீக்குக. 'பொருள் பெற்றான் ஒருவன்' என இயைக்க; வைப்புஉழி - பொருளைச் சேமித்து வைக்கும் இடம்.

பயிற்சி

1. அறத்திற்கு வள்ளுவர் கூறும் இலக்கணம் யாது?
2. அன்பின் இன்றியமையாமையினையும் சிறப்பினையும் எழுதுக.
3. 'கனியிருப்பக் காய்கவர்ந் தற்று' — எது?
4. 'ஞாலத்தின் மாணப் பெரிது' — எது?
5. யார்க்கு உய்வு உண்டு? யார்க்கு உய்வு இல்லை?
6. பணிதல் யார்க்கு மிக இன்றியமையாதது? ஏன்?
7. பொறையுடைமைபற்றி வள்ளுவர் கூறுவன யாவை?
8. புறங்கூறுதலைத் தவிர்க்க வள்ளுவர் கூறும் வழி யாது?
9. 'மறந்தும் பிறன்கேடு சூழற்க' — ஏன்?
10. தீவினை செய்தார் கெடுதல் எது போன்றது?
11. ஒப்புரவாளன் செல்வம் பயன்படும் முறையினை விளக்குக.
12. ஈகை என்பதற்கு வள்ளுவர் கூறும் விளக்கம் யாது?
13. அற்றார் அழிபசி தீர்த்தலின் சிறப்பை எழுதுக.

2. நன்னெறி

பிரிந்த நட்பு

நீக்கம் அறும்இருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கின் அவர்பெருமை நொய்தாகும்! — பூக்குழலாய்!
நெல்லின் உமிசிறிது நீங்கிப் பழமைபோல்
புல்லினும் திண்மைநிலை போம். 1

பெரியவர் பெருமை

பெரியவர்தம் நோய்போல் பிறர்நோய்கண் டுள்ளம்
எரியின் இழுதாவர் என்க; — தெரிஇழாய்!
மண்டு பிணியால் வருந்தும் பிறஉறுப்பைக்
கண்டு கலுழுமே கண். 2

கைம்மாறு கருதாது உதவுபவர்

கைம்மாறு உகவாமல் கற்றறிந்தோர் மெய்வருந்தித்
தம்மால் இயல்உதவி தாம்செய்வர்; — அம்மா!
முளைக்கும் எயிறு முதிர்சுவை நாவிற்கு
விளைக்கும் வலியனதாம் மென்று. 3

நல்லோர் வரவும் தீயோர் வரவும்

நல்லோர் வரவால் நகைமுகம்கொண் டின்புறீஇ
அல்லோர் வரவால் அழுங்குவார் — வல்லோர்;
திருந்தும் தளிர்காட்டித் தென்றல்வரத் தேமா
வருந்தும் சுழல்கால் வர. 4

அரசரும் புலவரும்

பொன்அணியும் வேந்தர் புனையாப் பெருங்கல்வி
மன்னும் அறிஞரைத்தாம் மற்றொவ்வார்; — மின்னும்
[அணி
பூணும் பிறஉறுப்புப் பொன்னே! அதுபுனையாக்
காணும்கண் ஒக்குமோ காண்? 5

—சிவப்பிரகாசர்

குறிப்புரை

நூல்: நன்மை + நெறி — நன்னெறி. மக்களுக்கு இன்றியமையாத நல்ல வழிகளைக் கூறும் நூல் என்பது பொருள். இளைஞர்களும் படித்துப் பயன்பெறும் வகையில் எளிய நடையில் அமைந்தது இந்நூல். இந்நூலில் நாற்பது பாடல்கள் உள்ளன.

ஆசிரியர்: நன்னெறியை இயற்றியவர் சிவப்பிரகாசர். இவர் காஞ்சிபுரத்தில் பிறந்தவர்; துறைமங்கலத்தில் வாழ்ந்தவர். அதனால் துறைமங்கலம் சிவப்பிரகாசர் என வழங்கப்பட்டார். இவர் இளமையிலேயே துறவுபூண்டவர். **பிரபுலிங்க லீலை, நால்வர் நான்மணி மாலை, பழமலை அந்தாதி, சோணசைல மாலை** முதலிய வேறு நூல்களையும் இவர் இயற்றியுள்ளார். காலம்: கி.பி. 17ஆம் நூற்றாண்டு.

அருஞ்சொற்பொருள்

1. நீக்கம் அறும் - பிரிதல் இல்லாத; புணர்ந்தாலும் - சேர்ந்தாலும்; நொய்தாகும் - அற்பமாகும்; பூக்குழலாய் - மலர் முடித்த கூந்தலை உடைய பெண்ணே; பழமைபோல் புல்லினும் - மீண்டும் பழையபடி சேர்ந்தாலும்; திண்மை நிலை - பழைய உறுதிநிலை.

2. எரியின் இழுதாவர் - நெருப்பிலிட்ட வெண்ணெய்போல் உருகுவர்; தெரிஇழாய் - தேர்ந்தெடுக்கப்பட்ட அணிகள் புனைந்திருக்கும் பெண்ணே; இழை - அணி; மண்டு பிணி - மிக்க நோய்; கலுழும் - வருந்தும்.

3. கைம்மாறு - பதில் உதவி; உகவாமல் - விரும்பாமல்; மெய் - உடல்; இயல் உதவி - செய்ய முடிந்த உதவி; எயிறு - பற்கள்; வலியன - கடினமான உணவுப் பண்டங்கள்; முதிர் சுவை - மிக்க சுவை. அம்மா என்பது வியப்பைக் குறிக்கும்.

4. நகைமுகம் - மகிழ்ச்சியோடு கூடிய முகம்; இன்பு - இன்பம்; உறீஇ - அடைந்து; அல்லோர் - நல்லவர் அல்லாத தீயோர்; அழுங்குவார் - வருந்துவார்; வல்லோர் - கல்வியறிவில் வல்லவர்; திருந்தும் - அழகில் சிறந்து விளங்கும்; தென்றல் - தென்றற் காற்று; தேமா - இனிய பழங்களைத் தரும் மாமரம்; சுழல் கால் - சுழல் காற்று.

5. பொன் அணியும் வேந்தர் - பொன்னால் ஆன அணிகலன்களை அணிந்துகொள்ளும் அரசர்; புனையா - பொன் அணி அணியாத; மன்னும் - நிலைபெற்ற; அறிஞரை - அறிவு

டைய சான்றோர்க்கு; ஒவ்வார் - ஒப்பாக மாட்டார்; மின்னும் - ஒளி வீசுகின்ற; அணி - ஆபரணம்; பிற உறுப்பு - காது, மூக்கு போன்ற ஏனைய உறுப்புகள்; அது புனையா - அவ்வணியை அணியாத.

பயிற்சி

1. சிவப்பிரகாசரைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. 'நட்புக்குப் பிரிவு கூடாது' — ஏன்?
3. பெரியவர் இயல்பு யாது? அதற்குக் கூறப்பட்ட உவமை யாது?
4. நாவினை எடுத்துக்காட்டி நன்னெறி விளக்கும் உண்மை யாது?
5. தேமா எப்போது திருந்தும்? எப்போது வருந்தும்? அதனால் விளங்கும் உண்மை யாது?
6. அரசர் அறிஞரை ஒவ்வார் என்பதனைச் சிவப்பிரகாசர் எங்ஙனம் விளக்குகிறார்?

3. நீதி நெறி விளக்கம்

கற்றதைப் போற்றல்

வருந்தித்தாங் கற்றன ஓம்பாது மற்றும்
பரிந்துசில கற்பான் தொடங்கல்; — கருந்தனம்
கைத்தலத்த உய்த்துச் சொரிந்திட் டரிப்பரித்தாங்(கு)
எய்த்துப் பொருள்செய் திடல். 1

கெடுவது காட்டும் குறிகள்

நட்புப் பிரித்தல், பகைநட்டல், ஒற்றிகழ்தல்,
பக்கத்தார் யாரையும் ஐயுறுதல், — தக்கார்
நெடுமொழி கோறல், குணம்பிறி தாதல்
கெடுவது காட்டுங் குறி. 2

நல்லோரின் நற்பண்புகள்

கண்ணோக் கரும்பா, நகைமுகமே நாண்மலரா,
இன்மொழியின் வாய்மையே தீங்காயா, — வண்மை
பலமா, நலங்கனிந்த பண்புடையா ரன்றே
சலியாத கற்ப தரு? 3

செல்வர் அறம் செய்தல்

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங் களிறோ துயருறா; — ஆங்கதுகொண்(டு)
ஊரும் எறும்பிங் கொருகோடி உய்யுமால்
ஆருங் கிளையோ டயின்று. 4

சிறிய பகையெனப் புறக்கணித்தல் கூடாது

சிறிய பகையெனினும் ஓம்புதல் தேற்றார்
பெரிதும் பிழைபா டுடையர்; — நிறைகயத்து
ஆழ்நீர் மடுவில் தவளை குதிப்பினும்
யானை நிழல்காண் பரிது. 5

—குமரகுருபரர்

குறிப்புரை

நூல்: *மக்களுக்கு வேண்டிய உயர்ந்த நீதி வழிகளை விளக்கிக் கூறுவதால் இந்நூல்* **நீதி நெறி விளக்கம்** *எனப் பெயர் பெற்றது. இது திருக்குறள் கூறும் அறநெறிகளில் சிறந்த வற்றை இளைஞரும் படித்துணருமாறு எளிய அழகிய முறையில் எடுத்துக் கூறுகிறது. மதுரையை ஆண்ட திருமலை நாயக்கருடைய வேண்டுகோளால் இயற்றப் பட்டது இந்நூல்.*

ஆசிரியர்: *நீதி நெறி விளக்கத்தை இயற்றியவர்* **குமரகுருபரர்**. *இவர் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள ஸ்ரீவைகுண்டம் என்னும் ஊரில் பிறந்தார். இளமையிலேயே துறவு மேற்கொண்ட இவர் காசிவரை சென்று சைவத்தையும் தமிழையும் வளர்த்தார். இவர் அமைத்த மடம் இன்றும் காசியில் உள்ளது.* **மதுரைக் கலம்பகம், மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனாட்சியம்மை குறம், சகலகலாவல்லி மாலை** *முதலிய பல நூல்களை இவர் பாடியுள்ளார். காலம்: கி.பி. 17ஆம் நூற்றாண்டு.*

அருஞ்சொற்பொருள்

1. ஓம்பாது - பாதுகாவாமல்; பரிந்து - விரும்பி; கைத்தலத்த - கையில் உள்ள; கருந்தனம் - பெரிய செல்வம்; உய்த்துச் சொரிந்திட்டு - வீசி எறிந்துவிட்டு; எய்த்து - உடல் இளைக்கப் பாடுபட்டு; அரிப்பரித்தல் - கடைத்தெரு போன்ற இடங்களில் உள்ள மண்ணை ஏதேனும் சிறிது பொருள் கிடைக்கும் என்று கருதி நீர் ஊற்றிக் கொழித்தல்.

2. பகை நட்டல் - பகைவரை நண்பராக்குதல்; ஒற்று - ஒற்றர் கூறும் செய்தி; ஒற்றர் - இரகசியமாகச் செய்தி அறிவோர்; இகழ்தல் - புறக்கணித்தல்; நெடுமொழி கோறல் - அறிவுரைகளை அழித்தல்.

3. கண்ணோக்கு - கண்களால் அருளோடு பார்க்கும் பார்வை; நகைமுகம் - மலர்ந்த முகம்; நாள்மலர் - அன்று மலர்ந்த பூ; வாய்மை - உண்மை; தீங்காய் - இனிய காய்; வண்மை - ஈகை; பலம் - பழம்; சலியாத - இளைத்தல் இல்லாத; கற்பதரு - வானுலகில் வேண்டுவோர் வேண்டுவதை ஈயும் மரம்.

4. கவளம் - ஒரு வாய் உணவு; வாய் தப்பின் - வாயிலிருந்து தவறினால்; தூங்கும் களிறு - அசையும் இயல்புடைய யானை; ஆரும் கிளையோடு - நிறைந்த சுற்றத்தோடு; அயின்று - உண்டு; உய்யும் - உயிர் பிழைக்கும்.

5. ஓம்புதல் - நீக்குதல்; தேற்றார் - தெளியாதவர்; பிழைபாடு - குற்றம்; கயம் - குளம்; ஆழ் நீர் - ஆழமான தன்மை; மடு - பள்ளம், நீர்நிலை; காண்பு - காணுதல்; அரிது - இயலாது.

பயிற்சி

1. குமரகுருபரரைப்பற்றிக் குறிப்பு வரைக.
2. கற்றன ஓம்பாது மேலும் கற்பது எது போன்றது?
3. கெடுவது காட்டும் குறிகள் யாவை?
4. சலியாத கற்பதரு யார்?
5. யானையையும் எறும்பையும் கொண்டு விளக்கும் கருத்து யாது?
6. 'சிறிய பகையையும் புறக்கணித்தல் கூடாது'—ஏன்?

III. கதைப் பகுதி

1. பஞ்ச தந்திரப் பாடல்

மைனாவும் முயலும்

மேகவண்ணன் என்னும் காக்கையரசு தன் இனப் பறவைகளைப் பார்த்துத் தீயவரும் நல்லவரைப்போல நடிப்பர். அவரை நம்பினால் 'மைனாவும் முயலும் மோசம்போன கதை'யைப் போலத் துன்பப்பட நேரும் என்று கூறியது. அதுகேட்ட பறவைகள் அக்கதையைக் கூறுமாறு மேகவண்ணனை வேண்டின.

என்ன, 'அக்கதைஏ தெ'ன்றே
இனப்பற வைகள்வி னாவ,
'முன்னம்ஓர் மரத்தின் மேலே
முயங்கிநான் இருக்கும் போது
தன்னிகர் இன்றி வாழும்
தனிமுயல் ஒன்று வந்தே
உன்னுமோர் பொந்திற் சேர்ந்தங்
குட்புகுந் திருந்த தன்றே. 1

பூவையொன் றங்கு வந்'இப்
பொந்துநான் இருக்கும் வீடு;
நீவரு வானென்?' என்ன
'நிழலொடு தருக்கள், சாலை,
வாவி, நற் கூபம், செல்லும்
வழியினில் தண்ணீர்ப் பந்தல்,
சாவடி இவைகள் எல்லாம்
சகலர்க்கும் பொதுவே,' என்ன, 2

அங்கவை இரண்டும் சண்டை
ஆகிப்பின், 'மத்தி யத்தர்
தங்களைக் கேட்போம்,' என்று
தனிமுயல் அழைத்துப் போக,
'இங்குநாம் வழக்கா வந்தோம்;
இருதலை வழக்கும் தீர்க்கும்
துங்கர்ஆர்?' என்று பூவை
சொல்லவே, முயலும் சொல்லும்: 3

'கருதிய யமுனை யாற்றங்
கரையிலே தவத்தைப் பண்ணும்
பொருவில்கூர்ம் பல்லன் என்னும்
பூனையார் சொல்வார்,' என்ன,
வெருவியே, 'பூனை பக்கல்
மேவிநாம் சொல்வ தெவ்வா(று)
உரை,' எனத் 'தூர நின்றே
உரைப்பம்,' என் றழைத்துப் போக, 4

இருவரும் போனார்; அந்த
இருடியார் தவத்தைக் கண்டார்;
'பெரியவர் இவர்தாம் நம்மைப்
பிடிப்பதும் செய்யார்,' என்று
கருதினர்; பணிந்தெ ழுந்தார்;
கைகளும் கட்டி நின்று
பரவினர்; யோகம் நீங்கிப்
பார்த்தனர் பூனை யாரும். 5

'ஆரெவர் நீங்கள்? நம்மை
அறிந்துநீர் இங்கு வந்த
காரியம் சொல்லும்,' என்று
கபடனார் உரைக்க, தங்கள்
பேரொடு வழக்கும் சொல்ல,
'பெருகிய மூப்பி னாலே
நீருரைப் பதுகே ளாது;
நெருங்கிவந் துரைக்க,' என்ன, 6

'சற்றிடம் கிட்டி வந்து
சாற்ற,' இம் மாற்றம் காதில்
உற்றது போலும் பாதி
உறாதது போலும் கேட்டோம்;
மற்றினிப் பட்ச பாத
வழக்குநாம் உரைப்ப தில்லை;
குற்றம்இங் கொருவர் மீதில்
கூறிடின் கோபம் ஆமே. 7

'எண்ணிய விரதம் எல்லாம்
இயற்றினம்; இவைக்கு மேலாம்
புண்ணிய விரதம் என்னும்
பொய்சொலா விரதம் ஒன்றும்
நண்ணிய உயிரைக் கொல்லா
நலந்தரு விரதம் ஒன்றும்
மண்ணினில் அனுட்டிப் போம்நாம்;
வழக்கில்ஓ ரம்சொல் லோமே. 8

'கிட்டநீர் வந்து சொன்னால்
கேட்கும்நம் காது; நம்மை
விட்டுநீர் தூர நின்று
விளம்பினால் கேளாது,' என்று
துட்டனார் மாரீ சத்தால்
துலங்குகூர்ம் பல்லன் என்னும்
இட்டமார்ச் சாலன் சொல்ல,
இவைதம துளத்தில் எண்ணி, 9

மெய்கள்போல் சொன்ன எல்லாம்
விசுவசித் திரண்டும் செல்ல,
கைகளால் பிடித்துக் கண்டம்
கடித்திரத் தம்கு டித்தே
செய்கப டான பூனை
செருக்கிஅங் கிருக்கச் சேர்ந்த
மொய்சிறைப் பூவை யோடே
முயலுமங் கிறந்த அன்றே. 10

—வீரமார்த்தாண்ட தேவர்

குறிப்புரை

நூல்: ஐந்து தலைப்புகளில் அரிய நீதிகளை இனிய கதைகள் மூலம் விளக்கும் நூல் பஞ்ச தந்திரப் பாடல். நட்புப் பிரித்தல், நட்பைப் பெறுதல், அடுத்துக் கெடுத்தல், பெற்றதை இழத்தல், ஆராயாது செய்தல் என்பவையே பஞ்ச தந்திரங்களாகும். இந் நூலில் வரும் கதைகள் ஆங்கிலம், பாரசீகம், மராத்தி, அரபு முதலிய பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்: இந்நூலாசிரியர் வீரமார்த்தாண்ட தேவர். இவர் கி.பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்.

அருஞ்சொற்பொருள்

1. முயங்கி - சேர்ந்து; தன் நிகர் இன்றி - தனக்கு ஒப்பு இல்லாமல்; உன்னும் - நினைக்கத்தக்க.
2. தருக்கள் - மரங்கள்; வாவி - குளம்; கூபம் - கிணறு சகலர்க்கும் - எல்லாருக்கும்.
3. துங்கர் - மேலானவர்; இருதலை - இரண்டு பக்கம்.
4. பொருவு இல் - ஒப்பு இல்லாத; வெருவியே - பயந்தே; மேவி - அடைந்து.
5. இருடியார் - முனிவர்; பரவினர் - வணங்கினர்; யோகம் - தியானம்.
6. கபடனார் - வஞ்சகமுடையார்; மூப்பினால் - கிழப்பருவத்தால்.
7. சாற்ற - சொல்ல; மாற்றம் - வார்த்தை; உறாதது - கேட்காதது.
8. இயற்றினம் - செய்தோம்; நண்ணிய - அடைந்த; ஓரம் - பட்சபாதம்.
9. மாரீசத்தால் - வஞ்சகத்தால்; துலங்கு - விளங்குகின்ற; இட்ட - விருப்பமான; மார்ச்சாலன் - பூனை.
10. விசுவசித்து - அன்பு காட்டி, நம்பி; கண்டம் - கழுத்து; கபடான - வஞ்சகமான; செருக்கி - கருவம் கொண்டு; மொய் - நெருங்கிய; சிறை - சிறகுகளையுடைய.

பயிற்சி

1. முயலுக்கும் மைனாவுக்கும் சண்டை ஏற்படக் காரணம் யாது?
2. எல்லார்க்கும் பொதுவான இடங்கள் யாவை?
3. மைனாவும் முயலும் பூனையை நடுவராக நம்பக் காரணம் யாது?
4. பூனையார் மைனாவையும் முயலையும் நம்புமாறு கூறிய நயவஞ்சக உரைகள் யாவை?
5. மைனாவும் முயலும் எவ்வாறு இறந்தன?
6. இக்கதையால் நீங்கள் அறியும் நீதி யாது?

2. ஆசிய ஜோதி

புத்தரும் ஏழைச் சிறுவனும்

(அரண்மனையைவிட்டு வெளிவந்த புத்தர் வழி நடந்த களைப் பால் சோர்ந்து கிடந்தார். அவரைக் கண்ட ஓர் ஆயர் குலச் சிறுவன், தன் தாழ்ந்த குடிப்பிறப்பை எண்ணிக் கலயத்தில் பால் கறந்து அவருக்குக் கொடுக்கத் தயங்கினான். 'பிறப்பினால் உயர்வு தாழ்வுகள் பாராட்டக்கூடாது' என்று புத்தர் அவனுக்குப் போதித்த வரலாறு இதனுள் கூறப்படுகிறது.)

சிறுவன் புத்தரைக் காணுதல்

ஆடுகள் மேய்த்துவரும் — ஒருவன்
ஆயர் குலச்சிறுவன்
வாடிக் கிடந்தவரைச் — செல்லும்
வழியின் மீதுகண்டான்! 1

சிறுவன் செயல்

வையகம் வாழ்ந்திடவே — பிறந்த
மாதவச் செல்வன்முகம்
வெயிலில் வெந்திடாமல் — தழைகள்
வெட்டி அருகில்நட்டான்! 2

தெய்வ குலத்திவனை — எளியேன்
தீண்டலும் ஆகாதினிச்
செய்வதும் யாதெனவே — சிறிது
சிந்தை தயங்கிநின்றான்! 3

உள்ளம் தெளிந்துடனே — வெள்ளா(டு)
ஒன்றை அழைத்துவந்து
வள்ளல் மயக்கொழிய — மடுவை
வாயில் கறந்துவிட்டான். 4

புத்தர் எழுந்து பால் கேட்டல்

நிலத்திற் கிடந்தஐயன் — மெல்ல
நிமிர்ந்து தலைதூக்கிக்
'கலத்தினி லேகொஞ்சம் — பாலைக்
கறந்து தருவாய்!' என்றான். 5

சிறுவன் மறுத்தல்

'ஐயையோ! ஆகாதென்றான்!' — சிறுவன்
'அண்ணலே! யானும்உனைக்
கையினால் தீண்டவொண்ணா — இடையன்ஓர்
காட்டு மனிதனென்றான்!' 6

புத்தர் அறிவுரை

உலகம் புகழ்பெரியோன் — இந்த
உரையினைக் கேட்டந்நாள்
அலகில் கருணையினால் — சொன்ன
அமுத மொழிஇதுவாம்: 7

'இடர் வரும்போதும், — உள்ளம்
இரங்கி டும்போதும்,
உடன்பி றந்தவர்போல் — மாந்தர்
உறவு கொள்வர்அப்பா! 8

ஓடும் உதிரத்தில் — வடிந்து
ஒழுகும் கண்ணீரில்
தேடிப் பார்த்தாலும் — சாதி
தெரிவ துண்டோஅப்பா? 9

எவர்உ டம்பினிலும் — சிவப்பே
இரத்த நிறமப்பா!
எவர்வி ழிநீர்க்கும் — உவர்ப்பே
இயற்கைக் குணமப்பா! 10

பிறப்பி னால்எவர்க்கும் — உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் — நல்ல
செய்கை வேண்டுமப்பா! 11

நன்மை செய்பவரே — உலகம்
நாடும் மேற்குலத்தார்;
தின்மை செய்பவரே — அண்டித்
தீண்ட ஒண்ணாதார். 12

சிறுவன் பால் தருதல்

நிலத்து யர்ஞானி — இவை
நிகழ்த்தி, 'என்தம்பீ!
கலத்தினி லேகொஞ்சம் — பாலைக்
கறந்து தா!' என்றான். 13

ஆயர் சிறுவனும் — கலத்தில்
அளிக்க வாங்கியுண்டு,
தாயி னும்இனியன் — கொண்ட
தளர்ச்சி நீங்கினனே. 14

—கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை

குறிப்புரை

நூல்: 'ஆசிய ஜோதி' என்னும் இந்நூல் உலகின் துன்பத்தைப் போக்க அரச வாழ்வைத் துறந்து, ஆண்டியாய் அலைந்து, போதி மரத்தடியில் புதுநெறி கண்ட புத்தரின் புனித வாழ்வை விளக்கும் இனிய கவிதை நூலாகும். இஃது எட்வின் ஆர்னால்டு என்பவர் ஆங்கிலத்தில் எழுதிய 'LIGHT OF ASIA' என்னும் நூலைத் தழுவித் தமிழில் இயற்றப்பட்டது.

ஆசிரியர்: இந்நூலை இயற்றியவர் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை என்பவராவர். இவர் குமரி மாவட்டத்தில் உள்ள தேரூர் என்னும் சிற்றூரில் கி.பி. 1876-ல் பிறந்தார். இளைஞர் முதல் எல்லாரும் படித்து மகிழக் கூடிய இனிய எளிய அழகிய கவிதைகளை இயற்றிப் புகழ்பெற்றமையால் 'கவிமணி' எனப் பாராட்டப் பெற்றார். இவர் மலரும் மாலையும், குழந்தைச் செல்வம், உமர்கய்யாம் பாடல்கள் முதலிய பல நூல்களை இயற்றியுள்ளார்; 1954ஆம் ஆண்டு மறைந்தார்.

அருஞ்சொற்பொருள்

1. ஆயர் குலம் - இடையர் குலம்; வாடி - வாட்டமுற்று.
2. வையகம் - உலகம்; மாதவச் செல்வன் - சிறந்த தவத்தையே செல்வமாகக் கொண்டவன்.
3. எளியேன் - தாழ்ந்தவன்; தீண்டல் - கையால் தொடுதல்; சிந்தை - மனம்.

4. மயக்கொழிய - சோர்வு நீங்க; மடு - மடி.
5. கலம் - கலயம் (மண்ணால் ஆன பாத்திரம்).
6. அண்ணலே - உயர்ந்த குடியில் பிறந்தவரே; தீண்ட ஒண்ணா - தீண்டக்கூடாத.
7. அலகில் (அலகு+இல்) - அளவில்லாத; அமுதமொழி - அமுதம் போன்ற இனிய சொற்கள்.
8. இடர் - துன்பம்; மாந்தர் - மனிதர்.
9. உதிரம் - இரத்தம்.
10. விழி - கண்; உவர்ப்பு - உப்புத் தன்மை.
12. தின்மை - தீமை.
13. ஞானி - துறவி.
14. அளிக்க - கொடுக்க; தளர்ச்சி - சோர்வு.

பயிற்சி

1. கவிமணியைப்பற்றிச் சிறு குறிப்பு வரைக.
2. புத்தரின் சோர்வு கண்ட ஆயர்குலச் சிறுவன் செய்த உதவி யாது?
3. புத்தர் ஆயர்குலச் சிறுவனிடம் என்ன கேட்டார்? அதற்கு அவன் கூறிய மறுமொழி யாது?
4. உலகம் புகழ் பெரியோன் கூறிய அமுதமொழிகளைத் தொகுத்துக் கூறுக.
5. 'பிறப்பில் உயர்வு தாழ்வு இல்லை' என்பதனைப் புத்தர் எவ்வாறு விளக்கினார்?
6. மேற்குலத்தார் என்றும், தீண்டவொண்ணாதார் என்றும் புத்தர் எவரைக் குறிப்பிடுகிறார்?
7. புத்தரின் தளர்ச்சி எவ்வாறு நீங்கியது?
8. இவ்வரலாற்று நிகழ்ச்சியால் நீ தெரிந்துகொண்ட உண்மை யாது?

3. குடும்ப விளக்கு

விருந்தோம்பல்

நற்றமிழர் சேர்த்தபுகழ் ஞாலத்தில் என்னவெனில்
'உற்ற விருந்தை உயிரென்று—பெற்றுவத்தல்.'

'மோந்தால் குழையுமனிச் சம்பூ முகமாற்றம்
வாய்ந்தால் குழையும் வருவிருந்தென்(று)—ஆய்ந்ததிரு 2

வள்ளுவனார் சொன்னார்; அதனைநீ எப்போதும்
உள்ளத்து வைப்பாய்; ஒருபோதும்—தள்ளாதே; 3

ஆண்டு பலமுயன்றே ஆக்குவை ஊண்எனினும்
ஈண்டு விருந்தினர்க்கும் இட்டுவத்தல்—வேண்டு
மன்றோ? 4

வந்தாரின் தேவை, வழக்கம் இவை அறிய
நந்தா விளக்குன்றன் நல்லறிவே;—செந்திருவே! 5

இட்டுப்பார் உண்டவர்கள் இன்புற் றிருக்கையிலே
தொட்டுப்பார் உன்நெஞ்சைத் தோன்றுமின்பம். 6

பரிமாறுதல்

சோற்றைஅள் ளுங்கால் துவள்வாழைத் தண்டிலுறும்
சாற்றைப்போ லேவடியத் தக்கவண்ணம்—ஊற்று
நெய்யை. 7

வாழை இலையின்அடி உண்பார் வலப்புறத்தில்
வீழ விரித்துக் கறிவகைகள்—சூழவைத்துத் 8

தண்ணீர்வெந் நீரைத் தனித்தனியே செம்பிலிட்டு
வெண்சோ றிடுமுன் மிகஇனிக்கும்—பண்ணியமும் 9

முக்கனியும் தேனில் நறுநெய்யில் மூழ்குவித்தே
ஒக்கநின்றே உண்டபின் சோறிட்டுத்—தக்கபடி 10

கேட்டும் குறிப்பறிந்தும் கெஞ்சியும் மிஞ்சுமன்பால்
ஊட்டுதல்வேண் டும்தாய்போல் ஒண்டொடியே! 11

—பாரதிதாசனார்

குறிப்புரை

நூல்: 'நல்ல குடும்பம் எப்படி இருக்கும்?' என்பதை நன்கு எடுத்துக்காட்டும் வகையில் சிறியதோர் காவியமாக எழுதப் பெற்றது குடும்ப விளக்கு. இப்பாடப் பகுதி, ஐந்து பிரிவுகள் கொண்ட இந்நூலின் இரண்டாம் பகுதியான 'விருந்தோம்பல்' பகுதியிலுள்ளது.

ஆசிரியர்: இந்நூலைப் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் இயற்றினார். இவருடைய இயற்பெயர் கனக சுப்புரத்தினம். தேசியகவி சுப்பிரமணிய பாரதியிடம் கொண்ட அன்பினால் இவர் பாரதிதாசன் என்று பெயர் வைத்துக் கொண்டார். ஊர்: புதுச்சேரி. காலம்: 29–4–1891 முதல் 21–4–1964 வரை. சிறப்புப் பெயர்கள்: புரட்சிக் கவிஞர், பாவேந்தர். இயற்றிய பிற நூல்கள்: **அழகின் சிரிப்பு, பாரதிதாசன் கவிதைகள், பாண்டியன் பரிசு, இளைஞர் இலக்கியம்** முதலியவை.

அருஞ்சொற்பொருள்

1. நற்றமிழர் - நல்ல தமிழ் மக்கள்; ஞாலத்தில் - உலகத்தில்; விருந்தை - விருந்தினர்களை; பெற்றுவத்தல் - ஏற்று மகிழ்தல்.
2. குழையும் - வாட்டமடையும்; வருவிருந்து - வந்த விருந்தினர்.
3. உள்ளத்தில் - நெஞ்சத்தில்; தள்ளாதே - மறவாதே (விட்டுவிடாதே).
4. ஊண் - உணவு; ஈண்டு - இங்கு; இட்டுவத்தல் (இட்டு + உவத்தல்) - கொடுத்து மகிழ்தல்.
5. நந்தா விளக்கு - அணையா விளக்கு; செந்திருவே - செம்மையான அழகுடையவளே.
7. துவள் வாழை - மென்மையான வாழை.
8. அடி - அடிப் பகுதி.
9. பண்ணியம் - பணியாரம்.
10. முக்கனி - மா, பலா, வாழை; ஒக்க - ஒருசேர.
11. ஒண்டொடி - ஒளிபொருந்திய வளையலை அணிந்தவளே.

பயிற்சி

1. விருந்தினர் இயல்புபற்றி வள்ளுவர் கூறியது யாது?
2. விருந்து ஓம்புவதால் பெறும் பேறு யாது?
3. விருந்தோம்பும் முறையினை விளக்குக.

IV. மறுமலர்ச்சி இலக்கியம்

1. முப்பெருந்தேவியர் வாழ்த்து

கல்விக் குரிய கலைமகளே!
கலைகள் பலப்பல எமக்கருளே.
செல்வம் கொழிக்கும் திருமகளே!
சிறப்பாய் வாழ்ந்திட எமக்கருளே. **1**

வலிமைக் குரிய மலைமகளே!
வளமுறத் திருவருள் புரிந்தருளே.
தலையால் வணக்கம் புரிகுவமே
தயவாய்க் காத்தருள் மூவருமே. **2**

—பேராசிரியர் மயிலை சிவமுத்து

(ஆசிரியர் வரலாறு உரைநடைப் பகுதியில் காண்க.)

அருஞ்சொற்பொருள்

கலைமகளே - சரசுவதியே; எமக்கருளே (எமக்கு + அருளே) - எங்களுக்கு வழங்குவாயாக; கொழிக்கும் - பெருகச் செய்யும்; திருமகளே - இலட்சுமியே; மலைமகளே - பார்வதியே; வளமுற - வளங்கள் பெற.

பயிற்சி

1. *ஆசிரியர் கலைமகளிடம் வேண்டுவது யாது?*
2. *திருமகளிடம் கேட்கும் அருள் யாது?*
3. *மலைமகள் யார்? அவளிடம் வேண்டுவது என்ன?*

2. கொடி வணக்கம்

தாயின் மணிக்கொடி பாரீர்!—அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர்!

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம்—அதன்
உச்சியின் மேல் 'வந்தே மாதரம்' என்றே
பாங்கின் எழுதித் திகழும்—செய்ய
பட்டொளி வீசிப் பறந்தது பாரீர்! (தாயின்) 1

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர்!—எங்கும்
காணரு வீரர் பெருந்திருக் கூட்டம்;
நம்பற் குரியர்அவ் வீரர்;—தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர்.
(தாயின்) 2

செந்தமிழ் நாட்டுப் பொருநர்,—கொடுந்
தீக்கண் மறவர்கள், சேரன்தன் வீரர்,
சிந்தை துணிந்த தெலுங்கர்,—தாயின்
சேவடிக் கேபணி செய்திடு துளுவர், (தாயின்) 3

கன்னடர் ஒட்டிய ரோடு—போரில்
காலனும் அஞ்சக் கலக்கு மராட்டர்,
பொன்னகர்த் தேவர்க ளொப்ப—நிற்கும்
பொற்புடை யார்இந்து ஸ்தானத்து மல்லர்,
(தாயின்) 4

பூதலம் முற்றிடும் வரையும்—அறப்
போர்விறல் யாவும் மறப்புறும் வரையும்
மாதர்கள் கற்புள்ள வரையும்—பாரில்
மறைவருங் கீர்த்திகொள் ரஜபுத்ர வீரர்,
(தாயின்) 5

பஞ்ச நதத்துப் பிறந்தோர்,—முன்னைப்
பார்த்தன் முதற்பலர் வாழ்ந்தநன் னாட்டார்,
துஞ்சும் பொழுதினும் தாயின்—பதத்
தொண்டு நினைந்திடும் வங்கத்தி னோரும்
(தாயின்) 6

சேர்ந்ததைக் காப்பது காணீர்—அவர்
சிந்தையின் வீரம் நிரந்தரம் வாழ்க!
தேர்ந்தவர் போற்றும் பரத—நிலத்
தேவி துவசம் சிறப்புற வாழ்க! (தாயின்) 7

—சுப்பிரமணிய பாரதியார்

குறிப்புரை

தேசியகவி சி. சுப்பிரமணிய பாரதியார் பாடிய பாடல்கள் பாரதியார் கவிதைகள் எனத் தொகுக்கப்பட்டுள்ளன. அந்தத் தொகுப்பிலுள்ள 'தேசிய கீதங்கள்' என்னும் பகுதியில் 'பாரத நாடு' என்ற தலைப்பில், 'தாயின் மணிக்கொடி' என்னும் இந்தக் கொடி வணக்கப் பாடல் உள்ளது. நெல்லை மாவட்டத்தி லுள்ள எட்டையபுரம் என்னும் ஊரில் 11–12–1882-ல் பாரதியார் பிறந்தார். இந்திய நாட்டின் விடுதலைக்காகவும் தமிழ்மொழியின் உயர்வுக்காகவும் உணர்ச்சிமிகும் பாடல்களைப் பாடினார். தந்தை — சின்னச்சாமி அய்யர்; தாயார் — இலட்சுமி அம்மாள். இளம் வயதிலேயே கவிபாடும் ஆற்றல் வரப்பெற்ற இவர் தமது 39ஆம் வயதிலேயே 11–9–1921-ல் மறைந்தார்.

அருஞ்சொற்பொருள்

தாயின் - தாய் நாட்டின்; மணிக்கொடி - அழகிய கொடி; கம்பம் - கொடி மரம்; வந்தே மாதரம் - தாயை வணங்குவோம்; பாங்கின் எழுதி - அழகுற எழுதி; செய்ய - சிறந்த; பொருநர் - போர்வீரர்; தீக்கண் மறவர் - தீப்பொறி உமிழும் கண்களை யுடைய வீரர்; சேவடி - சிவந்த திருவடி; பொன்னகர் - பொன் னாலாகிய நகர், விண்ணுலகின் தலைநகராகிய அமராவதிப் பட்டினம்; பொற்புடையார் - சிறப்புடையார்; மல்லர் - மல்யுத்த வீரர்; பூதலம் - உலகம்; விறல் - வீரம், வெற்றி; மறை வருங்கீர்த்தி (மறைவு + அரும் + கீர்த்தி) - மறைவதற்கரிய புகழ்; பஞ்சநதம் - ஐந்து நதிகள் பாயும் பஞ்சாப் மாநிலம்; பார்த்தன் - அர்ச்சுனன்; துஞ்சும் - கண் துயிலும்; நிரந்தரம் - என்றென்றும்; துவசம் - கொடி.

பயிற்சி

1. தாயின் மணிக்கொடி எவ்வாறு பட்டொளி வீசிப் பறந்தது?
2. இந்திய நாட்டுக் கொடியை யார் யார் காக்கிறார்கள்?
3. மராட்டர், இந்துஸ்தானத்து மல்லர் — இவர்தம் பெருமை களைக் கூறுக.
4. இரஜபுத்ர வீரர்தம் சிறப்பு யாது?
5. பஞ்சநதத்தின் பெருமையைக் குறிப்பிடுக.
6. வங்கத்தார் பெருமை யாது?

3. தமிழ்நாடு

‘யாதும்ஊர் எவரும்கேளிர்’ என்றுணர்ந்த நாடு
‘எவ்வுயிர்க்கும் அன்புசெய்க’ என்றிசைத்த நாடு
‘ஒதுகுலம் தெய்வமொன்றே’ என்றுகொண்ட நாடு
ஒக்குமுயிர் பிறப்பென்னும் ஒருமைகண்ட நாடு
நாதன்‘அன்பு நீதிஇன்பு நட்’பென்ற நாடு
‘நாமார்க்கும் குடியல்லோம்’ என்றிருந்த நாடு
தீதில்லா மொழிவளர்க்கத் தெளிவுபெற்ற நாடு
செந்தண்மை விருந்தளிக்கும் தெய்வத்தமிழ் நாடே.

—திரு. வி. கலியாணசுந்தரனார்

குறிப்புரை

இப்பாடல் உரிமை வேட்கை அல்லது நாட்டுப் பாடல் என்னும் நூலில் உள்ளது. இதனை இயற்றியவர் தமிழ்ப் பெரியார் திரு. வி. கலியாண சுந்தரனார் (1883–1953). இவர் நாட்டுக்கும் மொழிக்கும் நல்ல தொண்டாற்றியவர்; விடுதலைக்கு உழைத்த வீரர்; பெண்கள் முன்னேற்றத்துக்காகப் பெரும்பாடுபட்டவர்; தொழிலாளர் தலைவராய்த் தூய தொண்டாற்றியவர்; தமிழில் அழகிய உரைநடை கண்டவர்; மேடைப் பேச்சில் வல்லவர். முருகன் அல்லது அழகு, பெண்ணின் பெருமை, சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து, தமிழ்த் தென்றல் முதலிய பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

அருஞ்சொற்பொருள்

கேளிர் - உறவினர்; இசைத்த - கூறிய; ஓதுகுலம் தெய்வம் ஒன்றே - ‘ஒன்றே குலனும் ஒருவனே தேவனும்’ (திருமூலர்); ஒக்கும் உயிர் பிறப்பு - ‘பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்’ (குறள்); ஒருமை - பேதமற்ற தன்மை; நாதன் - கடவுள்; அன்பு, நீதி, இன்பு, நட்பு - அன்பாய், அறமாய், இன்பமாய், நட்பாய் (விளங்குகிறான்); ‘நாமார்க்கும் குடியல்லோம்’ - நாம் எவருக்கும் அடிமைப்பட்ட குடிமக்கள் அல்லோம் (நாவுக்கரசர்); தீது இல்லா - குற்றம் இல்லாத; செந்தண்மை - செம்மையான அருள்.

பயிற்சி

1. தமிழ்நாட்டின் பெருமைகளாகத் திரு. வி. க. கூறுவன யாவை?
2. யாதும் ஊர் எவரும் கேளிர்; ஒக்கும் உயிர் பிறப்பு— இவற்றை விளக்குக.

4. மொழி

கன்னித் தமிழ்

தேனினும் தித்திக்கும் சொல்லினாள்;—என்னைத்
தேற்றி மகனெனப் புல்லினாள்;
வானில் உயர்ந்து பறந்தவன்—போல்
வந்த வருத்தம் மறந்தனன். 1

தெய்வத் தமிழ்மொழிப் பெண்ணவள்;—இந்தத்
தேசப் பெருமைக்குக் கண்ணவள்;
வையம் முழுதையும் வாழ்த்துவாள்;—பிறர்
வாழ்ந்திடத் தன்சுகம் தாழ்த்துவாள். 2

பற்பல ஆயிரம் ஆண்டுகள்—இந்தப்
பாரில் இருந்தறம் பூண்டவள்;
அற்புதம் இன்னமும் கன்னியே—புது
அழகு தரும்தமிழ் அன்னையே. 3

—நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

குறிப்புரை

'கன்னித் தமிழ்' என்னும் இப்பாடல் நாமக்கல் கவிஞர் பாடல்கள் என்னும் தொகுதியில் உள்ளது. இதனை இயற்றிய ஆசிரியர் நாமக்கல் வெ. இராமலிங்கம் பிள்ளை என்பவராவார். அவர் சேலம் மாவட்டத்தில் உள்ள நாமக்கல்லில் 19–10–1888-ல் பிறந்தார். நம் நாட்டின் விடுதலைக்காகத் தம் கவிதைகள் வாயிலாகப் பெருந்தொண்டு புரிந்தார். அதனால் 'காந்தியக் கவிஞர்' என்று பாராட்டப்பட்டார். தமிழக அரசவைக் கவிஞராக விளங்கிப் புகழ் பெற்றார். சங்கொலி, தமிழன் இதயம், காந்தி அஞ்சலி முதலிய கவிதை நூல்களை இயற்றியுள்ளார்.

அருஞ்சொற்பொருள்

1. தேற்றி - தெளிவித்து; புல்லினாள் - தழுவினாள்; வந்த - இவ்வுலகில் பிறந்த.
2. வையம் - உலகம்; தாழ்த்துவாள் - குறைத்துக்கொள்வாள்.
3. கன்னி - இளமை குறையாதவள்.

பயிற்சி

1. தமிழன்னையின் சிறப்புகளாக நாமக்கல் கவிஞர் கூறுவன யாவை?
2. ஆசிரியர் எதனை அற்புதம் என்று குறிப்பிடுகிறார்?

5. குழந்தை இலக்கியம்

(அ) சிறியவரும் பெரியவரே

'இன்று சிறுவர் தாமே நம்மால்
என்ன செய்ய முடியும்?'
என்று நீங்கள் எண்ண வேண்டா;
எதுவும் முடியும் உம்மால். 1

பன்னி ரண்டு வயதுக் குள்ளே
பார திப்பேர் சிறுவன்
கன்னித் தமிழில் பாட்டுப் பாடி
கவிதை மன்னன் ஆனான். 2

கிழவர் இருவர் சொன்ன வழக்கைக்
கேட்டுக் கரிகால் வளவன்
பழகும் நல்ல தீர்ப்புக் கூறிப்
பாரில் புகழைப் பெற்றான். 3

சின்னஞ் சிறிய வயதி லேயே
ஜேம்சு வாட்டு சிறுவன்
சொன்ன நீரின் ஆவி யாற்றல்
எந்தி ரங்கள் ஓட்டும். 4

—தணிகை உலகநாதன்

(ஆ) குற்றாலக் காட்சி

குற்றாலத்தைக் காண்பதற்கே கூப்பிடுகிறேன்
வாருங்கள்;
கொஞ்சும்எழில் இயற்கைசூழ்ந்த காட்சியையும்
பாருங்கள்.
வற்றாதநல் அருவிஉண்டு! வானத்தையே தொட்டிடும்.
வளர்ந்தபல மலைகளிலே அருவிநீரைக் கொட்டிடும். 1

குளிர்ந்தகாற்று வீசியெங்கும் குளுமையாக ஆக்கிடும்;
கோடைகாலம் ஆயிடினும் கொடியவெப்பம்
போக்கிடும்;
தளிர்ந்தபச்சை இலைகளோடு தாவரங்கள் நின்றிடும்;
தாவித்தாவி மரங்களிலே குரங்குகள்தாம்
சென்றிடும். 2

குயிலினங்கள் பறவையாவும் குரலெழுப்பிக் கூவிடும்;
கூட்டமாக வண்டினங்கள் பூக்களெங்கும் தாவிடும்;
மயிலினங்கள் தோகைஆட்டி மாட்சியோடும் ஆடிடும்;
மகிழ்ச்சிபொங்கும்; வந்தவுடன் மனக்கவலை
ஓடிடும். 3

—ஆ. சுப்புலட்சுமி

குறிப்புரை

தணிகை உலகநாதன் வாழும் குழந்தைக் கவிஞர்களுள் ஒருவர்; குழந்தைகளுக்காக ஏராளமான கவிதைகளும் கதைகளும் நாடகங்களும் எழுதியவர். சென்னை வானொலி சிறுவர் சங்கப் பேரவையின் தலைவராக இருந்து பல்லாண்டுகளாகக் குழந்தைகளின் கலைத் திறமையை வளர்த்து வருபவர். இப்பாடல் இவர் இயற்றிய பாடும் பாப்பா என்னும் நூலிலிருந்து எடுக்கப்பட்டது. நல்ல கதைகள் என்னும் இவரது சிறுவர் இலக்கியம் கல்வித் துறையினரின் முதற் பரிசு பெற்றது.

அருஞ்சொற்பொருள்

கன்னித் தமிழ் - என்றும் அழியாத தமிழ்; பாரில் - உலகத்தில்; ஆற்றல் - சக்தி.

குறிப்புரை

ஆ. சுப்புலட்சுமி அவர்கள் பல்லாண்டுகளாகக் குழந்தைகளுக்குக் கவிதை எழுதி வருபவர்; அரசு மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகப் பணியாற்றுபவர்; சென்னை வானொலி, தொலைக்காட்சி நடத்தும் சிறுவர் நிகழ்ச்சிகளுக்குப் பாடலும் கதையும் எழுதுபவர். 'குற்றாலக் காட்சி' என்னும் இப்பாடல் திருக்குற்றால மலையின் இயற்கை அழகைச் சித்திரிக்கின்றது.

அருஞ்சொற்பொருள்

எழில் - அழகு ; வற்றாத - நீர் வற்றாத; மாட்சியோடு - பெருமையோடு.

பயிற்சி

1. கவிஞர் சிறுவர்க்குக் கூறும் அறிவுரை யாது?
2. பாரதியார், கரிகால்வளவன், ஜேம்ஸ் வாட் ஆகியோர் சிறிய வயதிலேயே செய்த அரிய செயல்கள் யாவை?
3. குற்றாலத்தின் இயற்கை அழகை விளக்கி எழுதுக.

V. தேசிங்கு ராசன் கதை

தோன்றமல்லன் தூது

பல்லைப் படபட வென்று கடித்தான்
ராசா தேசிங்கு;
கையைத் தூக்கிக் கனைத்துத் தட்டினான்
ராசா தேசிங்கு;
இணையில் லாத கோப மாச்சுது
ராசாவுக் கானாலும்;
தலையை யசைத்துத் தோளை நெறித்தான்
ராசா தேசிங்கு!

கண்களை யுருட்டிக் கதும்பினா னையா
காளைச் சிங்கம்போல்;
'என்ன பேச்சுப் பேசி னாயடா
தோன்ற மல்லண்ணா!
நீவந் தாற்போல் நவாபு வந்தால்
நிமிஷமிருக்க மாட்டான்!
பணமென்ற சேதி காதில் கேட்டால்
பாய்ந்து வெட்டிடுவேன்!
கத்தி முனையிலே பணமுந் தாரேன்
நவாபுக் கிப்போது!

பரிசை முனையிலே பணமுந் தாரேன்
நவாபுக் கிப்போது!
போனவருஷத்துக் கிந்த வருஷம்
வரகு விளைந்தது!
வரகு வைக்கோல் மெத்தக் கிடக்குது
வாரிப்போகச் சொல்லு!'
என்ற பேச்சைக் காதிலே கேட்டான்
தோன்ற மல்லனும்;
கால் நடுங்கிக் கைந டுங்கிக்
களைத்து விழுந்தானாம்.

ரங்க நாதரை வேண்டிக் கொள்கிறான்
தோன்ற மல்லனும்;
'தெரியா மலேநான் செஞ்சிக்கு வந்தேன்
ரங்க நாதரே!
என்னுயிர் கொண்டு ஆர்க்காடு போனால்
ரங்க நாதரே!
ஆயிரம் பேர்க்கு அன்னங் கொடுக்கிறேன்
ரங்க நாதரே!'
என்று வேண்டிய தோன்ற மல்லனை
ஏறிட்டுப் பார்த்தங்கே

கலகல வென்று சிரித்தா னையா
ராசா தேசிங்கு;
'நானொரு சேதி சொல்லுகி றேன்கேள்
தோன்ற மல்லண்ணா!
நவாபுக் குநான் பயப்பட வில்லை
தோன்ற மல்லண்ணா!
ரங்கர் வார்த்தையைக் கண்டு பயந்தேன்
தோன்ற மல்லண்ணா!'
என்ற பேச்சைக் காதிலே கேட்டான்
தோன்ற மல்லண்ணன்;

25. 'என்றன் மேலே கோபம் வேண்டா
ராசா தேசிங்கு!
நானிப் போதே ஓடிப் போகிறேன்
ராசா தேசிங்கு!'
என்று கூறித் தோன்ற மல்லன்
இனிது சலாம் செய்தான்;
சலாஞ் செய்து திரும்பி னானையா
தோன்ற மல்லனும்.

—புகழேந்திப் புலவர்

குறிப்புரை

நூல்: கி.பி. 18ஆம் நூற்றாண்டில் தென்னார்க்காடு மாவட்டத்தில் உள்ள செஞ்சிக் கோட்டையை ஆண்டவன் தேசிங்கு மன்னன். அவனுடைய வீர வரலாற்றைக் கூறும் நூல் தேசிங்கு ராசன் கதையாகும். இது பாமரரும் படித்து இன்புறக்கூடிய வகையில் பேச்சுத் தமிழில் அமைந்த நாட்டுப் புறப் பாடலாகும்.

(பாடப் பகுதி)

[டில்லி பாதுஷாவுக்கு எல்லாச் சிற்றரசர்களும் பகுதி (கப்பம்) செலுத்துகிறார்கள். ஆனால், தேசிங்கு செலுத்தவில்லை. டில்லி பாதுஷாவின் ஆணைக்குட்பட்டவன் ஆர்க்காட்டு நவாபு. அவன் தேசிங்கு ராசனிடம் கப்பம் கேட்டு வரும்படி தோன்றமல்லனைச் செஞ்சிக்கு அனுப்புகிறான். கைகால் நடுக்கமுறத் தான் வந்த செய்தியைத் தேசிங்கிடம் கூறுகிறான் தோன்றமல்லன்.]

அருஞ்சொற்பொருள்

படபடவென்று - நறநறவென்று; கனைத்து - வீர ஒலி எழுப்பி; கோபமாச்சுது - கோபம் வந்தது; தோளை நெறித்தான் - தோள்களை ஆட்டினான்; கதும்பினான் - கர்ச்சனை செய்தான்; பரிசை முனையிலே - கேடயத்தின் முனையிலே; அன்னங் கொடுக்கிறேன் - அன்னதானம் செய்கிறேன்.

பயிற்சி

1. தோன்றமல்லன் பகுதிப் பணம் கேட்டவுடன் தேசிங்கு கொண்ட சினத்தை விளக்கி எழுதுக.
2. சினம் கொண்ட தேசிங்கு கூறியது யாது?

3. தேசிங்கின் சினத்தைக் கண்ட தோன்றமல்லன் எவ்வாறு நடுங்கினான்?

4. தேசிங்கு கடவுள் பற்றுடையவன் என்பது எதனால் தெரிகிறது?

5. இராசா தேசிங்கின் வீரத்தைச் சுருக்கி எழுதுக.

VI. நாட்டுப்புறப் பாடல்கள்

(1) தாலாட்டுப் பாட்டு

கண்ணே! நவமணியே! கற்பகமே! முக்கனியே!
என்னுடைய மன்னவனே! இந்திரனே! கண்வளராய்! 1

மருவே! மருக்கொழுந்தே! மலர்விரிந்த மல்லிகையே!
குருவேர் அரும்பே! என்குலக்கொழுந்தே! கண்வளராய்! 2

கிள்ளைக் குயில்மொழியே! நான் கண்டெடுத்த பொக்கிசமே!
பிள்ளைக்கலி தீர்க்கவந்த பெருமானே! கண்வளராய்! 3

தித்திக்கும் பாலே! தெவிட்டாத தெள்ளமுதே!
சித்தத்தின் உள்இனிக்கும் செங்கரும்பே! கண்வளராய்! 4

(2) நாட்டு வளம்

ஆற்றோரம் தேக்குமரம்; அலைமோதும் காவேரி;
பார்த்திருக்க நெல்விளையும் பஞ்சம்தீர்க்கும் சோழநாடு. 1

கட்டுக் கலங்காணும்; கதிர்உழக்கு நெல்காணும்;
சொன்ன பொதிகாணும் சோழராசா சீமையிலே. 2

எட்டேரு கட்டி இடத்திலொரு யானைகட்டி
பத்தேரு கட்டிஉழும் பாண்டியனார் சீமையிலே. 3

தேனே! தெவிட்டாத தீங்கனிகள் மெத்தஉண்டு
மான்மரைகள் ஓடியாடும் மலையாளச் சீமையிலே. 4

குறிப்புரை

நாட்டுப்புறத்து மக்கள் எத்தொழில் செய்தாலும் பாடிக் கொண்டே செய்வார்கள். அப்பாட்டுகள் ஏட்டில் இல்லாமல் வாய்மொழியாகக் காதால் கேட்டுப் பாடப்படும் பாட்டுகள் ஆதலால் 'வாய்மொழி இலக்கியம்' எனப்படும். அவற்றில் கொச்சை மொழிகள் கலந்திருந்தாலும் செவிக்கு விருந்தாய் மனத்துக்கும் மகிழ்ச்சி தரும்; கற்பனை வளமும் கருத்து வளமும் நிறைந்திருக்கும்.

அருஞ்சொற்பொருள்

1. நவமணி - ஒன்பது வகை இரத்தினங்கள்; கற்பகம் - வேண்டுவார் வேண்டுவதைத் தரும் வானுலகத்து மரம்; கொழுந்து - இளந்தளிர்; கிள்ளை - கிளி; கலி - துன்பம்; தெவிட்டாத - வெறுப்புத்தாராத; சித்தம் - மனம்.

2. கட்டு - நெல்கட்டு; கலம், உழக்கு - முகத்தல் அளவைப் பெயர்கள்; பொதி - நெல் மூட்டை; மரை - மான் வகைகளில் ஒன்று.

பயிற்சி

1. தாலாட்டும் தாய் குழந்தையை எவ்வாறு பாராட்டுகிறாள்?
2. முத்தமிழ் நாட்டின் வளங்களை எழுதுக.

உரைநடைப் பகுதி

1. தாய்மொழியின் தனிச்சிறப்பு

மக்கள் தங்கள் உள்ளக்கருத்தை மற்றவர்க்கு உணர்த்த உற்ற துணையாக இருப்பது மொழி. மொழியே மக்களை மாக்களினின்றும் வேறுபடுத்துகிறது. மக்களின் அறிவு வளர்ச்சிக்கும் நாகரிக உயர்வுக்கும் காரணமாக இருப்பதும் மொழியேயாகும். மொழியே மக்களுக்கு விழி எனலாம். மொழி வழியே இனம் அமைகிறது.

உலகில் பலமொழி பேசும் பல்வேறு இனத்தவர் வாழ்கின்றனர். எம்மொழி எவ்வினத்தவரால் வழிவழியாகப் பேசப்படுகிறதோ, அம்மொழியே அவர்களுக்குத் தாய் மொழியாகும். குழந்தைப் பருவத்தில் தாயால் கற்பிக்கப்பட்டுக் குழந்தையின் உணர்வோடு கலந்து வளர்ந்த மொழியாதலால் அது 'தாய்மொழி' எனப்பட்டது. அவரவர் தாய்மொழி அவரவர்க்குச் சிறந்ததாகும். 'காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு' என்பது பழமொழி அன்றோ?

தாய்மொழியின் தனிச்சிறப்பை விளக்கும் நிகழ்ச்சி ஒன்று **மணிமேகலை** என்னும் காவியத்தில் கூறப்பட்டுள்ளது. 'சாதுவன் என்னும் வணிகன் ஒருவன் மனிதர்களைக் கொன்று தின்னும் நாகர் என்னும் கொடியவர்களிடம் சிக்கிக்கொண்டான். அவன் உயிர் பிழைக்க அந்த நாகர்களின் தாய்மொழியில் அவர்களுடன் பேசினான். அதுகேட்டு நாகர்கள் வியப்பும் மகிழ்வும் கொண்டார்கள். கொல்ல எண்ணிய அவர்கள் அவனை வணங்கி அன்புசெலுத்தினார்கள்; பொன்னும்பொருளும் பரிசாக வழங்கிச் சிறப்பித்தார்கள்,' என்று அக்காவியம் கூறுகிறது. இங்ஙனம் வன்னெஞ்சரையும் வயப்படுத்தும்

ஆற்றல் தாய்மொழிக்கு உண்டு எனின், அதன் பெருமையை என்னென்பது!

நம் தாய்மொழி அமிழ்தினும் இனிய தமிழ்மொழி யாகும். தமிழ் மிக்க இனிமையும் எளிமையும் வாய்ந்த பழமையான மொழி. தமிழ் என்னும் சொல்லுக்கு 'இனிமை' என்பதே பொருள். தமிழில் உள்ள சொற்கள் யாவும் இனிய எளிய சொற்கள். தமிழ் எழுத்துகள் எல்லாம் மென்மையான ஓசையுடையவை. தமிழில் உள்ள ழகர எழுத்தோசை மிக்க இனிமை வாய்ந்தது. அவ் வோசை வேறு மொழியில் இல்லை. இவற்றாலேயே தமிழ் இனிமையுடையதாக விளங்குகிறது.

தமிழ், என்று தோன்றியது என்று உணரமுடியாத பழமையுடையது. தமிழில் உள்ள **தொல்காப்பியம்** என்னும் இலக்கண நூல் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற் பட்டது. இலக்கணம் தோன்றுவதற்கு முன்பே தமிழில் இலக்கியங்கள் இருந்திருக்கவேண்டும். அவற்றிற்கு நெடுங்காலத்துக்கு முன்பே மொழி தோன்றியிருக்க வேண்டும். எனவே, தமிழின் பழமையை வரையறுத்துக் கூறமுடியாது.

உலகில் வழங்கும் நாகரிகம் பெற்ற நன்மொழிகளில் தமிழ் சிறந்ததாகும் என மொழிநூல் அறிஞர்கள் கூறு கிறார்கள். அத்தகைய உயர்ந்த மொழியைத் தாய் மொழியாகக்கொண்ட நாம் பெரும்பேறு பெற்றவர் களாவோம். நாம் பெற்ற இப்பேற்றினைப் போற்றிக் காக்கவேண்டும். அதற்கு நாம் ஒவ்வொருவரும் நம் தாய்மொழிமீது பற்றுடையவர்களாய், அதன் வளர்ச்சி யில் கருத்துடையவர்களாய் வாழவேண்டும். குறிப்பாக நாம் எல்லாப் பாடங்களையும் நம் தாய்மொழி வாயி லாகவே கற்கவேண்டும்.

கல்விக்கு அடிப்படை சிந்தனை. சிந்தனை தாய் மொழி வழியாகவே உருப்பெறுகிறது. பிறமொழியில் பேசுபவரும் தம் தாய்மொழியில் சிந்தித்தே பேசுகின்ற னர். ஆதலால், தாய்மொழி வாயிலாகக் கல்வி கற்பதே

இயற்கையாகும். அதுவே சிந்தனையைத் தூண்டி அறிவை வளர்க்கும். பிறமொழி வாயிலாகக் கற்ப தனால் நம் சிந்தனை செயல்படாது. வெறும் செய்தி களை மனப்பாடம் செய்வதாக முடியுமே ஒழிய, அறிவு வளர்ச்சிக்கு இடம் இராது.

செடி, கொடிகள்கூடப் பிறந்த மண்ணில் செழித்து வளர்வது இயற்கை. அவற்றைப் பெயர்த்துப் பிறிதோ ரிடத்தில் நட்டால் அந்த மண்ணில் பிடிப்பு ஏற்படச் சிலகாலம் ஆகும். அதன் பின்னரே வளர்ச்சிக்கு வழி ஏற்படும். சில வளராமல் பட்டுப்போவதும் உண்டு. அதுபோல் வீட்டிலும் வெளியிலும் தாய்மொழியிலேயே சிந்தித்தும் பேசியும் பழகிவிட்டவர்கள் பிறமொழி மூலம் கற்பதால் அவர்களுடைய அறிவு வளரக் காலம் தாழ்க்கும். சிலருடைய அறிவு வளர்ச்சி குன்றிப் போவதும் உண்டு. ஆகவே, தாய்மொழிவழி கல்வி கற்பதே நமக்கும் நாட்டிற்கும் நலம் பயப்பதாகும். தாய்ப்பால் குழந்தையின் உடலை வளர்க்கும். அது போலத் தாய்மொழியே அறிவை வளர்க்கும் என்பதனை நாம் உணரவேண்டும்.

இவ்வுண்மையை உணர்ந்தே பிற நாட்டவர் யாவரும் தத்தம் தாய்மொழி வாயிலாகவே எல்லாக் கலைகளையும் கற்கின்றனர். அதனால், அவர்கள் கல்வியில் சிறந்தவர் களாகவும், கலைகளில் வல்லவர்களாகவும், புதுமை காணும் திறம் உடையவர்களாகவும் விளங்குகிறார்கள். நாமோ அடிமைத்தளை அகன்றும் அயல்மொழி மோகம் அகலாதவர்களாக இருக்கிறோம். அயல்மொழி வாயி லாகக் கல்வி கற்பதே பெருமை எனக் கருதுகிறோம். அதனால், நம் நாட்டில் அறிவு வளர்ச்சி பின்தங்கியே உள்ளது.

அயல்மொழி மூலம் கற்பதை விரும்புபவர் நம் தாய் மொழியில் எல்லாக் கலைகளையும் கற்பதற்குரிய நூல்கள் இல்லை; சிறப்பாக அறிவியல் நுட்பங்களை விளக்கும் அருங்கலைகள் இல்லை என்று குறை

கூறுகின்றனர். அது நம் மொழியின் குற்றம் அன்று; நம் குற்றமே. அந்நிய ஆட்சியில் சிக்கி நாம் நம் மொழியை வளர்க்க மறந்துவிட்டோம். அதனால், இன்றைய அறிவியல் கலைகள் பல நம் மொழியில் இல்லாதது உண்மையே. நாம் முயன்றால் அக்குறையை அகற்றி விடலாம். அந்தக் கலைகள் எல்லாம் அயல்மொழி யாகிய ஆங்கிலத்திலேயே தோன்றினவா எனில், இல்லை. பல நாட்டவர் பல உண்மைகளைக் கண்டறிந் தனர். ஆங்கிலேயரும் சிலவற்றைக் கண்டறிந்தனர். தங்கள் மொழியில் இல்லாத கலைகளை எல்லாம் உட னுக்குடன் அவர்கள் தம் மொழியில் மொழிபெயர்த் துக்கொண்டனர். அதுபோல நாமும் நம் மொழியில் அவற்றையெல்லாம் மொழிபெயர்த்துக்கொண்டால் நம் மொழியும் எல்லாக் கலைகளையும் கற்க ஏற்ற மொழி யாகிவிடும்.

ஒரு காலத்தில் உலகத்துக்கே நாகரிகத்தை வழங்கிய நாடு நம் நாடு. அத்தகைய நாகரிகத்தை வளர்த்த மொழி நம் மொழி. நம் மொழியில் பண்டு கலைகள் பல சிறந்து விளங்கின. 'ஆய கலைகள் அறுபத்து நான் கினையும் ஏய உணர்விக்கும்' மொழியாகத் தமிழ் விளங் கியது. நம் மொழியில் உள்ள சங்க இலக்கியங்களும் பிறவும் நம் முன்னோர்களின் கலைச்சிறப்பை எடுத்துக் காட்டுகின்றன. அத்தகைய மொழியால் இயலாதது எதுவும் இல்லை. எந்தக் கருத்தையும் எளிதில் வெளி யிடும் சொல்வளம் மிக்கது நம் தமிழ்மொழி. 'வானம் அளந்தது அனைத்தும் அளந்திடும் வண்மொழி' என்று பாரதியார் தமிழின் சொல்வளத்தைப் பாராட்டியுள் ளார். அத்தகைய மொழியில் இல்லாத கலைகளை உரு வாக்கும் முயற்சியில் ஈடுபடுதல் அறிஞர் கடமையாம்.

நம் நாடு உரிமைபெற்றபின் நம் அரசு இத்துறையில் அரும்பாடுபட்டு வருகிறது. அதன் பயனாக இன்று எல்லாக் கலைகளையும் கற்பதற்குரிய நூல்கள் பல தமிழில் தோன்றி வருகின்றன. விரைவில் அறிவியல்

நூல்கள் தமிழில் இல்லையே என்ற குறையும் அகன்று விடும். எனவே, இனி நம் தாய்மொழி வாயிலாகவே எல்லாப் பாடங்களையும் கற்பது அறிவுடைமை யாகும்.

கல்வி கற்பது மட்டுமல்லாமல் நம் வாழ்வின் எல்லாத் துறைகளிலும் தமிழ் மொழியையே நாம் பயன்படுத்த வேண்டும். ஒருவரோடு ஒருவர் உரையாடும்போதும், கடிதம் எழுதும்போதும் தாய்மொழியிலேயே பேசவும் எழுதவும் வேண்டும். கூடுமானவரை பிறமொழிச் சொற்களைக் கலவாமல் பேசுவதும் எழுதுவதும் நல்லது. அந்நிய மொழியாகிய ஆங்கிலத்தில் பேசுவதும் எழுது வதும் பெருமை என்று சிலர் கருதுகின்றனர். சிலர் கொச்சையாகப் பேசி அவ்வாறே எழுதவும் செய்கின் றனர். இவையெல்லாம் தாய்மொழிப் பற்றில்லாதவர் செய்யும் செயல்களேயாகும்.

பேசுவது, எழுதுவது மட்டும் அல்லாமல் நம் ஒவ் வொரு செயலிலும் தாய்மொழிக்கே முதன்மை தர வேண்டும். தெருப்பெயர்கள், வீட்டின் பெயர்கள், வணிக நிலையங்களின் பெயர்ப்பலகைகள், பற்றுச் சீட்டுகள், வரவு செலவுக் கணக்குகள் ஆகிய யாவும் நம் தாய்மொழியிலேயே இருத்தல் வேண்டும். குழந்தை களுக்குப் பெயர் வைக்கும்போது அழகிய தமிழ்ப் பெயர் களையே சூட்டவேண்டும். திருமணம், கடவுள் வழிபாடு ஆகிய எல்லாவற்றிலும் தமிழே முழங்கவேண்டும். இவை மட்டும் அல்லாமல் சட்டங்கள் எல்லாம் தமிழிலேயே உருப்பெறவேண்டும். நீதி மன்றங்களிலும் தமிழே இடம்பெற வேண்டும். அரசு அலுவலகங்களில் எல்லாச் செயல்களும் தாய்மொழிவழியே நடைபெற வேண்டும். சுருங்கச் சொன்னால், 'எங்கும் தமிழ்; எதிலும் தமிழ்,' என்னும் நிலை உருவாகவேண்டும். தமிழால் முடியாதது இல்லை என்னும் உணர்வு ஒவ்வொருவருக்கும் ஏற்பட வேண்டும்.

இந்நிலை ஏற்பட்டால், நம் தாய்மொழி வளரும். தாய்மொழியே நம்மிடையே ஒற்றுமையை வளர்க்கவல்ல

தாகும். அவ்வொற்றுமை ஏற்பட்டால் நாம் உயர்வோம்; நம் நாடு உயரும்.

அருஞ்சொற்பொருள்

மாக்கள் - விலங்குகள்; காவியம் - கதையைப் பாட்டாகக் கூறும் நூல்; வன்னெஞ்சர் - கொடிய மனமுடையவர்; பட்டுப் போவது - அழிந்துவிடுவது; பண்டு - முன்பு; ஆய - அழகிய; ஏய - பொருந்துமாறு; வண்மொழி - வளமான மொழி; வணிக நிலையங்கள் - வியாபாரம் செய்யும் இடங்கள்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. மொழியின் சிறப்பு யாது?
2. தாய்மொழி எனப்படுவது யாது?
3. மணிமேகலையில் தாய்மொழியின் சிறப்புப்பற்றிக் காணப் படும் குறிப்பினை எழுதுக.
4. தமிழ் இனிதாதற்குக் காரணம் யாது?
5. தமிழின் தொன்மையை விளக்குக.
6. தாய்மொழிவழி கல்வி கற்பதே இயற்கை என்பதனைச் சான்று தந்து விளக்குக.
7. அயல்மொழி வாயிலாகக் கல்வி கற்க விரும்புவோர் கூறும் காரணம் யாது?
8. அக்குறையை அகற்ற என்ன செய்யவேண்டும்?
9. தாய்மொழி வளர்ச்சிக்கு நாம் செய்யவேண்டுவன யாவை?

II. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:

வழிவழி, பெரும்பேறு, அடிமைத்தளை, உருப்பெறுதல்.

III. எதிர்ச்சொற்கள் எழுதுக:

மென்மை, பழமை, இயற்கை, பெருமை, ஒற்றுமை.

IV. பிரித்து எழுதுக:

வன்னெஞ்சர், மனப்பாடம், அவ்வோசை.

V. சேர்த்து எழுதுக:

அ + கலை = அக்கலை	இ + குறை = இக்குறை
அ + சோலை =	இ + சிலை =
அ + தொழில் =	இ + திடல் =
அ + பொருள் =	இ + படம் =

VI. **தெரிந்துகொள்க:**

கொச்சை	சரி
வருகுது	வருகிறது
நெனப்பு	நினைப்பு
உசிர்	உயிர்
ரொம்ப	நிரம்ப
முழித்தல்	விழித்தல்
தோணிச்சு	தோன்றியது

இலக்கணம்

ஒரு மொழியைப் பிழையில்லாமல் திருத்தமாகப் பேசவும் எழுதவும் கற்பிப்பது இலக்கணம் ஆகும். நாம் மொழியைப் பயில்வதற்கு இலக்கணம் இன்றியமையாதது. இலக்கணம் கற்பதால் நாம் சிறந்த மொழியறிவு பெறலாம். பிறரிடம் நம் கருத்தைத் தெளிவாக எடுத்துக்கூற இயலும்.

நாம் பேசுவது தமிழ்மொழி. தமிழ்மொழி மிகவும் இனிமையானது. தமிழ்மொழியைப்போலவே தமிழ் இலக்கணமும் இனிமையானது. தமிழ் இலக்கணத்தை ஆர்வமுடன் படித்தால் அது நமக்கு எளிதாக விளங்கும்.

'இன்பம் இன்பம் இலக்கணமே
அன்பாய்க் கற்கின் அரைக்கணமே.'

தமிழ் இலக்கணம் ஐந்து வகைப்படும். அவை:

(1) எழுத்திலக்கணம் (2) சொல்லிலக்கணம்

(3) பொருளிலக்கணம் (4) யாப்பிலக்கணம்

(5) அணியிலக்கணம் என்பனவாம்.

தமிழ் எழுத்துகளின் தொகை

தமிழ்மொழியில் உயிரெழுத்து 12; மெய்யெழுத்து 18; உயிர் மெய்யெழுத்துகள் 216; ஆய்த எழுத்து 1; ஆக மொத்தம் 247 எழுத்துகள் உள்ளன.

2. கவரி வீசிய காவலன்

சங்க காலம் தமிழகத்தின் பொற்காலம் எனப் போற்றப்படுகின்றது. அக்காலத் தமிழரசர்கள் தமிழ் மொழியை உயிரினும் மேலாக மதித்தனர்; தமிழறிந்த புலவர்களைப் போற்றினர். அவ்வேந்தர்களின் ஆதரவால் புலவர் பெருமக்கள் சொல்லழகும் பொருளழகும் நிறைந்த பாடல்களைப் பாடி நாடெங்கும் தமிழ் மணம் பரப்பி வந்தார்கள். அப்பாடல்கள் அகநானூறு, புறநானூறு போன்ற சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றன. அவற்றின் வாயிலாக அக்காலத் தமிழ் மன்னர்கள் தமிழ்ப் புலவர்களைப் போற்றிய சிறப்பை நாம் நன்கு உணரலாம். புறநானூற்றுப் பாடல் ஒன்று விளக்கும் ஓர் உருக்கமான நிகழ்ச்சியைக் காண்போம்.

சேர நாட்டை ஆண்ட மன்னர்களுள் **பெருஞ்சேரல் இரும்பொறை** என்பவன் ஒருவன். அவன் நீதியும் நேர்மையும் மிக்கவன்; தன் வீரத்தாலும் ஈரத்தாலும் குடிமக்களின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டவன். தன்னை நாடிவரும் தமிழ்ப் புலவர்களுக்கு வாரி வழங்கி வள்ளலாய் விளங்கியவன். **அரிசில் கிழார்** என்னும் புலவர் அவனைப் புகழ்ந்து பத்துப் பாடல்கள் பாடியதற்காக இரும்பொறை தன் நாட்டையே அவருக்குப் பரிசாக வழங்கினான். அரிசில் கிழார் நாட்டைத் திரும்ப அவனுக்கே அளித்து ஆளச்செய்து, தாம் அவனுக்கு அமைச்சராக இருந்து உதவிசெய்தார்.

பத்துப் பாடல்களுக்காக ஒரு நாட்டையே பரிசாக வழங்கும் வள்ளல் தன்மையை வேறு எவரிடமாவது காணமுடியுமா? அதனால் பெருஞ்சேரல் இரும்பொறையின் புகழ் எங்கும் பரவியது. பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைகளைப்போலப் புலவர்கள் பலர் அவனைத் தேடி வந்தனர்.

அக்காலத்தில் பாண்டிய நாட்டில் மோசிகுடி என்னும் சிற்றூரில் கீரனார் என்னும் புலவர் ஒருவர்

வாழ்ந்து வந்தார். **மோசிகீரனார்** கல்விச் செல்வம் நிரம்பியவராயிருந்தும் பொருட் செல்வம் இல்லாமல் வறுமையால் வாடினார். தம் வறுமைத்துயர் தீர்க்க வழியறியாமல் கலங்கிய மோசிகீரனார் இரும்பொறையின் ஈகைச் சிறப்பைக் கேள்வியுற்றார். எங்ஙனமேனும் அம்மன்னனைக் கண்டு பரிசில் பெற்றுவர விரும்பிச் சேரநாடு நோக்கிப் புறப்பட்டார்.

சேரநாடு அவர் வாழும் ஊருக்கு நெடுந்தொலைவில் உள்ளது. பெருஞ்சேரல் இரும்பொறையைக் கண்டால் தம் வறுமை ஒழியும் என்னும் ஆர்வத்தால் மோசிகீரனார் காடு மலைகளை எல்லாம் கடந்து சென்றார்; சேர நாட்டை அடைந்து மன்னன் அரண்மனையை அணுகினார்; உடனே அரசனைக் காணவிழைந்து உள்ளே சென்றார். ஐயோ பாவம்! அவர் விருப்பம் நிறைவேறவில்லை. வேந்தன் வீரமுரசின் நீராட்டு விழாவுக்குச் சென்றிருந்தான். அதனால் அரண்மனைக் காவலர், 'அரசர் விரைவில் வந்துவிடுவார்; அவர் வரும்வரை தாங்கள் இங்கேயே இருக்கலாம்,' என்று பணிவுடன் கூறினர்.

புலவர் வேறு வழியின்றி அங்கேயே தங்கிச் சற்று இளைப்பாற எண்ணினார். அடுத்த அறையில் ஒரு பெரிய கட்டில் இருந்தது. அதன்மீது எண்ணெயின் நுரையை முகந்து பரப்பியதுபோன்ற வெண்மையான பஞ்சணை இடப்பட்டிருந்தது. புலவர் அக்கட்டிலில் அமர்ந்தார். அதன் மென்மைத் தன்மையாலும் நடந்துவந்த களைப்பாலும் அமர்ந்த சிறிது நேரத்திற்கெல்லாம் அவர் அயர்ந்து உறங்கிவிட்டார்.

முரசு நீராட்டு விழாவுக்காகச் சென்றிருந்த இரும்பொறை அதனை நீராட்டி, மலர் சூட்டி, யானை மீதேற்றி நகர்வலமாக அரண்மனைக்குக் கொண்டு வந்தான். முரசு என்பது ஒருவகைப் பறை. அக்காலத்தில் அஃது அரசச் சின்னங்களில் ஒன்றாக மதிக்கப்பட்டது. அதற்கு இழுக்குச் செய்பவர் அரசனுக்கு இழுக்குச் செய்தவராகவே கருதப்படுவர். அவர்களுக்கு மரண தண்டனை

தப்பாது. அரச குடும்பத்தில் திருமணம் நடக்கும் நாளிலும் போர் நடக்கும்போதும் திருவிழாக் காலங் களிலும் மட்டுமே அம்முரசு முழங்கும். ஏனைய நாள் களில் அதனை ஒரு பெரிய இருக்கையில் வைத்து வழி பாடு செய்வர். அந்த இருக்கைக்கு முரசு கட்டில் என்பது பெயர். நன்னாள்களில் முரசை நீராட்டி நகர்வலம் செய்விப்பது வழக்கம்.

அங்ஙனம் முரசை நீராட்டிக்கொணர்ந்த இரும் பொறையும் அமைச்சர் முதலியவர்களும் முரசு கட்டிலை நெருங்கினார்கள். அக்கட்டிலில் மெலிந்த மேனியுடன் கந்தலாடை உடுத்தி ஒருவர் உறங்கிக்கொண்டிருப் பதைக் கண்ட வேந்தன் திடுக்கிட்டான்; கடுஞ்சினம் கொண்டான். 'முரசு கட்டிலை மாசு படுத்தியவனைக் கொன்று வீழ்த்துவேன்!' என்று வாளை உருவிப் பாய்ந் தான். கட்டிலை நெருங்கியவுடன் வேந்தன் கை நடுங் கியது. அவனையும் அறியாமல் வாள் நழுவி விழுந்தது. உறங்குபவர் ஒரு புலவர் என உணர்ந்தமையாலேயே இரும்பொறை அங்ஙனம் நடுங்கினான்.

மனம் பதறிய மன்னவன், 'அந்தோ! ஆத்திரத்தில் அறிவிழந்து ஓர் அருந்தமிழ்ப் புலவரைக் கொல்ல இருந் தேனே! இவருடைய தோற்றமே இவர் ஒரு தண்டமிழ்ப் புலவர் என்பதை உணர்த்துகிறதே! நல்ல வேளை! ''பெருஞ்சேரல் இரும்பொறை தமிழ்ப் புலவர் ஒருவரைக் கொன்றவன்,'' என்னும் பழியிலிருந்து தப்பினேன்' என்று மன அமைதிகொண்டான். வாளை உருவிய கையில் கவரிகொண்டு மோசிகீரனார் நன்கு உறங்கு மாறு தானே வீசி நின்றான். மன்னன் செயல் கண்டு மற்றவர் வியந்து நின்றனர்.

குளிர்ந்த காற்றுப் பட்டதால் மோசிகீரனார் துயில் கலைந்து மெல்லக் கண்விழித்தார்; மன்னன் கவரி வீசி நிற்பதைக் கண்டு துணுக்குற்றார். வாயிலில் யானைமீதுள்ள முரசினையும் அமைச்சர் முதலியோர் சூழ்ந்திருப்பதனையும் கண்ட அவருக்கு உண்மை விளங் கியது. தாம் உறங்கியது முரசு கட்டில் என்பதனை

உணர்ந்த அவர் உடல் நடுங்கியது. கவரி வீசிய காவலன் செயல் அவரது உள்ளத்தை உருக்கியது.



தாம் செய்த பெரும் பிழையை எண்ணி வருந்திய மோசிகீரனார் இரும்பொறையை நோக்கி, 'அரசே! நான் இது முரசு கட்டில் என்பதை அறியாமல் இதன் மீது படுத்து உறங்கிவிட்டேன். முரசு கட்டிலுக்கு இழுக்குச் செய்த என்னைக் கொல்லாதுவிட்டது ஒன்றே நின் தமிழ்ப்பற்றைப் புலப்படுத்தப் போதுமானதன்றோ? கவரிகொண்டு வீசி நிற்கவும் வேண்டுமோ? நீ செய்த இவ்வரிய செயல் தமிழன்னைக்குச் செய்த சிறப்பே யாகும். நீ நீடு வாழ்க,' என்று அகம் குளிர முகம் மலர வாழ்த்தினார்.

புலவரின் புகழுரை கேட்ட மன்னன் மகிழ்ந்தான். அவன், 'புலவர் பெருமானே! தங்கள் நல்வாழ்த்துக்கு நன்றி. தங்கட்குத் தொண்டு செய்ய நான் நல்வினை செய்திருக்கவேண்டும்,' என்று இன்மொழி கூறி அள வளாவினான்; அவருக்கு விருந்து நல்கி மகிழ்வித்தான்; பின்னர் அவர் வறுமை நிலை அறிந்து பொன்னும் பொருளும் பரிசாக வழங்கி வழி அனுப்பினான். புலவரும் புரவலனை வாழ்த்தி விடைபெற்றுத் தம் ஊர் திரும்பி இன்பமாக வாழ்ந்தார். இரும்பொறை போன்ற மன்னர்

களால்தான் அக்காலத்தே தமிழ் வளர்ந்தது; தமிழ் நாட்டிற்கும் பெருமை ஏற்பட்டது.

அருஞ்சொற்பொருள்

ஈரம் - இரக்கம்; ஈகை - கொடை; விழைந்து - விரும்பி; அயர்ந்து - சோர்ந்து; சின்னம் - அடையாளம்; இழுக்கு - குற்றம்; இருக்கை - இருப்பிடம், ஆசனம்; மாசுபடுத்தியவன்- தூய்மைகெடச் செய்தவன்; காவலன் - அரசன்; தண்டமிழ் - (தண்மை + தமிழ்) குளிர்ச்சியான தமிழ்; துயில் - உறக்கம்; துணுக்குற்றார் - நடுங்கினார்; அளவளாவினான் - மனம் கலந்து பழகினான்; புரவலன் - அரசன்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. பெருஞ்சேரல் இரும்பொறையின் ஈகைச் சிறப்பை விளக்குக.
2. மோசிகீரனார் என்பவர் யார்? அவர் சேரநாடு சென்றது ஏன்?
3. மோசிகீரனார் அறியாமல் செய்த பிழை யாது?
4. முரசு என்பது யாது? அதன் சிறப்புகள் யாவை?
5. இரும்பொறையின் தமிழ்ப்பற்றினை விளக்கும் நிகழ்ச்சியை எழுதுக.
6. மோசிகீரனார் பெருஞ்சேரல் இரும்பொறையை எங்ஙனம் வாழ்த்தினார்?

II. பிரித்து எழுதுக:

சொல்லழகு, நானூறு, பொருட்செல்வம், நன்னாள்.

III. சேர்த்து எழுதுக:

அங்கு + சென்றார் = அங்குச் சென்றார்
அப்படி + படி = அப்படிப் படி
இங்கு + செய்தார் =
எங்கு + கண்டீர் =
இப்படி + கொடு =
எப்படி + தந்தாய் =

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

சொல்லழகும் பொருளழகும், பழுத்த மரத்தை நாடிச் செல்லும் பறவைபோல, அரசச் சின்னம், அளவளாவினான்.

V. வேறுபாடு அறிக:

அறை - அரை, அறம் - அரம், வாள் - வால், கொள்ளல் - கொல்லல், மனை - மணை, மணம் - மனம்.

இலக்கணம்

உயிர் எழுத்துகள்

அரசன், ஆட்சி, இரும்பொறை, ஈகை—இச்சொற்களில் உள்ள முதல் எழுத்துகள் யாவை? அ,ஆ,இ,ஈ என்பன அல்லவா? இவை உயிர் எழுத்துகள் எனப்படும். உயிர் தனித்தும் இயங்கும்; உடலோடு சேர்ந்தும் இயங்கும். இவ்வெழுத்துகள் தனித்தும் க்+அ=க என மெய்யுடன் சேர்ந்தும் இயங்கும். இவ்வெழுத்துகள் இல்லாமல் சொற்கள் உண்டாகமாட்டா. இவை தமிழுக்கு உயிர்போன்ற எழுத்துகளாம். ஆதலால், இவற்றுக்கு உயிர் எழுத்துகள் என்று பெயர் வழங்குகிறது.

அ,ஆ,இ,ஈ,உ,ஊ,எ,ஏ,ஐ,ஒ,ஓ,ஔ என்னும் பன்னிரண்டு எழுத்துகளும் உயிர் எழுத்துகளாம்.

அரசன் என்பதில் 'அ' என்னும் எழுத்தையும், ஆட்சி என்பதில் 'ஆ' என்னும் எழுத்தையும் ஒலித்துப் பாருங்கள். 'அ' என்னும் எழுத்தை ஒலிக்கக் குறைந்த நேரமும், 'ஆ' என்னும் எழுத்தை ஒலிக்கச் சிறிது நீண்ட நேரமும் ஆகின்றன அல்லவா?

'அ' என்னும் எழுத்தை ஒலிக்க ஒரு நொடி நேரம் ஆகும். அது குறுகி ஒலிப்பதால் குறில் அல்லது குற்றெழுத்து எனப்படும். 'ஆ' என்னும் எழுத்தை ஒலிக்க இரண்டு நொடி நேரம் ஆகும். அது நீண்டு ஒலிப்பதால் நெடில் அல்லது நெட்டெழுத்து எனப்படும்.

உயிர் எழுத்துகளில் குறுகி ஒலிக்கும் எழுத்துகள் யாவை? அ,இ,உ,எ,ஒ என்பன குறுகி ஒலிக்கின்றன அல்லவா? இவ்வைந்தும் உயிர்க் குற்றெழுத்துகளாம்.

ஆ,ஈ,ஊ,ஏ,ஐ,ஓ,ஔ என்னும் ஏழு எழுத்துகளும் நீண்டு ஒலிப்பதால் உயிர் நெட்டெழுத்துகளாம்.

பயிற்சி

பின்வரும் சொற்களில் உள்ள உயிர்க் குற்றெழுத்துகளையும் உயிர் நெட்டெழுத்துகளையும் எடுத்து எழுதுக:

ஒருவன், உருவி, ஈரம், ஆத்திரம், இன்பம், அவர், எங்கு, ஐயோ, ஏவல், ஔவை, ஓவியம்.

3. தந்தையன்பு

மதுரை மாநகரை அடுத்த சிற்றூர் ஒன்றில் **அன்பரசர்** என்னும் செல்வர் ஒருவர் வாழ்ந்துவந்தார். அவர் பெயருக்கு ஏற்ப அனைவரிடத்தும் அன்பாகப் பழகுபவர்; இன்சொல் பேசுபவர்; உற்றார்க்கு உதவும் உயர்குணம் கொண்டவர். அவருக்கு ஏராளமான பொன்னும் பொருளும் நிலபுலன்களும் இருந்தன. பணியாளர் பலர் இருந்தனர்.

அன்பரசருக்கு மக்கள் இருவர் இருந்தனர். மூத்தவன் பெயர் **எழில்வாணன்**; இளையவன் பெயர் **இன்பவாணன்**. எழில்வாணன் தந்தையாரைப்போல அன்பும் அடக்கமும் உடையவன். இளையவனாகிய இன்பவாணனோ பிறந்தவுடன் தாயை இழந்துவிட்டமையால் செல்லமாக வளர்க்கப்பட்டான். அதனால், அவன் முரட்டுக் குணமும் பிடிவாதமும் உடையவனாக இருந்தான். எல்லாம் தனக்கே வேண்டும் என்னும் பேராசையும் தன்னலமும் அவனிடம் குடிகொண்டிருந்தன.

ஆண்டுகள் பல சென்றன. இன்பவாணன் கல்வி கற்கும் பருவம் அடைந்தான். தந்தை அவனைப் பள்ளியில் சேர்த்தார். ஆனால், அவன் மனம் கல்வியில் ஈடுபடவில்லை. அவனுக்குத் தீயவர் பலர் நண்பராயினர். இன்பவாணன் அவர்களுடன் சேர்ந்து ஊர் சுற்றுவதிலும், வேடிக்கை விளையாட்டுகளிலும் வீண் காலம் கழித்துவந்தான். அன்பரசர் அவனுடைய தீய குணங்களைக் கண்டு வருந்தினார்; அவனுக்கு அறிவுரைகள் பல கூறினார். ஆனால், அவை விழலுக்கு இறைத்த நீர்போலப் பயனற்றுவிட்டன.

இன்பவாணன் தன் மனம்போன போக்கிலேயே நடந்துவந்தான். வயது முதிர முதிர அவனுடைய தீய பழக்கங்கள் பெருகின. அவனுடைய தீய நண்பர்கள் அவனிடம் மிகவும் அன்புடையவர்களைப்போல நடித்துப் பணம் பறித்து ஆடம்பரமாகச் செலவு செய்தார்கள்;

அதற்காக இன்பவாணனைப் பலவிதமான தீய வழிகளில் ஈடுபடுத்தினார்கள். நாளுக்குநாள் அவன் கொடியவனாக மாறிவருவதை அறிந்த அன்பரசர் அவனை மிகவும் கண்டித்துத் திருத்த முயன்றார். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?'

தந்தையின் கண்டிப்பு இன்பவாணனுக்கு எரிச்சல் ஊட்டியது. எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல அவனுடைய நண்பர்கள் வேறு அவனைத் தூண்டிவிட்டார்கள். அவர்களின் தூண்டுதலின்படி இன்பவாணன் ஒருநாள் தன் தந்தையைப் பார்த்து, 'நம் குடும்பச் சொத்தில் எனக்குரிய பாகத்தைப் பிரித்துக் கொடுத்துவிடுங்கள். நான் தனியாக வாழ விரும்புகிறேன்,' என்று கூறினான். அதுகேட்டு அன்பரசர் மிகவும் வருந்தினார்; அவனுக்கு நன்மதி பல நவின்றார்; பிரிந்து செல்வதால் ஏற்படும் இன்னல்களை எடுத்துரைத்தார். முரட்டுக் குணம் படைத்த இன்பவாணன் அவர் கூறிய அன்புரைகளைப் பொருட்படுத்தவில்லை; தன் பங்கைப் பிரித்துக் கொடுக்குமாறு பிடிவாதம் செய்தான். அன்பரசர் வேறு வழியின்றித் தமக்கு உரிமையான செல்வம் முழுவதையும் வேறுபாடு இல்லாமல் சமமாகப் பங்கிட்டு அவனுக்குரிய பங்கினைத் தந்தார்; அதனை வைத்துக்கொண்டு நல்ல முறையில் வாழுமாறு கூறினார்.

பொருளைப் பெற்றுக்கொண்ட இன்பவாணன் புது வாழ்வு பெற்றதுபோல மகிழ்ந்தான்; தந்தையார் கூறிய அறிவுரைகளைப் புறக்கணித்துத் தன் நண்பர்களுடன் மதுரை மாநகருக்குச் சென்றான்; மனம்போனபோக்கில் செல்வத்தைச் செலவழித்தான். தந்தையார் அறவழியில் தேடிய செல்வம் எல்லாம் தீய வழிகளில் தேயத் தொடங்கியது. 'குந்தித் தின்றால் குன்றும் மாளும்' அன்றோ? விரைவிலேயே இன்பவாணன் தன் செல்வத்தை எல்லாம் இழந்து வறியவனானான்.

இன்பவாணனிடம் பொருள் இருந்தவரை அவனுடைய நண்பர்கள் அவனைப் புகழ்ந்து பொருள் பறித்து

வாழ்ந்துவந்தார்கள்; இன்பவாணன் ஏழையானவுடன் 'அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்' அவனை விட்டு நீங்கினார்கள். அதனால் அவன் செய்வதறியாது விழித்தான். கல்வியறிவோ கைத்தொழில் திறமையோ இல்லாத அவன் பிழைப்புக்கும் வழியின்றி அலைந்தான்; ஆதரிப்பவர் ஒருவரும் இல்லாமல் உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றித் துன்பப்பட்டான். அதனால் அவன் உழவன் ஒருவனிடம் மாடு மேய்க்கும் வேலையைச் செய்து வாழ்ந்துவந்தான்.

அப்போது நாட்டில் தொடர்ந்து வானம் மழை பொழியத் தவறியதால் பெரும் பஞ்சம் ஏற்பட்டது. மக்கள் வயிறார உண்ண உணவும், பருக நீரும் இல்லாமல் துன்பப்பட்டார்கள். செல்வர்களுக்கே போதிய உணவு கிட்டவில்லை என்றால் ஏழை இன்பவாணனுக்கு எங்கே உணவு கிடைக்கும்? அவன் தன்னை வருத்தும் பசியைப் போக்க வழியின்றி மாடுகளுக்கு வைக்கும் தவிட்டைத் தின்று வாழலானான்.

நாளடைவில் பஞ்சம் மேலும் கடுமையாகிவிட்டது. இன்பவாணன் உண்பதற்குத் தவிடும் கிடைக்காமல் வருந்தினான். அப்போதுதான் அவனுக்குப் புத்தி வந்தது. அவன் தான் செய்த தீச்செயல்களை எண்ணி எண்ணி உள்ளம் புழுங்கினான். 'தீயவர் சேர்க்கையால் அன்புமிக்க தந்தை கூறிய அறிவுரைகளைக் கேளாமல் கெட்டேனே! என் வீட்டில் பணியாளர் பலர் உண்டு ஏப்பமிட்டு இன்புற்று வாழ, நான் ஒருவேளை உணவும் இல்லாமல் பசியால் வருந்தித் துடிக்கிறேனே! என்னே என் மடமை!' என்று எண்ணி வேதனைப்பட்டான்; தன் தவற்றுக்குச் சரியான தண்டனை கிடைத்துவிட்டதாகக் கருதினான்.

இங்ஙனம் தன் தவறு உணர்ந்து வருந்திய இன்பவாணன் தன் தந்தையிடமே மீண்டு செல்ல முடிவு செய்தான்; அவர் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்டால் தன்னிடம் அன்புகாட்டி ஆதரிப்பாரேயல்லாமல் புறக்கணிக்கமாட்டார் என்று உறுதியாய்

நம்பினான். தந்தையின் பாசம் முன்னிழுத்துச் செல்ல, பசி பின்னிருந்து செலுத்த அவன் உடனே தன் ஊருக்குப் புறப்பட்டான்.

இன்பவாணன் பிரிந்து சென்றதுமுதல் அன்பரசர் மிகவும் வருந்திக்கொண்டிருந்தார். தீயவருடன் சேர்ந்து தன் மகன் எவ்வாறு துன்பப்படுகிறானோ என்று மிகவும் கவலைப்பட்டார்; அவன் மனம் மாறித் திரும்பி வந்துவிடமாட்டானா என்று ஏங்கினார். அந்த ஏக்கத்தினால் அவர் உடலும் இளைத்துவிட்டது. ஆண்டுகள் சில கழிந்தும் இன்பவாணன் திரும்பவே இல்லை. எனினும், என்றாவது ஒருநாள் அவன் வருவான் என்று நம்பி அன்பரசர் வழிமேல் விழி வைத்துக் காத்திருந்தார்.

அவர் நம்பிக்கை வீணாகவில்லை. ஒருநாள் இன்ப வாணன் திரும்பிவந்தான். தன் இளைய மைந்தன் வருவதைக் கண்ட அன்பரசர் எதிர்கொண்டு ஓடி, அவனை மார்புறத் தழுவி, உச்சிமோந்து, இன்பக் கண்ணீர் சொரிந்தார். மைந்தன் எத்தனை பிழை செய்தாலும் தந்தையின் பாசம் குறைவதுண்டோ? 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்?' என்பது வள்ளுவர் வாக்கன்றோ?

தந்தையின் பேரன்பைக் கண்ட இன்பவாணனின் உள்ளம் உருகியது; கண்ணீர் பெருகியது. அவன் தந்தையாரின் காலில் விழுந்து, 'அருமைத் தந்தையே! நான் தங்கள் மனம் வருந்துமாறு பெருந்தவறு செய்து விட்டேன்; தங்கள் மைந்தன் என்று உரிமை கொண் டாடும் தகுதி எனக்கு இல்லை. என்னை மன்னிக்க மனம் இருந்தால் என்னைத் தங்கள் பணியாளர்களுள் ஒருவனாக ஏற்று ஆதரிக்க வேண்டுகிறேன்,' என்று வாய்விட்டுப் புலம்பினான்.

அன்பரசர் அவனை வாரி எடுத்து, 'மகனே! வருந் தாதே. நீ மனம் திருந்தி மீண்டும் வந்ததனால் நான் அடையும் இன்பத்துக்கு எல்லை இல்லை. இனி, உனக்கு

எந்தக் குறையும் நேராது. நீ இன்பமாக வாழ்வாய்,' என்று வீட்டினுள் அழைத்துச் சென்றார். அவனை நீராட்டி நல்ல ஆடைகளை அணிந்துகொள்ளச் செய்தார்; அறுசுவை உணவினை அன்புடன் ஊட்டினார்; மாண்டவன் மீண்டதுபோன்ற மகிழ்ச்சியினால் உற்றார் உறவினர்கட்கெல்லாம் விருந்தளித்து இன்புற்றார்.

இன்பவாணன், தந்தையின் அன்புச் செயல்களை எண்ணி நாணினான்; 'தீயவர் சேர்க்கையால் இத்தகைய நல்லவரின் மனத்தைப் புண்படுத்திவிட்டோமே,' என்று எண்ணி வேதனைப்பட்டான். அது முதல் தந்தை சொல்லைத் தட்டாது அவரைத் தெய்வமாய் மதித்து வாழ்ந்துவந்தான். தம்பியின் மனமாற்றம் அறிந்து எழில்வாணனும் உள்ளம் உவந்தான். உடன் பிறந்தார் இருவரும் அன்பரசரின் இருவிழிகளாய் விளங்கினர்; 'ஏவா மக்கள் மூவா மருந்து' என்ற பொன்மொழிக்கு ஏற்பத் தந்தையாரின் விருப்பத்தைக் குறிப்பால் உணர்ந்து அதனை நிறைவேற்றினர். அதனால், 'இவன் தந்தை என் நோற்றான் கொல்,' என ஊரவர் புகழ உயர் வாழ்வு வாழ்ந்தனர்.

மாணவச் செல்வங்களே! தீயவர் சேர்க்கை தீமையே தரும் என்பதும், மனம்போன போக்கெல்லாம் போகக் கூடாது என்பதும் இன்பவாணன் கதையால் விளங்குகின்றன அல்லவா? ஆதலால், நீங்கள் மனம்போன போக்கில் நடவாமல், பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து நடந்தால் என்றும் இன்பமாக வாழலாம்.

அருஞ்சொற்பொருள்

உற்றார்க்கு - துன்பப்பட்டவர்க்கு; குடிகொண்டு இருந்தன - பொருந்தி இருந்தன; விழல் - பயன்படாத ஒருவகைத் தாவரம்; இன்னல் - துன்பம்; வறியவன் - ஏழை; புறக்கணிக்கமாட்டார் - விலக்கமாட்டார்; தாழ் - தாழ்ப்பாள்; நாணினான் - வெட்கமடைந்தான்; சேர்க்கை - நட்பு, தொடர்பு; மூவா - அழியாமைக்குக் காரணமாகிய.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. அன்பரசரின் நற்பண்புகள் யாவை?
2. எழில்வாணன், இன்பவாணன் ஆகியவர்களின் இயல்புகளை எழுதுக.
3. அன்பரசர் மனம் வருந்தக் காரணம் யாது?
4. இன்பவாணன் எவ்வாறு கொடியவனாக மாறினான்?
5. இன்பவாணன் வறியவனாகக் காரணம் யாது?
6. வறுமையடைந்த இன்பவாணன் பட்ட துன்பங்கள் யாவை?
7. துன்பமுற்ற இன்பவாணன் தனக்குள் யாது கூறி வருந்தினான்?
8. 'அன்பிற்கும் உண்டோ அடைக்கும் தாழ்' என்னும் வள்ளுவர் வாக்கு அன்பரசர் வாழ்வில் எவ்வாறு உண்மையாயிற்று?
9. தந்தையாரை நோக்கி இன்பவாணன் என்ன வேண்டினான்?
10. மனம் திருந்திய மைந்தனை நோக்கித் தந்தையார் யாது கூறினார்? அவனை எங்ஙனம் சிறப்பித்தார்?

II. பிரித்து எழுதுக:

பேராசை, பயனற்று, அன்புரை, செய்வதறியாது.

III. சேர்த்து எழுதுக:

கல்வி + அறிவு =
வழி + இன்றி =
தீமை + செயல் =
பின் + இருந்து =

IV. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

மனம்போன போக்கில், வயிறார, புறக்கணிக்க, உச்சி மோந்து, வழிமேல் விழிவைத்து.

V. இப்பாடத்தில் வரும் பழமொழிகளை எடுத்து எழுதுக.

VI. இப்பாடத்தில் வரும் உவமைத் தொடர்களை எடுத்தெழுதி, அவற்றின் பொருள் விளங்குமாறு வாக்கியங்களில் அமைத்து எழுதுக.

இலக்கணம்

மெய்யெழுத்துகள்

அன்பரசருக்கு மக்கள் இருவர் இருந்தனர்.

இவ்வாக்கியத்தில் சில எழுத்துகள் மேலே புள்ளிபெற்றுள்ளன அல்லவா? அவற்றைமட்டும் தனியாக ஒலித்துப்பார். அவை தனியாக ஒலிக்கமாட்டா. இன், இக், இர், இந் என்று உயிரெழுத்து உடன் சேர்ந்தால்தான் ஒலிக்கும். இவ்வெழுத்துகள் உயிர் இல்லாமல் இயங்காத உடம்பு போன்றவை. எனவே, இவை மெய்யெழுத்துகள் எனப்படும். மெய்—உடம்பு. இவற்றுக்கு ஒற்று, உடம்பு என்னும் வேறு பெயர்களும் உண்டு.

தமிழில் மேலே புள்ளியிட்டு எழுதும் எழுத்துகள் எவை? க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் என்னும் பதினெட்டு எழுத்துகளும் மேலே புள்ளியிட்டு எழுதப்படுகின்றன அல்லவா? இப்பதினெட்டும் மெய்யெழுத்துகளாம்.

மக்கள், எரிச்சல், விளையாட்டு
வருத்தம், பிழைப்பு, பெற்றோர்

இச்சொற்களில் உள்ள புள்ளியுள்ள எழுத்துகளை உச்சரித்துப் பாருங்கள். இவ்வெழுத்துகள் சற்று வன்மையாக ஒலிக்கின்றன அல்லவா? ஆதலால் க், ச், ட், த், ப், ற் என்னும் இந்த ஆறு மெய்யெழுத்துகளும் வல்லினம் எனப்படும். இவற்றுக்கு வலி, வன்கணம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

இங்ஙனம், பஞ்சம், எண்ணம்
ஐந்து, ஐம்பது, குன்று

இச்சொற்களில் உள்ள புள்ளியுள்ள எழுத்துகளை ஒலித்துப் பாருங்கள். இவை மென்மையாக ஒலிக்கின்றன அல்லவா? ங், ஞ், ண், ந், ம், ன் என்னும் இந்த ஆறு மெய்யெழுத்துகளும் மெல்லினம் எனப்படும். இவற்றுக்கு மெலி, மென்கணம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

செய்தார், மார்பு, செல்வம்
அவ்வழி, வாழ்வு, உள்ளம்

இச்சொற்களில் உள்ள புள்ளியுள்ள எழுத்துகளை ஒலித்துப் பாருங்கள். இவை வன்மையாகவும் இல்லாமல், மென்மையாகவும் இல்லாமல் இடைத்தரமாக ஒலிக்கின்றன அல்லவா? ய், ர், ல், வ், ழ், ள் என்னும் இந்த ஆறு மெய்யெழுத்துகளும் இடையினம் எனப்படும். இவற்றுக்கு இடை, இடைக்கணம் என்னும் வேறு பெயர்களும் உண்டு.

எனவே, மெய்யெழுத்துகள் வல்லினம், மெல்லினம், இடையினம் என மூவகைப்படும்.

தமிழ்மொழியில் சொல்லுக்கு முதலில் மெய்யெழுத்துகள் வாரா. சொல்லின் இடையிலும் இறுதியிலுமே வரும். வல்லின மெய் சொல்லின் இறுதியில் வருவதில்லை. மெல்லின, இடையின மெய்களே சொல்லின் இறுதியில் வரும்.

உரிஞ், வெரிந், கண், நகம், பொன்,
நாய், பலர், வேல், தெவ், தமிழ், பொருள்

பயிற்சி

பின்வரும் சொற்களில் உள்ள வல்லின, மெல்லின, இடையின மெய்யெழுத்துகளைக் கட்டத்தில் எடுத்து எழுதுக:

அடுத்த, உதவும், பெயர், பயனற்று, அன்பு, பிரிந்து, உரைத்தார், மகிழ்ந்தான், தொழில், ஊருக்கு, உள்ளம், தம்பி, தங்கள், கீழ்ப்படிந்து.

வல்லினம்	மெல்லினம்	இடையினம்

4. காவிரி வழங்கும் கவின்மிகு காட்சிகள்

ஆறுகள் ஒரு நாட்டின் வளத்துக்கும் நாகரிகத்துக்கும் அடிப்படையாய் அமைவதுடன் அழகுக்கும் காரணமாக உள்ளன. 'ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்' என்பது ஔவையாரின் அமுதமொழி. ஆறுகள் அருவியாய் விழுவதும், வளைந்து நெளிந்து ஓடுவதும், வயல்களை வளப்படுத்திப் பசுமை குலுங்கச் செய்வதும் கண்களுக்குப் பெருவிருந்தாகும். தென்னாட்டின் செல்வமாக விளங்கும் காவிரியின் போக்கில் அத்தகைய கவின்மிகு காட்சிகள் பல காணப்படுகின்றன.

காவிரி குடகுப்பகுதியில் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள **சைய மலை** என்னும் குன்றில் தோன்றுகிறது. காவிரி ஊற்றாய்ச் சுரக்கும் அவ்விடத்தில் சதுரமான குளம் ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. அக்குளத்தில் சிறிதளவே நீர் நிரம்பி யிருக்கும். எஞ்சிய நீர் எல்லாம் வழிந்தோடிவிடும். அக்குளத்தின் கரையில் காவிரியைத் தெய்வமாக மதித்து ஒரு கோயிலும் அமைத்துள்ளனர். காவிரி தோன்றும் அவ்விடம் **தலைக் காவிரி** என வழங்கப் படுகிறது.

தலைக் காவிரியிலிருந்து வழியும் நீர் மலைச் சரிவு களில் பல பிரிவுகளாக ஓடிப் **பாக மண்டலம்** என்னும் இடத்தில் ஆறாக உருப்பெறுகிறது. அங்கிருந்து காவிரி மைசூரை நோக்கிப் பாய்கிறது. குடகு, மலைநிலமாதலால், அங்குக் காவிரி ஒரு குமரிப் பெண்ணைப்போலக் குதித்தும் தவழ்ந்தும் ஓடிவரும் காட்சி உள்ளத்தைக் கொள்ளைகொள்ளும்.

காவிரி மைசூரை நோக்கி வரும் வழியில் **ஏமாவதி, இலட்சுமண தீர்த்தம்** என்னும் இரண்டு ஆறுகள் காவிரியுடன் கலக்கின்றன. அதனால், மும்மடங்காகப் பெருகிய காவிரியின் குறுக்கே பெரிய அணை ஒன்று கட்டப்

பட்டுள்ளது. அந்த அணைக்குக் **கண்ணம்பாடி** அணை என்பது பெயர். அந்த அணையினால் காவிரி நீர் கடல் போல் தேங்கி நிற்கிறது. அதனால் அந்த நீர்த்தேக்கம் **கிருஷ்ணராஜ சாகரம்** என்று வழங்கப்படுகிறது. அந்த அணையால் கருநாடக மாநிலம் அடையும் நன்மைகள் அளவற்றவை.

இயற்கை அழகுமிக்க அந்த இடத்தில் அழகுக்கு அழகு செய்வதுபோலப் **பிருந்தாவனம்** என்னும் பூங்கா ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. பல அடுக்குகளாக அமைந்துள்ள அப்பூங்காவில் அகலமான படிகளின் வழியே காவிரிநீர் மேலிருந்து தவழ்ந்து வருகிறது. ஒவ்வொரு படியின்கீழும் கண்ணைக்கவரும் வண்ண மின்விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. அவ்விளக்கு ஒளியில் காவிரிநீர் ஓரிடத்தில் குங்குமத்தைக் கரைத்து ஊற்றினாற்போலக் காட்சி தருகிறது; மற்றோர் இடத்தில் பச்சை மரகதத்தைப் பொடிசெய்து பரப்பியது போலத் தோன்றுகிறது; பிறிதோரிடத்தில் நீலநிற வானமே மண்ணில் தவழ்வதுபோல வியப்பூட்டுகிறது.

மேலும் அத்தோட்டம் முழுவதும் பசும் பட்டாடையை விரித்துப் பரப்பியதுபோலப் பசுமையான புற்கள் மெத்தென வளர்ந்துள்ளன. ஆங்காங்கே பல வண்ண நீரூற்றுகள் அடிக்கடி நிறம் மாறிப் பல நிற மணிகளை வாரி இறைப்பதுபோல நீர்த்துளிகளைச் சிதறுகின்றன. செடி கொடிகளை வளர்த்து மான் போலவும் மயில்போலவும் யானைபோலவும் பல வடிவங்களில் அழகாகக் கத்தரித்து வைத்துள்ளனர். வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் செடி, கொடிகள் கண்ணுக்கு விருந்தளிக்கின்றன. இங்ஙனம் இயற்கை அழகு வாய்ந்த இந்த இடத்தைக் கலைத்திறம் வல்லார் செயற்கை நலமும் வாய்ந்ததாகச் சித்திரித்துள்ளனர். அதனால் எழில் கொஞ்சும் அத்தோட்டத்தைக் காண்பவர், 'பூலோக சுவர்க்கமோ இஃது!' என்று மயங்கி நிற்பர்.

அடுத்துக் காவிரியின் போக்கில் இயற்கை அன்னை களிநடமிடும் காட்சியைச் சிவசமுத்திரத்தில் காணலாம். அங்குக் காவிரி இரு கிளைகளாகப் பிரிந்து எழுபத்தைந்து மீட்டர் உயரத்திலிருந்து அருவியாய் விழுகிறது. மேற்கில் உள்ள அருவி ககனசுகி என்றும் கிழக்கில் உள்ள அருவி பார்சுகி என்றும் வழங்கப்படுகின்றன.



ககனசுகி அச்சம் தரும் தோற்றமுடையது. அது மூன்று பிரிவாகப் பிரிந்து விழுகிறது. ஒன்று சரிவாகவும் மற்றொன்று பாதி செங்குத்தாக விழுந்து சிறிது தூரம் ஓடி மீண்டும் செங்குத்தாகவும், மூன்றாவது முழுவதும் செங்குத்தாகவும் விழுகின்றன. அவை இயற்கை அன்னை அணிந்த பூமாலைகளைப்போலக் காட்சி தருகின்றன. பார்சுகி மிகவும் அமைதியானது.

ஏறக்குறைய நானூறு மீட்டர் அகலத்துக்கு வெண்ணிறத் துணியை விரித்துப் பரப்பியதுபோல விழும் இவ்வருவியைக் காண்பவர் தம்மையே மறந்துவிடுவர்.

இங்ஙனம் பார்த்தவரைப் பரவசப்படுத்திய காவிரியின் அடுத்த காட்சி திகைப்பூட்டுவதாகும். காவிரி கருநாடக எல்லையை விட்டு நீங்கும் இடத்தில் இரு புறமும் மலைச் சரிவுகளுக்கு இடையில் பாய்கிறது. அங்குக் காவிரியை ஓர் ஆடுகூடத் தாண்டிவிடலாம். அதனால் அவ்விடத்திற்கு **ஆடு தாண்டும் காவிரி** எனப் பெயர் வழங்குகிறது. அதையடுத்துத் தமிழக எல்லைக்குள் ஒகெனகல் **நீர்வீழ்ச்சி** உள்ளது. இவ்வருவி மக்கள் நீராடி இன்புறுவதற்கு ஏற்றதாக இருப்பதால் ஒகெனகல் இன்பப் பொழுதுபோக்குக்கு ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

காவிரி தமிழகத்தில் ஓடிவரும்போது சேலத்துக்கு அருகே மேட்டூர் என்னும் இடத்தில் **சீதாமலை, பாலமலை** என்னும் இரு மலைகளுக்கிடையே பாய்கிறது. காவிரிக்குக் கரைபோல் அமைந்த அந்த இரு மலைகளும் ஓரிடத்தில் ஒன்றுகூடுவதுபோல் நெருங்கியுள்ளன. அங்குக் காவிரியின் குறுக்கே ஒரு பெரிய அணைகட்டி நீரைத் தேக்கியுள்ளனர். அதுவே புகழ்பெற்ற **மேட்டூர் நீர்த்தேக்கம்** ஆகும். அந்த நீர்த்தேக்கத்தின் உதவியால் தஞ்சை, திருச்சி மாவட்டங்கள் வயல் வளத்தில் சிறந்து விளங்குகின்றன. பெருமளவு மின்சாரமும் உற்பத்தி செய்யப்படுகிறது.

மேட்டூர் அணையைத் தாண்டியவுடன் **பவானி, அமராவதி** போன்ற பல ஆறுகள் காவிரியுடன் கலக்கின்றன. அதனால் காவிரி வரவர உருவில் பெரிதாய்க் காட்சி தருகிறது. காவிரியின் பேருருவைத் திருச்சிக்கு மேற்கில் உள்ள இலமனூரில் காணலாம். இங்குக் காவிரி கண்ணுக்கெட்டிய தொலைவுவரை ஒரே நீர்ப்பரப்பாகக் காட்சி தருகிறது. இவ்விடத்தை அடுத்துக் காவிரியிலிருந்து முதன்முதலாகக் கொள்ளிடம்

என்னும் ஆறு பிரிகிறது. அதனால் பிரிவுபடாத காவிரிக்கு அவ்விடத்தில் **அகண்ட காவிரி** எனப் பெயர் வழங்குகிறது.

அதன் பின்னர்க் காவிரி தெற்கிலும் கொள்ளிடம் வடக்கிலுமாக நெடுந்தொலைவு ஓடி ஓரிடத்தில் நெருங்கி வருகின்றன. அவ்விடத்தில் **உள்ளாறு** என்னும் சிற்றாறு அவ்விரண்டையும் இணைக்கின்றது. அதனால் ஆற்றுக்கிடையில் ஒரு தீவு ஏற்பட்டுள்ளது. அதுவே **திருவரங்கம்** என்று போற்றப்படும் வைணவத் திருப்பதி யாகும். அரங்கம் என்பதற்கு ஆற்றிடையில் அமைந்த திட்டு என்பது பொருள். அங்கு உள்ளாற்றுக்குக் குறுக்கே காவிரியின் வடகரையில் கட்டப்பட்டுள்ள **கல்லணை**, கண்டு மகிழத்தக்கதாகும். அந்த அணை மிகப் பழங்காலத்திலேயே சோழ மன்னன் ஒருவனால் கட்டப்பட்டது. அது தமிழரின் கட்டடக் கலைத் திறமைக்குச் சான்றாகத் திகழ்கிறது.

கல்லணையைக் கடந்தவுடன் காவிரியிலிருந்து **வெண்ணாறு** என்று மற்றோர் ஆறு பிரிகிறது. காவிரி தஞ்சை மாவட்டத்தில் புகும்போது அதிலிருந்து **வெட்டாறு, குடமுருட்டி, அரிசிலாறு** என மேலும் பற்பல ஆறுகள் பிரிகின்றன. அவற்றிலிருந்து அளவற்ற கால் வாய்கள் பிரிகின்றன. அவையெல்லாம் உடலில் உள்ள இரத்தக் குழாய்களைப்போலக் காவிரி நீரைத் தஞ்சை மாவட்டம் எங்கும் பரவச் செய்கின்றன. காவிரியின் நீர்வளத்தாலேயே தஞ்சை மாவட்டம் **தென்னிந்தியா வின் நெற்களஞ்சியம்** என்று போற்றப்படுகின்றது.

இங்ஙனம் காவிரி ஏறக்குறைய 600 கிலோ மீட்டர்த் தொலைவு ஓடித் தன் வளத்தை எல்லாம் வாரி வழங்கி விட்டுத் தரங்கம்பாடிக்கு அருகில் கீழ்க்கடலில் கலக் கிறது. அங்குக் காவிரியைக் காண்பவர் 'காவிரியா இஃது?' என்று ஐயுறுவர். கண்டவர் மருளக் கடல் போல் காட்சியளித்த காவிரி அங்கு உருமெலிந்து நடை தளர்ந்த மூதாட்டியைப்போலச் சிறு கால்வாயாக ஓடிக் கடலில் விழுகிறது.

காவிரி கடலுடன் கலக்கும் இவ்விடத்தில்தான் பண்டு சோழர் தலைநகரமாக விளங்கிய காவிரிப்பூம் பட்டினம் இருந்தது. அந்நகரம் கடல்கொள்ளப்பட்டு இப்போது ஒரு சிற்றூராகக் காட்சி தருகிறது. தமிழக அரசு அதன் பழம் பெருமையை விளக்கும் நினைவுச் சின்னங்களை அங்கு அமைத்துள்ளது. அதனால் பூம்புகார் என்று போற்றப்படும் அவ்விடம் இன்று இன்பச் சுற்றுலாவுக்கு ஏற்ற இடமாகத் திகழ்கிறது.

அருஞ்சொற்பொருள்

கவின் - அழகு; எஞ்சிய - மிகுந்த; உருப்பெறுகிறது - வடிவை அடைகிறது; குமரிப் பெண் - இளம் பெண்; சாகரம் - கடல்; பூங்கா - பூஞ்சோலை; களிநடம் - மகிழ்ச்சிக் கூத்து; சுவர்க்கம் - தேவலோகம்; பரவசம் - தம்மை மறத்தல்; கண்டம் - பிரிவு; அகண்டம் - பிரிவு இல்லாதது; மருள - மயங்க; மூதாட்டி - கிழவி; பண்டு - முன்பு; இன்பச் சுற்றுலா - இன்பப் பயணம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. காவிரி எங்குத் தோன்றுகிறது?
2. குடகில் காவிரியின் காட்சி எத்தகையது?
3. பிருந்தாவனக் காட்சியை விளக்கி எழுதுக.
4. சிவசமுத்திர நீர்வீழ்ச்சிகளின் சிறப்புகளை எழுதுக.
5. மேட்டூர் நீர்த்தேக்கம் எங்கு, எவ்வாறு அமைக்கப் பட்டுள்ளது? அதன் பயன்கள் யாவை?
6. காவிரியின் பேருருவை எங்குக் காணலாம்? அங்குக் காவிரிக்கு வழங்கும் பெயர் யாது? ஏன்?
7. சோழ நாட்டில் காவிரி வழங்கும் காட்சி எத்தகையது?
8. காவிரி கடலுடன் கலக்கும் காட்சியை எழுதுக.
9. காவிரியுடன் கலக்கும் ஆறுகள் யாவை? அதிலிருந்து பிரியும் ஆறுகள் யாவை?

II. குறிப்பு வரைக:

தலைக் காவிரி, கிருஷ்ணராஜ சாகரம், ஆடு தாண்டும் காவிரி, ஒகெனகல் நீர்வீழ்ச்சி, திருவரங்கம், கல்லணை, காவிரிப்பூம் பட்டினம்.

III. பிரித்து எழுதுக:

தென்னாடு, மும்மடங்கு, வெண்ணிறம், வடகரை, சிற்றூர்.

IV. சேர்த்து எழுதுக:

அந்த + தோட்டம் = அந்தத் தோட்டம்

ஆண்டு + சென்றேன் = ஆண்டுச் சென்றேன்

இந்த + சோலை =

எந்த + குளம் =

ஈண்டு + பார் =

யாண்டு + கண்டாய் =

V. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கண்ணைக் கவரும், எழில் கொஞ்சும், ஏறக்குறைய, கலைத் திறமை, நினைவுச் சின்னம்.

VI. தெரிந்துகொள்க:

தவறு	சரி
காக்ஷி	காட்சி
ரத்தம்	இரத்தம்
எண்ணை	எண்ணெய்
சிலவு	செலவு
கோர்வை	கேர்வை

இலக்கணம்

உயிர்மெய் எழுத்துகள்

அன்பு, இங்கு

இச்சொற்களில் உள்ள எழுத்துகளைக் கவனியுங்கள். முதல் எழுத்து அ, இ என்பன உயிர் எழுத்துகள். இரண்டாம் எழுத்து ன், ங் என்பன மெய்யெழுத்துகள். மூன்றாம் எழுத்துகள் என்ன எழுத்துகள்?

அவை, ப் + உ = பு, க் + உ = கு என மெய்யெழுத்துகளுடன் உயிர் எழுத்துச் சேர்ந்து உண்டான எழுத்துகள். ஆதலால் உயிர் மெய் எழுத்துகள் எனப்படும்.

ஒவ்வொரு மெய்யெழுத்தோடும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் சேர்ந்து உயிர்மெய்யாகும். ஆதலால், உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் (18 × 12 = 216) இருநூற்றுப் பதினாறு ஆகும்.

க—கா, மி—மீ, வெ—வே

இவ்வெழுத்துகளில் உள்ள மெய் எழுத்துகள் எவை? உயிர் எழுத்துகள் எவை? க்,ம்,வ் என்பன மெய்யெழுத்துகள் அல்லவா? 'க்' என்பது வல்லின மெய். அதனுடன் அ, ஆ என்னும் உயிர் எழுத்துகள் சேர்ந்து உயிர்மெய் எழுத்துகளாகின்றன. அதனால் மெய்யெழுத்தை நோக்க க, கா என்பன வல்லின உயிர்மெய் எனப்படும்.

மி, மீ என்பன 'ம்' என்னும் மெல்லின மெய்யுடன் இ, ஈ என்னும் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவதால் மெல்லின உயிர் மெய் எனப்படும்.

வெ, வே என்பன 'வ்' என்னும் இடையின மெய்யுடன் எ, ஏ என்னும் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவதால் இடையின உயிர் மெய் எனப்படும்.

வல்லின மெய் ஆறுடனும் பன்னிரண்டு உயிர் எழுத்துகளும் தனித்தனியே சேர்ந்துவரும். ஆதலால் வல்லின உயிர்மெய் எழுபத்திரண்டாகும் $(6 \times 12 = 72)$. இங்ஙனமே மெல்லின உயிர் மெய் எழுபத்திரண்டு, இடையின உயிர்மெய் எழுபத்திரண்டாகும்.

'க்' என்பதில் அ என்னும் உயிர் சேர்ந்துள்ளது. அது குற்றெழுத்தாகும். கா என்பதில் ஆ என்னும் உயிர் சேர்ந்துள்ளது. அது நெட்டெழுத்தாகும். எனவே உயிர் எழுத்தை நோக்க க என்பது குறுகி ஒலித்தலால் உயிர்மெய்க் குறில் எனப்படும். கா என்பது நீண்டு ஒலித்தலால் உயிர்மெய் நெடில் எனப்படும். இங்ஙனமே மி, வெ என்பன உயிர்மெய்க் குறில்களாம். மீ, வே என்பன உயிர்மெய் நெடில்களாம்.

உயிர்க் குறிலாகிய அ, இ, உ, எ, ஒ என்னும் ஐந்தும் 'க்' முதலான பதினெட்டு மெய்களுடனும் தனித்தனியே சேர்ந்து உயிர்மெய்களாகும். எனவே, உயிர்மெய்க் குறில் தொண்ணூறு $(18 \times 5 = 90)$ ஆகும்.

உயிர் நெடிலாகிய ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்னும் ஏழும் பதினெட்டு மெய்களுடன் சேர்ந்து வருமாதலால் உயிர்மெய் நெடில் நூற்று இருபத்தாறு $(18 \times 7 = 126)$ ஆகும்.

பயிற்சி

1. இப்பாடத்தின் முதன் மூன்று பத்திகளிலிருந்து வல்லின உயிர்மெய் நான்கும் மெல்லின உயிர்மெய் நான்கும் இடையின உயிர்மெய் நான்கும் எடுத்து எழுதுக.
2. நான்கு, ஐந்தாம் பத்திகளிலிருந்து உயிர்மெய்க் குறில் ஐந்தும் உயிர்மெய் நெடில் ஐந்தும் எடுத்து எழுதுக.

5. பர்மியர்

பர்மா தென்கிழக்கு ஆசியாவில் உள்ள ஒரு குடியரசு நாடு. இதன் பரப்பளவு 6,78,000 சதுர கிலோ மீட்டர். ஏறக்குறைய இரண்டரைக் கோடி மக்கள் இந்நாட்டில் வாழ்கின்றனர். இந்நாட்டின் வடக்கில் திபெத்தும், வடகிழக்கில் சீனாவும், கிழக்கில் இந்தோ-சீனாவும் தாய்லாந்தும், தெற்கில் வங்காள விரிகுடாவும் அந்தமான் கடலும், மேற்கில் இந்தியாவும் எல்லைகளாக அமைந்துள்ளன.

இந்நாட்டின் கடலோரப் பகுதிகளில் செழிப்பான சமவெளிகள் உள்ளன. எஞ்சிய பகுதி பெரும்பாலும் மலைப்பாங்கானது. ஐராவதி என்னும் பேராறு பாய்ந்து இந்நாட்டை வளம் கொழிக்கச் செய்கிறது. பர்மாவின் தலைநகரான இரங்கூன் ஐராவதி ஆற்றங்கரையிலே உள்ளது. ஐராவதி கடலோடு கலக்கும் கழிமுகப்பகுதி வண்டல்மண் படிந்து மிகச் செழிப்பாக உள்ளது. அதனால், இங்கு உழவுத்தொழில் சிறப்பாக நடைபெறுகிறது. நெல் மிகுதியாக விளைகிறது.

பர்மாவின் நிலப்பரப்பில் பெரும் பகுதி காடுகள் அடர்ந்ததாகும். அக்காடுகளில் புலி, சிறுத்தை, குரைக்கும் மான், வாலில்லாக் குரங்கு முதலிய விலங்குகளைக் காணலாம். இங்கு யானைகளும் மிகுதியாக வாழ்கின்றன. பர்மாக் காடுகளில் வளரும் தேக்கு மரங்கள் உலகப்புகழ் பெற்றவை. தென் பர்மாவில் இரப்பர் மரங்கள் ஏராளமாக உள்ளன. மண்ணெண்ணெய், கல்லெண்ணெய் முதலியனவும் பொன், வெள்ளி, வெள்ளீயம், காரீயம், துத்தநாகம் முதலிய உலோகங்களும் பலவகை இரத்தினங்களும் இங்குக் கிடைக்கின்றன. அவற்றால் பர்மா, மக்கள் வசதியாக வாழ உதவும் வளமான நாடாகத் திகழ்கிறது.

பர்மா மிகவும் பழமையான நாடு. அந்நாட்டு மக்கள் பர்மியர் எனப்படுகின்றார்கள். அவர்கள் குட்டையான

உருவமும், வெண்மையும் மஞ்சளும் கலந்த நிறமும் உடையவர்கள். மலைப்பக்கங்களிலும் சிற்றூர்களிலும் வாழும் பர்மியர் இன்னும் நாகரிக வளர்ச்சி இல்லாத வராகவே காணப்படுகின்றனர். நகர்ப்புறங்களில் வாழ் பவர் நாகரிகத்தில் சிறந்து விளங்குகின்றனர்.

பர்மியர் நம்மைப்போல நெல்லரிசியைத்தான் முதன் மையான உணவுப் பொருளாகக் கொண்டுள்ளனர். பெரிய தட்டு ஒன்றில் உணவைப் படைத்துக் குடும்பத் தினர் அனைவரும் அதைச் சுற்றி அமர்ந்து உண்பது அவர்கள் வழக்கம். விலை உயர்ந்த ஆடை, அணிகளை அணிந்துகொள்வதில் பர்மியருக்கு விருப்பம் அதிகம். ஆடவரும் பெண்டிரும் தலைமயிரை நீளமாக வளர்த்துக் கொள்வர். ஆடவர் தம் தலைமயிரை உச்சந்தலையில் சேர்த்து முடித்துக்கொள்வர். பெண்கள் தம் நீண்ட தலைமயிரைப் பலவகையாகப் பின்னித் தொங்கவிட்டுக் கொள்வார்கள்; ஜப்பானியப் பெண்களைப்போலத் தலையில் சீப்பைச் செருகிக்கொள்வார்கள்; தமிழ் நாட்டுப் பெண்களைப்போலத் தலையில் மலர்சூடி மகிழ் வார்கள். முல்லை மலரில் அவர்களுக்கு மிக்க விருப்பம் உண்டு.

பர்மியர் தம் வீடுகளை மிகவும் துப்புரவாக வைத்துக் கொள்வர்; கலை உணர்வுடன் வீடுகளை அலங்கரிப்பர். தடுப்புக்காகப் பயன்படுத்தும் தட்டிகள்கூட அங்கு அழகிய வேலைப்பாடு உடையனவாக இருக்கும். பர்மாவில் மூங்கில்கள் மிகுதியாதலால், பர்மியர், வீடுகளுக்கு மூங்கில்களையே அதிகமாகப் பயன்படுத்து கின்றனர். பெரிய நகரங்களில் தற்கால நாகரிகம் வாய்ந்த கட்டடங்கள் ஏராளமாக உள்ளன.

பர்மியரில் பெரும்பாலோர் உழவுத் தொழிலிலேயே ஈடுபட்டுள்ளனர். ஐராவதியின் கருணையால் அங்கு நெல் ஏராளமாக விளைவதால் தம் தேவைக்குப் போக எஞ்சியவற்றை அவர்கள் அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி

செய்கின்றார்கள். பர்மாக் காடுகளில் உள்ள தேக்கு மரங்களை வெட்டி வெளிநாடுகளுக்கு அனுப்புதல், இரப்பர் மரங்களிலிருந்து பால் எடுத்து இரப்பர் தயாரித்துப் பிற நாடுகளுக்கு அனுப்புதல், மண்ணெண்ணெயை எடுத்துத் தூய்மை செய்து ஏற்றுமதி செய்தல், மண்ணுக்கடியில் கிடைக்கும் உலோகங்களையும் இரத்தினங்களையும் எடுத்துத் தூய்மை செய்து பிற நாடுகளுக்கு அனுப்புதல் முதலிய பல தொழில்கள் பர்மாவில் சிறப்பாக நடைபெறுகின்றன. அதனால், அங்கு வாணிகம் வளர்ந்து வருகிறது. இரங்கூன் வைரம் உலகப் புகழ் பெற்றதாகும்.

தலைவனுக்கு அடங்கி நடத்தல், ஏழை எளியவர்களுக்கு உதவுதல், சுறுசுறுப்பு, சமயப்பற்று ஆகியவை பர்மியருக்கு உரிய சிறப்பான குணங்களாம். அவர்கள் 'நாளைக்கு என்ன செய்வோம்?' என்று கவலைப் படாமல் தாராளமாகச் செலவு செய்யும் இயல்புடையவர்கள். இன்பம் வந்தால் மகிழ்வதும் துன்பம் வந்தால் துவள்வதும் அவர்களிடம் இல்லை. பர்மியரில் பெரும்பாலோர் பௌத்த சமயத்தையே பின்பற்றி வாழ்கின்றனர். பர்மாவைப்போலப் புத்தத் தூபிகளை வேறு நாடுகளில் காணமுடியாது. இங்குப் புத்தத் துறவியர் மிகுதியாக வாழ்கின்றனர். ஏழு, எட்டு வயதுச் சிறுவர்களும் பௌத்த மடத்தில் சேர்ந்து துறவிகளாகிவிடுகின்றனர். எனினும், பர்மியர் சாதி, சமய வேறுபாடு கருதாமல் அனைவரிடமும் அன்பாகப் பழகுகின்றனர்.

இன்பக் களியாட்டங்களிலும் பர்மியருக்கு மிக்க ஈடுபாடு உண்டு. ஆட்டுச் சண்டை, மற்போர், சேவற்போர், குதிரைப் பந்தயம் முதலியவற்றில் அவர்கள் மிக்க ஆர்வம் காட்டுகிறார்கள். பர்மாவில் நடைபெறும் திருவிழாக்களில் தண்ணீர்த் திருநாள் குறிப்பிடத்தக்கதாகும். அவ்விழா ஒவ்வோராண்டும் சித்திரைத் திங்களில் மூன்று நாள்கள் நடைபெறுகிறது. அவ்விழாவின்போது சிறுவர், முதியோர், நண்பர், பகைவர்

என்று பாராமல் ஒருவர்மீது ஒருவர் நீரை இறைத்து மகிழ்கின்றனர். நாடு முழுதும் சிரிப்பையும் மகிழ்ச்சியையும் நல்லுறவையும் வளர்க்கும் விழாவாக இது நடைபெறுகிறது.

பர்மியர்கள் கலையார்வம் உடையவர்கள். தம் சமயத்தின் கருத்துகளை நாடகமாக நடித்துக் காட்டுவதில் அவர்களுக்கு ஆவல் அதிகம். அதனால் இசை, நாடகம் முதலிய கலைகள் அங்குச் சிறந்து விளங்குகின்றன. பர்மியரின் சிற்பக் கலைச் சிறப்புக்கும் கட்டடக் கலை உயர்வுக்கும் அந்நாட்டில் உள்ள பௌத்தப் பள்ளிகளும் புத்தர் கோயில்களும் சான்றாக விளங்குகின்றன. பர்மியர் தொன்று தொட்டு மரவேலை, மணிவேலை, உலோகவேலை, தந்தவேலை முதலிய கலைகளில் புகழ் பெற்றவராவர்.

பர்மாவுக்கும் இந்தியாவுக்கும் நெடுங்காலமாகவே நெருங்கிய தொடர்பு உண்டு. கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் கங்கைக் கரையில் வாழ்ந்த இந்தியர் பலர் அசாம் வழியாகப் பர்மாவுக்குச் சென்று குடியேறினர். அவர்கள் வாயிலாக இந்தியக் கலைகளும் நாகரிகமும் பௌத்த சமயமும் அந்நாட்டில் பரவின. பர்மியரும் இந்தியாவுக்கு வந்தனர். தட்சசிலம் என்னும் பல்கலைக் கழகத்தில் பர்மிய மாணவர்கள் பயின்றதாக வரலாறு கூறுகிறது.

தமிழகத்துடன் பர்மாவுக்குப் பழங்காலம்முதல் வாணிகத் தொடர்பு உண்டு. கி. பி. முதல் நூற்றாண்டில் ஆண்ட கரிகாற் சோழன் காலத்தில் காழகம் என்னும் பர்மாவிலிருந்து பல பொருள்கள் கப்பல்கள் மூலம் காவிரிப்பூம்பட்டினம் வந்ததாகப் ‘பட்டினப் பாலை’ என்னும் சங்க இலக்கியம் குறிப்பிடுகிறது. கி. பி. பதினோராம் நூற்றாண்டில் இராசேந்திர சோழன் பர்மாவரை படையெடுத்துச் சென்று வென்று பர்மாவைக் கைப்பற்றினான் எனவும், அதனால் கடாரம் கொண்டான் என்று புகழ்பெற்றான் எனவும் வரலாறு

குறிப்பிடுகிறது. காழகம், கடாரம் என்பன பர்மாவைக் குறிக்கும் தமிழ்ப் பெயர்களாம். பிற்காலத்திலும் வாணிகம் காரணமாகச் சென்ற தமிழ் மக்கள் பலர் அங்கேயே குடியேறிவிட்டனர். இன்றும் தமிழ்க் குடும்பங்கள் பல பர்மாவில் வாழ்கின்றன.

இங்ஙனம் இந்தியாவோடு நெருங்கிய தொடர்புடைய பர்மாவும் பல ஆண்டுகளாக ஆங்கிலேய ஆட்சிக்கு உட்பட்டிருந்தது. பர்மியரும் நம்மைப்போல விடுதலை பெறப் பல கிளர்ச்சிகள் செய்தனர். அதன் பயனாக 1948-ல் பர்மா ஒரு குடியரசு நாடாக மலர்ந்தது. பர்மா உரிமை பெற்ற பின் அந்நாட்டு மக்கள் தம் ஓயா உழைப்பால் எல்லாத் துறைகளிலும் தம் நாட்டை முன்னணிக்குக் கொண்டுவரப் பாடுபடுகின்றனர். அவர்களைப் போலவே நாமும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்குப் பாடுபடவேண்டும்.

அருஞ்சொற்பொருள்

குடியரசு - மக்களாட்சி; மலைப்பாங்கு - மலைப்பகுதி; கல்லெண்ணெய் - 'பெட்ரோல்'; ஆடவர் - ஆண்கள்; துப்புரவு - தூய்மை; தூபி - கோபுரம்; களியாட்டம் - மகிழ்ச்சி விளையாட்டு; ஆர்வம் - ஆவல், விருப்பம்; சான்று - சாட்சி, எடுத்துக்காட்டு.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. பர்மாவின் இயற்கை அமைப்பினை விளக்குக.
2. ஐராவதி என்னும் ஆற்றின் சிறப்பினை எழுதுக.
3. பர்மாவின் வயல் வளத்தையும் காட்டு வளத்தையும் எழுதுக.
4. பர்மியரின் உணவு, உடைப் பழக்கங்களை விளக்குக.

5. பர்மியர் புரியும் பலவகைத் தொழில்கள் யாவை?

6. பர்மியரின் அழகுணர்ச்சி, கலையார்வம் ஆகியவற்றுக்குச் சான்று தருக.

7. பர்மியரின் சிறந்த குணங்கள் யாவை?

8. பர்மாவில் நடைபெறும் தண்ணீர்த் திருநாளைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.

9. இந்தியாவுக்கும் பர்மாவுக்கும் இருந்த தொடர்பைப் புலப் படுத்துக.

10. தமிழகத்துக்கும் பர்மாவுக்கும் இருந்த தொடர்பை விளக் கும் சான்றுகள் யாவை?

II. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:

ஈடுபாடு, களியாட்டம், சான்று, பல்கலைக் கழகம், கிளர்ச்சி, வேலைப்பாடு, நல்லுறவு.

III. எதிர்ச்சொல் எழுதுக:

சிற்றூர், செலவு, உயாவு, பல, ஏற்றுமதி, செழிப்பு, தண்ணீர்.

IV. பிரித்து எழுதுக:

சிற்றூர், எண்ணெய், சேவற்போர், நல்லுறவு, நூற்றாண்டு.

V. சேர்த்து எழுதுக:

ஆடு + சண்டை = ஆட்டுச் சண்டை

நாடு + பற்று =	வேறு + நாடு =
தவிடு + பானை =	வயிறு + நோய் =

VI. வேறுபாடு தெரிந்துகொள்க:

கலை - களை; விலை - விளை; நீலம் - நீளம்;

தலை - தளை; கலம் - களம்; கல் - கள்.

இலக்கணம்

ஆய்த எழுத்து

அஃது, இஃது, எஃகு—இச்சொற்களின் இடையில் உள்ள எழுத்தைக் கவனி. இவ்வெழுத்து உயிர் எழுத்தும் இல்லை; மெய்யெழுத்தும் இல்லை; உயிர்மெய்யெழுத்தும் இல்லை.

இவ்வெழுத்து கேடயத்தில் உள்ள மூன்று ஆணிகளைப்போல இருக்கிறது. கேடயம் ஓர் ஆயுதம். அதனால், இதனை ஆய்த எழுத்து என்கிறோம். ஆய்த எழுத்து முன்னர்க் கூறப்பட்ட மூவகை எழுத்திலும் சேராமல் தனித்திருப்பதால் இதனைத் தனி நிலை என்றும் கூறுவர்.

ஆய்த எழுத்து, தனக்குமுன் ஒரு குற்றெழுத்தையும் தனக்குப் பின் ஒரு வல்லின உயிர்மெய்யெழுத்தையும் பெற்று அவற்றுக்கு இடையே நின்று ஒலிக்கும்.

6. பசும்பொன்
உ. முத்துராமலிங்கத் தேவர்*

நம் நாட்டின் விடுதலைக்காக வீரப்போர் புரிந்த தலைவர்களுள் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவருக்கு முதன்மையான இடம் உண்டு. இன்று தமிழகத்தில் 'தேவர்' என்பது சிறப்பாக இவரையே குறிக்கும். 'பசும்பொன்' என்பது இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள ஒரு சிற்றூராகும். தலையாலங்கானத்துச் செரு வென்ற பாண்டியன் நெடுஞ்செழியன் பிறந்த ஊர் இஃதே என்பது செவிவழிச் செய்தி. முத்துராமலிங்கத் தேவர் அம்மன்னனின் வழிவந்தவர் எனவும் கூறுகின்றனர்.

முத்துராமலிங்கத்தேவர் 1908ஆம் ஆண்டு, அக்டோபர்த் திங்கள், 30ஆம் நாள் ஒரு பெருஞ் செல்வக் குடும்



பத்தில் பிறந்தார். இவருடைய தந்தையார் உக்கிர பாண்டியத் தேவர். தாயார் இந்திராணி அம்மையார். இவர் பிறந்த சில திங்கள்களிலேயே தாயை இழந்துவிட்டார். பாட்டியார் இராணி அம்மையாரே இவரைப் பாராட்டிச்

* மூலக் கட்டுரை எழுதியவர்—திரு. மு. பெரியசாமி, இ. ஆ. ப.

சீராட்டி வளர்த்தார். இவருக்குப் பாலூட்டி வளர்த்த பெருமை ஒரு முஸ்லிம் அன்னைக்கு உரியதாகும்.

இவருக்குத் தொடக்கத்தில் கல்வி புகட்டியவர்கள் கிறித்தவப் பாதிரிமார்களாவர். இவருடைய பள்ளிப் படிப்பு கமுதியில் தொடங்கியது. பின்னர் இவர் பசுமலை உயர்நிலைப் பள்ளியிலும் மதுரை ஐக்கியக் கிறித்தவ உயர்நிலைப் பள்ளியிலும் சில காலம் பயின்றார்; இறுதியில் இராமநாதபுரம் அரசர் உயர் நிலைப் பள்ளியில் பத்தாம் வகுப்புப் படித்தார். அப்போது அந்நகரில் பிளேக் நோய் பரவியது. செல்வக் குடும்பத்தின் ஒரே மகனான இவரை உடனே ஊருக்கு அழைத்துச் சென்றுவிட்டனர். அத்துடன் இவருடைய பள்ளிப் படிப்பு முடிந்தது.

பள்ளிப் படிப்பு முடிந்தாலும் தேவர் பல துறை நூல்களையும், இதழ்களையும் படித்தும், பெரியோர் பேச்சுகளைக் கேட்டும், தம் ஆங்கில அறிவையும் தமிழறிவையும் மிகவும் வளர்த்துக்கொண்டார்; மேலும் வீரத் திருமகனாக விளங்கிய தேவர் சிலம்பம், குதிரை ஏற்றம், துப்பாக்கி சுடுதல் ஆகிய பயிற்சிகளிலும் தேர்ச்சி பெற்றார்; தக்க ஆசிரியர் ஒருவர் வாயிலாக வன்மக்கலையின் நுட்பங்களையும் கற்றுணர்ந்தார். மேலும் சோதிடம், வான சாத்திரம், வைத்தியம் ஆகிய கலைகளையும் நன்கு பயின்றார்.

பத்தாம் வகுப்பைக்கூடத் தாண்டாத நம் தேவர் தலைசிறந்த பேச்சாளராக விளங்கினார். ஆங்கிலத்திலும் தமிழிலும் இவர் பேசும் பேச்சைக் கேட்ட பேரறிஞர்கள் எல்லாரும் வியந்து பாராட்டினார்கள். இவருடைய கன்னிப்பேச்சு 23–6–1933 அன்று சாயல்குடியில் நடந்த விவேகானந்தர் ஆண்டு விழாவில் நிகழ்ந்தது. அன்று தேசிய உணர்வு பொங்க, சமய மணம் கமழ இவர் பேசிய பேச்சைக் கேட்டவர் பெரு மகிழ்ச்சி கொண்டனர். 'அடிமை இருள் போக்க இதோ ஆதவன் தோன்றிவிட்டான். துவண்டுவிட்ட

சமய உணர்வில் முறுக்கேற்ற இன்னும் ஒரு விவேகா னந்தர் கிளம்பிவிட்டார்,' என்று அனைவரும் புகழ்ந்து போற்றினர்.

பின்னர்த் தமிழகத்தில் இவர் பேச்சு எதிரொலிக்காத இடமே இல்லை. கேட்டாரைப் பிணித்து, கேளாரும் வேட்ப மொழியும் இவருடைய சொல்லாற்றல் பிறமாநில மக்களையும் கவர்ந்தது; பர்மா, இலங்கை போன்ற பிற நாட்டு மக்களையும் ஈர்த்தது. பத்தாம் வகுப்பு வரையே படித்த நம் பசும்பொன் மேதை காசிப் பல்கலைக் கழகத்தில் இந்து சமயப் பண்புகளைப்பற்றி அரியதோர் விரிவுரையாற்றினார். அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தவர் ஆங்கில மொழியில் வியத்தகு புலமை வாய்ந்தவராகிய சர் சி. பி. இராமசாமி ஐயர். ஏறத்தாழ மூன்று மணிநேரம் தேவர் பேசிய பேச்சைக் கேட்டு வியந்த அவர், தம் முடிவுரையில், 'உலகில் பெரும் பகுதியை ஆங்கிலம் ஆள்கிறது. ஆனால், அந்த ஆங்கில மொழியை எங்கள் தமிழ்நாட்டுப் பசும் பொன் சிங்கம் மூன்று மணிநேரம் அடக்கி ஆண்டு விட்டது,' என்று கூறிப் பூரித்தார். இது தேவரின் சொல்வன்மைக்குச் சிறந்த சான்றாகும்.

விடுதலைப் போராட்டத்தின்போது நம் தேவருடைய சொல்லாற்றலும், மக்களிடையே இவருக்கிருந்த செல் வாக்கும் ஆங்கில ஆட்சியையே நடுங்கவைத்தது. இவரது மூச்செல்லாம் விடுதலை வேட்கை. பேச் செல்லாம் சுதந்தர முழக்கம். மராட்டிய சிங்கம் பால கங்காதர திலகரையடுத்து ஆங்கில ஆட்சியின் கொடுமை யான வாய்ப்பூட்டுச் சட்டத்துக்கு ஆளானவர் நம் சேதுநாட்டுச் சிங்கமேயாவார். அதனால், 'தேசியம் காத்த செம்மல்' என்று தமிழ்ப் பெரியார் திரு.வி.க. இவரைப் பாராட்டினார்.

1937ஆம் ஆண்டு நடந்த நம் நாட்டுப் பொதுத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற

அரும்பாடுபட்டவர்களுள் நம் தேவர் மிகச் சிறந்தவ ராவார். தமிழ்நாடு முழுவதும் சுற்றி மக்கள் மனத்தில் விடுதலைக் கனலை மூட்டிக் கட்சி வேட்பாளர்கள் வெற்றிபெற இவர் தீவிரமாக உழைத்தார்; மேலும், கானாடுகாத்தானில் மாற்றுக் கட்சியினர் தூண்டிவிட்ட வன்முறைச் செயல்களையெல்லாம் அஞ்சா நெஞ்சத் துடன் எதிர்த்து, காங்கிரசுக் கட்சிக்கு மகத்தான வெற்றி தேடித் தந்தார். அவருடைய அந்தத் துணிவையும் பெருந் தொண்டையும் பாராட்டிப் பெருந்தலைவர் சத்தியமூர்த்தி இவருக்குக் 'காங்கிரசைக் காத்தான்' என்று புகழ்ப் பெயர் சூட்டி மகிழ்ந்தார்.

அதுமுதல் 1962 வரை நடந்த ஒவ்வொரு தேர்தலி லும் தேவர் தொடர்ந்து பெருவெற்றி பெற்றார். தொகுதிக்குச் செல்லாமலேயே—மக்களிடம் நேரில் சென்று வாக்குக் கேட்காமலேயே வெற்றிபெற்ற மாபெருந் தலைவர் நம் தேவர். இவர் இரண்டு முறை பாராளுமன்றம், சட்ட மன்றம் ஆகிய இரு தொகுதி களிலும் போட்டியிட்டு வெற்றி பெற்றார். இவருடைய செல்வாக்கைக் குறைக்க ஆட்சியாளர்கள் ஏவிவிட்ட அடக்கு முறைகள் அளவற்றவை. இவர் உலகில் வாழ்ந்த நாள்கள் 20,075. சிறைவைக்கப்பட்ட நாள்களோ 4,000. தம் வாழ்நாளில் ஐந்தில் ஒரு பகுதியைச் சிறை யிலே கழித்த தியாகச் சிகரம் நம் தேவர்.

தேவர் இறுதிவரை தேசிய உணர்வுடையவராகவே வாழ்ந்தார். ஆனால், காங்கிரசு இயக்கத்தில் ஆதிக்கம் பெற்றிருந்த மிதவாதத் தலைவர்களின் போக்கை இவர் எதிர்த்தார். தீவிரவாதத் தலைவரான சுபாஸ் சந்திர போஸின் நெருங்கிய நண்பராக இருந்தார். அவர் தொடங்கிய முன்னேற்றக் கட்சிக்கு அடிகோலியவர் களுள் தேவரும் ஒருவராவர். அதனால், வட இந்திய மக்கள் இவரைத் **தென்னாட்டு போஸ்** என்று கொண் டாடினர். வீரத் தலைவர் ஜெயப்பிரகாச நாராயணன் இவரிடம் தனி மதிப்பு வைத்திருந்தார்.

இவர் என்றுமே பதவியை விரும்பியதில்லை. 1947-ல் அமைந்த சென்னை மாநில ஆட்சியில் ஓர் அமைச்சராகப் பொறுப்பேற்குமாறு கட்சித் தலைமை இவரை வற்புறுத்தியது. ஆனால், நம் தேவர் அதனை ஏற்க மறுத்துவிட்டார். இதனால் இவருடைய பதவி விரும்பாப் பண்பு நன்கு விளங்கும்.

அரசியலைப்போலவே சமயத் துறையிலும் தேவர் புகழ்பெற்று விளங்கினார். இவருடைய சமயச் சொற்பொழிவுகளைக் கேட்டு உளம்பூரித்த சமயத் தலைவர்கள், இவருக்கு 'வேதாந்த பாஸ்கர,' 'பிரவசன கேசரி,' 'சன்மார்க்க சண்டமாருதம்' என்பனபோன்ற விருதுகள் வழங்கிச் சிறப்பித்தார்கள். ஒரு சமயம் புத்த சமயக் கொள்கைகளை விளக்கி, இவர் பேசிய ஆங்கிலப் பேச்சைக் கேட்டு வியந்த பர்மியக் குடியரசுத் தலைவர், இவரை 'இந்து சமயப் புத்த மேதை' என்று புகழ்ந்தார்.

இவ்வளவு பெருமைக்குரியவராகிய தேவர் தம் வாழ்நாள் முழுதும் திருமணம் செய்துகொள்ளாமல் எளிமையாகவே வாழ்ந்தார். நாட்டுப் பணிக்கும் சமயப் பணிக்கும் திருமணம் தடையாக அமைந்துவிடும் என்னும் எண்ணமே அதற்குக் காரணம். ஏறத்தாழ முப்பத்திரண்டு சிற்றூர்களுக்குச் சொந்தக்காரராய், பெருநிலக்கிழாராய் விளங்கியவர் தேவர். அவ்வளவு பெருஞ்செல்வராய்த் திகழ்ந்த இவர் திருமணம் செய்துகொள்ளாததால் வழிவழியாகச் சேதுநாட்டுக்குப் பெருமை தேடித்தந்த இவருடைய மரபு இவருக்குப்பின் செழிக்க வழியில்லாமல் போய்விட்டது.

நம் தேவர் கற்கவேண்டியவற்றைக் கசடறக் கற்று, கற்ற வழி ஒழுகியவர்; வாலறிவன் நற்றாள் தொழுவதையும் ஒழுக்கத்தை உயிரினும் மேலாய் ஓம்புவதையும் உயர்ந்த குறிக்கோள்களாய்க் கொண்டவர். தீண்டாமைக் கொடுமையையும், சாதி சமய வேறுபாடுகளையும் ஒழிக்க இவர் அரும்பாடு பட்டார்; சமூகக்

கட்டுப்பாடுகளையும் மீறிச் சமபந்தி உணவு முறையை நடத்திக் காட்டினார்; தமக்குச் சொந்தமான பத்தாயிரம் பனைமரங்களை மரம் ஏறிப் பிழைக்கும் ஏழைகளுக்கு இலவசமாக வழங்கினார்.

அரிசன முன்னேற்றத்துக்காகத் தேவர் ஆற்றிய அரும் பணி குறிப்பிடத்தக்கதாகும். பல அரிசனக் குடும்பத்தார்க்குத் தம் நிலங்களைக் குறைவான குத்தகைக்குக் கொடுத்தார்; பலரிடம் குத்தகை வாங்காமலேயே அவர்களை வாழவைத்தார்; அரிசனச் சிறுவர்கள் பலரைத் தம் வீட்டிலேயே வளர்த்துப் படிக்கவைத்து நன்னிலை அடையச் செய்தார்.

ஆங்கில ஆட்சியில் போர்க்குணம் நிறைந்த தென்புல மக்களை அடக்கி ஒடுக்கக் 'குற்றப் பரம்பரைச் சட்டம்' என ஒரு சட்டம் கொண்டுவரப்பட்டது. தேவர் அதனை எதிர்த்தார். நாடு உரிமை பெற்ற பிறகும் அச்சட்டம் கைவிடப்படவில்லை. தேவர் இறுதிவரை முழுமூச்சுடன் போராடி அச்சட்டத்தைத் திரும்பப் பெறச் செய்தார். இது பின்தங்கிய வகுப்பினருக்குத் தேவர் செய்த மாபெருந் தொண்டாகும்.

இங்ஙனம் தம் ஒப்பற்ற பேச்சாலும் ஓயா உழைப்பாலும் நம் நாட்டின் முன்னேற்றத்துக்காக அரும்பாடு பட்ட தேவர் தம் 55ஆம் வயதில் 1963ஆம் ஆண்டு தாம் பிறந்த நாளாகிய அக்டோபர்த் திங்கள் 30ஆம் நாள் அதிகாலையில் பொன்னுடல் நீத்துப் புகழுடம்பு எய்தினார். இன்றும் இவர் இறந்த நாளில் பசும்பொன்னில் உள்ள இவருடைய கல்லறையில் நூற்றுக் கணக்கானவர் கூடிக் கண்ணீர் சிந்தி, தம் துக்கத்திற்கு அடையாளமாகத் தலையை மொட்டையிட்டுச் செல்வது நெஞ்சை உருக்கும் காட்சியாகும்.

அருஞ்சொற்பொருள்

இதழ் - செய்தித்தாள்; சிலம்பம் - கோல் சுழற்றி ஆடும் வீர விளையாட்டு; வன்மக்கலை - உடலில் மரும இடங்களை அறிந்து தாக்கும் கலை; கன்னிப் பேச்சு - முதல் பேச்சு; ஆதவன் - சூரியன்;

சார்த்தது - இழுத்தது; மேதை - அறிஞர்; விரிவுரை - நீண்ட சொற்பொழிவு; வாய்ப்பூட்டுச் சட்டம் - பேச்சுரிமையைத் தடுக்கும் சட்டம்; செம்மல் - தலைவர்; கனல் - நெருப்பு, இங்கு உணர்ச்சி; வேட்பாளர் - தேர்தலுக்கு நிற்பவர்; பாராளுமன்றம் - இந்தியப் பேரரசின் ஆட்சி மன்றம்; சட்ட மன்றம் - மாநில அரசின் ஆட்சி மன்றம்; பாஸ்கரன் - சூரியன்; பிரவசனம் - சொற்பொழிவு; கேசரி - சிங்கம்; சண்டமாருதம் - பெருங்காற்று; விருது - பட்டப் பெயர்; பெரு நிலக்கிழார் - பெரிய நிலத்துக்கு உரிமையாளர்; கசடு - குற்றம்; வாலறிவு - தூய அறிவு; கல்லறை - சமாதி.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. முத்துராமலிங்கத் தேவர் பிறந்த மரபின் பெருமையை எழுதுக.
2. தேவரைப் பெற்றவரும் வளர்த்தவரும் யாவர்?
3. தேவரின் கல்வித் திறத்தை விளக்கி எழுதுக.
4. தேவரின் கன்னிப் பேச்சைக் கேட்டவர்கள் அவரை எங்ஙனம் பாராட்டினார்கள்?
5. முத்துராமலிங்கத் தேவரின் சொல்வன்மைக்குச் சான்று தருக.
6. திரு. வி. க. தேவரை எங்ஙனம் பாராட்டினார்? ஏன்?
7. தேவர் செய்த நாட்டுப் பணியைச் சுருக்கி எழுதுக.
8. 'தென்னாட்டு போஸ்' என்று தேவர் பாராட்டப்படக் காரணம் யாது?
9. தேவரின் தியாக உள்ளத்தைச் சான்று தந்து விளக்குக.
10. தேவர் புரிந்த சமூக சேவைகளைச் சுருக்கி எழுதுக.

II. பிரித்து எழுதுக:

வன்மக்கலை, சொல்லாற்றல், கசடற, நற்றாள், அரும்பணி.

III. சேர்த்து எழுதுக:

பள்ளி + படிப்பு = வாய் + பூட்டு =
கண் + நீர் =

IV. எதிர்ச்சொல் எழுதுக:

மேதை, அரியது, வெற்றி, மிதவாதம்.

V. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

செவிவழிச் செய்தி, பாராட்டிச் சீராட்டி, கன்னிப் பேச்சு, அரும்பாடு, செல்வாக்கு, வழிவழி, குறிக்கோள், புகழுடம்பு, அடிகோலுதல்.

இலக்கணம்

சுட்டெழுத்துகள்

இவற்றைக் கவனி:

1	2	3
அன்பன்	அவன்	அம்மனிதன்
இலை	இவன்	இம்மனிதன்
உலக்கை	உவன்	உம்மனிதன்

இம்மூன்று வரிசைகளிலும் உள்ள முதலெழுத்துகள் உயிரெழுத்துகள். முதல் வரிசையில் உள்ள சொற்கள் பொருள்களைச் சுட்டிக்காட்டுகின்றனவா? இல்லை.

ஆனால், இரண்டாம் வரிசையிலும் மூன்றாம் வரிசையிலும் உள்ள சொற்கள் பொருள்களைச் சுட்டிக் காட்டுகின்றன அல்லவா? இவற்றில் அ, இ, உ என்னும் எழுத்துகள் சொல்லின் முதலில் நின்று பொருள்களைச் சுட்டிக் காட்டுகின்றன. இவ்வாறு ஒரு பொருளைச் சுட்டிக் காட்டும்போது அ, இ, உ என்னும் மூன்று எழுத்துகளும் **சுட்டெழுத்துகள்** எனப்படும்.

அவன், அவர், அது, அவை, இவன், இவர், இது, இவை என்னும் சொற்களில் அ, இ, உ என்னும் எழுத்துகளைப் பிரித்தால் அச்சொற்கள் பொருள் தருகின்றனவா? இல்லை. அவ்வெழுத்துகள் பிரிக்கமுடியாமல் சொல்லின் அகத்தே நின்று பொருளைச் சுட்டிக் காட்டுகின்றன. எனவே, இவை அகச்சுட்டு எனப்படும்.

உ என்னும் சுட்டெழுத்து இக்கால வழக்கில் இல்லை.

அப்பலகை, இத்தோட்டம்

இச்சொற்களில் அ, இ என்னும் இரண்டு எழுத்துகளைப் பிரித்தாலும் பலகை, தோட்டம் என்னும் சொற்கள் பொருள் தருகின்றன அல்லவா? இங்ஙனம் சொற்களுக்குப் புறத்தே (வெளியே) நின்று பொருள்களைச் சுட்டிக்காட்டுவதால் இவை புறச்சுட்டு எனப்படும்.

'அ', 'இ' என்னும் சுட்டெழுத்துகள், அந்த, இந்த எனத் திரிந்துவரும். இவை 'சுட்டுத் திரிபு' எனப்படும்.

அவன் என்பதில் உள்ள சுட்டு எழுத்து, சேய்மையில் (தொலைவில்) உள்ள பொருளைச் சுட்டுகிறதன்றோ? எனவே, இது சேய்மைச் சுட்டு எனப்படும்.

இது என்னும் சொல்லில் உள்ள சுட்டு எழுத்து அண்மையில் (அருகில்) உள்ள பொருளைச் சுட்டுவதால் இஃது அண்மைச் சுட்டு எனப்படும்.

பயிற்சி

1. சுட்டெழுத்துகள் என்றால் என்ன? அவை யாவை?

2. அகச்சுட்டு, புறச்சுட்டு என்பவை யாவை? ஒவ்வொன்றிற்கும் இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் எழுதுக.

3. அண்மைச் சுட்டு, சேய்மைச் சுட்டு—இவற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

4. பின்வருவனவற்றுள் சுட்டு எழுத்துகள் அமைந்த சொற்களை மட்டும் எடுத்து எழுதி அவை அகச்சுட்டா, புறச்சுட்டா என்று குறிப்பிடுக:

அம்பலவாணன், அம்மரம், இவர், இதழ், இப்பெட்டி, அவை, அம்மாடு, அரசன், அது.

7. எங்கள் தஞ்சைப் பயணம்

இமயம் முதல் குமரிவரை விரிந்து பரந்துள்ள நம் தாய் நாட்டில் நாம் கண்டு களிக்கத்தக்க வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்கள் பல உள்ளன. மாணவர்கள் விடுமுறைக் காலங்களில் அத்தகைய இடங்களுக்குச் சென்று காண்பது மனத்துக்கு மகிழ்ச்சி தருவதுடன் அவர்களுடைய பொது அறிவையும் வளர்க்கும். அந்த நோக்கத்துடன் சென்னை யில் உள்ள ஒரு பள்ளி நடத்திய இன்பச் சுற்றுலாவில் கலந்துகொண்டு, தஞ்சையைக் கண்டு வந்த மாணவன் ஒருவன் கூறிய செய்தி அவன் கூறியவாறு இங்குத் தரப் பட்டுள்ளது:

'தஞ்சைப் பெரிய கோயிலைப்பற்றிப் படிக்கும்போ தெல்லாம் அதைக் காணவேண்டும் என்னும் ஆர்வம் எங்க ளுக்கு உண்டாகும். அந்த ஆர்வத்தை நிறைவேற்ற எங்கள் தலைமை ஆசிரியர் பொங்கல் விடுமுறையில் ஒரு சுற்றுலா வுக்கு ஏற்பாடு செய்தார். முந்நூற்று ஐம்பது மாண வர்களும் அறுபது ஆசிரியர்களுமாகச் சேர்ந்து நாங்கள் தஞ்சைக்குப் புறப்பட்டோம். நாங்கள் பகலில் பயணம் செய்தமையால் வழிநெடுகப் பலவித இயற்கைக் காட்சி களைக் கண்டு மகிழ்ந்தவாறே இரவு எட்டு மணிக்குத் தஞ்சையை அடைந்தோம்.

தஞ்சையில் ஒரு பெரிய மேல்நிலைப் பள்ளியில் நாங்கள் தங்கினோம். அங்கு நாங்கள் உண்பதற்கும் உறங்குவதற்கும் குளிப்பதற்கும் நல்ல வசதிகள் செய்யப் பட்டிருந்தன. பயணக் களைப்பு நீங்க இரவு நல்லுணவு உண்டு, நாங்கள் அமைதியாக உறங்கினோம்.

மறுநாள் காலையில் நாங்கள் தஞ்சைப் பெரிய கோயிலைக் காணப் புறப்பட்டோம். அக்கோயிலின் உயர்ந்த கோபுரமே எங்களுக்கு வழிகாட்டியது. நாங்கள் ஆர்வத்துடன் வழிநடந்து காலை ஒன்பது மணிக்குக்

கோயிலை அடைந்தோம். அப்பெரிய கோயிலையும் வானளாவிய கோபுரத்தையும் கண்டு மலைத்து நின்ற எங்களுக்கு அக்கோயிலைப்பற்றிய வரலாற்றை எங்கள் தமிழாசிரியர் எடுத்துரைத்தார்.

'இக்கோயில் கி.பி. பத்தாம் நூற்றாண்டில் கட்டப் பட்டது. இராசராசன் என்னும் சோழப் பேரரசன் இதைக் கட்டினான். தொடக்கத்தில் அம்மன்னன் பெயராலேயே இக்கோயில் இராசராசேச்சுரம் என்று வழங்கப்பட்டது. இக்கோயிலில் உள்ள கோபுரமும் இலிங்கமும் நந்தியும் மிகப் பெரியனவாக இருத்தலால் நாளடைவில் மக்கள் இதனைப் பெரிய கோயில் என்று வழங்கலாயினர்.

'இக்கோபுரம் மிக்க உயரமானது; அற்புத வேலைப் பாடு அமைந்தது என்பதனை நீங்களே பார்க்கிறீர்கள். இதன் உயரம் 61 மீட்டர். இக்கோபுரத்தின் மேல் உள்ள

கூம்பின் நிழல் எப்போதும் கீழே விழுவதில்லை. அதனால், இதனை 'நிழல் சாயாத கோபுரம்' என்பர். கூம்பின் நிழல் கீழே விழுந்தால் எவ்வளவு தொலைவு செல்லுமோ அந்த அளவுக்குக் கோபுரத்தின் அடித்தளம் பரவி யுள்ளது. அதனால்தான் கூம்பின் நிழல் கீழே விழுவ தில்லை. இக்கோபுரத்தின்மேலே எண்பது டன் எடை

யுள்ள ஒரே கல்லால் மூடப்பட்டுள்ளது. ஏறக்குறைய 4 கிலோ மீட்டர்த் தொலைவு சரிவான மேடு அமைத்து யானைகள்மூலம் அக்கல்லை உச்சிக்கு இழுத்து வந்த தாகக் கூறப்படுகிறது.

'இங்குள்ள பெரிய இலிங்கமும் நந்தியும் நருமதை யாற்றங்கரையிலிருந்த ஒரு குன்றைச் செதுக்கிச் செய்து கொண்டுவரப்பட்டன என்று கூறுகின்றனர். இக் கோயிலுக்கு மூன்று வாயில்கள் இருப்பதைக் கவனித் திருப்பீர்கள். அவற்றுக்கு முறையே கேரளாந்தகன், இராசராசன், அணுக்கன் வாயில்கள் எனப் பெயர் வழங்கு கின்றன. கேரளாந்தகன் என்பது இராசராசனின் மறு பெயர்களில் ஒன்று.

'கோயிலைக் கட்டிமுடித்தவுடன் இராசராசன் இறைவழிபாட்டிற்கும் விழாக்கள் கொண்டாடுவதற்கும் ஏராளமான விளை நிலங்களைக் கோயிலுக்கு வழங் கினான்; பரம்பரையாகப் பணிசெய்யப் பணியாளர் களையும், தேவாரம் ஓதுபவர்களையும், நடனம் ஆடு பவர்களையும் நியமித்தான்; அவர்கள் வழி வழியாக வசதியுடன் வாழப் பொன்னும் பொருளும் நிலங்களும் வழங்கினான்; தன் வரலாற்றை இராசராச நாடகம் என்று ஆண்டுதோறும் நடிக்க ஏற்பாடு செய்தான். இச்செய்தி களை இங்குள்ள கல்வெட்டுகள் வாயிலாக நாம் அறிய முடிகிறது. கருங்கற் பாறையையே காணமுடியாத இப் பகுதியில் அடித்தளம் முதல் தூபிவரை இக்கோயில் முழுதும் கருங்கல்லாலேயே கட்டப்பட்டுள்ளது. அதன் மூலம் இராசராசனின் கடவுளன்பு, முயற்சி, செயல் திறம் ஆகியவை விளங்குகின்றன அல்லவா?'

இங்ஙனம், ஆசிரியர் கூறிய செய்தியைக் கேட்டு நாங்கள் பெரிதும் மகிழ்ந்தோம். பின்னர், நாங்கள் கோயிலின் பல பகுதிகளைச் சென்று கண்டோம். நாக்கை வளைத்து மூக்கினுள் நுழைத்துக்கொண்டு படுத்திருக்கும் பெரிய நந்தியைக் கண்டு வியந்தோம். அதன் உயரம் 3·75 மீட்டர், நீளம் 5·85 மீட்டர்,

அகலம் 2·48 மீட்டர். இவ்வளவு பெரிய நந்தி வேறு எங்கும் இல்லையாம். கருவறைக்கு முன்புள்ள பெரிய மண்டபத்தைக் கண்டு இன்புற்றோம். பிறகு கருவறைக்குள் சென்று தஞ்சைப் பெருவுடையாரை வழிபட்டோம். கருவறையைச் சுற்றியுள்ள சுவர்களில் வரையப்பட்டிருந்த சோழர் கால வண்ண ஓவியங்களைக் கண்டு களித்தோம்.

அவற்றையெல்லாம் கண்டு மகிழ்ந்தபின் நாங்கள் நிழல் சாயாத கோபுரத்தின் அழகையும் கண்டோம். அக்கோபுரத்தின் கீழே நின்று பார்த்தால் தலை சுற்றுகிறது. அக்கோபுரமே நம்மீது சாய்வதுபோல் தோன்றுகிறது. தென் புறத்தில் உள்ள உமாபரமேசுவரி கோயிலின்முன் ஒரு பெரிய நந்தி வைக்கப்பட்டுள்ளது. அதன் உயரம் 2 மீட்டர். அந்த நந்திக்கு ஈடான எட்டு நந்திகள் கோபுரத்தின் உச்சியில் நான்கு மூலைகளிலும் வைக்கப்பட்டுள்ளனவாம். கீழிருந்து பார்த்தால் அவை மிகச் சிறியனவாகத் தோன்றுகின்றன.

இவ்வாறு தஞ்சைப் பெரிய கோயிலைக் கண்டு களித்துப் பண்டைக்காலச் சிற்பிகளின் கலைத் திறத்தையும், இராசராசனின் உயர்ந்த உள்ளத்தையும் எண்ணி வியந்தவாறே நாங்கள் கோயிலை விட்டு வெளியே வந்தோம்; வரும் வழியில் அப்பெரிய கோயிலைக் கட்டிய பேரரசன் இராசராசனின் உருவச்சிலையைக் கண்டு உள்ளம் பூரித்தோம்; கடல் கடந்தெல்லாம் கன்னித் தமிழகத்தின் பெருமையை நிலைநாட்டிய அப்பெரு வேந்தனின் பெருமைகளை ஆசிரியர் கூறக்கேட்டு அகம் மகிழ்ந்தோம். பின்னர் நாங்கள் தங்கியிருந்த பள்ளிக்குத் திரும்பிப் பகல் உண்வு உண்டு சற்று ஓய்வெடுத்துக் கொண்டோம்.

பிற்பகலில், தஞ்சைக்குப் பெருமை தரும் 'சரசுவதி மகால்' என்னும் பெரிய நூல் நிலையத்திற்குச் சென்றோம். இந்தியாவில் உள்ள தலை சிறந்த நூலகங்களில் அதுவும் ஒன்று. அங்கு உலகில் எங்கும் கிடைக்காத மிகப் பழமையான நூல்களும் ஓலைச் சுவடிகளும்

உள்ளன. நாங்கள் அந்நூல் நிலையத்தைச் சுற்றிப் பார்த்த பிறகு அங்குள்ள அரச மாளிகைக்குச் சென்றோம். அம்மாளிகையில் அமைந்த கொலுமண்டபமும் பிறவும் வண்ண ஓவியங்களால் அலங்கரிக்கப்பட்டு வியப்புமிக்க காட்சி தருகின்றன. கொலுமண்டபத்தின் நடுவே சலவைக்கல்லால் செய்யப்பட்ட சரபோசி மன்னரின் அழகிய சிலையைக் கண்டு களித்தோம். இசை, நாடகம், நடன நிகழ்ச்சிகளுக்கென்றே அமைக்கப்பட்ட 'சங்கீத மகால்' என்னும் இசை மன்றமும் அங்குள்ளது.

அவற்றையெல்லாம் கண்டுகளித்த பிறகு நாங்கள் நகரின் பல பகுதிகளையும் சுற்றிப் பார்த்து மகிழ்ந்தோம். தஞ்சையில் சிவகங்கைப் பூந்தோட்டம், காமாட்சி அம்மன் கோயில் முதலியன கண்டு மகிழத்தக்கனவாம். அங்கு ஒரு மருத்துவக் கல்லூரியும் பல கல்வி நிலையங்களும் உள்ளன. தஞ்சை என்றவுடனே தலையாட்டி பொம்மை எல்லாருக்கும் நினைவுக்கு வரும். அந்தப் பொம்மை செய்யும் இடங்களையும், கலை நுட்பமும் கைவேலைப்பாடும் கொண்ட தஞ்சாவூர்த் தட்டு செய்யும் இடங்களையும் சென்று பார்த்தோம். தஞ்சாவூர்த் தட்டு உலகப் புகழ்பெற்றதாகும்.

தஞ்சையின் அழகிய காட்சிகளை எல்லாம் கண்டு களித்த நாங்கள் அன்று இரவு புறப்பட்டு மறுநாள் காலை சென்னையை வந்து அடைந்தோம். தஞ்சையில் நாங்கள் கண்ட கலைக்கோயிலும் கவின்மிகு காட்சிகளும் இன்றும் எங்கள் நெஞ்சில் நின்று இன்பமூட்டுகின்றன.

அருஞ்சொற்பொருள்

களித்தல் - மகிழ்தல்; வரலாறு - சரித்திரம்; ஆர்வம் - விருப்பம்; சுற்றுலா - சுற்றுப்பயணம்; மலைத்து - திகைத்து; நாளடைவில் - காலப்போக்கில்; கூம்பு - கலசம்; கேரளாந்தகன் - கேரளர்களுக்கு யமன்; அணுக்கன் - நெருக்கமானவன்; பரம்பரை - வழி வழி; கருவறை - இறைவன் எழுந்தருளியுள்ள உள் அறை; அடித்தளம் - அடிப்பாகம்; தூபி - கோபுரம்; கன்னித் தமிழகம் - அழியாத தமிழ்நாடு; கவின் - அழகு.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. இன்பச் சுற்றுலாவினால் உண்டாகும் பயன் யாது?
2. தஞ்சைப் பெரிய கோயில் யாரால் எப்போது கட்டப் பட்டது?
3. தஞ்சைக் கோயிலுக்கு முதலில் வழங்கிய பெயர் யாது? அது பெரிய கோயில் என அழைக்கப்படக் காரணம் என்ன?
4. தஞ்சைப் பெரிய கோயில் கோபுரத்தின் தனிச் சிறப்பை விளக்குக.
5. பெரிய கோயிலில் உள்ள நந்தியின் சிறப்பு யாது?
6. இராசராசன் செய்த திருப்பணிகள் குறித்துக் கல்வெட்டு மூலம் விளங்கும் செய்திகள் யாவை?
7. இராசராசனின் உயர்ந்த உள்ளத்துக்கும் செயல் திறனுக் கும் சான்றுகள் யாவை?
8. தஞ்சையில் காணத்தக்க வேறு காட்சிகள் யாவை?

II. பிரித்து எழுதுக:

நல்லுணவு, கற்பாறை, கருவறை, பிற்பகல்.

III. சேர்த்து எழுதுக:

செய்தியை + கேட்டோம் = செய்தியைக் கேட்டோம்
கோயிலுக்கு + கொடுத்தான் = கோயிலுக்குக் கொடுத்தான்

நிலங்களை + தந்தான் =	எங்களுக்கு + சொன்னார் =
நந்தியை + பார்த்தோம் =	தஞ்சைக்கு + பெருமை =
உண்மையை + சொல் =	உனக்கு + தந்தேன் =

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

வழிநெடுக, வானளாவிய, பரம்பரையாக, நிலைநாட்டிய, நாளடைவில்.

V. எதிர்ச்சொல் எழுதுக:

இயற்கை, உறங்கினோம், உயர்ந்த, பேரரசன், இன்பம்.

VI. அண்மையில் நீ மேற்கொண்ட இன்பச் சுற்றுலாவைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

இலக்கணம்

வினா எழுத்துகள்

கண்ணன் என்ன படித்தான்?

இவ்வாக்கியத்தில் 'என்ன?' என்னும் சொல் வினாப்பொருளில் வந்தது. இது வினாச்சொல் ஆகும். இச்சொல்லில் உள்ள எ என்னும் எழுத்தே வினாப்பொருளைத் தருகிறது. வினாப் பொருளைத் தரும் எழுத்துகள் **வினா எழுத்துகள்** ஆகும்.

ஆ, எ, ஏ, ஓ என்னும் உயிர் எழுத்துகளும் யா என்னும் உயிர் மெய்யெழுத்தும் சொல்லில் அமைந்து வினாப்பொருளைத் தரும் போது வினா எழுத்துகள் ஆகும்.

எவன்? ஏது? யாவன்?

இச்சொற்களில் எ, ஏ, யா என்னும் மூன்று எழுத்துகளும் சொல்லின் அகத்தே நின்று வினாப்பொருளைத் தருகின்றன. இவை **அகவினா** எனப்படும். இவற்றில் உள்ள வினா எழுத்துகளை நீக்கினால் பிற எழுத்துகள் பொருள் தரமாட்டா.

எம் மனிதன்? அவளா? (ஆ). முருகனோ? (ஓ).

இச்சொற்களில் எ என்பது முதலிலும், ஆ, ஓ என்பவை இறுதியிலும் நின்று வினாப்பொருளைத் தருகின்றன. இவ்வெழுத்துகளை நீக்கினாலும் மனிதன், அவள், முருகன் எனப் பிற எழுத்துகள் சொல்லாய் நின்று பொருள் தருகின்றன அல்லவா? எனவே, சொல்லுக்கு முதலிலும் இறுதியிலும் புறத்தே (வெளியே) நின்று வினாப் பொருளைத் தரும் எழுத்து, **புறவினா** எனப்படும்.

ஏது? அவனே (ஏ) வந்தான்?

இச்சொற்களைக் கவனி. இவற்றில் ஏ என்னும் வினா எழுத்து, சொல்லின் முதலிலும் இறுதியிலும் வந்துள்ளது.

நினைவில் வையுங்கள்:

1. எ, யா — சொல்லுக்கு முதலில் நின்று அகவினாவாகவும் புறவினாவாகவும் வரும்.
2. ஆ, ஓ — சொல்லுக்கு ஈற்றில் நின்று புறவினாவாகவே வரும்.
3. ஏ — சொல்லுக்கு முதலில் நின்று அகவினாவாக வரும்; சொல்லுக்கு ஈற்றில் புறவினாவாக வரும்.

பயிற்சி

1. வினா எழுத்துகள் யாவை? அவை எங்கு நின்று வினாப் பொருள் உணர்த்தும்?

2. அகவினாவையும் புறவினாவையும் இரண்டிரண்டு எடுத்துக் காட்டுகள் தந்து விளக்குக.

3. 'எட்டு' என்னும் சொல்லில் உள்ள எகரத்துக்கும் 'எவன்' என்னும் சொல்லில் உள்ள எகரத்துக்கும் உள்ள வேறுபாடு யாது?

4. பின்வருவனவற்றில் உள்ள வினாச் சொற்களை எடுத்து எழுதி, அவை அகவினாவா, புறவினாவா என்பதைக் குறிப்பிடுக:

யாக்கை, எவ்வாறு, கந்தனோ, ஏழு, அந்தோ, அவளோ, எருமை, ஏவன், வள்ளியோ, எக் குடும்பம்.

8. பழந்தமிழ் நாடு

பாரதம் நம் நாடு. தமிழகம் அதில் ஒரு பகுதி. அமிழ்தினும் இனிய நம் தமிழ் மொழி வழங்கும் நிலப்பகுதியாதலால் இது தமிழ்நாடு என வழங்கப்படுகிறது. தமிழ்நாடு இப்போது பாரத நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும் பண்டு உலகம் போற்றும் பெருமை வாய்ந்த ஒரு நாடாக விளங்கியது. உலகில் முதன்முதலில் மக்கள் தோன்றிய இடம் தமிழ்நாடே எனவும், இங்கிருந்தே நாகரிகம் எங்கும் பரவியது எனவும் அறிஞர்கள் கூறுகிறார்கள். அத்தகைய பெருமை வாய்ந்த நம் பழந்தமிழ் நாட்டைப் பற்றி ஓரளவாவது நாம் தெரிந்துகொள்வது இன்றியமையாததாகும்.

பழங்காலத்தில் தமிழ்நாடு இன்றுள்ளதுபோல் இல்லாமல் தெற்கே இந்துமாக்கடலில் இன்னும் விரிந்து பரந்திருந்தது. அப்பெரு நிலப்பரப்பில் குமரி மலை என்று ஒரு மலை இருந்தது. குமரி ஆறு என்று ஓர் ஆறு ஓடியது. அதனால், அது குமரிக் கண்டம் எனப் பெயர் பெற்றிருந்தது. அடிக்கடி நிகழ்ந்த கடல் கொந்தளிப்பால் குமரிக் கண்டத்தின் பெரும் பகுதி கடலில் மூழ்கிவிட்டது. எஞ்சிய நிலப்பகுதியே இன்று தமிழ்நாடு என வழங்கப் படுகிறது.

இப்போதுள்ள தமிழ்நாட்டுக்குத் தெற்கே குமரி முனையும், வடக்கே வேங்கடமலையும், கிழக்கும் மேற்கும் கடலும் முன்பு எல்லைகளாக அமைந்திருந்தன. மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தொல்காப்பியம் என்னும் இலக்கண நூல், 'வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகம்,' என்று குறிப்பிடுகிறது. அண்மையில் வாழ்ந்த பாரதியாரும் அவற்றையே தமிழ் நாட்டின் எல்லைகளாகக் குறிப்பிட்டுள்ளார்.

நம் பாரதம் உரிமைபெற்றபின் வேங்கடம் ஆந்திரத்துக்கு உரிமையானது. அதற்கு முன்னரே மேற்குக் கடற்கரைப் பகுதி தனியாகப் பிரிந்துவிட்டது. எஞ்சிய பகுதியே தமிழ்நாடு எனக் கூறப்படுகிறது.

பழங்காலம் முதல் தமிழ்நாடு வளமெலாம் நிறைந்த நல்ல நாடாகத் திகழ்கிறது. இந்நாட்டில் காவிரி, தென்பெண்ணை, பாலாறு, வையை, பொருநை முதலான ஆறுகள் பாய்ந்து வளம் செய்கின்றன. அகிலும் தேக்கும் சந்தனமும் விளையும் மலைகளும், அழகான முத்துக் குவியும் கடல் துறைகளும், பச்சைப்பசேல் எனக் கண்களுக்கு விருந்தளிக்கும் மரம் செடி கொடிகள் நிறைந்த காடுகளும் இந்நாட்டைச் சூழ்ந்துள்ளன. நிலத்துக்கு அணியென விளங்கும் நெல்லும் கரும்பும் பிற தானிய வகைகளும் இங்கு ஏராளமாக விளைகின்றன. மண்ணுக் கடியில் பொன்னும் இரும்பும் நிலக்கரியும் பிறவும் மலிந்துள்ளன.

இங்ஙனம் இயற்கை வளம்மிக்க இந்த நாட்டைச் சேர, சோழ, பாண்டியர் என்னும் மூவேந்தர்கள் ஆண்டு வந்தார்கள். அதனால், தமிழகம் முன்பு சேர நாடு, சோழ நாடு, பாண்டிய நாடு என்று முப்பெரும் பிரிவுகளை உடையதாக விளங்கியது. கொங்கு நாடு, தொண்டை நாடு, நடு நாடு என்னும் வேறு சில பிரிவுகளும் இருந்தன. அவற்றைக் குறுநில மன்னர்கள் ஆட்சி புரிந்தார்கள்.

சேரநாடு என்பது இப்போது மலையாள மொழி வழங்கும் கேரள மாநிலமாகும். பழங்காலத்தில் இங்குத் தமிழே வழங்கியது. நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தை இயற்றிய இளங்கோவடிகள் சேரநாட்டு இளவரசரே ஆவார். சேரநாடு மலைவளத்தில் சிறந்தது. ஆதலின், 'மலை நாடு' என்றும் வழங்கப்பட்டது. வஞ்சி இந்நாட்டின் தலைநகரமாகும்.

சோழநாடு என்பது இன்றைய திருச்சி, புதுக்கோட்டை, தஞ்சை மாவட்டங்கள் அடங்கிய பகுதி

யாகும். 'வான் பொய்ப்பினும் தான் பொய்யாக் காவிரி' பாய்ந்து வளம் செய்வதால் இந்நாடு 'நீர் நாடு', 'புனல் நாடு' என்றும் புகழ்பெற்று விளங்கியது. உறையூர், காவிரிப்பூம்பட்டினம் என்பவை இதன் தலைநகரங்களாகத் திகழ்ந்தன.

இப்போதுள்ள மதுரை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள் அடங்கிய பகுதியே முற்காலத்தில் பாண்டிய நாடு எனப்பட்டது. மதுரை பாண்டிய நாட்டின் தலைநகராகும்.

தொண்டை நாடு என்பது இன்றைய சென்னை, செங்கற்பட்டு, வட ஆர்க்காடு மாவட்டங்கள் அடங்கிய பகுதியாகும். தென்னார்க்காடு, 'நடு நாடு' எனப் பட்டது. கோயம்புத்தூர், பெரியார், சேலம், தருமபுரி, நீலகிரி மாவட்டங்கள் அடங்கிய பகுதியே முன்பு 'கொங்கு நாடு' என்று வழங்கப்பட்டது. தொடக்கத்தில் தொண்டை நாடும் நடு நாடும் சோழ நாட்டோடும், கொங்கு நாடு சேர நாட்டோடும் இணைந்திருந்தன.

பழந்தமிழ் நாட்டை ஆண்ட மூவேந்தருள் சோழன் கரிகாலன், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன், சேரன் செங்குட்டுவன் என்பவர்கள் புகழ்பெற்ற பேரரசர்களாவார்கள். தொண்டை நாட்டை ஆண்ட தொண்டைமான் இளந்திரையனும் நடு நாட்டை ஆண்ட மலையமான் திருமுடிக்காரியும் கொங்கு நாட்டை ஆண்ட அதியமானும் குமணனும் குறிப்பிடத்தக்க குறுநில மன்னராவர்.

பிற்கால வேந்தர்களில் இராசராசசோழனும் அவன் மகன் இராசேந்திரனும் பாண்டியன் மாறவர்மன் சுந்தரபாண்டியனும் தொண்டை நாட்டை ஆண்ட மகேந்திரவர்ம பல்லவனும் அவன் மகன் நரசிம்மவர்மனும் தமிழகத்தின் பெருமையைத் தரணிக்கு உணர்த்திய சிறப்புடையவர்களாவர்.

பழந்தமிழ் நாட்டில் முடியாட்சி நிலவியது. எனினும், குடியாட்சியின் அடிப்படைக் கூறுகளும் அமைந்திருந்தன. அரசியலில் அரசனுக்கு ஆலோசனை கூற அமைச்சர்களோடு ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்னும் இரண்டு அவைகளும் இருந்தன. அரசன் அந்த இரு அவையினரையும் கலந்தே எச்செயலையும் செய்துவந்தான். அரசன் தவறு செய்யும்போது அறிவுரை கூறித் திருத்தும் அளவுக்குத் தமிழ்ப் புலவர்கள் உரிமை பெற்றிருந்தார்கள். அதனால், பழந்தமிழ் வேந்தர்கள் அறநெறி தவறாமல் குடிமக்கள் நலமே தம் நலமாகக்கொண்டு அரசாண்டார்கள். குடிமக்களின் குறை முறைகளைக் கேட்டு நீதி வழங்க ஆங்காங்கே அறம் கூறும் அவையங்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இத்தகைய நல்லாட்சியினால் குடிமக்கள் கவலை அறியாது வாழ்ந்தனர். உழவும் நெசவும் பழந்தமிழ் நாட்டின் இரு கண்களாக விளங்கின. 'மாடு கட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல் என்று ஆனை கட்டிப் போரடிக்கும்' அளவுக்கு உழவுத்தொழில் வளம் பெற்றிருந்தது. பருத்தியாலும் பட்டாலும் பலவித ஆடைகள் நெய்யப்பட்டன. அந்த ஆடைகள் தம் மென்மைத் தன்மையால் பாலாவி, மாலைப்பனி, ஓடு நீர், பூந்துகில் என்றெல்லாம் பெயர் பெற்றிருந்தன. பொன்னாலும் வெள்ளியாலும் இரத்தினங்களாலும் பல வகை அணிகலன்கள் செய்வோரும் இரும்பினால் கருவிகள் செய்வோரும் மற்றும் பல தொழில் செய்வோரும் பண்டு சிறப்பாக வாழ்ந்தனர்.

தொழில் வளம் சிறந்த நாட்டில் வாணிகமும் சிறந்து விளங்கும் அன்றோ? பழங்காலத்தில் உள்நாட்டு வாணிகத்தோடு வெளிநாட்டு வாணிகமும் வளம் பெற்றிருந்தது. உரோமரும், கிரேக்கரும், யவனரும் வாணிகத்துக்காக நம் நாட்டை நாடி வந்தனர். முசிறி, தொண்டி, கொற்கை, புகார் ஆகிய நம் நாட்டுத் துறைமுகங்களில் எப்போதும் பிற நாட்டுக் கப்பல்கள் நின்றுகொண்டிருந்

தன. வெளிநாட்டு வணிகர்கள் பொன்னைக் கொடுத்து அரிசி, மிளகு, ஏலம், இலவங்கம், அகில், சந்தனம், யானைத்தந்தம், முத்து முதலிய பொருள்களை வாங்கிச் சென்றார்கள். கொற்கையில் குளித்தெடுத்த முத்து உரோமாபுரி அரசியின் மணிமுடியில் ஒளி வீசியது. நம் நாட்டு வணிகர்கள் கலங்கள்மூலம் அயல் நாடுகளுக்குச் சென்று வாணிகத்தைப் பரப்பியதுடன் தமிழர் நாகரிகத்தையும் பரப்பினார்கள்.

தொழிலும் வாணிகமும் சிறந்த நாட்டில் வறுமைக்கு இடம் ஏது? வறுமையறியாத நாட்டில்தான் கலைகள் வளரும்; கல்வி சிறக்கும். நம் பழந்தமிழ் நாட்டில் இயல், இசை, நாடகம் என்னும் முத்தமிழும் வளர்ந்தன. சிற்பம், ஓவியம் முதலிய கலைகள் சிறந்து விளங்கின. கட்டடக் கலையும் நகரமைப்புக் கலையும் தமிழர் நாகரிகத்தின் சின்னங்களாய் ஒளிர்ந்தன.

பழந்தமிழர் கல்வியைக் கண்ணாகக் கருதினர். ஆடவருக்கு நிகராகப் பெண்டிரும் கல்வி கற்றுக் கவி பாடும் திறம் பெற்றிருந்தனர். ஔவையார், பொன்முடியார், மாசாத்தியார், நக்கண்ணையார், வெள்ளிவீதியார் போன்ற பெண்பாற் புலவர்கள் பாடிய பாடல்கள் புறநானூறு முதலிய சங்க இலக்கியங்களில் இடம் பெற்றுள்ளன. காவற்பெண்டும் கவிபாடும் திறம் பெற்றிருந்தாள் எனின், பழந்தமிழ் நாட்டின் கல்விச் சிறப்பைக் கூறவும் வேண்டுமோ?

பழந்தமிழ் வேந்தர்கள் கல்வியில் கருத்துடையவர்களாயிருந்தார்கள்; கலைகளை வளர்ப்பதில் ஆர்வம் காட்டினார்கள்; பொன்னும் பொருளும் வழங்கிப் புலவர்களைப் போற்றினார்கள்; பாணர், கூத்தர் முதலிய கலைஞர்களுக்குப் பரிசுகள் வழங்கி ஆதரித்தார்கள்; புலவர்களால் புகழ்ந்து பாடப்படுவதைப் பெரும் பேறாகக் கருதினார்கள். அதனால், தமிழ் வளர்ந்தது. தமிழில் ஒப்புயர்வற்ற பல நூல்கள் தோன்றின.

பாண்டிய மன்னர் சங்கம் வைத்துத் தமிழ் வளர்த்தனர். அதனால், பழங்காலம் 'சங்க காலம்' என்றே பெயர் பெற்றது. அக்காலத்தில் தோன்றிய **எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும்** சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படுகின்றன. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட அந்நூல்களின் வாயிலாகப் பழந்தமிழருடைய நாகரிகம், அரசியல், போர்முறை, வீரம், ஈகை, தொழில், வாணிகம், இல்வாழ்க்கை முதலிய பல அரிய செய்திகளை நாம் தெரிந்துகொள்ளலாம்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக **உலகப் பொதுமறை** என்று போற்றப்படும் 'திருக்குறள்' என்னும் அறநூல் தோன்றியதும் இக்காலத்தில்தான். அந்நூலால் தமிழும் தமிழினமும் பெற்றுவரும் பெருமை அளவிடற்கு அரியதாகும்.

இங்ஙனம், பழந்தமிழ் நாடு எல்லா வகையிலும் ஏற்றம் பெற்று உலகுக்கே எடுத்துக்காட்டாக விளங்கியது. நாம் அதனை எண்ணிப் பெருமிதம் அடைவதோடு, அப்பெருமையைப் பேணி வளர்க்க முற்படுவோமாக.

அருஞ்சொற்பொருள்

பாரதம் - இந்தியா; பண்டு - முன்பு; ஓரளவு - சிறிதளவு; தமிழ் கூறும் - தமிழ் பேசப்படும்; ஆந்திரம் - தெலுங்கு பேசப்படும் நாடு; அகில் - மணம் மிக்க ஒரு மரவகை; அணி - அழகு; மலிந்துள்ளன - நிறைந்துள்ளன; புனல் - நீர்; தரணி - பூமி, உலகம்; முடியாட்சி - அரசனைத் தலைவனாகக் கொண்ட ஆட்சி; குடியாட்சி - குடிமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஆளும் ஆட்சி; ஐம்பெருங்குழு - ஐவர் கொண்ட அவை; எண்பேராயம் - எண்மர் கொண்ட அவை; அறம் கூறு அவையம் - நீதி மன்றம்; போர் - அறுவடை செய்த நெற்கதிர்களின் குவியல்; அணிகலம் - ஆபரணம்; கலம் - கப்பல்; காவல் பெண்டு - வீட்டைக் காவல் செய்யும் பணிப்பெண்; பெருமிதம் - பெருமை, செருக்கு; பேணி - போற்றி.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. தமிழ்நாட்டின் சிறப்புகளாக அறிஞர்கள் கூறுவன யாவை?
2. குமரிக் கண்டத்தைப்பற்றி ஒரு குறிப்பு வரைக.
3. பழந்தமிழ் நாட்டின் எல்லைகள் யாவை?
4. தமிழ்நாட்டின் இயற்கை வளத்தினைப்பற்றி எழுதுக.
5. பழந்தமிழ் நாட்டின் பிரிவுகள் யாவை?
6. சேர, சோழ, பாண்டிய நாடு எனக் குறிப்பிடப்பட்ட நாடு களின் நிலப் பகுதிகள் யாவை? அவற்றின் தலை நகரங்கள் யாவை?
7. பழந்தமிழ் வேந்தர்களில் புகழ்பெற்ற அரசர் யாவர்?
8. பழந்தமிழ் நாட்டு அரசியல் குறித்து நீவிர் அறிவன யாவை?
9. பழந்தமிழ் நாட்டின் தொழில் வளத்தையும் வாணிகச் சிறப்பையும் விளக்குக.
10. பழந்தமிழகத்தின் கல்வி நிலை, கலைவளம் குறித்து எழுதுக.
11. சங்க இலக்கியங்கள் என்பன யாவை? அவற்றால் நாம் அறிவன யாவை?

II. குறிப்பு எழுதுக:

தொண்டை நாடு, கொங்கு நாடு, ஐம்பெருங் குழு, எண்பேராயம், உலகப் பொதுமறை.

III. பிரித்து எழுதுக:

முதன்முதல், கடற்கரை, சிலப்பதிகாரம், தென்னார்க்காடு, பூந்துகில்.

IV. சேர்த்து எழுதுக:

நிலம் + பகுதி = நிலப்பகுதி

	ஓவியம் + கலை = ஓவியக்கலை
மனம் + பக்குவம் =	பணம் + செலவு =
மரம் + தட்டு =	படம் + பிடிப்பு =

V. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

ஓரளவு, பச்சைப்பசேல், பெரும்பேறு, பெருமிதம்.

இலக்கணம்

இன எழுத்துகள்

இவற்றைக் கவனி:

அ - ஆ க - ங ட - ண
இ - ஈ ச - ஞ த - ந

இவ்வெழுத்துகள் பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி, ஒலிக்கும் கால அளவு, வடிவம் ஆகியவற்றில் ஒன்று மற்றொன்றை ஏதேனும் ஒருவகையால் ஒத்திருக்கின்றது. இவ்வாறு வரும் எழுத்துகள் இன எழுத்துகள் எனப்படும்.

தமிழில் உள்ள உயிர் எழுத்துகளையும் மெய்யெழுத்துகளையும் ஒலித்துப் பார். எவ்வெழுத்துக்கு எவ்வெழுத்து இனமாகும் என்பதை அறிந்துகொள்.

1. அ - ஆ உ - ஊ ஒ - ஓ
இ - ஈ எ - ஏ

இங்ஙனம், உயிர் எழுத்துகளில் குற்றெழுத்துகளுக்கு அவ்வவற்றின் நெட்டெழுத்துகள் இனமாம். இவை பிறப்பிடம், வடிவம் முதலியவற்றால் ஒத்திருப்பதைக் கவனி.

2. ஐ - இ ஔ - உ

இங்ஙனம், தமக்கென்று இனமில்லாத 'ஐ' என்னும் எழுத்து 'இ' என்னும் எழுத்தையும், 'ஔ' என்னும் எழுத்து 'உ' என்னும் எழுத்தையும் இனமாகக் கொள்ளும். ஐ என்பது அ, இ சேர்ந்து ஒலிப்பது. ஔ என்பது அ, உ சேர்ந்து ஒலிப்பது.

3. க் - ங் ட் - ண் ப் - ம்
ச் - ஞ் த் - ந் ற் - ன்

இங்ஙனம், வல்லெழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் அவற்றை அடுத்துவரும் மெல்லெழுத்து இன எழுத்தாகும். இவற்றுள் சில வடிவத்தினாலும் சில ஒலிப்பினாலும் ஒத்திருப்பதைக் கவனி.

தங்கம், மஞ்சள், பண்டம், தந்தம், கம்பம், மன்றம்

இச்சொற்களில் இனவெழுத்துகள் சேர்ந்து வந்துள்ளதைக் கவனி.

4. ய்,ர்,ல்,வ்,ழ்,ள் என்னும் இடையின மெய்யெழுத்துகள் ஆறும் ஒரே இனமாம்.

இவைபோன்ற இனமுறை, உயிர்மெய் எழுத்துகளுக்கும் பொருந்தும்.

(எ-டு) க - ங, ச - ஞ, ட - ண, த - ந, ப - ம, ற - ன.

இவை அகர உயிரோடு சேர்ந்து வந்தன. மற்ற உயிர் எழுத்துகளும் இவ்வாறே மெய்யெழுத்துகளோடு சேர்ந்து வரும்.

பயிற்சி

1. இனவெழுத்துகளுக்கு அப்பெயர் வரக் காரணம் யாது?

2. இன மெய்யெழுத்துகள் அமைந்த சொற்கள் ஆறு எழுதுக.

3. ஔ, கி, பே, ஒ, ச், ந்—இவற்றின் இன எழுத்துகளை எடுத்து எழுதுக.

9. உள்ளம் கவர்ந்த நல்ல பரிசு

(உரையாடல்)

தந்தை: *வேலா! வந்துவிட்டாயா? உன்னைத்தான் எதிர் பார்த்துக்கொண்டிருந்தேன். பள்ளி ஆண்டு விழா சிறப்பாக நடந்ததா?*

வேலன்: *மிகவும் சிறப்பாக நடந்தது அப்பா! நீங்களும் விழாவுக்கு வருவீர்கள் என்று எதிர்பார்த்தேன்.*

தந்தை: *வரவேண்டும் என்றுதான் நினைத்திருந்தேன். இன்றியமையாத ஓர் அலுவல் குறுக்கிட்டதால் வர இயலவில்லை. வகுப்பில் முதன்மை பெற்றதற்காக உனக்குப் பரிசு வரப்போவதாகக் கூறியிருந்தாயே, என்ன பரிசு கொடுத்தார்கள்?*

வேலன்: *இதோ பாருங்கள் அப்பா! இந்த நூல்தான் எனக்குப் பரிசாகத் தரப்பட்டது.*

(நூலைத் தருகிறான்)

தந்தை: *அருமையான பரிசு கொடுத்திருக்கிறார்களே! இரவீந்திரநாத தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியின் தமிழாக்கம் இது.*

வேலன்: *இந்தத் தாகூர் என்பவர் 'ஜன கண மன' என்னும் நாட்டுப்பண் இயற்றியவர்தானே அப்பா? தாகூர் என்றால் என்ன அப்பா?*

தந்தை: *ஆம். தாகூர் என்பது ஒரு குடும்பப் பெயர். இவருடைய தந்தையார் பெயர் தேவேந்திரநாத தாகூர் என்பதாகும். தாகூர் என்பது அக்குடும்பத்தில் பிறந்த ஒவ்வொருவர் பெயரோடும் சேர்ந்துவரும். இந்திய ஒருமைப்பாட்டுக்கு வித்திட்ட நம் நாட்டுப்பண்ணை*

இயற்றிய இரவீந்திரநாதரே 'கீதாஞ்சலி' என்னும் இந்த உலகம் போற்றும் ஒப்பற்ற நூலை இயற்றினார். அதற்காக நோபெல் பரிசும் பெற்றார்.



வேலன்: நோபெல் பரிசு என்றால் என்ன அப்பா?

தந்தை: இன்று உலகில் வழங்கப்படும் பரிசுகளில் எல்லாம் பெருமதிப்பு வாய்ந்தது நோபெல் பரிசுதான். சுவீடன் நாட்டைச் சார்ந்த ஆல்பிரட் நோபெல் என்பவர் இப்பரிசை ஏற்படுத்தினார். ஆண்டுதோறும் இயற்பியல், வேதியியல், இலக்கியம், உடலியல்—மருத்துவம், உலக அமைதி, பொருளியல் ஆகிய ஆறு துறைகளில் சிறந்த தொண்டு செய்தவர்களுக்குச் சாதி, சமய, மொழி வேறுபாடு இல்லாமல் இப்பரிசு வழங்கப்படுகிறது. இந்தப் பரிசின் மதிப்பு எவ்வளவு தெரியுமா?

ஒவ்வொரு பரிசும் ஏறக்குறைய இலட்சத்து இருபதி னாயிரம் ரூபா. இப்போது இப்பரிசுத் தொகை மேலும் கூடியுள்ளது. ஆண்டுதோறும் அவ்வளவு பெருந் தொகை வட்டியாகக் கிடைக்குமாறு அவர் பெரு நிதியை முதற் பொருளாக வழங்கி ஓர் அறக் கட்டளையை ஏற்படுத்தியுள்ளார்.

வேலன்: அவர் மிகவும் நல்லவர் அப்பா! அந்தப் பரிசு தாகூருக்கு எப்படிக் கிடைத்தது?

தந்தை: தாகூர் ஒரு பிறவிக் கவிஞர். இளமையிலேயே அவர் தாம் கண்ட இயற்கைக் காட்சிகள், வங்க மக்களின் வாழ்க்கை முறைகள், பழக்கவழக்கங்கள் முதலியவற்றைப் பற்றியெல்லாம் அழகாகப் பாடியுள் ளார். அதனால் அவரை **வங்க நாட்டு ஷெல்லி** என்று அறிஞர்கள் பாராட்டினார்கள்.

வேலன்: ஷெல்லி என்பவர் யார் அப்பா?

தந்தை: அவர் ஓர் ஆங்கிலக் கவிஞர். இயற்கைக் காட்சி களை வருணித்துப் பாடுவதில் வல்லவர். அவரைப் போல இயற்கையைப் புனைந்து பாடியதனாலேயே தாகூர் அவ்வாறு பாராட்டப்பட்டார். அவர் இயற் கையில் தாம் கண்ட கடவுட் காட்சிகளைக் குறித்துப் பாடியதே கீதாஞ்சலியாகும். அதனை அவர் ஓய்ந்த நேரங்களில் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதனைப் படித்த அவருடைய ஆங்கில நண்பர்கள் அவரைப் பாராட்டினார்கள்; அதனை ஒரு நூலாக வெளியிட வேண்டினார்கள். அவ்வாறு வெளிவந்த நூலுக்கே 1912ஆம் ஆண்டு தலைசிறந்த இலக்கியம் என்பதற்காக நோபெல் பரிசு வழங்கப்பட்டது.

வேலன்: 'கீதாஞ்சலி' என்றால் என்ன அப்பா?

தந்தை: கீதாஞ்சலி என்பதற்கு வழிபாட்டுப் பாடல்கள் என்று பொருள். நம் தமிழ்மொழியில் உள்ள

தேவாரம், திருவாசகம், தாயுமானவர் பாடல்கள் ஆகியவற்றைப்போல வங்க மொழியில் அமைந்த உருக்கமான பாடல்களின் தொகுதியே கீதாஞ்சலி. இஃது எல்லாச் சமயத்தவரும் விரும்பிப் படிக்கக்கூடிய வழிபாட்டு நூலாகும்.

வேலன்: வழிபாட்டுப் பாடல்களுக்கா அப்பெரும் பரிசு கிடைத்தது? வியப்பாக இருக்கிறதே!

தந்தை: வேலா! கீதாஞ்சலியில் உள்ள பாடல்கள் வழிபாட்டுப் பாடல்கள்மட்டும் அல்ல. இதில் உள்ள ஒவ்வொரு பாடலும் மக்களுக்கு நீதியைப் புகட்டுவதாக உள்ளது. ஆதலால், உலகப் பொதுமறையாகிய திருக்குறளைப்போலக் கீதாஞ்சலியும் ஓர் அறநூல் எனலாம்.

வேலன்: அப்படியா அப்பா!

தந்தை: உன் பரிசு நூலிலிருந்து ஒரு பகுதியைப் படித்துக் காட்டுகிறேன், கேள்.

'எல்லாக் கதவுகளையும் மூடிக்கொண்டு தன்னந் தனியாக யாரை வணங்குகிறீர்கள்? கண்களைத் திறந்து பாருங்கள். உங்கள் கடவுள் உங்கள் முன்னால் இல்லை. அவன் எங்கிருக்கிறான் தெரியுமா? கடினமான நிலத்தை உழுதுகொண்டிருக்கிறானே, வலிமையான கற்களை உடைத்துக்கொண்டிருக்கிறானே ஏழைத் தொழிலாளி—அவனிடத்தில் இருக்கிறான். அவன் ஆடை புழுதி படிந்திருக்கிறது. அவன் அவர்களிடையே வெயிலிலும் மழையிலும் இருக்கிறான். அவனைக் காணவேண்டுமாயின் நீங்களும் அங்கு வாருங்கள்.'

வேலன்: இதன் கருத்து என்ன அப்பா?

தந்தை: எவ்வுயிரும் ஈசன் கோயில். துன்பப்படும் உயிர்களுக்கு உதவுவதே இறைவனுக்குச் செய்யும் வழிபாடு.

அதுவே அவனை அடையும் வழி என்பதுதான் இதன் கருத்து.

வேலன்: நல்ல கருத்து அப்பா. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்போம்' என்று அறிஞர் அண்ணா கூடக் கூறியிருக்கிறார் அல்லவா?

தந்தை: தாகூரின் கருத்தைத்தான் அண்ணா தெளிவு படுத்தினார். தாகூர் இறைவனிடம் என்ன வேண்டு கிறார் என்பதையும் கேள்.

'என் தலைவனே! இதுதான் என் வேண்டுகோள். என் உள்ளத்தில் இருக்கும் வறுமையைத் தொலைத்து விடு. இன்ப துன்பங்களை எளிதில் தாங்கிக்கொள்ளும் மனவலிமையை எனக்குக் கொடு. பயனுள்ள வகையில் தொண்டு செய்யும் மனவுறுதியை எனக்கு அருள். ஏழைகளைப் புறக்கணிக்காமல் இருக்கவும், ஆணவத் தின்முன் அடிபணியாதிருக்கவும் கூடிய உள்ள உறுதியை எனக்குத் தந்தருள்.'

வேலன்: ஆகா! தாகூர் ஓர் ஒப்பற்ற கவிஞர் என்பதில் ஐயம் இல்லை அப்பா. இந்த நூலுக்கு நோபெல் பரிசு கிடைத்ததிலும் வியப்பு இல்லை.

தந்தை: தாகூர் ஒரு கவிஞர் மட்டுமல்லர்; அவர் ஒரு சிறந்த நாடக ஆசிரியர்; தலைசிறந்த சிறுகதை எழுத் தாளர்; பெரிய நவீனங்களைப் படைத்தவர்; பொது நலத் தொண்டர். அவருடைய எழுத்தாற்றலைப் பாராட்டிக் கல்கத்தாப் பல்கலைக் கழகம் அவருக்கு 'டாக்டர்' பட்டம் வழங்கியது. ஆக்ஸ்போர்டு பல்கலைக் கழகம் 'இலக்கிய மேதை' என்னும் பட்டம் வழங்கிச் சிறப்பித்தது. அரசு 'சர்' பட்டம் அளித்துப் பெருமைப்படுத்தியது.

வேலன்: அப்பா! தாகூர் சிறந்த பொதுநலத் தொண்டர் என்று கூறினீர்களே. அவர் செய்த பொதுத் தொண்டுகளைப்பற்றிச் சிறிது கூறுங்கள் அப்பா!

தந்தை: வேலா! உன் ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். தாகூர் இந்த நாட்டு இளைஞர்கள் இயற்கைச் சூழலில் கல்வி கற்கவேண்டும் என்பதற்காகச் சாந்தி நிகேதனம் என்னும் கல்வி நிலையத்தை நிறுவினார்; தமக்குக் கிடைத்த நோபெல் பரிசுத் தொகையை அதற்கே வழங்கினார். உலகம் ஒரு குடும்பமாக வாழ வேண்டும் என்பது அவர் கொள்கை. அந்நிலை உருவாக அவர் விசுவபாரதி என்னும் உலகப் பல்கலைக் கழகத்தையும் ஏற்படுத்தினார். துன்பப்படும் ஏழைகளின் துயர்துடைக்கப் பாடுபட்டார். குவெட்டா நில நடுக்கத்தின்போது அவர் செய்த தொண்டுகள் குறிப்பிடத்தக்கவையாகும். அதுமட்டுமன்று, தாகூர் என்றவுடனே நம் நினைவுக்கு வருவது அவர் தாய் மொழிப் பற்றுதான்.

வேலன்: தாய்மொழிப்பற்றா? அதைப்பற்றியும் கூறுங்கள் அப்பா!

தந்தை: கவியரசர் தாகூர் தம் தாய்மொழிமீது மிகவும் பற்றுடையவர். தாய்மொழியிலேயே பேசவேண்டும்; எழுதவேண்டும்; எல்லாப் பாடங்களையும் படிக்க வேண்டும் என்னும் நோக்கமுடையவர். அதனாலேயே அவர் தாம் எழுதிய நூல்களை எல்லாம் தம் தாய் மொழியிலேயே எழுதினார். கல்கத்தாப் பட்டமளிப்பு விழாவில் பேசும்போதும் தம் தாய்மொழியிலேயே பேசி வழிகாட்டினார். அவரைப்போல நாமும் தாய் மொழிப் பற்றுடையவராக வாழவேண்டும்.

வேலன்: அப்பா! இன்று தங்களால் கவியரசர் தாகூரைப் பற்றி நன்கு தெரிந்துகொண்டேன். நானும் அவரைப் போல நாட்டுக்கும் மொழிக்கும் தொண்டு செய்ய முயல்வேன்.

தந்தை: வேலா! மெத்த மகிழ்ச்சி. உன் முயற்சி வெல்க! தாகூரைப்பற்றி நீ தெரிந்துகொள்ள வேண்டிய செய்திகள் இன்னும் பல உள்ளன. சமயம் வாய்க்கும் போது அவற்றைக் கூறுகிறேன்.

வேலன்: நன்றி அப்பா!

அருஞ்சொற்பொருள்

ஒருமைப்பாடு - ஒற்றுமை; வித்து - விதை; இயற்பியல் - பௌதிகம்; வேதியியல் - இரசாயனம்; அறக்கட்டளை - தருமஸ்தாபனம்; வழிபாடு - வணக்கம்; புறக்கணிக்காமல் - வெறுக்காமல்; ஆணவம் - அகந்தை, கர்வம்; நவீனம் - நாவல்; நிறுவினார் - அமைத்தார்; விசுவம் - உலகம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. கீதாஞ்சலி என்பதன் பொருள் யாது? அந்நூலை இயற்றியவர் யார்?
2. 'நோபெல் பரிசு' யாரால் ஏற்படுத்தப்பட்டது? அதைப் பற்றி ஒரு குறிப்பு வரைக.
3. தாகூர் நோபெல் பரிசு பெற்றது எவ்வாறு?
4. கடவுள் இருக்கும் இடம்பற்றித் தாகூர் கூறியது யாது?
5. தாகூர் இறைவனிடம் வேண்டியது யாது?
6. இரவீந்திரர் பெற்ற பட்டங்கள் யாவை?
7. தாகூரின் பொதுத் தொண்டுகள் யாவை?
8. தாகூரின் தாய்மொழிப் பற்றுக்கு எடுத்துக்காட்டுத் தருக.

II. பிரித்து எழுதுக:

கடவுட்காட்சி, பல்கலைக்கழகம், எழுத்தாற்றல், நாட்டுப் பண்.

III. சேர்த்து எழுதுக:

திரு + குறள்=	பரிசு + தொகை=
முதல் + பொருள்=	கோ + இல்=

IV. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:

இன்றியமையாத, பழக்கவழக்கங்கள், இன்பதுன்பங்கள், அறக்கட்டளை, தன்னந்தனியாக.

V. தெரிந்துகொள்க:

சரி	தவறு
தொகை	துகை
கோவை	கோர்வை
மனம்	மனசு
வலப்பக்கம்	வலதுபக்கம்
இடப்பக்கம்	இடதுபக்கம்

இலக்கணம்

மாத்திரை

பின்வரும் எழுத்துகளை ஒலித்துப்பார்:

1. அ, இ, க, கு, தெ.
2. ஆ, ஈ, பே, பை, மோ.
3. க், ச், ட், ன், ஃ.

இவற்றில் ஒவ்வொரு வரிசையிலும் உள்ள எழுத்துகளை ஒலிக்க வேண்டிய கால அளவு மாறுபடுவதைக் காணலாம். எழுத்துகளை ஒலிக்கவேண்டிய கால அளவுக்கு மாத்திரை என்பது பெயர். மனிதருக்கு இயல்பாக உண்டாகும் கண்ணிமைப்பொழுது அல்லது கைந்நொடிப்பொழுது ஒரு மாத்திரை ஆகும்.

நம் முன்னோர் ஒவ்வோர் எழுத்தையும் ஒலிப்பதற்குரிய கால அளவை வரையறுத்துள்ளனர்.

உயிர்க் குறில்	—	1 மாத்திரை
உயிர் நெடில்	—	2 மாத்திரை
உயிர்மெய்க் குறில்	—	1 மாத்திரை
உயிர்மெய் நெடில்	—	2 மாத்திரை
மெய்யெழுத்து	—	$\frac{1}{2}$ மாத்திரை
ஆய்த எழுத்து	—	$\frac{1}{2}$ மாத்திரை

பாண்டியன்—இச்சொல்லில் இரண்டு குற்றெழுத்தும் இரண்டு மெய்யெழுத்தும் ஒரு நெட்டெழுத்தும் உள்ளன. இச்சொல்லை ஒலிப்பதற்கு $2 + \frac{1}{2} + 1 + 1 + \frac{1}{2} = 5$ மாத்திரை நேரம் ஆகும்.

பயிற்சி

பின்வரும் சொற்களை ஒலிப்பதற்கு எத்தனை மாத்திரையாகும்?

1. விழா, 2. பரிசு, 3. தாகூர், 4. இலக்கியம், 5. வாழ்க்கை, 6. பொதுமறை, 7. தொழிலாளி, 8. இஃது.

10. புகைவண்டி கண்ட பொறியாளர்

போக்குவரத்து முன்னேற்றமே ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு அடிப்படை. போக்குவரத்து பெருகினால் தொழிலும் வாணிகமும் பெருகும். அதன் வாயிலாக ஒரு நாட்டோடு மற்றொரு நாட்டுக்கு உறவு ஏற்படும். அவ்வுறவினால் ஒற்றுமை வளரும். ஒற்றுமை வளர்ந்தால் பகையும் பூசலும் நீங்கி உலகம் ஒன்றுபடும். எனவே, உலக ஒருமைப்பாட்டுக்குப் போக்குவரத்துச் சாதனங்கள் பேருதவி புரிகின்றன.

அறிவியல் முன்னேற்றத்தால் போக்குவரத்துத் துறையில் பல புதுமைகள் ஏற்பட்டுள்ளன. நிலவழியே பயணம்



செய்யப் புகைவண்டிகளும் பேருந்துகளும் தோன்றியுள்ளன. நீரைக் கிழித்துக்கொண்டு கடல் வழியே நெடுந்தொலைவு செல்லக் கப்பல்கள் பயன்படுகின்றன. ஒலியினும் விரைவாக விண்ணில் பறந்துசெல்ல வான் ஊர்திகள் துணை செய்கின்றன. இவற்றால் இன்று போக்குவரத்து மிகவும் எளிதாகிவிட்டது.

நிலவழிப் போக்குவரத்தில் புகைவண்டிகள் பேருதவி செய்கின்றன. உள்நாட்டில் ஓரிடத்திலிருந்து மற்றோ ரிடத்திற்குப் பொருள்களை ஏற்றிச் செல்லவும், விரை வாகப் பயணம் செய்யவும் புகைவண்டிகள் மிகவும் வசதியாக உள்ளன. இத்தகைய புகைவண்டி, சென்ற நூற்றாண்டில்தான் கண்டறியப்பட்டது. இதைக் கண்டு பிடித்தவர் **ஜார்ஜ் ஸ்டீவென்சன்** என்னும் பொறியியல் வல்லுநர்.

இங்கிலாந்தில் உள்ள **நியூகாசில்** என்னும் சிற்றூரில் 1781ஆம் ஆண்டில் ஸ்டீவென்சன் பிறந்தார். அவ ருடைய தந்தையார் ஒரு சுரங்கத் தொழிலாளி. சுரங்கத் தொழில்மூலம் கிடைத்த வருவாய் போதுமானதாக இல்லை. அதனால் ஸ்டீவென்சன் இளமையில் பள்ளிக் குச் சென்று படிக்கவில்லை; பெற்றோர்க்கு உதவியாக ஆடு மாடுகளை மேய்த்து வந்தார். ஆனால், கல்வியில் அவருக்குப் பேரார்வம் இருந்தது. ஓய்வு நேரத்தை அவர் உறங்கிக் கழிக்கவில்லை; களிமண்ணைக்கொண்டு சிறு சிறு இயந்திரங்கள் செய்து விளையாடினார். பிற் காலத்தில் உலகம் போற்றும் பொறியியல் வல்லுநராக விளங்கிய அவரிடம் இளமையிலேயே அந்த ஆர்வம் இருந்தது. விளையும் பயிர் முளையிலேயே தெரியும் அன்றோ?

மாடு மேய்க்கும் சிறுவனாக வாழ்வைத் தொடங்கிய ஸ்டீவென்சன் சில ஆண்டுகள் கழித்துத் தந்தைக்கு உதவியாக நிலக்கரிச் சுரங்கத்தில் வேலைக்குச் சேர்ந் தார். இயந்திரங்களுக்கு நிலக்கரி வாரிப்போடும் பணி புரிந்த அவர், தம் நுண்ணறிவால் விரைவிலேயே தாமும் அந்த இயந்திரத்தை இயக்கும் ஓர் ஓட்டுநராக உயர்ந் தார். நிலக்கரியைப் பூமிக்கு அடியிலிருந்து மேலே எடுத்துவரவே அந்த இயந்திரம் பயன்பட்டது. ஸ்டீவென்சன் அதைத் திறமையாக இயக்கியதுடன் அதன் உறுப்புகள் எவ்வெவ்வாறு இணைக்கப்பட் டுள்ளன? அவற்றை எப்படிப் பிரிக்கலாம், சேர்க்கலாம்

என்பவற்றையெல்லாம் மிக விரைவில் தெரிந்து கொண்டார்.

பதினெட்டு வயதான அவருக்கு அதுவரை எழுதப் படிக்கத் தெரியாது. கருவிகளை இயக்கக் கற்ற தம் கை, எழுதுகோல் கொண்டு எழுதக் கற்கவில்லையே என்று அவர் ஏங்கினார்; அதனால் ஓர் இரவுப் பள்ளியில் சேர்ந்து கல்வி கற்றார்; கணிதத்தில் மேதையானார். அவருடைய அறிவுக் கூர்மையைக் கண்டு அனைவரும் வியந்தனர். அதன் பயனாக 1812ஆம் ஆண்டு கில்லிங் வர்த் என்னும் இடத்தில் இருந்த தொழிற்சாலையில் அவர் தலைமை ஓட்டுநராக நியமிக்கப்பெற்றார்.

இந்தப் புதிய பணிதான் ஸ்டீவென்சனின் வாழ்வில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. அங்கு இருந்த இயந்திரங்கள் நீராவியால் இயங்குவன. அவை ஸ்டீவென் சனின் சிந்தையைக் கவர்ந்தன. நீராவியின் ஆற்றலைக் கண்டுபிடித்தவர் ஜேம்ஸ் வாட் என்பவர். அந்த ஆற் றலைப் பயன்படுத்தி விரைவாகச் செல்லக்கூடிய இழுவைப் பொறி ஒன்றைக் கண்டுபிடிக்க ஸ்டீவென்சன் அரும்பாடுபட்டார்.

அவருக்கு முன்பே மர்டாக், டிரெவிதிக் என்னும் அறிஞர்கள் இத்துறையில் உழைத்து ஓரளவு வெற்றி பெற்றிருந்தார்கள். ஆனால், அவர்கள் செய்த இழுவைப் பொறிகள் சரியாக இயங்கவில்லை. அவை சென்ற பாதைகள் நொறுங்கிவிட்டன. அதனால், சுரங்க முதலாளிகள் அவற்றை விரும்பவில்லை. ஸ்டீவென்சன், அவர்கள் கண்டறிந்த நிலக்கரி ஏற்றிவரும் இயந்திரங்களை எல்லாம் நன்கு ஆராய்ந்து அவற்றின் குறைகளைத் தெரிந்துகொண்டார். இருப்புப் பாதையை உறுதியாக அமைத்து இயந்திரத்தையும் சரியாகச் செய் தால் போக்குவரத்துத் துறையில் ஒரு புதுமை யையே ஏற்படுத்திவிடலாம் என்று அவர் நம்பினார்.

அந்த நம்பிக்கை அவருக்கு எழுச்சி ஊட்டியது. அவர் தம் அறிவையும் ஆற்றலையும் பயன்படுத்தி ஓயாது

உழைத்தார். அவர் உழைப்பு வீணாகவில்லை. 1821 ஆம் ஆண்டில் மணிக்கு ஆறு கிலோ மீட்டர்த் தொலைவு செல்லக்கூடிய பொறி ஒன்றை அவர் செய்து முடித்தார்; அதனை உறுதியான இருப்புப் பாதை அமைத்து அதன் மீது ஓட்டிக்காட்டி வெற்றியும் பெற்றார்.

அவர் அமைத்த நீராவிப் பொறியைக் கண்ட அரசாங்கத்தார், பொதுமக்கள் பயணம் செய்யக்கூடிய புகை வண்டி செய்ய விரும்பினர்; டார்லிங்டனிலிருந்து ஸ்டாக்டன்வரை புகைவண்டிப் பாதை அமைக்கவும் முடிவு செய்தனர்; அதற்கு ஸ்டீவென்சனையே பொறியியல் வல்லுநராக நியமித்தனர். ஸ்டீவென்சனும் அப்பொறுப்பை ஏற்று உழைத்து நான்கு ஆண்டுகளில் அப்பணியை முடித்தார்.

1825-ல் பொதுமக்கள் பயணம் செய்யக்கூடிய முதல் புகைவண்டி புறப்பட்டது. ஸ்டீவென்சன் கண்டறிந்த அந்த முதல் புகைவண்டிக்கு 'இராக்கெட்டு' என்பது பெயர். இப்போதுள்ள புகைவண்டியைக் காண்பவர்கள் அதைப் பார்த்தால் நகைப்பார்கள். அதற்கு மேற்கூரை இல்லை. வண்டித் தொடர்களும் மிகவும் சிறியன. அவ்வண்டி புறப்பட்டவுடன் ஒருவன் குதிரைமீது ஏறிச் செங்கொடியை ஆட்டிக்கொண்டு மக்களை எச்சரித்தவாறு விரைந்து சென்றான். ஏராளமானவர் கூடி வேடிக்கை பார்த்தனர். அவர்கள் வியக்கும் வண்ணம் ஸ்டீவென்சனே வண்டியை ஓட்டிக் காட்டினார். முதல் புகைவண்டி மணிக்கு 24 கிலோ மீட்டர் வேகத்தில் சென்றது.

முதல்புகைவண்டிப் பாதை நன்றாக அமைந்துவிட்டதால் மான்செஸ்டரிலிருந்து லிவர்பூல் என்னும் இடத்திற்கு இரண்டாவது பாதை அமைக்க அரசு விரும்பியது. அதற்கு மக்களிடமிருந்து பெரிய எதிர்ப்பு ஏற்பட்டது. புகைவண்டி ஓடும்போது உண்டாகும் ஓசையால் மாடுகள் புல் மேயா என்றும், கோழிகள் முட்டையிடா என்றும் சிலர் முறையிட்டனர். புகைவண்டியினால் குதிரை வண்டி ஓட்டுபவர்கள் வேலை இழக்க நேரும்

என்று பயந்தார்கள். புகைவண்டியிலிருந்து வெளிப்படும் புகை தூய காற்றைக் கெடுத்துவிடும் என்று சிலர் குறை கூறினர்.

இந்த எதிர்ப்புகளைக் கண்டு அரசாங்கம் தன் முயற்சியைக் கைவிடவில்லை. ஸ்டீவென்சனே பொறியியல் வல்லுநராகப் பொறுப்பேற்று இரண்டாவது பாதையையும் அமைத்து வெற்றி பெற்றார். இம்முறை அவர் ஓட்டிய வண்டி மணிக்கு 45 கி.மீட்டர் சென்றது. அது முதல் புகைவண்டிப் பயணம் தொடர்ந்தது. மக்களும் புகைவண்டியில் பயணம் செய்வதை விரும்பினர்.

ஸ்டீவென்சனின் வெற்றிச் செய்தி உலகெங்கும் பரவியது. அவர் பலராலும் புகழ்ந்து போற்றப்பட்டார். பல இடங்களில் அவரால் புகைவண்டிப் பாதைகள் அமைக்கப்பட்டன. அவருடைய செல்வமும் செல்வாக்கும் பெருகின. அவர் தம் வாழ்வில் உயர்நிலையை அடைந்தார்.

அவருக்குப் பிறகு எத்தனையோ பேர் இத்துறையில் ஈடுபட்டு உழைத்தனர். அதனால் இன்று புகைவண்டிப் போக்குவரத்தில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. மணிக்கு 125 கி. மீட்டர் செல்லக்கூடிய புகைவண்டிகளும் இப்போது உள்ளன. நீராவியால் மட்டுமன்றி எண்ணெயாலும் மின்சாரத்தாலும் இயங்கும் வண்டிகளும் இன்று பெருகியுள்ளன.

இவற்றுக்கெல்லாம் அடிப்படை அமைத்துக் கொடுத்த ஸ்டீவென்சனுக்கு உலகம் நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளது. அவர் 1848-ல் இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவர் புகழ் என்றும் மறையாது.

அருஞ்சொற்பொருள்

பொருளாதாரம் - செல்வ நிலை; பூசல் - சண்டை; சாதனம் - கருவி; அறிவியல் - விஞ்ஞானம்; பேருந்து - 'பஸ்'; வான ஊர்தி - ஆகாய விமானம்; பொறியியல் வல்லுநர் - 'எஞ்சினியர்'; மேதை - பேரறிஞர்; எழுச்சி - உற்சாகம்; செல்வாக்கு - மதிப்பு, பெருமை.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. போக்குவரத்து முன்னேற்றத்தால் விளையும் நன்மைகள் யாவை?
2. இப்போது போக்குவரத்து எளிதாக இருப்பதற்குக் காரணம் என்ன?
3. ஸ்டீவென்சனின் இளமைப் பருவம்பற்றி எழுதுக.
4. ஸ்டீவென்சன் தம் வாழ்வில் படிப்படியாய் உயர்ந்தது எங்ஙனம்?
5. நீராவி இயந்திரத்தை முதலில் கண்டறிந்தவர் யாவர்? சுரங்க முதலாளிகள் அவற்றை ஏன் விரும்பவில்லை?
6. ஸ்டீவென்சன் கண்டறிந்த முதல் புகைவண்டியைப்பற்றி எழுதுக.
7. பொதுமக்கள் புகைவண்டிப் பாதை அமைப்பதை ஏன் எதிர்த்தனர்?
8. புகைவண்டிப் போக்குவரத்தில் இன்று ஏற்பட்டுள்ள முன்னேற்றம் யாது?
9. ஸ்டீவென்சனின் வாழ்விலிருந்து நீங்கள் அறிந்துகொள்வது யாது?

II. பிரித்து எழுதுக:

நூற்றாண்டு, பிற்காலம், மேற்கூரை, செங்கொடி, நுண்ணறிவு.

III. சேர்த்து எழுதுக:

பொறி + இயல் = பொறியியல்; சில + ஆண்டுகள் = சிலவாண்டுகள்

தீ + எரிகின்றது = பலா + இலை =

வாழை + இலை = பூ + அழகு =

IV. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:

பகையும் பூசலும், விளையும் பயிர் முளையிலேயே தெரியும், அரும்பாடு, முறையிடுதல், பொறுப்பேற்றல், செல்வாக்கு, திருப்புமுனை.

V. எதிர்ச்சொற்கள் எழுதுக:

ஒற்றுமை, எளிது, மேதை, விரைவு, குறை, வெற்றி.

இலக்கணம்

பெயர்ச்சொல்

ஸ்டீவென்சன் நியூகாசில் என்னும் ஊரில் பிறந்தார்.

இத்தொடரில் ஸ்டீவென்சன் என்பது ஒருவரின் பெயரைக் குறிக்கிறது. நியூகாசில் என்பது ஓர் இடத்தின் பெயரை உணர்த்து கிறது. இங்ஙனம் ஓர் எழுத்தோ பல எழுத்துகளோ சேர்ந்து ஒன்றன் பெயரை உணர்த்துமாயின் அது **பெயர்ச்சொல்** எனப்படும்.

ஸ்டீவென்சன் என்பது ஒரு மனிதரின் பெயர் அன்றோ? அது போல உயிருள்ள, உயிர் இல்லாத பொருளைக் குறிக்கும் பெயர்கள் எல்லாம் **பொருட்பெயர்** எனப்படும். நியூகாசில் என்பது ஓர் இடத்தின் பெயரன்றோ? அதனால் அஃது **இடப்பெயராகும்**. ஊர் என்பதும் இடப்பெயரே.

இங்ஙனமே ஆண்டு, மாதம், நாள் முதலான காலங்களைக் குறிக்கும் பெயர்கள் **காலப்பெயர்** எனப்படும். கண், கை, இலை, பூ என்பனபோல உறுப்புகளைக் குறிக்கும் பெயர்கள் **சினைப் பெயர்** எனப்படும். நன்மை, தீமை, அன்பு, அழகு, செம்மை, கருமை, வட்டம், சதுரம் என்பனபோலக் குணம், நிறம், உருவம் முதலியவற்றை உணர்த்தும் பெயர்கள் **பண்புப்பெயர்** எனப்படும். நடத்தல், படித்தல் என்பனபோலத் தொழில்களை உணர்த்தும் பெயர்கள் **தொழிற்பெயர்** எனப்படும்.

எனவே பொருள், இடம், காலம், சினை (உறுப்பு), குணம் (பண்பு), தொழில் ஆகிய ஆறனுள் ஒன்றன் பெயரை உணர்த்தி வருவது பெயர்ச்சொல்லாகும் என அறிக. பெயர்ச்சொல் திணை, பால், எண், இடங்களை உணர்த்தி வரும். வேற்றுமைக்கு இடமாய் நிற்கும்.

பயிற்சி

1. பெயர்ச்சொல் என்றால் என்ன?
2. பெயர்ச்சொல்லின் வகைகளை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
3. பின்வரும் பெயர்ச்சொற்களை வகைப்படுத்தி எழுதுக:

ஒற்றுமை, விரைவு, புகைவண்டி, இயந்திரம், ஆண்டு, கை, எழுதுகோல், கில்லிங்வர்த், மர்டாக், புதுமை, வெற்றி, மக்கள், குதிரை, சுரங்கம், மாடு, காற்று, எண்ணெய், வயது, வாழ்வு, ஊர்தி.

11. கரடி

காட்டில் வாழும் கொடிய விலங்குகளில் கரடியும் ஒன்று. ஆனால், சிங்கத்தையும் புலியையும் போலக் கரடி அவ்வளவு கொடுமையானது அன்று. புலியைப் போல விரைவாகப் பாயவோ, சிங்கத்தைப்போல வீர மாகச் சண்டைபோடவோ கரடியால் இயலாது. கரடி அழகில்லாத விலங்கு. பரட்டைத் தலையுடன் விகார மாய்க் காணப்படும் ஒருவரைக் கரடிபோல் இருப்பதாகக் கூறுவது உலக வழக்கு.

கரடி பன்றி இனத்தைச் சேர்ந்தது என்று கூறலாம். கரடியின் உடல் முழுதும் தடித்த மயிர் அடர்ந் திருக்கும். இதன் நகங்களும் பற்களும் கூர்மையானவை. இதன் தலை பெரியதாய் இருக்கும். கரடி ஏறக் குறைய ஒன்றரை மீட்டர் உயரமும் இரண்டு மீட்டர் நீளமும் உடையதாக இருக்கும். கரடியின் உடல் பருத்துப் பெரும்பாலும் கருமை நிறமாக இருக்கும். யானையின் கண்களைப்போல இதன் கண்கள் சிறியனவாகும்.

கரடியின் முன்னங்கால்கள் இரண்டும் மிகவும் உறுதியானவை. அதன் பாதங்கள் தட்டையானவை. ஒவ்வொரு பாதத்திலும் ஐந்தைந்து விரல்கள் உண்டு.

கரடி நடக்கும்போது ஒரு பக்கத்துக் கால்கள் இரண்டையும் சேர்த்தே நடக்கும். அதனால், கரடி அசைந்தசைந்து நடப்பதுபோலத் தோன்றும். கரடி சில சமயங்களில் நிமிர்ந்து பின்னங்கால்களால் நடப்பதை நீங்கள் உயிர்க்காட்சிச் சாலைகளிலும், விலங்கு விளையாட்டரங்கிலும் பார்த்திருப்பீர்கள். கரடிக்கு மரம் ஏறத் தெரியாது என்று சிலர் கூறுவர். அது தவறான கருத்து. கரடிக்கு நன்றாக மரம் ஏறத் தெரியும்; தண்ணீரில் நீந்தவும் தெரியும்.

கரடி ஊன் உண்ணும் வகையைச் சார்ந்தது. எனினும், பெரிய விலங்குகளைக் கொன்று தின்பதில்லை; கறையான்களைத்தான் பெரும்பாலும் பிடித்துத் தின்னும். அதனால் கறையான் புற்றுகளைக் கண்டால் கரடிக்கு மிகவும் கொண்டாட்டம். அது புற்றை இடித்து உள்ளே இருக்கும் கறையான்களைத் தன் நீண்ட நாவால் வாரி உண்ணும். இச்செய்தியை நம் பழந்தமிழ் இலக்கியங்களும் குறிப்பிடுகின்றன. காட்டில் முரிந்து கிடக்கும் மரங்களையும் பாறைகளையும் புரட்டி அவற்றின் அடியில் வாழும் எறும்புகள், அவற்றின் முட்டைகள், புழு, பூச்சிகள் ஆகியவற்றைக் கரடி விரும்பி உண்ணும். தேன் குடிப்பதில் கரடிக்கு ஆவல் அதிகம். அது மரத்தில் ஏறி, அங்குள்ள தேன் அடையைச் சிதைத்துத் தேனைக் குடிக்கும். தேனீக்கள் கொட்டினாலும் அதற்கு வலி உண்டாவதில்லை. கரடி பழங்களையும் மலர்களையும் நிறையத் தின்னும். இருப்பைப் பூ அதற்கு விருப்பமான உணவு. கரும்பு தின்பதிலும் கரடிக்கு மிக்க ஆர்வம் உண்டு. அதனால் அஃது அடிக்கடி கரும்புத் தோட்டத்தைத் தேடிச் செல்லும். கரடி தனக்குத் தேவைக்குமேல் உணவு கிடைத்தால் அதைத் தழைகளுக்கு இடையில் மறைத்து வைத்து, வேண்டும்போது உண்ணும். கரடி தன் கண்களையும் காதுகளையும்

விடத் தன் மூக்கையே பெரிதும் நம்பி வாழ்கிறது. அதற்கு மோப்பம் பிடிக்கும் ஆற்றல் மிகுதி. அதனால் அது பகைவரால் தனக்கு நேரும் துன்பத்தை மோப்பத் திறனால் முன்னதாகவே தெரிந்துகொண்டு தப்பித்துக் கொள்ளும். தன்னால் தப்பிக்க இயலாது எனத் தெரிந்தால் எதிர்த்துத் தாக்கத் துணிந்துவிடும். 'வம்புச் சண்டைக்குப் போகாதே; வந்த சண்டையை விடாதே' என்பதை ஒரு வகையில் கரடியின் வாழ்க்கையில் காணலாம்.

காட்டில் உள்ள மரப்பொந்துகளையே கரடி தன் இருப்பிடமாகக் கொள்ளும். சில கரடிகள் மலைக்குகை களிலும் வாழ்வதுண்டு; மரத்தின் அடியில் பள்ளம் தோண்டி வசிப்பதும் உண்டு. கரடி குளிர்காலத்தில் உறங்கியே காலம் கழிக்கும். அஃது ஐம்பதாண்டுவரை உயிர் வாழும்.

பெண் கரடி கார் காலத்தில் குட்டி ஈனும். ஒரு தடவைக்கு இரண்டு அல்லது மூன்று குட்டிகள்வரை பிறக்கும். தாய்க்கரடி தன் குட்டிகளிடம் மிகவும் அன்பாக இருக்கும். குட்டிகள் எழுந்து நடமாடும்வரை யில் பாலூட்டி வளர்க்கும். இரண்டு அல்லது மூன்று ஆண்டுகளில் கரடிக்குட்டி தனியே இரை தேடிச் செல்லத் தொடங்கும். தாய்க்கரடியே தன் குட்டிகளை அழைத்துச் சென்று புற்றுகளைத் தோண்டக் கற்றுக் கொடுக்கும்; தண்ணீரில் உள்ள தவளை, மீன் முதலிய வற்றை வேட்டையாடவும் பயிற்சி அளிக்கும். கரடிக் குட்டிகளுக்கு விளையாடவும் போர் செய்யவும் கற்றுக் கொடுக்கும் ஆசிரியை தாய்க்கரடியே.

குட்டிகள் மிகச் சிறியனவாக இருக்கும்போது தாய்க் கரடி அவற்றை முதுகில் சுமந்து செல்லும். தாய்க்கரடி எவ்வளவு விரைவாக ஓடினாலும் குட்டிகள் கீழே விழாமல் தாயின் முதுகில் உள்ள அடர்ந்த மயிரை உறுதியாகப் பற்றிக்கொள்ளும். இரை கிடைக்கும் போது தாய்க்கரடி அவற்றைக் கீழே இறக்கிவிடும்.

ஏதேனும் ஒலி கேட்டால் அவை விரைந்து சென்று தாயின் முதுகில் ஏறிக்கொள்ளும்.

கரடிகளில் பலவகை உண்டு. வட துருவத்தில் வாழும் கரடிக்குப் **பனிக் கரடி** என்பது பெயர். அது வெண்ணிறமாக இருக்கும். அதைத் 'துருவக் கரடி' என்றும் அழைப்பார்கள். இமாலயக் கரடி கறுப்பாக இருக்கும். அதன் மார்பில் V வடிவத்தில் வெண்மையான ஓர் அடையாளம் இருக்கும். வட அமெரிக்காவில் **கிரிஸ்லி** என்னும் பழுப்பு நிறக் கரடியைக் காணலாம். கிரிஸ்லி என்னும் ஆங்கிலச் சொல்லுக்கு 'அச்சம் தருகின்ற' என்பது பொருள். பெயருக்கேற்பப் பழுப்பு நிறக் கரடி மிகவும் கொடிய விலங்காகும். பழுப்பு நிறக் கரடி ஏறக்குறைய இரண்டரை மீட்டர் நீளமுடையது. அதன் எடை ஏறக்குறைய 700 கிலோ கிராம் இருக்கும். இந்தியாவில் காச்மீரம், அசாம், இமயம் முதலிய இடங்களில் கரடிகள் மிகுதியாக வாழ்கின்றன.

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கரடிகளைப் பற்றிய செய்திகள் நம் சங்க இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் காணப்படுகின்றன. கரடிக்கு **எண்கு, உளியம்** என்னும் வேறு பெயர்களும் உண்டு. நாகரிகமற்ற நாகர் தலைவன் தன் மனைவியோடு அமர்ந்திருந்த காட்சியை, 'எண்குதன் பிணவோடு இருந்தது போல' என மணிமேகலை சித்திரிக்கிறது. மலைவளம் காண வந்த சேர மன்னன் செங்குட்டுவனுக்குக் குன்றக் குறவர்கள் கரடிக்குட்டியைப் பரிசாக அளித்த செய்தியைச் சிலப்பதிகாரம் தெரிவிக்கிறது. மற்றும் அகநானூறு, மலைபடுகடாம் முதலிய இலக்கியங்களிலும் கரடி பற்றிய செய்திகள் கூறப்படுகின்றன. இவற்றால் நம் முன்னோர்கள் விலங்கியல்பற்றிய அறிவும் சிறப்பாகப் பெற்றிருந்தனர் என்பதை நன்கு அறியலாம்.

கரடிகளை நாம் உயிர்க்காட்சிச் சாலையிலும் காணலாம். விலங்கு விளையாட்டு நடத்துபவர்களும் கூத்தாடிகளும் கரடிகளைப் பிடித்து வந்து குரங்கைப்போல

ஆட்டம் ஆடப் பழக்குகிறார்கள். கருங்கரடி என்னும் ஒரு வகைக் கரடி தலைகீழாக நிற்கவும் நடனமாடவும் உணவுக்காகக் கையேந்தி நிற்கவும் கற்றுக்கொள்ளும். அதனால், அதனைக் 'கோமாளிக் கரடி' என்று அழைப்பர். பழகிய கரடி நாட்டியம் ஆடுவது வியப்பாக இருக்கும்.

இங்ஙனம் காட்டில் வாழும் கரடிகளை மனிதன் தன் அறிவாற்றலால் பழக்கித் தன் நண்பனைப்போல நடத்துவது வியப்பினை அளிப்பதன்றோ?

அருஞ்சொற்பொருள்

பரட்டைத்தலை - மயிர் பரந்து நிற்கும் தலை; ஊன் - இறைச்சி; உறங்கி - தூங்கி; ஈனும் - பெற்றெடுக்கும்; எண்கு - ஆண் கரடி; பிணவு - பெண் கரடி; சித்திரிக்கிறது - அழகுபடக் கூறுகிறது.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. கரடியின் உடல் அமைப்பு எவ்வாறு இருக்கும்?
2. கரடி தின்னும் பொருள்கள் யாவை?
3. கரடி பகைவரிடமிருந்து எங்ஙனம் தப்பித்துக்கொள்ளும்?
4. கரடி வாழ்வில் பொருந்தும் பழமொழி யாது? எவ்வாறு பொருந்தும்?
5. கரடியின் வகைகள் யாவை? அவை எங்கு வாழ்கின்றன?
6. கரடி தன் குட்டியை வளர்க்கும் விதத்தை விளக்குக.
7. பழுப்பு நிறக் கரடியைப்பற்றிக் குறிப்பு வரைக.
8. தமிழிலக்கியங்களில் கரடியைப்பற்றி வரும் செய்திகள் யாவை?

II. பிரித்து எழுதுக:

அடர்ந்திருக்கும், பழந்தமிழ், பாலூட்டி.

III. சேர்த்து எழுதுக:

அசைந்து + அசைந்து =	வாழ்வது + உண்டு =
அங்கு + உள்ள =	ஐம்பது + ஆண்டு =
உண்பது + இல்லை =	விலங்கு + இயல் =

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

முன்னதாகவே, நடமாடும், உறுதியாக, கையேந்தி.

V. தெரிந்துகொள்க:

ஒன்று	+ ஒன்று	=	ஒவ்வொன்று
இரண்டு	+ இரண்டு	=	இவ்விரண்டு
மூன்று	+ மூன்று	=	மும்மூன்று
நான்கு	+ நான்கு	=	நந்நான்கு
ஐந்து	+ ஐந்து	=	ஐந்தைந்து
ஆறு	+ ஆறு	=	அவ்வாறு
ஏழு	+ ஏழு	=	எவ்வேழு
எட்டு	+ எட்டு	=	எவ்வெட்டு
ஒன்பது	+ ஒன்பது	=	ஒவ்வொன்பது
பத்து	+ பத்து	=	பப்பத்து

இலக்கணம்

இடுகுறிப் பெயர் — காரணப் பெயர்

கரடி, விலங்கு, பறவை.

இப்பெயர்ச் சொற்களைக் கவனியுங்கள். கரடி என்பது உயிருள்ள ஒரு பொருளின் பெயர். ஆனால், அப்பொருளுக்கு ஏன் அப்பெயர் ஏற்பட்டது என்று கூறமுடியுமா? முடியாது. தொடக்கத்தில் நம் முன்னோர்கள் ஒவ்வொரு பொருளையும் குறிக்க ஒவ்வோர் அடையாளப் பெயரை இட்டு வழங்கினர். இங்ஙனம் காரணம் கருதாமல் இதற்கு இது பெயர் என இட்டு வழங்கிய பெயர் இடுகுறிப் பெயர் எனப்படும்.

விலங்கு என்பதும் உயிர் உள்ள பொருளைக் குறிக்கும் பெயரேயாகும். அதற்கு அப்பெயர் ஏன் அமைந்தது என்று கூற முடியுமா? முடியும். விலங்குதல் என்பதற்குக் குறுக்கிடுதல் என்பது பொருள். இங்கு விலங்கு என்பது மிருகத்தைக் குறிக்கிறது. அது

குறுக்காக வளர்வதாலேயே விலங்கு எனப் பெயர் பெற்றது. அங்ஙனமே பறக்கின்ற காரணத்தாலேயே பறவை என்ற பெயர் ஏற்பட்டது.

இங்ஙனம் ஏதேனும் காரணம் கருதி ஒன்றற்கு ஏற்பட்ட பெயர் காரணப் பெயர் எனப்படும்.

எனவே, பெயர்ச்சொல் இடுகுறிப் பெயர், காரணப் பெயர் என இருவகைப்படும் என அறிக.

பயிற்சி

1. இடுகுறிப் பெயராவது யாது?
2. காரணப் பெயராவது யாது?
3. இடுகுறிப் பெயர் நான்கும், காரணப் பெயர் நான்கும் எழுதுக.

12. இளம் பெருவீரன்

தமிழர்கள் ஈரத்தையும் வீரத்தையும் இரு கண்களாகக்கொண்டு வாழ்ந்தார்கள். துன்பப்படும் உயிர்களின் துயர் கண்டு அதைத் துடைக்க முற்படும் அருள் உள்ளமே ஈரம் எனப்படும். அஞ்சா நெஞ்சத்துடன் போர்க்களத்தில் காட்டும் ஆண்மையே வீரமாகும். தமிழகம் அத்தகைய வீரத்தின் விளைநிலமாக விளங்கியது. தமிழகத்தை ஆண்ட வேந்தர்கள் தம் ஒப்புயர்வற்ற வீரச் செயல்களால் உலகப் புகழ்பெற்று விளங்கினார்கள். அவர்களுள் இளம் பருவத்திலேயே பெருவீரனாக விளங்கிய **பாண்டியன் நெடுஞ்செழியனின்** வீரச் செயல் மிகவும் பெருமை வாய்ந்ததாகும்.

பாண்டியன் நெடுஞ்செழியனின் தந்தை **சித்திர மாடத்துத் துஞ்சிய நன்மாறன்** என்பவனாவான். அவன் நெடுஞ்செழியன் மிக்க இளைஞனாக இருந்தபோதே இறந்துவிட்டான். அதனால் நெடுஞ்செழியன் இளம்

பருவத்திலேயே அரசேற்றான். நெடுஞ்செழியன் வயதில் சிறியவனாயினும் அறிவில் பெரியவனாய்—ஆற்றலில் சிறந்தவனாய் விளங்கினான். மாங்குடி மருதனார் போன்ற புலவர்கள் அவன் அவையை அணி செய்தார்கள். அதனால் அவன் புகழ் எங்கும் பரவியது.

நெடுஞ்செழியன் சிறுவயதிலேயே பெருமைக்கு உரியவனாக விளங்கியது கண்டு சேர, சோழ மன்னர் பொறாமை கொண்டனர்; நெடுஞ்செழியனைச் சிறுவன் என்று இகழ்ந்தனர்; அவனை வென்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றச் சூழ்ச்சி செய்தனர். திதியன், எழினி, எருமையூரன், இருங்கோவேண்மான், பொருநன் என்னும் குறுநில மன்னர் ஐவரும் அவர்களுக்குத் துணை நின்றனர். அவர்கள் எழுவரும் ஒருங்கு சேர்ந்து பெரும்படையுடன் பாண்டிய நாட்டின்மீது போர் தொடுத்தனர்.

பகைவர் எழுவர் படையெடுத்து வருவதை அறிந்து நெடுஞ்செழியன் அஞ்சவில்லை. சிறுவன் என்று தன்னை இகழ்ந்து அவர்கள் போருக்கு வருவதை எண்ணி அவன் சீற்றம் கொண்டான். அவன் கண்கள் சிவந்தன.

தோள்கள் துடித்தன. அவன் தன் அவையினரை நோக்கி, 'சின்னஞ் சிறுவன் என்று என்னை இகழ்ந்து படை யெடுத்து வரும் வேந்தர்களை வென்று புறங்காண்பேன். அங்ஙனம் செய்யேனாயின், 'எம்மரசன் கொடியவன்' என்று குடிமக்கள் பழி தூற்றும் கொடுங்கோல் வேந்த னாவேனாக; 'இல்லை' என்று இரப்பவருக்கு ஈய முடியாத வறுமையை நான் அடைவேனாக; மாங்குடி மருதனாரைத் தலைவராகக் கொண்ட புலவர்கள் என் நாட்டைப் புகழ்ந்து பாடாது ஒழிவாராக,' என்று வஞ்சினம் கூறிப் போருக்குப் புறப்பட்டான்.

அவன் கூறிய சூளுரையைக் கேட்டு நாட்டு மக்கள் துள்ளி எழுந்தனர். வீட்டுக்கு ஒரு வீரன் போருக்குப் புறப்பட்டான். நால்வகைப் படைகளும் திரண்டன. இரையைத் தேடிச் செல்லும் பெரும்புலிபோல நெடுஞ் செழியன் பகைவரை நாடிச் சென்றான்; அவர்கள் தன் நாட்டினுள் புகாதவாறு தலையாலங்கானம் என்னும் இடத்திலேயே தடுத்து நிறுத்தினான். இருதிறப் படை களுக்கும் பெரும்போர் மூண்டது. இளைஞனாகிய நெடுஞ்செழியன் தான் ஒருவனாகவே நின்று பகைவர் எழுவரையும் எதிர்த்து வீரப்போர் புரிந்தான். போர்க் களத்தில் பிணமலைகள் குவிந்தன. குருதி வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. நெடுஞ்செழியனின் வாள் வீச்சுக்கு அஞ்சிப் பகைவர்கள் பின்வாங்கினார்கள்.

நெடுஞ்செழியன் இளைஞன்தானே என்று எண்ணிப் போருக்கு வந்த ஏழு அரசர்களும் தம் படை களுடன் தோற்றுச் சிதறி ஓடினார்கள். புறங்காட்டி ஓடிய பகைவர்களை அவர்கள் நாடுவரை துரத்திச் சென்றான் நெடுஞ்செழியன். அவர்கள் மனைவியர் நாணுமாறு அவர்கள் கண் எதிரே அவர்களைக் கொன்று குவித்தான்; மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்னும் சேர மன்னனைச் சிறைப்படுத்தினான். இங்ஙனம் நெடுஞ் செழியன் தனியொருவனாய் நின்று தலையாலங்கானப் போரில் பெரு வெற்றி பெற்றதனால் தலையாலங்

கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்று நாடு அவனைக் கொண்டாடியது. அவனுடைய இவ்வீரச் செயலைப் புலவர்கள் புகழ்ந்து பாடினார்கள்.

'ஒருவனை ஒருவன் எதிர்த்துப் போர் புரிவது உலக இயற்கை. ஆனால், எழுவர் கூடி ஒருவனை எதிர்ப்பதும், ஒருவனே துணிந்து நின்று எழுவரை வெல்வதும் வியப்பினும் வியப்பாகும். இந்தப் பெரும் புகழுக்கு உரியவனோ இளைஞன்; பால் மணம் மாறாத பருவமுடையவன். இவன், தான் ஒருவனேயாகித் தன்னை எதிர்த்தவர்களை நிலத்தில் அறைந்து கொன்றான். அதற்காக இவன் மகிழவும் இல்லை; செருக்குக் கொள்ளவும் இல்லை. இவனுடைய ஆற்றலை என்னென்று புகழ்வது! இவ்விளம் பெருவீரன் வாழ்க!' என்று **இடைக்குன்றூர் கிழார்** என்னும் புலவர் நெடுஞ்செழியனின் வீரத்தை வியந்து பாராட்டினார்.

இங்ஙனம் இளம் பருவத்திலேயே புலவர் பாடும் புகழுடையவனாக விளங்கிய நெடுஞ்செழியன் தன் ஆட்சிக் காலத்தில் பல போர்களைச் செய்தான்; எதிர்த்தவர்களை எல்லாம் வென்று பேரரசனாகத் திகழ்ந்தான். அவனுடைய வீரத்தை வியந்து நக்கீரர் **நெடுநல்வாடை** என்னும் நூல் பாடிச் சிறப்பித்தார். மாங்குடி மருதனார் **மதுரைக் காஞ்சி** என்னும் நூலைப் பாடி அவன் மனத்தை அறநெறியில் ஈடுபடுத்தினார். இவ்விரு நூல்களாலும் நெடுஞ்செழியனுடைய வீரம், கல்விச் சிறப்பு, புகழ், அரசியல் திறம், அவன் ஆட்சிக் காலத்தில் மதுரையின் வளம் ஆகியவற்றை நாம் நன்கு உணரலாம்.

குடபுலவியனார் என்னும் புலவர் போரைக் கைவிட்டு நாட்டு நலம் காக்க முற்படுமாறும், நீர்நிலைகளைப் பெருக்கி இம்மையில் புகழும் மறுமையில் நற்கதியும் அடையுமாறும் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்தினார். அதனால், நெடுஞ்செழியன் போர் வெறி தணிந்து குடிமக்கள் நலம் பேணும் கொற்றவனாக விளங்கினான்;

ஏரி, குளங்களை அமைத்து வயல் வளத்தைப் பெருக்கினான். அவன் ஆட்சியில் பலவகைத் தொழில்களும் வாணிகமும் பெருகின. பலதிறக் கலைகளும் வளர்ந்தன. அவன் தமிழ்ப்புலவர்களைப் போற்றித் தமிழை வளர்த்ததோடு தானும் சிறந்த புலவனாக விளங்கினான். அவன் பகைவர் படையெடுப்பின்போது கூறிய வஞ்சினம் ஒரு செய்யுளாகவே அமைந்து **புறநானூறு** என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

இங்ஙனம், புவியரசனும் கவியரசனுமாக விளங்கிய நெடுஞ்செழியனின் ஆட்சிக் காலம் பாண்டியர் வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒரு நற்காலமாகப் போற்றப்படுகிறது.

அருஞ்சொற்பொருள்

ஈரம் - இரக்கம்; துடைக்க - போக்க; துஞ்சிய - இறந்த; ஆற்றல் - வலிமை; அவை - சபை; அணி - அழகு; சீற்றம் - சினம்; புறம்காண்பேன் - முதுகுகாட்டித் தோற்றோடச் செய்வேன்; கொடுங்கோல் - நீதியில்லாத ஆட்சி; வஞ்சினம், சூளுரை - சபதம்; குருதி - இரத்தம்; நாணுமாறு - வெட்கப்படுமாறு; செருக்கு - கர்வம்; இம்மை - இப்பிறப்பு; மறுமை - இறந்தபின் அடையும் நிலை, மறுபிறப்பு; புவியரசன் - பூமியை ஆளும் அரசன்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. ஈரம், வீரம் — இவற்றை விளக்குக.
2. நெடுஞ்செழியன்மீது படையெடுத்தவர்கள் யாவர்? ஏன்?
3. நெடுஞ்செழியன் கூறிய வஞ்சினங்கள் யாவை?
4. நெடுஞ்செழியனின் வீரச் செயலைப்பற்றி எழுதுக.
5. பாண்டியன் நெடுஞ்செழியனின் சிறப்புப் பெயர் யாது? அப் பெயர் பெறக் காரணம் யாது?
6. இடைக்குன்றூர் கிழார் நெடுஞ்செழியனின் வீரத்தை எங்ஙனம் பாராட்டினார்?

7. நெடுஞ்செழியன்மீது பாடப்பட்ட நூல்கள் யாவை? பாடியவர் யாவர்? அவற்றால் விளங்குவன யாவை?

8. நெடுஞ்செழியன் சிறந்த புலவன் என்பதற்குச் சான்று தருக.

9. நெடுஞ்செழியனின் ஆட்சிக்காலம் 'நற்காலம்' என்று போற்றப்படுவது ஏன்?

II. பிரித்து எழுதுக:

வீரச்செயல், இளம் பருவம், கொடுங்கோல், நற்காலம்.

III. சேர்த்து எழுதுக:

ஒப்பு + உயர்வு = ஒப்புயர்வு
அரசு + ஏற்றான் = அரசேற்றான்
பெருக்கு + எடுத்து =
பாடாது + ஒழிக =
பாட்டு + அழகு =
மூன்று + அடி =

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

ஒப்புயர்வற்ற, வஞ்சினம், வியப்பினும் வியப்பு, இம்மை மறுமை, சூளுரை.

V. அறிந்துகொள்க:

சின்னஞ்சிறுவன் என்பதற்கு மிகச் சிறியவன் என்பது பொருள். அதுபோலக் கன்னங்கரிய, செக்கச் சிவந்த, பச்சைப்பசேல் எனச் சொற்றொடர்கள் வழங்குவது உண்டு. இங்ஙனம் வழங்கும் வேறு சில தொடர்களை எழுதுக.

இலக்கணம்

திணை

பாரி முல்லைக்குத் தேர் அளித்தான்.

பேகன் மயிலுக்குப் போர்வை அளித்தான்.

இத்தொடர்களை நன்கு கவனியுங்கள். இவற்றில் பெயர்ச் சொற்கள் எவை? பாரி, முல்லை, தேர், பேகன், மயில், போர்வை என்பன பெயர்ச்சொற்கள் அல்லவா? இவை யாவும் பொருட் பெயர்களே எனினும் இவற்றிடையே வேற்றுமை உண்டு. என்ன

வேற்றுமை? பாரி, பேகன், முல்லை, மயில் என்பன உயிர் உள்ள பொருள்கள். தேர், போர்வை என்பன உயிர் இல்லாத பொருள்கள்.

உயிர் உள்ள பொருள்களிலும் பாரி, பேகன் என்பன மக்களைக் குறிக்கும் பெயர்கள். முல்லை, மயில் என்பன தாவரத்தையும், பறவையையும் குறிக்கும் பெயர்கள். மக்கள் உயர்ந்தவர்கள், மற்றவை தாழ்ந்தவை.

இத்தகைய வேறுபாட்டைக் கருதிப் பெயர்ச்சொற்களை உயர் திணைப் பெயர் என்றும், அஃறிணைப் பெயர் என்றும் இருவகையாகப் பகுத்து வழங்குவது தமிழ் மரபு. திணை என்பது ஒழுக்கத்தைக் குறிக்கும். உயர்திணை - உயர்வாகிய ஒழுக்கமுடையவர். அஃறிணை - (அல் + திணை) உயர்வு இல்லாத ஒழுக்கமுடையவை. திணை என்பதற்குக் குலம் என்றும் பொருள் கூறுவர்.

நெடுஞ்செழியன், மனைவி, வீரர்.

இவையும் பெயர்ச்சொற்களே. இவை உயர்ந்த ஒழுக்கமுடைய மக்களைக் குறிக்கும் பெயர்கள். மக்கள் நன்மை, தீமைகளைப் பகுத்துணரக்கூடிய பகுத்தறிவு உடையவர்கள்; தீமையை விலக்கி நன்மையை மேற்கொண்டு ஒழுகக்கூடிய நல்லொழுக்கம் உடையவர்கள். இத்தகைய உயர்ந்த ஒழுக்கம் வாய்ந்த மக்களைக் குறிக்கும் சொற்களே உயர்திணை எனப்படும்.

மக்களே அன்றித் தேவர்களையும் நரகர்களையும் குறிக்கும் சொற்களும் உயர்திணையே ஆகும்.

கரடி, காகம், நிலம், நீர்.

இவையும் பெயர்ச்சொற்களே. கரடி, காகம் என்பன உயிர் உள்ள விலங்கு, பறவை ஆகியவற்றையும், நிலம், நீர் என்பன உயிர் இல்லாப் பொருள்களையும் உணர்த்துகின்றன. கரடி, காகம் என்பன உயிர் உள்ள பொருள்களாயினும் பகுத்தறிவு இல்லாதவை. நிலம், நீர் என்பன அறிவே இல்லாதவை. இங்ஙனம் மக்கள், தேவர், நரகர் அல்லாத உயிர் உள்ள பொருள்களையும் உயிர் இல்லாத பொருள்களையும் குறிக்கும் எல்லாப் பெயர்களும் அஃறிணை எனப்படும்.

பயிற்சி

இப்பாடத்திலிருந்து உயர்திணைப் பெயர்கள் ஆறும், அஃறிணைப் பெயர்கள் ஆறும் எடுத்து எழுதுக.

13. குழந்தை உள்ளம்

பூங்குளம் இயற்கை அழகுகொஞ்சும் வனப்புமிக்க ஒரு சிற்றூர். அவ்வூர்த் தொடக்கப் பள்ளியில் பொன்னன் என்ற சிறுவனும், செல்வி என்ற சிறுமியும் கல்வி பயின்றார்கள். செல்வி பொன்னனைவிட ஓராண்டு சிறியவள். எனினும், இருவரும் ஒரே வகுப்பில் படித்து வந்தனர். இருவரும் படிப்பிலும் விளையாட்டிலும் மிகவும் அன்போடு பழகுவர். அக்கம்பக்கத்து வீட்டுக் குழந்தைகளாகிய அவர்கள் இருவரும் இணைந்தே பள்ளிக்குச் செல்வர். இணை பிரியாத அவர்களின் நட்பைக் கண்டு பெற்றோர்கள் பெருமையும் இன்பமும் கொண்டார்கள்.

ஒரு நாள் செல்வியின் பிறந்த நாள் வந்தது. அவள் பெற்றோர் அவளுக்குப் பட்டுப் பாவாடையும் சட்டையும் புத்தணிகளும் அணிவித்து அழகு பார்த்து மகிழ்ந்தனர். பொன்னனும் அவளுக்குச் சில விளையாட்டுப் பொருள்களைப் பரிசாக அளித்து மகிழ்ந்தான்.

இருவரும் வீட்டைவிட்டுத் தெருவிற்கு வந்தனர். செல்வி, பொன்னனை நோக்கி, 'பொன்னா! நாம் இருவரும் சேர்ந்து விளையாடலாமா?' என்று வினவினாள். பொன்னன், 'செல்வி! விளையாடலாம்; ஆனால், வானம் இருண்டு வருகிறதே; வானத்தில் கரிய மேகங்கள் திரண்டு வருகின்றனவே; உம் . . . இரு இரு! மழை வருகிறதா என்று பார்த்துவிட்டு விளையாடலாம்,' என்றான்.

இருவரும் சிறிதுநேரம் வானத்தில் மேகங்கள் திரள்வதை வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்றனர். அதற்குள் வானத்தில் குழுமியிருந்த மேகங்கள்

திடுமென்று இடியிடித்து, மின்னி, மழை பொழியத் தொடங்கின. ஒரு மணி நேரம் கொட்டு கொட்டென்று அடை மழை பெய்தது. தெருவெல்லாம் வெள்ளம் திரண்டது. பொன்னனும் செல்வியும் திண்ணையி லிருந்துகொண்டே வேடிக்கை பார்த்தனர்.

சிறிது நேரம் சென்றது; மழை நின்றது. வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்த பொன்னனும் செல்வியும் தெருவில் வந்து நின்றனர். தெருவில் ஓடிக்கொண்டிருந்த வெள்ளம் அவர்கள் உள்ளத்தைக் கவர்ந்தது. 'செல்வி! வெள்ளம் எவ்வளவு விரைந்து செல்கிறது, பார்த்தாயா? காகிதத்தினால் கப்பல் செய்து மிதக்கவிடலாம், வா. இதுவே நாம் இப்போது விளையாடக்கூடிய நல்ல விளையாட்டு,' என்று கூறினான்.

'ஆமாம்! ஆமாம்! இந்த விளையாட்டு எனக்கு மிகவும் விருப்பமானது,' என்று சொல்லிய செல்வி வீட்டிற்குள் சென்று சில தாள்களைக் கொண்டுவந்து பொன்னனிடம் கொடுத்தாள். பொன்னன் இரண்டு கப்பல்களைச் செய்து அவற்றுள் ஒன்றைச் செல்வியிடம் கொடுத்தான்; மற்றொன்றைத் தான் வைத்துக்கொண்டான். இரு வரும் சிறு சிறு கற்களை அக்கப்பல்களில் சரக்குகளாகப் போட்டுத் தண்ணீரில் மிதக்கவிட்டனர். இரண்டு கப்பல்களும் ஒன்றன்பின் ஒன்றாக நகர்ந்துசென்றன.

ஒருமுறை பொன்னனின் கப்பல் முந்திச்சென்றது. மற்றொரு முறை செல்வியின் கப்பல் முந்திக்கொண்டது. 'என் கப்பல் முந்திவிட்டது; நான்தான் வெற்றி பெற்றேன்,' என்று இருவரும் மாறி மாறிப் பேசிப் பெருமிதம் கொண்டனர். கப்பல்கள் சிறிது தொலைவு செல்வதற்குள் இருவருக்கும் வெற்றியும் தோல்வியும் மாறி மாறி ஏற்பட்டன. செல்வியும் பொன்னனும் அடிக்கடி கைகளைத் தட்டி இன்ப ஆரவாரம் செய்தனர். அவர்களின் இன்ப ஆரவாரத்துக்கிடையே பொன்னனின் கப்பல் நீர்ச்சுழியில் சிக்கி மூழ்கிவிட்டது. அது கண்ட

செல்வி, 'ஏ பொன்னா! உன் கப்பல் மூழ்கிவிட்டது. வெற்றி எனக்குத்தான்!' என்று ஏளனமாகச் சிரித்தாள்.

செல்வியின் ஏளனச் சிரிப்பைக் கண்ட பொன்னன் மிகவும் ஆத்திரம் அடைந்தான். அன்பு நீங்காத அவன் ஆத்திரத்தில் நட்பினை மறந்து, செல்வியின் கப்பலைக் கையில் எடுத்துத் தண்ணீரில் அமிழ்த்தி மூழ்கடித்து விட்டான். அதனால் சீற்றம் கொண்ட செல்வி, 'அடே பொறாமைப் பேயே! என்ன கர்வம் உனக்கு! தோற்றாங்கொள்ளியே!' என ஏசிப் பேசினாள்; அவனைப் பிடித்துக் கீழே தள்ளினாள். தன்னைத் தள்ளிய செல்வியை, 'உன்னை விட்டேனா, பார்!' என்று கூறிய பொன்னன், கையைப் பிடித்துக் கீழே தள்ளினான்.

பாவம்! தரையில் விழுந்த செல்வியின் பட்டுப் பாவாடை முழுவதும் நனைந்து சேறாகிவிட்டது. அவள் 'ஓ' என்று அரற்றிக்கொண்டே தன் அன்னையிடம் சென்று நடந்ததைக் கூறினாள்.

செல்வியின் அன்னை ஒரு முன்கோபக்காரி. அவள் விரைந்து வந்து, பொன்னனைப் பார்த்து, 'அடே கழுதை! உனக்கு அவ்வளவு செருக்கா? உன் துணியையும் சேறாக்கிவிடுகிறேன், பார்?' என்று அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்து, சேற்றினை வாரி அவன் துணியில் அப்பினாள். கன்னத்தில் அடிவாங்கிய பொன்னன் வலிதாங்காமல் 'கோ' என்று அழுதுகொண்டே பக்கத்து வீட்டிலிருந்த தன் தாயிடம் சென்று முறையிட்டான். பொன்னனின் அன்னை வெளியே வந்து செல்வியின் தாயை வாயில் வந்தபடியெல்லாம் வைதாள்.

இரு பெண்களின் ஏச்சும் பேச்சும் வரம்பு மீறி விட்டன. தெருவில் பெருங் கூட்டம் கூடிவிட்டது. அதற்குள் பொன்னனின் தந்தையாரும் வந்துவிட்டார்.

அவரும் தம் மனைவியுடன் சேர்ந்து செல்வியின் தாயைப் பழித்துப் பேசலானார். செல்வியின் தந்தையாரும் அங்கு வந்து சண்டையில் கலந்துகொண்டார். 'தென்றல் முற்றிச் சூறாவளியானதுபோல' இரு சாராருடனும் பல பேர் சேர்ந்து கூச்சல் போடலாயினர். தெருவே ஒரு சிறு அமர்க்களம் ஆயிற்று. மக்கள் வேடிக்கை பார்க்கக் கூடிவிட்டனர்.

'அடடா! என்ன இது! குழந்தைகளின் சண்டைக்கு இவ்வளவு குழப்பமா! கூட்டமா!' என்று கேட்டுக் கொண்டே செல்வியின் பாட்டியார் இரு சாராரையும் அமைதிப்படுத்த முயன்றார். அவர் கூறிய அறிவுரைக்கு எவரும் செவிசாய்க்கவில்லை. வாய்ச் சண்டை முற்றிக் கைச் சண்டையாகவும் மாறியது. பாட்டி உரத்த குரலில், 'மூடர்களே! அங்கே பாருங்கள்! நீங்கள் எவர் பொருட்டுச் சண்டை போடுகிறீர்களோ, அவர்கள் ஒன்றுமே அறியாதவர்கள்போல நடந்ததை மறந்து மீண்டும் ஒன்றுகூடி விளையாடுகிறார்கள்! 'வெள்ளைக் கில்லை கள்ளச் சிந்தை' என்னும் பழமொழியைக்கூட நீங்கள் கேள்விப்பட்டதில்லையா? குழந்தை உள்ளம் பிறர் செய்யும் தீமையைக்கூட உடனே மறந்துவிடும் அன்றோ? உங்களைவிடச் சிறியவர்களே பெரியவர்கள்!' என்று பொரிந்து தள்ளினார். பொன்னனும் செல்வியும் தெருக்கோடியில் மீண்டும் காகிதக் கப்பல்களை மிதக்க விட்டுக்கொண்டிருந்த காட்சியைக் கண்ட பெரியவர் களுக்குப் புத்தி வந்தது. சண்டை ஓய்ந்தது.

கூட்டத்தில் இருந்தவர் அனைவரும் நாணத்தால் தலை குனிந்தனர். 'குழந்தை உள்ளம் கள்ளம் கபட மற்ற உள்ளம்; கலகமற்ற உள்ளம்; கட்சியற்ற உள்ளம்; பகையை மறக்கும் பண்பு உள்ளம். அந்தப் பண்புடன் நாம் மாறினால்தான் உலகம் ஒற்றுமையாக வாழும்; அன்புற்று வாழும்; இன்புற்று வாழும்,' என்று பேசிக் கொண்டே அவரவர் வீடு திரும்பினர்.

அருஞ்சொற்பொருள்

இணைந்து - சேர்ந்து; புத்தணி - (புதுமை + அணி) புதிய ஆபரணங்கள்; முந்திச் சென்றது - முன்னே சென்றது; சிக்கி - அகப்பட்டு; முன்கோபம் - மிக்க கோபம்; ஏச்சு - பழித்துப் பேசுதல்; சூறாவளி - பெருங்காற்று; வெள்ளைக்கு - களங்கம் இல்லாத குணம் உடையவனுக்கு; கள்ளம் - வஞ்சனை; சிந்தனை - நினைப்பு; வரம்பு - அளவு.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. செல்வி, பொன்னன் ஆகியோர் எவ்வாறு நட்புக்கொண்டிருந்தனர்?
2. செல்விக்கும் பொன்னனுக்கும் சண்டை மூண்டது ஏன்?
3. சிறுவர் சண்டை எவ்வாறு பெரியோர் சண்டையாக மாறியது?
4. பாட்டியார் சண்டையிட்ட பெரியோர்களுக்குக் கூறிய அறிவுரைகள் யாவை?
5. குழந்தை உள்ளம் எப்படிப்பட்டது?

II. பிரித்து எழுதுக:

குழுமியிருந்த, மற்றொன்று, சேறாக்கி, கபடமற்ற.

III. சேர்த்து எழுதுக:

தொடக்கம்	+ பள்ளி=	நீர்	+ சுழி=
முந்தி	+ கொண்டது=	சிரிப்பை	+ கண்ட=
ஏசி	+ பேசினாள்=	நடந்ததை	+ கூறினாள்=

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

இணைபிரியாத, முந்திவிட்டது, மாறிமாறி, செவிசாய்க்கவில்லை.

இலக்கணம்

பால்

பொன்னன், செல்வி, மக்கள், கப்பல், கப்பல்கள்.

இப்பெயர்ச் சொற்களைக் கவனியுங்கள். இவை யாவும் பொருட் பெயர்கள். இவற்றுள் பொன்னன், செல்வி, மக்கள் என்பன என்ன திணை? உயர்திணைப் பெயர்கள் அல்லவா? இவ்வுயர்திணைப் பெயர்களுக்குள் வேற்றுமை உண்டா? உண்டு.

பொன்னன் என்பது உயர்திணையில் ஓர் ஆணைக் குறிக்கிறது. செல்வி என்பது உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிக்கிறது. மக்கள் என்பது உயர்திணையில் ஆண், பெண் சேர்ந்த பலரைக் குறிக்கிறது அன்றோ?

(அ) உயர்திணைக்குரிய பால்கள்

இங்ஙனம் உயர்திணையில் ஓர் ஆணைக் குறிக்கும் பெயர் **ஆண்பால் பெயர்** எனப்படும்.

உயர்திணையில் ஒரு பெண்ணைக் குறிக்கும் பெயர் **பெண்பால் பெயர்** எனப்படும்.

உயர்திணையில் ஆண்களில் பலரையோ, பெண்களில் பலரையோ, ஆண் பெண் சேர்ந்த பலரையோ குறிக்கும் பெயர் **பலர்பால் பெயர்** எனப்படும்.

(ஆ) அஃறிணைக்குரிய பால்கள்

கப்பல், கப்பல்கள் என்பன என்ன திணை? இவை இரண்டும் உயிரில்லாத அஃறிணைப் பொருள்களைக் குறிக்கும் பெயர்கள் அல்லவா? இவற்றுள் வேறுபாடு உண்டா? உண்டு.

கப்பல் என்பது ஒரு பொருளைக் குறிக்கிறது. கப்பல்கள் என்பது பல பொருள்களைக் குறிக்கிறது.

இங்ஙனம் அஃறிணையில் ஒன்றனைக் குறிக்கும் பெயர் **ஒன்றன்பால் பெயர்** எனப்படும்.

அஃறிணையில் பலவற்றைக் குறிக்கும் பெயர் **பலவின்பால் பெயர்** எனப்படும்.

எனவே, பெயர்ச்சொற்கள் பால் வகையால் ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர், பலர்பாற் பெயர், ஒன்றன்பாற் பெயர், பலவின்பாற் பெயர் என ஐந்து வகைப்படும் என அறிக. பால்—பிரிவு. உயிருள்ள அஃறிணைப் பெயர்களுள் ஆண், பெண் என்ற பிரிவு இருந்தாலும் அவற்றையும் ஒன்று, பல என்று கொள்வதே தமிழ் மரபு.

ஆண்பாற் பெயர்கள் பெரும்பாலும் அன், ஆன் என்றும், பெண்பாற் பெயர்கள் அள், ஆள், இ என்றும், பலர்பாற் பெயர்கள் அர், ஆர், இர், மார், கள் என்றும், ஒன்றன்பாற் பெயர் து என்றும், பலவின்பாற் பெயர்கள் அ, வை, கள் என்றும் முடியும். இவற்றிற்கு **விகுதிகள்** என்பது பெயர்.

(எ—டு)

வளவன்	—	அன்	உயர்திணை ஆண்பால்
நல்லான்	—	ஆன்	
அவள்	—	அள்	உயர்திணைப் பெண்பால்
இல்லாள்	—	ஆள்	
பொன்னி	—	இ	
ஆடவர்	—	அர்	உயர்திணைப் பலர்பால்
ஊரார்	—	ஆர்	
மகளிர்	—	இர்	
குருமார்	—	மார்	
கோக்கள்	—	கள்	
அது	—	து	அஃறிணை ஒன்றன்பால்
நல்லது	—	து	
நல்லன	—	அ	அஃறிணைப் பலவின்பால்
தீயவை	—	வை	
பறவைகள்	—	கள்	

அஃறிணையில் ஒன்றன்பாலுக்குரிய விகுதியும், பலவின்பாலுக்குரிய விகுதியும் இல்லாத பெயர்கள், இரண்டு பால்களுக்கும் பொதுவான பெயர்களாம். அவை பால்பகா அஃறிணைப் பெயர்கள் எனப்படும்.

(எ—டு)

மரம் வளர்ந்தது. மரம் வளர்ந்தன.
கண் சிவந்தது. கண் சிவந்தன.

பயிற்சி

1. பால் என்றால் என்ன? விளக்குக.
2. பால் எத்தனை வகைப்படும்?
3. உயர்திணைக்குரிய பால்கள் எவை?
4. அஃறிணைக்குரிய பால்கள் எவை?
5. பால்பகா அஃறிணைப் பெயர் என்றால் என்ன?
6. பின்வரும் பெயர்கள் என்ன பால் என எழுதுக:

   சிறுவன், மழை, திண்ணை, பெற்றோர், பெண்டிர், வீரர், நல்லாள், பாட்டி, எருதுகள், நாட்டான்.

14. தமிழ்நெறிக் காவலர்

இன்றைய அரும்பே நாளைய மலர். தற்காலக் குழந்தைகளே பிற்காலக் குடிமக்கள். அவர்கள் நல் வாழ்வுக்குத் தொண்டு செய்வது நாட்டுக்குச் செய்யும் நற்பணியாகும். அதனையே தம் குறிக்கோளாய்க் கொண்டு குழந்தைகளுடன் பழகி, அவர்கள் ஆடிப்பாட அழகிய பாடல்களும், படித்துச் சுவைக்க அருமையான கதைகளும் எழுதிப் பேரும் புகழும் பெற்றவர் பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள். குழந்தை களுக்கு மட்டுமன்றித் தமிழ் வளரவும், தமிழ்ப் பண்பாடு சிறக்கவும் அவர் அரும்பாடுபட்டார். அதனால், அவர் **தமிழ்நெறிக் காவலர்** என்று போற்றப்பட்டார்.

சிவமுத்து அவர்கள் 1892ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 14ஆம் நாள் திருவள்ளுவர் திருநாளில் வள்ளுவர் வாழ்ந்த மயிலாப்பூரில் பிறந்தார். அவருடைய தந்தை யார் **சிவானந்தனார்**; தாயார் **விசாலாட்சி** அம்மையார். குழந்தைக்குப் பெற்றோர் இட்ட பெயர் முத்துக்குமார சாமி என்பதாகும். அது பின்னர் முத்து என்று சுருங்கி ஊர்ப் பெயரோடும் தந்தையார் பெயர்ச் சுருக்கத்தோடும் இணைந்து **மயிலை சிவமுத்து** என்று வழங்கலாயிற்று.

சிவமுத்து எளிய குடும்பத்தில் பிறந்தவர். அவர் தந்தையார் ஓர் ஆசிரியர். அதனால் சிவமுத்து பிஞ்சுப் பருவத்திலேயே கல்வி கற்கத் தொடங்கினார். அவருடைய தந்தையார் தேவாரம், திருவாசகம், திருக் குறள் முதலிய நூல்களில் உள்ள பாடல்களை இளமை யிலேயே அவருக்குக் கற்பிப்பார்; புதுவது புனைந்த அறிவியல் அறிஞர்களின் வரலாறுகளையும் அவர்கள் கண்ட புதுமைகளையும் கதைகளாக எடுத்துக் கூறுவார். அதனால், சிவமுத்துக்கு இளமையிலேயே தாமும் ஒரு புதுமை காணவேண்டும் என்னும் துடிப்பு ஏற்பட்டது.

அத்தகைய துடிப்புமிக்க இளைஞருக்கு அதற்குரிய வாய்ப்புக் கிட்டவில்லை. அவர் ஏழாம் வகுப்பு வரையிலேயே கல்வி கற்றார். அவர் தந்தையார் திடுமென மறைந்தமையால் குடும்பத்தைக் காக்கும்

பொறுப்பு அவருக்கு ஏற்பட்டது. அதனால், அவர் ஓர் அச்சகத்தில் அச்சுக் கோக்கும் பணியில் ஈடுபட்டுப் பொருள் தேடலானார்.

கல்வியில் ஆர்வமுடைய அவர் பள்ளிக்குச் சென்று கற்க முடியாவிட்டாலும் ஓய்வு நேரங்களில் அறிஞர்கள் பலர் சொற்பொழிவுகளைக் கேட்டுத் தம் அறிவை வளர்த்துவந்தார். அதன்மூலம் பேராசிரியர் **மணி திருநாவுக்கரசர்** தொடர்பு அவருக்கு ஏற்பட்டது. அவரிடம் தனியாகத் தமிழ் பயின்றார் சிவமுத்து. அவர்

வாயிலாகப் பெரும்புலவர் நா. கதிரைவேற் பிள்ளை, பூவை கலியாணசுந்தரனார் ஆகியவர்களின் தொடர்பு அவருக்குக் கிடைத்தது. அவர்களும் சிவமுத்துவின் தமிழ்ப்புலமை வளரத் துணை புரிந்தார்கள்.

தாம் பெற்ற புலமையினால் சிவமுத்து அச்சகப் பணியை விட்டு ஆசிரியத் தொழில் புரிய விரும்பினார். அதனால் அவர் ஆசிரியப் பயிற்சி பெற்றுச் சென்னைப் பெத்துநாயகன் பேட்டையில் உள்ள சைவத் தொடக்கப் பள்ளியில் தலைமை ஆசிரியராய் மூன் றாண்டுகள் பணியாற்றினார். பின்னர், மணி திருநாவுக் கரசர் முயற்சியால் முத்தியாலுப்பேட்டை உயர் பள்ளியில் தமிழாசிரியராக அமர்ந்தார். கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் மிக்க அவர் அங்கு மாணவர் மனம்கொளத் தமிழ் அமுதத்தை ஊட்டி வந்தார். அதனால் நறுமண மலரை மொய்க்கும் வண்டுகளைப்போல மாணவர்கள் அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்.

அப்போது அவருக்கு வயது இருபத்தெட்டு. ஆசிரியத் தொழில் புரிவோர் எப்போதும் மாணவராய்ப் பல நூல் களையும் படித்துத் தம் அறிவை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்பது அவர் எண்ணம். அதனால், அவர் தமிழிலும் ஆங்கிலத்திலும் பற்பல நூல்களைப் படித் தார். அதன் பயனாக ஆங்கிலத்தில் உள்ளதுபோலச் சிறுவர்களுக்கு ஏற்ற செந்தமிழ் நூல்கள் பல இயற்ற வேண்டும் என்று அவர் ஆர்வம் கொண்டார். முதன் முதலாக 'எனது இளமைப் பருவம்' என்னும் கற்பனைக் கதையை அவர் எழுதினார்.

அக்கதை இளைஞர் உள்ளத்தை ஈர்த்தமையால் அவர் தங்க நாணயம், நல்ல குழந்தை, நல்ல எறும்பு, நாராயணன், பரந்தாமன் என்னும் கதைகளையும் எழுதினார். அவை சிறுவர் சிறுமியர் விரும்பிப் படிக்கும் வகையில் கருத்துச் செறிவும் கற்பனை வளமும் நீதி களும் நிரம்பியவை. கதைகள் பல எழுதியதோடு

மாணவர்களுக்கு ஏற்ற தமிழ்ப்பாட நூல்களும் எழுதிப் புகழ் பெற்றார் சிவமுத்து. அவர் எழுதிய 'நித்தில வாசகம்' என்னும் பாட நூல் வரிசை இன்றும் பாட நூல் எழுதுவோர்க்கு வழிகாட்டியாய் விளங்குகிறது.

இவை தவிர நம் சிவமுத்து அவர்கள் குழந்தைகள் பாடி ஆடி மகிழ்வதற்கு ஏற்ற இனிய சந்தப்பாடல்கள் பல பாடியுள்ளார். அவையெல்லாம் பிற்காலத்தில் **முத்துப் பாடல்கள்** என்னும் பெயரால் வெளியிடப் பட்டன. நடுவண் அரசு அந்நூலின் அருமை பெருமை களைப் பாராட்டிப் பரிசளித்துச் சிறப்பித்தது.

இங்ஙனம் தமிழ்த் தொண்டாற்றிய சிவமுத்து அவர்கள் தம் ஐம்பத்தைந்தாம் வயதில் ஆசிரியப் பணியி லிருந்து ஓய்வு பெற்றார். அதன் பிறகு அவர் தம் முழு நேரத்தையும் தமிழ் வளர்ச்சிக்கும் தமிழாசிரியர் உயர் வுக்கும் பயன்படுத்தி ஓயாது உழைத்தார். சென்னையில் புகழ் பெற்று விளங்கும் 'மாணவர் மன்றம்' அவர் உழைப் பால் வளர்ந்தது. அதன் வாயிலாக அவர் மாணவர் மனத்தில் தமிழுணர்வை ஊட்டி வளர்த்தார்; கதை, கட்டுரை, கவிதை, பேச்சு, ஓவியம் முதலிய போட்டிகள் நடத்தி மாணவர்களுடைய கலைவளமும் மொழி நலமும் சிறக்கப் பாடுபட்டார். 'நித்திலக் குவியல்' என்னும் திங்கள் இதழைத் தொடங்கித் தம் அரிய கருத்துகளை நாட்டுக்கு வழங்கி வந்தார்.

உலகம் ஒரு குடும்பமாக வேண்டும் என்னும் உயரிய கொள்கையுடைய சிவமுத்து அவர்கள் அதற்குக் குறள் நெறியே வழிகாட்டும் எனத் தெளிந்தார்; குறள் நெறியை எங்கும் பரப்ப முயன்றார். எல்லாரும் படித்து எளிதில் பொருள் உணரக்கூடிய வகையில் மன்ற வெளியீடாகத் 'திருக்குறள் – இனிய எளிய உரை' என் னும் நூலை எழுதி வெளியிட்டார். ஒவ்வொரு நாளும் ஒரு குறட்பாவை மனப்பாடம் செய்து கூறும் குழந்தை களுக்குக் கை நிறையப் பொரிகடலை வழங்கி ஊக்கு வித்தார்.

'நித்தம் ஒருகுறள் நெட்டுருச் செய்யின்
உத்தம னாக உலகினில் வாழ்வாய்'

என்று குழந்தைகளுக்கு அறிவுறுத்தினார்.

சிவமுத்து அவர்கள் சென்னைத் தமிழாசிரியர் கழகத் தலைவராய்த் தமிழறிஞர் பெருமக்களோடு சேர்ந்து தமிழாசிரியர் உயர்வுக்காக அரும்பாடுபட்டார். அவர் உழைப்பு வீணாகவில்லை. இன்று தமிழாசிரியர்கள் பிற ஆசிரியர்களைப்போல ஊதிய உயர்வும் நன்மதிப்பும் பெற்று விளங்குவதற்கு அவருடைய உழைப்பும் காரண மாகும்.

தமிழ் நாட்டில் தமிழ்நெறி பரவவும், தமிழ்ப் பண் பாடு தழைக்கவும் அவர் செய்த நற்பணிகள் குறிப்பிடத் தக்கவையாகும். தமிழ் நாட்டில் சாதி, சமய பேதமற்ற தமிழ்ச் சமுதாயம் அமையவேண்டும் என்று அவர் விரும்பினார்; தமிழுக்கு இடையூறு நேர்ந்தபோதெல் லாம் அதனைத் தகர்த்தெறிய முற்பட்டார். தமிழகத் தில் தமிழே தனியாட்சி புரியவேண்டும் என்று அவர் பாடுபட்டார். குறிப்பாகத் திருமணம், வழிபாடு முதலிய வற்றில் தமிழ் முழங்க அவர் வழி வகுத்தார். அதனாலேயே மக்கள் அவருக்குத் 'தமிழ்நெறிக் காவலர்' என்ற பட்டம் வழங்கிப் பாராட்டினர். அவர் செய்த குழந்தை இலக்கியப் பணியைப் பாராட்டிச் சென்னைக் குழந்தை எழுத்தாளர் சங்கம் ஆளுநர் தலைமையில் அவருக்குக் கேடயம் வழங்கிப் பெருமைப் படுத்தியது.

தமிழ்நெறிக் காவலர் அன்பின் உறைவிடமானவர்; எளிமையே உருவமானவர்; பழகுதற்கினிய பண்பாளர்; உற்றவர்க்கு உதவும் உத்தமர்; நன்றி மறவாத நல் லியல்பு வாய்ந்தவர்; தன்மானம் மிக்கவர்; சீர்திருத்த நோக்கமுடையவர்; இறுதி மூச்சுவரை தமிழ் வளர– தமிழினம் முன்னேற அல்லும் பகலும் அயராது உழைத்தவர்.

இங்ஙனம், உழைப்பையே செல்வமாகக்கொண்டு வாழ்ந்த அந்த நல்லவர் 6–7–68 அன்று நாடு வருந்த இவ்வுலக வாழ்வை நீத்தார். அவர் மறைந்தாலும் அவர் போற்றி வளர்த்த மாணவர் மன்றம் அவருடைய புகழுருவின் சின்னமாய்ச் சுடர்விட்டு ஒளிர்ந்துகொண் டிருக்கிறது.

அருஞ்சொற்பொருள்

பிஞ்சுப் பருவம் - இளம் பருவம்; புதுவது புனைந்த - அறிவியல் புதுமைகளைக் கண்டறிந்து செயல்படுத்திய; சொற்பொழிவு - பிரசங்கம், மேடைப்பேச்சு; கட்டுரை - பொருள் பொதிந்த உரை, எடுத்துக்கூறும் திறம்; ஈர்த்தமையால் - கவர்ந்தமையால்; கற்பனைக் கதை - புதுமையாகக் கற்பித்துக் கூறும் கதை; நித்திலம் - முத்து; திங்கள் இதழ் - மாதப் பத்திரிகை; நித்தம் - நாள் தோறும்; நெட்டுரு - மனப்பாடம்; ஆளுநர் - 'கவர்னர்'; உறைவிடம் - வாழுமிடம்; ஒளிர்தல் - விளங்குதல்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. சிவமுத்து எங்கு எப்போது பிறந்தார்? அவர்தம் பெற்றோர் யாவர்?
2. மயிலை சிவமுத்து என்னும் பெயர் அமைந்தது எங்ஙனம்?
3. சிவமுத்துவின் இளமையும் கல்வியும்பற்றி எழுதுக.
4. தமிழ்நெறிக் காவலர் தமிழ் கற்றது எங்ஙனம்?
5. மயிலை சிவமுத்து அவர்களின் ஆசிரியப் பணிபற்றி எழுதுக.
6. சிவமுத்து அவர்கள் எழுதிய நூல்கள் யாவை?
7. மாணவர் நலம் கருதி மயிலை சிவமுத்து அவர்கள் செய்த தொண்டுகளை எழுதுக.
8. குறள் நெறியைப் பரப்ப அவர் செய்த முயற்சிகள் யாவை?
9. சிவமுத்து 'தமிழ்நெறிக் காவலர்' என்று போற்றப்பட்டது ஏன்?
10. சிவமுத்து அவர்கள் பெற்ற சிறப்புகள் யாவை?
11. சிவமுத்து அவர்களின் சீரிய குணங்களை எழுதுக.

II. சிவமுத்துவின் குழந்தை இலக்கியப் பணி என்பது குறித்து இருபது வரிகள் எழுதுக.

III. பிரித்து எழுதுக:

பற்பல, செந்தமிழ், குறட்பா, நல்லியல்பு.

IV. சேர்த்து எழுதுக:

விரும்பி + படிக்கும் = தமிழ் + தொண்டு =
படித்து + சுவைக்க = நன்மை + பணி =

V. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

பேரும் புகழும், நறுமண மலரை மொய்க்கும் வண்டுகளைப் போல, பண்பாடு, அல்லும் பகலும்.

இலக்கணம்

எண்

புலவன் புகழ்ந்து பாடினான்.
புலவர்கள் புகழ்ந்து பாடினார்கள்.

இவற்றைக் கவனியுங்கள். இவற்றுள் புலவன் என்பது உயர் திணையில் ஒருவனைக் குறிக்கிறது; புலவர்கள் என்பது பலரைக் குறிக்கிறது அன்றோ?

இங்ஙனம் உயர்திணை, அஃறிணைப் பெயர்களில் ஒரு பொருளைக் குறிப்பதை ஒருமை **எண்** என்றும், ஒன்றுக்கு மேற்பட்ட பொருள்களைக் குறிப்பதைப் **பன்மை எண்** என்றும் கூறுவர். **எண்** என்பது **எண்ணிக்கையை** உணர்த்தும்.

எனவே ஒருமை, பன்மை என எண் இருவகைப்படும்.

சிவமுத்து, விசாலாட்சி, திருக்குறள்.

இப்பெயர்களுள் சிவமுத்து என்பது உயர்திணையில் ஓர் ஆணையும், விசாலாட்சி என்பது உயர்திணையில் ஒரு பெண்ணையும், திருக்குறள் என்பது அஃறிணையில் ஒரு பொருளையும் குறிக்கின்றன அல்லவா?

இங்ஙனம் உயர்திணை ஆண்பால், பெண்பால், அஃறிணை ஒன்றன்பால் ஆகியவற்றைக் குறிக்கும் சொற்கள் ஒருமை **எண்** எனப்படும். நான், நீ என்னும் பெயர்களும் ஒருமைப் பெயர்களே.

மாணவர், பாடல்கள்

இப்பெயர்களுள் மாணவர் என்பது உயர்திணையில் ஒன்றுக்கு மேற்பட்ட பலரையும், பாடல்கள் என்பது அஃறிணையில் பலவற்றையும் குறிக்கின்றன அல்லவா?

இங்ஙனம் உயர்திணையில் பலரைக் குறிக்கும் பலர்பால் சொற்களும் அஃறிணையில் பலவற்றைக் குறிக்கும் பலவின்பால் சொற்களும் **பன்மை எண்** எனப்படும். நாம், நாங்கள், யாம், யாங்கள், நீர், நீங்கள் என்பனவும் பன்மைப் பெயர்களேயாம்.

அவர் வந்தார் என உயர்திணையில் ஓர் ஆணையோ பெண்ணையோ பன்மையாகக் கூறுவது உண்டு. மரியாதை கருதி ஒருவரையே பலராக உயர்த்திக் கூறுவதால் இஃது **உயர்வுப் பன்மை** அல்லது **மரியாதைப் பன்மை** எனப்படும்.

பயிற்சி

1. எண் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப்படும்?
2. ஒருமை, பன்மை எண்களை எடுத்துக்காட்டுகள் தந்து விளக்குக.
3. பின்வரும் சொற்களில் ஒருமைக்குப் பன்மையும் பன்மைக்கு ஒருமையும் எழுதுக:

   உலகம், போட்டிகள், குழந்தை, நூல், மலர்கள், யாது, எவை, அறிஞன், பெண்டிர், ஆடவர்.
4. ஒருமைக்குரிய பால்கள் எவை? பன்மைக்குரிய பால்கள் எவை?
5. உயர்வுப் பன்மைக்கு வேறு எடுத்துக்காட்டுத் தந்து விளக்குக.

15. சிறு சேமிப்பு

(கடிதம்)

9, ஏகம்பன் தெரு,
காஞ்சிபுரம்,
15–9–1981

அன்புள்ள நண்பன் அருண்மொழிக்கு,

வணக்கம். நான் நலமாக இருக்கிறேன். உன் நலமும் பெற்றோர் நலமும் அறிய ஆவலாக உள்ளேன்.

மகிழ்ச்சியான செய்தி ஒன்றை அறிவிக்கவே நான் உனக்கு இக்கடிதத்தை எழுதுகிறேன். நீ இரண்டு ஆண்டுகளுக்குமுன் திருவிழாக் காணக் காஞ்சிக்கு வந்திருந்தபோது நான் நடந்தே நெடுந்தொலைவில் உள்ள பள்ளிக்குச் செல்வதை அறிந்து வருத்தப் பட்டாய். இனி, நான் நடந்து செல்லவேண்டிய தொல்லை இல்லை. என் சொந்த முயற்சியால் பள்ளிக் குக் குறித்த நேரத்தில் செல்ல மிதிவண்டி ஒன்று வாங்கி விட்டேன். எப்படி என்று நீ வியப்படைவாய். அதுதான் மகிழ்ச்சியான செய்தி.

ஒரு நாள் எங்கள் பள்ளியில் ஒரு கூட்டம் நடந்தது. சிறு சேமிப்பு இயக்கத்தைச் சேர்ந்த அரசு அலுவலர் ஒருவர் அக்கூட்டத்தில் பேசினார். அவர், 'பொருள் இலார்க்கு இவ்வுலகம் இல்லை. அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றனுள் நடுவணதாகிய பொருளை அடைந்தால் ஏனைய அறமும் இன்பமும் தாமே வந்து எய்தும். எனவே, அத்தகைய பொருளைச் சேர்க்கும் முயற்சியில் மாணவர்களும் கருத்தாக இருத்தல் வேண்டும்,' என்று அறிவுறுத்தினார்.

'மழைக் காலம் வருவதற்கு முன்பே எறும்புகள் தமக்கு வேண்டிய உணவுப் பொருள்களைச் சேர்த்து வைக்கின்றன. தேனீக்கள் மலர்தோறும் சென்று துளித் துளியாகத் தேனைத் திரட்டித் தேனடையில் சேர்க்கின்றன. அப்படி நீங்களும் உங்கள் எதிர்காலத்துக்கு வேண்டிய பொருள்களை இப்போதிருந்தே சேர்த்து வரவேண்டும். சேமிக்கும் பழக்கம் உங்களுக்கு ஏற்பட வேண்டும் என்பதற்காகவே பள்ளியில் **சஞ்சயிகா** என்னும் சிறு சேமிப்புத் திட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது,' என்று எடுத்துரைத்தார்.



சிறு சேமிப்பினால் விளையும் நன்மைகளைக் கூறிய போது அவர் சொன்ன ஒரு நிகழ்ச்சி என் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது.

'சென்னையில் வாழ்ந்த ஏழைத் தொழிலாளி ஒருவர் எதிர்பாராத வகையில் இருதய நோய்க்கு ஆளானார். நெஞ்சு வலியால் துடித்த அவரைக் காக்க வழியறியாமல் அவர் மனைவியார் துடித்தார். அருகில் வாழ்ந்தவர்கள் அவரை உடனே மருத்துவ மனையில் கொண்டுபோய்ச் சேர்த்தார்கள். இருதய நோய் மிகக் கொடியது. கண்ணும் கருத்துமாகக் கவனித்து மருத்துவம் செய்ய

வேண்டும். அதற்குப் பெரும் பொருள் செலவாகும் என அறிந்த அந்த அம்மையார் என்ன செய்வதென்று தெரியாமல் கலங்கிக் கண்ணீர்விட்டார். ஊரில் சிறி தளவு நிலம் இருந்தது. அதை விற்றுவிடலாம் என்றா லும் அதற்குரிய முன்னேற்பாடு செய்யவும் அவரிடம் பணம் இல்லை.

'அன்னையின் கண்ணீரைக் கண்ட அவர் மகன் 'அம்மா! கவலைப்படவேண்டா. என்னிடம் இருநூறு ரூபா இருக்கிறது. அதை வைத்துக்கொண்டு வேண்டிய ஏற்பாடு செய்யலாம்' என்று தேற்றினான். அது கேட்டுத் தாயார் வியப்புற்றார். 'இருநூறு ரூபா உனக்கு எப்படிக் கிடைத்தது?' என்று கேட்டார். 'நான் அவ்வப்பொழுது பள்ளிக்குச் செல்லும்போது நீங்கள் கொடுத்த காசுகளையும், உறவினர்கள் வரும்போது கொடுத்த சிறு தொகைகளையும் செலவழிக்காமல் அஞ்சலகத்தில் சிறு சேமிப்புக் கணக்கில் சேர்த்து வந்துள்ளேன். அத்தொகைதான் இப்போது இருநூறு ரூபாவாக ஆகியிருக்கிறது,' என்று கூறினான் மகன்.

'மகன் கூறியது கேட்டு அந்த அம்மையார் வறியவன் பொற்குவியல் பெற்றதுபோலப் பெருமகிழ்ச்சி கொண்டார்; அந்தப் பணத்தை வாங்கிவர மகனுடன் அஞ்சலகம் சென்றார். என்னே வியப்பு! அங்கு மேலும் ஒரு மகிழ்ச்சி காத்திருந்தது.

'அவர் மகன் சேர்த்த தொகையில் அதுவரையில் ஒரு சிறிதும் திரும்பப் பெறவில்லை. அவ்வாறு திரும்பப் பெறாதவர்களின் பெயர்களை எல்லாம் சீட்டுப் போட்டுக் குலுக்கி எடுத்து ஆண்டுதோறும் சில பரிசுகள் வழங்கு வார்கள். அப்பரிசுத் தொகை 10,000 அவர் மகனுக்குக் கிடைத்திருந்தது. அதை அறிந்து அந்த அம்மையாரும் மகனும் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவே இல்லை. நிலத்தை விற்கவேண்டிய நெருக்கடி இல்லாமல் அப் பணத்தைக்கொண்டே அந்த அம்மையார் தக்க மருத் துவம் செய்து தம் கணவரைக் காப்பாற்றினார். தன்

சிறு சேமிப்பு தந்தையின் ஆருயிரைக் காக்க உதவியதை எண்ணி மகனும் மிக்க மகிழ்ச்சி கொண்டான்.'

இதுதான் அவர் கூறிய நிகழ்ச்சி. அந்த நிகழ்ச்சியைக் கேட்டதுமுதல் நானும் பள்ளியில் தொடங்கிய சஞ்சயிகா என்னும் சிறு சேமிப்புத் திட்டத்தில் சேர்ந்து எனக்குக் கிடைக்கும் சிறு சிறு தொகையைச் சேர்த்து வந்தேன். இந்த இரண்டு ஆண்டுகளில் நான் முந்நூறு ரூபா சேர்த்துவிட்டேன். சிறு சேமிப்பில் பங்குகொண்டவர்களில் அதிகமாகச் சேர்த்தவன் நானே. அதனால் என்னைப் பாராட்டி நூறு ரூபா பரிசு வழங்கினர். அத்தொகையைக் கொண்டே நான் மிதிவண்டி வாங்கினேன்.

நண்பா! உன் பள்ளியிலும் இச் சிறுசேமிப்புத் திட்டம் செயல்படும் என்று நம்புகிறேன். பள்ளியில் இல்லாவிட்டாலும் அஞ்சலகத்தில் உள்ள சேமிப்பு வங்கியிலும் சேர்த்து வரலாம். 25 காசு, 50 காசு என்று சேமிக்கவும் அஞ்சலகங்கள் வாய்ப்பு அளிக்கின்றன. அஞ்சலகங்களிலிருந்து அழகான சேமிப்பு அட்டைகளை இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம். அதில் அவ்வப்போது கிடைக்கும் காசுகளைச் சேர்த்து 25 காசு சேமிப்புத் தலைகளை வாங்கி ஒட்டி வரலாம். சேமிப்புத் தலைகளின் மதிப்பு ஐந்து ரூபா ஆனதும் அஞ்சல் நிலையத்தில் அட்டையைத் தந்து உன் பெயரில் ஒரு சேமிப்புக் கணக்கைத் தொடங்கலாம். அஞ்சலகச் சேமிப்புக் கணக்கில் கட்டும் தொகைக்கு வட்டியும் உண்டு. அதனால், நானும் சேமிப்பு வங்கியில் ஒரு கணக்கைத் தொடங்கியுள்ளேன்.

வங்கிகளில் நாம் சேர்த்து வைக்கும் பணம், தேவையானபோது நமக்குப் பயன்படும். அதுமட்டும் அல்லாமல் அரசு மேற்கொள்ளும் நல்ல திட்டங்களுக்கும் உதவும். நமக்குக் கிடைக்கும் பணம் நம்மிடையே இருந்தால் அது பெருகுவதற்கு வாய்ப்பு இல்லை. கையில் பணம் இருந்தால் சில சமயங்களில் வீண் செலவு

செய்துவிடுவோம். அதனால், பணத்தின் அருமை தெரியாமல் போய்விடும். எதிர் காலத்திலும் சிக்கன மாக இல்லாமல் ஆடம்பரமாகச் செலவு செய்யும் பழக்கத்திற்கு அடிமையாகி அல்லல்பட நேரும். ஆனால், சிறு சேமிப்பு வாயிலாக வங்கியில் சேர்த்த பணம் பாது காப்பாக இருக்கும்; வளர்ந்துகொண்டே வரும். எனவே, சிறு சேமிப்பு சீரிய வாழ்க்கைக்கு அடிப்படையாகும்.

நான் எழுதியவற்றை நன்கு கவனித்து நீயும் சிறு சேமிப்பில் ஈடுபடவேண்டும் என்பதே என் ஆசை. என் ஆவலை நிறைவேற்றுவாய் என்று நம்புகிறேன். உன் கடிதத்தை ஆர்வமுடன் எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
உன் அன்பு நண்பன்,
க. திருமாவளவன்

முகவரி:
செல்வன் பா. அருண்மொழி,
7, நேரு நகர்,
பாண்டிச்சேரி

அருஞ்சொற்பொருள்

இவ்வுலகம் - இந்த உலக இன்பம்; நடுவணது - நடுவில் உள்ளது, பொருள்; எய்தும் - அடையும்; மருத்துவம் - வைத்தியம்; வறியவன் - பொருள் இல்லாதவன்; அஞ்சலகம் - தபால் நிலையம்; ஆருயிர் - அருமையான உயிர்; வாய்ப்பு - சந்தர்ப்பம்; அல்லல் - துன்பம்; சீரிய - சிறந்த; முகவரி - மேல் விலாசம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. திருமாவளவன் அருண்மொழிக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்ட வியப்பான செய்தி யாது?
2. சிறு சேமிப்பு இயக்க அலுவலர் செல்வத்தின் சிறப்புகளாகக் கூறியன யாவை?

3. எறும்புகளும் தேனீக்களும் சேமிப்பின் தேவையை எங்ஙனம் விளக்குகின்றன?
4. ஏழைத் தொழிலாளியின் மனைவியார் மனம் வருந்தக் காரணம் யாது?
5. தொழிலாளியின் மகன் தன் தந்தையாருக்கு நேர்ந்த துன்பத்தை எவ்வாறு போக்கினான்?
6. அஞ்சலகச் சேமிப்பு வங்கியில் சேமிக்கும் முறையை எழுதுக.
7. சிறுசேமிப்பு, சீரிய வாழ்க்கைக்கு அடிப்படையாவது எப்படி?

II. பிரித்து எழுதுக:

கண்ணீர், முன்னேற்பாடு, பொற்குவியல், ஆருயிர், முந்நூறு.

III. சேர்த்து எழுதுக:

சேமிப்பு + திட்டம் = சேமிப்புத் திட்டம்
பாக்கு + தின்றான் = தச்சு + தொழில் =
பாட்டு + பாடு = பத்து + பாட்டு =

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

கண்ணும் கருத்துமாக, துளித்துளியாக, வாய்ப்பு, அடிப்படை,

V. எதிர்ச்சொல் எழுதுக:

தொலைவு, நன்மை, செலவு, அருமை.

VI. தெரிந்துகொள்க:

சரி	தவறு
முந்நூறு	முன்னூறு
செலவு	சிலவு
தொலைவு	துலைவு
தொடங்குதல்	துடங்குதல்
உயிர்	உசிர்

VII. வீண் செலவு செய்வதால் ஏற்படும் விளைவுகளைப்பற்றி உன் நண்பனுக்கு ஒரு கடிதம் எழுதுக.

இலக்கணம்

இடம்

தன்மை — முன்னிலை — படர்க்கை

நான் நலமாக இருக்கிறேன்.

நீ சென்ற ஆண்டு வந்திருந்தாய்.

அவன் தன் அன்னையைத் தேற்றினான்.

இத்தொடர்களில் உள்ள நான், நீ, அவன் என்னும் சொற்களைக் கவனியுங்கள். நான் என்பது யாரைக் குறிக்கிறது? இது பேசுபவன், தன்னைக் குறிப்பிடும் சொல்லாகும். இங்ஙனம் பேசுபவன், தன்னைக் குறிக்கும் சொல் **தன்மை இடம்** எனப்படும்.

நீ என்பது யாரைக் குறிக்கிறது? இது பேசுபவன் முன் நின்று கேட்பவனைக் குறிப்பிடும் சொல்லாகும். இங்ஙனம் பேசுபவன் முன் நின்று கேட்பவனைக் குறிக்கும் சொல் **முன்னிலை இடம்** எனப்படும்.

அவன் என்பது யாரை உணர்த்துகிறது? இது பேசுபவன் தன்னையும் குறிக்காமல், முன் நின்று கேட்பவனையும் குறிக்காமல் அயலான் ஒருவனைக் குறிப்பிடும் சொல்லாகும். இது **படர்க்கை இடம்** எனப்படும்.

எனவே, தன்மை, முன்னிலை, படர்க்கை என இடம் மூவகைப் படும். தன்மையும் முன்னிலையும் ஒருமை, பன்மை என இரு வகைப்படும். அவை உயர்திணை, அஃறிணை ஆகிய இரண்டுக்கும் பொதுவாகும். படர்க்கை இரு திணை, ஐம்பால், ஒருமை, பன்மை ஆகியவற்றை உணர்த்தி வரும்.

தன்மை

ஒருமை	பன்மை
நான்	நாம், நாங்கள்
யான்	யாம், யாங்கள்

முன்னிலை

ஒருமை	பன்மை
நீ	நீர், நீயிர், நீவிர், நீங்கள்

படர்க்கை

ஆண்பால்	பெண்பால்	பலர்பால்	ஒன்றன்பால்	பலவின்பால்
அவன்	அவள்	அவர்	அது	அவை
நல்லவன்	நல்லவள்	நல்லவர்	நல்லது	நல்லவை
சிறுவன்	சிறுமி	சிறுவர்	கன்று	கன்றுகள்
முருகன்	வள்ளி	மக்கள்	பறவை	பறவைகள்

ஒருமை	பன்மை
அவன்	அவர், அவர்கள்
அவள்	அவர், அவர்கள்
அது	அவை
தான்	தாம், தாங்கள்

பயிற்சி

1. இடம் எத்தனை வகைப்படும்? விளக்குக.
2. தன்மை ஒருமை, பன்மைப் பெயர்கள் யாவை?
3. முன்னிலை ஒருமை, பன்மைப் பெயர்கள் யாவை?
4. படர்க்கை இடத்தால் புலப்படுவன யாவை?
5. பின்வரும் சொற்களைக் கட்டத்தில் எடுத்து எழுதுக:

   நீவிர், அன்னை, அலுவலர், யாம், பள்ளி, வங்கிகள், யான், மிதிவண்டி, நீங்கள், அஞ்சலகம், மாணவர்கள்.

தன்மை	முன்னிலை	படர்க்கை

16. பிறர்க்கென வாழ்ந்த பெரியோன்

ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் **அதியமான் நெடுமான் அஞ்சி** என்னும் சிற்றரசன் இப்போது தருமபுரி என வழங்கும் தகடூரைத் தலைநகராகக் கொண்டு கொங்கு நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தான். அதியமான் அருங்குணங்கள் பலவும் வாய்ந்தவன்; இணையற்ற வீரமும் ஈகைக்குணமும் உடையவன்; தமிழ்மொழியினிடத்தும் தமிழ்ப் புலவர்களிடத்தும் பேரன்பு கொண்டவன்; தன்னைப் பாடிவரும் புலவர்களுக்கும் பாணர் முதலியவர்களுக்கும் பொன்னும் மணியும் வரையாது வழங்கும் வள்ளலாய் விளங்கியவன்.

அவன் காலத்தில் **ஔவையார்** என்னும் பெண்பாற் புலவர் ஒருவர் வாழ்ந்தார். அவர் கல்வி, அறிவு, ஒழுக்கங்களில் சிறந்தவர்; சிந்தையைக் கவரும் செந்தமிழ்ப் பாடல்கள் இயற்றும் திறன் படைத்தவர்; தவறு செய்பவர் அரசரேயானாலும் அஞ்சாமல் அறிவுரை கூறித் திருத்தும் ஆற்றல் மிக்கவர். இத்தகைய நலங்கள்

எல்லாம் ஒருங்கு வாய்ந்த அந்த மூதாட்டியாரை அரசர் முதல் அனைவரும் விரும்பிப் போற்றினர்.

ஔவையார் ஒருமுறை அதியமானைக் காண அவன் நாட்டிற்குச் சென்றார். அதியமான் அவரை எதிர்கொண்டு வரவேற்றான்; அறுசுவை விருந்து நல்கி மகிழ்வித்தான்; அன்போடு அளவளாவி இன்புற்றான். அவனுடைய பேரன்பையும் பெருங்குணங்களையும் கண்ட ஔவையார் மனம் மகிழ்ந்து அவனைப் புகழ்ந்து பல பாடல்கள் பாடினார். ஔவையாருடைய புலமை நலத்தை அறிந்து வியந்த அதியமான் அவரைப் பலவாறு பாராட்டித் தன்னுடன் சில நாள்கள் தங்கியிருக்குமாறு வேண்டிக்கொண்டான். ஔவையாரும் அவன் அன்பைப் புறக்கணிக்க இயலாமல் அவனுடன் தங்கித் தம் புலமையால் அவனை மகிழ்வித்து வந்தார்.

இங்ஙனம், பல நாள்கள் சென்றன. அதியமான் தமக்குப் பரிசு வழங்கி வழியனுப்புவான் என்று ஔவையார் எதிர்பார்த்தார். அவன் ஒன்றும் தாராமல் காலம் கடத்தி வந்தான். அதனால், ஔவையார் அவன்மீது சினமும் வெறுப்பும் கொண்டார். தமிழ்நாடு முழுதும் சென்று தமிழ் பரப்புவதையே தொழிலாகக்கொண்ட அம்மூதாட்டியார் மேலும் அங்கிருக்க விரும்பாமல் புறப்பட்டார். அதியமானைப் பார்க்கவும் மனம் இல்லாதவராய் வாயிற்காவலனைப் பார்த்து, 'வாயிற்காவலனே! உன் தலைவன் எம்போன்ற புலவர்களின் தகுதியை உணரவில்லை போலும்! இவனைத் தவிர என்னைப் புரப்பவர் யாரும் இல்லையோ? உலகம் வள்ளன்மைக் குணம் உடைய வள்ளல்களை இழந்துவிடவில்லை. தச்சருடைய சிறுவர்கள் காட்டிற்குச் சென்றால் அக்காட்டில் உள்ள மரங்கள் யாவும் அவர்கள் வெட்டிக் கொள்ளப் பயன்படும். அதுபோல நான் எத்திசைச் சென்றாலும் எனக்குச் சோறு கிடைக்கும். இதனை உன் தலைவனிடம் கூறுக,' என்று கூறிவிட்டு நடந்தார்.

வாயிற்காவலன் அது கேட்டு அஞ்சி அதியமானிடம் ஓடினான்; ஔவையார் உரைத்துச் சென்ற மொழிகளைக் கூறினான். அருந்தமிழ் மூதாட்டியாரின் உள்ளம் புண்படுமாறு நடந்துகொண்டோமே என்று வருந்திய அதியமான் விரைந்து சென்று ஔவையாரைக் கண்டு வணங்கினான். 'அன்னையே! என்னை மன்னிக்கவேண்டும். தங்களைப் பிரிய மனம் இல்லாமையினாலேயே நான் பரிசு வழங்கக் காலம் தாழ்த்தினேன். நான் தங்கள் தகுதியறியாதவன் அல்லேன். பொறுத்தருள வேண்டுகிறேன்,' என்று பணிவுடன் கூறினான்.

அதியமானின் அன்பைக் கண்டு நெஞ்சம் நெகிழ்ந்த அப்பெருமாட்டியார் அவன் மனம் மகிழுமாறு மேலும் பல நாள்கள் அவனுடன் தங்கியிருந்தார்; நாள்தோறும் அவனுக்குத் தமிழ் விருந்தளித்து மகிழ்வித்தார்; அவனுடைய வள்ளன்மையை வாயாரப் புகழ்ந்தார்; அறிவுரைகள் பல வழங்கினார். அவருடைய புகழ்மொழிகளையும் அறிவுரைகளையும் கேட்டு அதியமான் உள்ளம் குளிர்ந்தான். அவரைத் தாயினும் மேலாக நேசித்து அன்புடன் போற்றி வந்தான்.

ஒருநாள் அதியமான் வேட்டையாடக் கானகம் சென்றான். அங்கு மலைச்சரிவில் அழகிய கருநெல்லி மரம் ஒன்று தழைத்து வளர்ந்திருப்பதைக் கண்டான். அம்மரத்தின் பழம் அமிழ்தம் போன்றது. அதனை உண்பவர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்பதனை அவன் அறிந்திருந்தான். அதனால், அம்மரத்தில் பழங்கள் உள்ளனவா என்று கவனித்தான். மலைச்சரிவில் உள்ள பிளப்பு ஒன்றன் பக்கம் சாய்ந்திருந்த கிளையில் ஒரே ஒரு பழம் காணப்பட்டது. அதனைப் பறிப்பது உயிருக்கே ஊறு விளைவிக்கும் அருஞ்செயலாகும் என்பதனை அவன் அறிந்தான். எனினும், அவன் அதற்கு அஞ்சவில்லை. நீண்ட நாள் வாழும் ஆற்றலைத் தரும் அக்கனியைத் தன் உயிரையும் பொருட்படுத்தாமல் முயன்று பறித்து வந்தான். அதனை ஆவலுடன் உண்ண எடுத்தபோது அவன் மனத்தில் ஓர் எண்ணம் தோன்றியது. அதனால்

அதனை உண்ணாமல் தன் அரைக் கச்சையில் வைத்துக் கொண்டு அரண்மனைக்குத் திரும்பினான்.

அரண்மனையை அடைந்தவுடன் அதியமான் அக்கனியை ஔவையாரிடம் தந்து உண்ணுமாறு வேண்டினான். ஔவையாரும் அவனுடைய அன்பைப் பாராட்டி ஆவலுடன் அக்கனியை உண்டார்; அதன் இன்சுவையை வியந்து பாராட்டினார். அக்கனியின் அருமை பெருமைகளை அவர் அறியார். அவர் அதனை உண்ட பின்பே அதியமான் தான் வேட்டைக்குச் சென்ற இடத்தில் அக்கனியைக் கண்டதையும் அதனை உண்பவர் நீண்ட நாள் உயிர் வாழ்வர் என்று பெரியோர் ஒருவர் தனக்குக் கூறியிருந்ததையும் அதனால் தன் உயிரையும் பொருட்படுத்தாது அக்கனியைப் பறித்து வந்ததையும் கூறினான்.

அது கேட்டு ஔவையார் துணுக்குற்றார். அதியமானின் அன்பு அவர் உள்ளத்தை உருக்கியது. அவர் அதியமானை நோக்கி, 'வேந்தே! உன் அன்புக்கு எல்லையே இல்லையா! நீண்ட நாள் உயிர் வாழ உதவும் அரிய நெல்லிக்கனியை நீ உண்டு வாழ விரும்பாமல் எனக்குத் தந்தாயே! நீ நெடுங்காலம் வாழ்ந்தால் உனக்கு மட்டுமா? இந்நாட்டுக்கே நன்மை விளையும் அன்றோ? நான் உண்டதால் என்ன பயன்? இதன் பெருமையை முன்னரே எனக்குக் கூறியிருத்தல் கூடாதா?' என்று கூறி மிகவும் வருந்தினார்.

ஔவையார் மொழி கேட்டு அதியமான் புன்முறுவல் செய்தான். 'அன்னையே! அக்கனியின் பெருமையை முன்னரே அறிந்தால் உண்ண மறுப்பீர்கள் என்று அஞ்சியே நான் அதுபற்றிக் கூறவில்லை. நான் அக்கனியை உண்டு நீண்ட நாள் வாழ்ந்தால் என் நாட்டுக்கு நன்மை ஏற்படலாம். ஆனால், தாங்கள் உண்டதனால் உலகத்துக்கே நன்மை விளையுமே! அதனாலேயே அக்கனியை நான் உண்ணாது தங்களுக்கு அளித்தேன்,' என்று அன்புடன் நவின்றான்.

அதியமானின் தன்னலம் கருதாத் தன்மையை அறிந்த ஔவையார் மிகவும் வியந்தார். வள்ளல் என்றால் அதியமானைப்போல் அல்லவா இருத்தல்வேண்டும் என்று எண்ணிய அவர் நெஞ்சம் நெகிழ்ந்தது. கண்கள் மகிழ்ச்சிக் கண்ணீர் சொரிந்தன. வாய் வாழ்த்தத் தொடங்கியது.

'பெருமானே! நீ பெரிய மலையின் உச்சியில் அமைந்த அரிய பிளப்பில் இருந்து அமிழ்தம் போன்ற இனிய நெல்லிக்கனியை உயிரையும் பொருட்படுத்தாமல் பறித்து வந்தாய். அதன் பெருமையையும் கூறவில்லை. உண்டாரை நீண்ட நாள் வாழவைக்கும் அக்கனியை நீ உண்ணாமல் நான் சாவாமல் வாழவேண்டும் என்று விரும்பி எனக்கு அளித்தாய். உன் வள்ளன்மையை என்னெனப் போற்றுவேன்! நீ ஆலம் உண்டும் சாவாத நீலமணிமிடற்று ஒருவன்போல நிலைத்து வாழ்வாயாக,' என்று ஔவையார் அதியமானை வாயார வாழ்த்தினார். அவர் உள்ளம் குளிர்ந்து கூறிய அந்த வாழ்த்துரை அழகிய பாடலாய் அதியமானின் வள்ளன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகச் சங்க இலக்கியமாகிய புறநானூற்றில் இடம் பெற்று விளங்குகிறது.

பின்னர் ஔவையார் தம்மிடம் பேரன்புகொண்ட அதியமானிடம் மேலும் அன்புடையவராய் அவனுடைய அவைப்புலவராகவும், அரசியலில் உதவும் அமைச்சராகவும் விளங்கி, அவனைப் பெரிதும் மகிழ்வித்தார். தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருமைக்குரிய அதியமானும் தன் ஈடில்லாத ஈகைக் குணத்தால் 'இல்லை' என வந்தவர்க்கு 'இல்லை' என்று கூறாமல் ஈந்து, கடையெழு வள்ளல்களுள் ஒருவன் என்னும் அழியாப் புகழ் பெற்றான். அவன் இறந்தாலும் ஔவைக்கு அவன் நெல்லிக்கனி ஈந்த வள்ளன்மை வையம் உள்ளளவும் வாழும் அன்றோ?

அருஞ்சொற்பொருள்

ஈகைக் குணம் - பிறருக்கு உதவும் குணம்; அறுசுவை - இனிப்பு, புளிப்பு, உப்பு, காரம், கசப்பு, துவர்ப்பு ஆகிய ஆறு சுவைகள்;

புரப்பவர் - காப்பவர்; தாழ்த்தினேன் - கடத்தினேன்; கானகம் - காடு; பிளப்பு - பிளவு; ஊறு - தீங்கு; துணுக்குற்றார் - அதிர்ச்சி அடைந்தார்; ஆலம் - விஷம்; நீலமணி மிடறு - நீலமணி போன்ற நிறம் உடைய கழுத்து; ஈந்து - கொடுத்து; வையம் - உலகம்; நவின்றான் - கூறினான்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. அதியமான் நெடுமான் அஞ்சி—சிறு குறிப்பு வரைக.
2. ஔவையாரின் குண நலன்களை எழுதுக.
3. அதியமான் ஏன் ஔவையாருக்குப் பரிசு தாராமல் காலம் தாழ்த்தினான்?
4. ஔவையார் அதியமானின் வாயிற்காவலனிடம் கூறியது யாது?
5. அதியமானின் அன்பை ஔவையார் எங்ஙனம் அறிந்தார்?
6. அதியமான் கண்ட நெல்லிக்கனியின் சிறப்பு யாது?
7. தனக்கென வாழாமல் பிறர்க்கென வாழ்ந்த பெருமைக்குரியவன் அதியமான் என்பதை விளக்குக.
8. நெல்லிக்கனி ஈந்த அதியமானை ஔவையார் எவ்வாறு பாராட்டினார்?

II. பிரித்து எழுதுக:

பெண்பாற் புலவர், பொறுத்தருள, இன்சுவை, கண்ணீர், ஈடில்லாத.

III. வாக்கியத்தில் அமைத்து எழுதுக:

இணையற்ற, நேசித்து, அருமை பெருமைகள், துணுக்குற்றார், வள்ளன்மை.

இலக்கணம்

வினைச்சொல்

அதியமான் ஔவையாரை **வணங்கினான்.**
தமிழரசி பாடம் **படிக்கிறாள்.**
நண்பர்கள் நாளை **வருவார்கள்.**

இத்தொடரில் உள்ள சொற்களைக் கவனியுங்கள். அதியமான், ஔவையார், தமிழரசி, பாடம், நண்பர்கள், நாளை என்பன பெயர்ச் சொற்கள். வணங்கினான், படிக்கிறாள், வருவார்கள்

என்பன என்ன சொற்கள்? வணங்கினான் என்பது அதியமான் செய்த தொழிலையும், படிக்கிறாள் என்பது தமிழரசி செய்கின்ற தொழிலையும், வருவார்கள் என்பது நண்பர்கள் செய்யப்போகும் தொழிலையும் உணர்த்துகின்றன அல்லவா?

வணங்கினான் என்பது செய்து முடிந்த தொழிலை உணர்த்துகிறது. படிக்கிறாள் என்பது நடந்துகொண்டிருக்கின்ற தொழிலை உணர்த்துகிறது. வருவார்கள் என்பது இனி நடக்க இருக்கும் தொழிலைத் தெரிவிக்கிறது. எனவே, இச்சொற்கள் ஒவ்வொன்றும் ஒரு காலத்தை உணர்த்துதல் விளங்குகிறதன்றோ?

மற்றும், வணங்கினான் என்பது தொழிலைச் செய்தவன் உயர்திணை ஆண்பால் என்பதனையும், படிக்கிறாள் என்பது உயர் திணைப் பெண்பால் என்பதனையும், வருவார்கள் என்பது உயர் திணைப் பலர்பால் என்பதனையும் உணர்த்துகின்றன.

இங்ஙனம், ஒன்றன் தொழிலையும் காலத்தையும் உணர்த்தித் திணை, பால் காட்டி வரும் சொல் **வினைச்சொல்** எனப்படும்.

வினைச்சொல் இடவகையால் தன்மை வினைச்சொல், முன்னிலை வினைச்சொல், படர்க்கை வினைச்சொல் என்று மூன்று வகைப்படும்.

நான் வந்தேன்.	—	தன்மை ஒருமை
நாம் வந்தோம்.	—	தன்மைப் பன்மை
நீ வந்தாய்.	—	முன்னிலை ஒருமை
நீங்கள் வந்தீர்கள்.	—	முன்னிலைப் பன்மை
அவன் வந்தான்.	—	படர்க்கை ஆண்பால்
அவள் வந்தாள்.	—	படர்க்கைப் பெண்பால்
அவர் வந்தார்.	—	படர்க்கைப் பலர்பால்
அது வந்தது.	—	படர்க்கை ஒன்றன்பால்
அவை வந்தன.	—	படர்க்கைப் பலவின்பால்

பயிற்சி

1. வினைச்சொல் என்றால் என்ன? அஃது எத்தனை வகைப் படும்?
2. இப்பாடத்திலிருந்து மூவிட வினைச்சொற்களுக்கு இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.
3. பின்வரும் வினைச்சொற்களை வேறு இட வினைச்சொற்களாக மாற்றி எழுதுக:

போற்றினர், வேண்டுகிறேன், கண்டான், மறுப்பீர்கள், அளித்தாய்.

17. ஊராட்சி மன்றமும் ஒன்றியமும்

(உரையாடல்)

தம்பி: *அண்ணா! சில நாள்களாக நம் ஊரில் சிலர் வீடுவீடாகச் சென்று வருகிறார்களே! என்ன காரணம்?*

அண்ணன்: தம்பி! அடுத்த வாரம் நம் ஊரில் ஊராட்சி மன்றத் தேர்தல் நடக்கப்போகிறதே! உனக்குத் தெரியாதா? தேர்தலில் போட்டியிடுபவர்கள் வாக்காளர்களிடம் வாக்குக் கேட்கவே வீடுவீடாகப் போய் வருகிறார்கள்.

தம்பி: *ஊராட்சி மன்றம் என்றால் என்ன அண்ணா?*

அண்ணன்: நம் பாரதநாடு ஒரு பெரிய குடியரசு நாடு என்பது உனக்குத் தெரியும் அன்றோ? குடிமக்களால் தேர்ந்தெடுப்பவர்களைக் கொண்ட நாடாளுமன்றமும், மாநிலச் சட்ட மன்றமுமே நம் நாட்டையும் மாநிலத்தையும் ஆளுகின்றன. அதுபோல ஊரை ஆளும் மன்றமே ஊராட்சி மன்றமாகும்.

தம்பி: நாட்டை ஆள அந்த மன்றங்கள் இருக்கும் போது ஊராட்சி மன்றம் எதற்கு அண்ணா?

அண்ணன்: தம்பி! நன்றாகக் கேட்டாய். நம் நாட்டில் உள்ள ஒவ்வொரு சிற்றூரும் முழு உரிமை படைத்த ஒரு சிறு குடியரசாய் விளங்கவேண்டும். உரிமை என்பது அடிப்படையிலிருந்தே தொடங்கவேண்டும் என்பது நம் தேசத்தந்தை காந்தியடிகளின் விருப்பம். அந்த நோக்கத்துடனேயே ஊராட்சி மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இந்த ஊராட்சி மன்றங்கள் நமக்குப் புதியவை அல்ல. பழங்காலத்திலேயே இருந்தன என்று வரலாறு கூறுகிறது.

தம்பி: அப்படியா? அதைப்பற்றிச் சிறிது கூறுங்கள், அண்ணா.

அண்ணன்: கூறுகிறேன், கேள் தம்பி! ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளுக்குமுன் சோழர்கள் நம் நாட்டை ஆண்ட போது ஊர்தோறும் இத்தகைய ஊராட்சி மன்றங்கள் இருந்தன. இச்செய்தி உத்தரமேரூரில் உள்ள ஒரு கல்வெட்டால் தெரிகிறது. அந்த மன்ற உறுப்பினர்களை ஊர்ப் பொதுமக்களே தேர்ந்தெடுத்தார்கள். தேர்ந்தெடுக்கப்பட்டவர் கூடி ஊராட்சியை நடத்தி வந்தனர்.

தம்பி: இப்போது அத்தகைய ஊராட்சி மன்றங்கள் எல்லா ஊர்களிலும் இருக்கின்றனவா அண்ணா?

அண்ணன்: எல்லா ஊர்களிலும் இருப்பதாகச் சொல்ல முடியாது. ஐந்நூறு பேர்களாவது வாழும் ஊரிலேயே ஊராட்சி மன்றம் ஏற்படுத்தப்படும். அதற்குக் குறைவான மக்கள் வாழும் சிற்றூர்கள் அண்மையில் உள்ள பேரூர்களோடு இணைக்கப்படும்.

தம்பி: சரி அண்ணா! ஊராட்சி மன்றம் எவ்வாறு அமைக்கப்படுகிறது?

அண்ணன்: தம்பி! நீ அதனைத் தெரிந்துகொள்வது நல்லதுதான். ஒவ்வோர் ஊரும் அங்கு வாழும் மக்கள் தொகைக்கு ஏற்பப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படும். ஒவ்வொரு பிரிவிற்கும் 'தொகுதி' என்பது பெயர். ஒவ்வொரு தொகுதியிலும் உள்ள பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஆடவரும் மகளிரும் வாக்களிக்கும் உரிமையுடையவராவர். அந்த வாக்காளர்கள் தங்கள் சார்பில் ஓர் உறுப்பினரைத் தேர்ந்தெடுப்பதோடு ஊராட்சி மன்றத் தலைவரையும், ஊராட்சி ஒன்றியத் தலைவரையும் தேர்ந்தெடுப்பார்கள். தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் கூடித் தங்களுக்குள் ஒருவரைத் துணைத் தலைவராகத் தேர்ந்தெடுத்துக்கொள்வார்கள். ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி ஒன்றி

யத்தின் உறுப்பினராகவும் பணியாற்றுவார். அவர்கள் பணி ஊதியம் இல்லாத அன்புப் பணியே ஆகும்.

தம்பி: ஊராட்சி மன்றம் எப்படிப் பணி செய்கிறது?

அண்ணன்: ஊராட்சி மன்ற உறுப்பினர்கள் அடிக்கடி கூடிப் பேசி ஊருக்கு நன்மையான செயல்களைச் செய்ய முடிவு செய்வார்கள். அவர்கள் செய்யும் முடிவு களை ஏற்று நடத்த நிருவாக அலுவலர் ஒருவர் உள் ளார். அவருக்குக் கட்டுப்பட்டுப் பணி செய்யப் பணியாளர் பலர் உள்ளனர். அவர்கள் யாவரும் ஊதியம் பெறுபவர்கள். அவர்களே அச்செயல்களை எல்லாம் செய்து முடிப்பார்கள்.

தம்பி: ஊராட்சி மன்றம் செய்யும் பணிகள் யாவை என்று கூறுங்கள் அண்ணா!

அண்ணன்: ஊர் மக்கள் நலமும் வளமும் பெற்று வாழ ஊராட்சி மன்றம் பல பணிகளை மேற்கொள்கிறது. தெருக்களிலும் பொது இடங்களிலும் விளக்குகளை அமைத்தல், குப்பை கூளங்களை அகற்றி ஊரைத் துப்புரவாக வைத்துக்கொள்ளுதல், தெருக்களில் கழிவு நீர் தேங்காதவாறு கழிவு நீர்க் கால்வாய்கள் அமைத் தல், குடி நீர் வசதி செய்தல் முதலியவை ஊராட்சி மன்றத்தின் இன்றியமையாத பணிகளாகும். மேலும் இம்மன்றம் மக்களின் பொது அறிவை வளர்க்க நூல் நிலையமும் படிப்பகமும் நடத்துகிறது. சந்தை களையும் திருவிழாக்களையும் கண்காணிக்கிறது.

தம்பி: இவற்றையெல்லாம் கவனித்தால் ஒவ்வோர் ஊராட்சி மன்றமும் தனது ஊரைத் தானே ஆள்கிறது என்பது நன்கு விளங்குகிறது அண்ணா. ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சி ஒன்றியத்தின் உறுப்பின ராகவும் இருப்பார் என்று கூறினீர்களே, ஊராட்சி ஒன்றியம் என்றால் என்ன அண்ணா?

அண்ணன்: அதைப்பற்றியும் நீ தெரிந்துகொள்வது நல்லதுதான். சமுதாய வளர்ச்சி கருதி ஒவ்வொரு மாநிலமும் பல வட்டாரங்களாகப் பிரிக்கப்

பட்டுள்ளன. வட்டார வளர்ச்சியைக் கவனித்து நடத்த அந்த வட்டாரத்திலுள்ள ஊராட்சி மன்றத் தலைவர்களை உறுப்பினர்களாகக் கொண்ட ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதுவே **ஊராட்சி ஒன்றியம்** ஆகும். இவ்வாறு அமைக்கப்பட்ட ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரைமட்டும் மக்களே தேர்ந்தெடுப்பார்கள். பின்னர் உறுப்பினர்கள் கூடித் தமக்குள் துணைத் தலைவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்துக் கொள்வார்கள். ஒன்றியத்தில் நடைபெறும் கூட்டங்களில் அந்த வட்டாரத்துச் சட்ட மன்ற உறுப்பினரும் கலந்து கொள்வார். ஆனால், கூட்டங்களில் எடுக்கும் முடிவுகள் குறித்து வாக்களிக்க அவருக்கு உரிமை இல்லை.

தம்பி: அண்ணா! ஊராட்சி ஒன்றியத்தின் பணிகள் யாவை?

அண்ணன்: ஊராட்சி ஒன்றியம் அந்த வட்டார வளர்ச்சிக்கான பணிகளை மேற்கொள்கின்றது. போக்குவரத்துச் சாலைகளைச் செப்பனிடுதல், சாலைகளில் உள்ள பாலங்கள், அணைகள் ஆகியவற்றைக் கண்காணித்தல், வட்டார மக்கள் நோயினால் துன்புறாதவாறு காக்க மருத்துவ மனைகள் அமைத்தல், சிறுவர் சிறுமியரின் கல்வி வளர்ச்சிக்காகப் பள்ளிகள் நடத்துதல், திருமண மண்டபங்கள், பொது அங்காடிகள் ஆகியவற்றை நிறுவுதல், தொற்று நோய் பரவாதவாறு காத்தல், பிறப்பு இறப்புக் கணக்குப் பதிவு செய்தல், தங்கும் விடுதிகள் ஏற்படுத்துதல் ஆகியவை ஊராட்சி ஒன்றியத்தின் இன்றியமையாத கடமைகளாம்.

தம்பி: அண்ணா! ஊராட்சி மன்றமும் ஒன்றியமும் மேற்கொள்ளும் இப்பணிகளுக்கெல்லாம் பெரும் பொருள் செலவாகுமே!

அண்ணன்: ஆம் தம்பி! இந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்காகவே ஊராட்சி மன்றமும் ஒன்றியமும் வரிகள் பல விதிக்கின்றன. அவற்றின் மூலம் திரட்டும் பொருளைக்கொண்டே இப்பணிகள் எல்லாம் செய்யப்படுகின்றன.

தம்பி: அப்படி என்னென்ன வரிகள் விதிக்கப்படுகின்றன?

அண்ணன்: ஊராட்சி மன்றம் வீட்டு வரி, தொழில் வரி, வண்டி வரி முதலிய வரிகளை விதிக்கும். அவற்றுக்கு ஈடான ஒரு தொகையை அரசாங்கமும் தரும். அதற்கு ஈட்டு மானியம் என்பது பெயர். ஊராட்சி ஒன்றியம் திரட்டும் வரிகளிலிருந்தும் ஒரு பங்கு ஊராட்சி மன்றத்துக்குக் கிடைக்கும்.

தம்பி: அப்படியானால் ஊராட்சி ஒன்றியம் தன் வருவாயை எப்படிப் பெருக்குகிறது?

அண்ணன்: அங்காடிக் கட்டணம், உரிமங்களுக்கு விதிக்கும் கட்டணம், விடுதிக் கட்டணம், மீன் பிடித்தலிலும் தோணித்துறையிலும் பெறும் கட்டணம் முதலியவை ஊராட்சி ஒன்றியத்திற்கு உரியனவாகும். அன்றியும் அரசாங்கம் நிலவரிமீது ஒரு ரூபாவுக்கு 45 காசு வீதம் உள்ளூர் வரி விதித்து அத்தொகையை ஒன்றியத்துக்கு அளிக்கிறது. உள்ளூர் வரிமீது விதிக்கப்படும் மேற்கட்டணமும் ஒன்றியத்தைச் சேர்கிறது. திரைப்படம், விலங்கு விளையாட்டு (சர்க்கஸ்) போன்ற கேளிக்கைகளுக்காக அரசாங்கம் விதிக்கும் வரியிலிருந்தும் ஒன்றியத்துக்கு ஒரு பங்கு கிடைக்கிறது. ஒன்றியம் மேற்கொள்ளும் சாலைக் கண்காணிப்பு, பள்ளிகளின் பாதுகாப்பு ஆகியவற்றுக்கு அரசிடமிருந்து உதவித்தொகைகள் கிடைக்கின்றன. இவற்றைக் கொண்டே ஊராட்சி மன்றமும் ஒன்றியமும் சீராய் இயங்குகின்றன.

தம்பி: அண்ணா! நீங்கள் ஊராட்சி மன்றமும் ஒன்றியமும் எப்படி நடைபெறுகின்றன என்பதை நன்றாக விளக்கிக் கூறினீர்கள். உங்களுக்கு என் உளம் கனிந்த நன்றியை நவில்கிறேன்.

அண்ணன்: தம்பி! ஊராட்சி மன்றமும் ஒன்றியமுமே நம் குடியரசின் அடிப்படைகள். அவை சீராக நடந்தால் தான் நம் நாட்டில் நல்லாட்சி நிலவும். ஆகவே, அவை

மேற்கொள்ளும் பணிகள் செம்மையாக நடைபெற நாமும் ஒத்துழைக்கவேண்டும். அதுவே நாம் நாட்டுக்குச் செய்யும் நற்பணியாகும்.

அருஞ்சொற்பொருள்

வாக்காளர் - வாக்களிக்கும் உரிமையுடையவர்; மன்றம் - சபை; கல்வெட்டு - கல்லில் பொறிக்கப்பட்ட செய்தி; ஒன்றியம் - பல ஊராட்சி மன்றங்கள் ஒன்று சேர்ந்த அமைப்பு; தொகுதி - 'வார்டு'; அலுவலர் - அதிகாரி; துப்புரவு - தூய்மை; கண்காணித்தல் - மேற்பார்வையிடுதல்; சமுதாயம் - மக்கள் கூட்டம்; அங்காடி - கடை; ஈடான - சமமான; உரிமம் - 'லைசென்ஸ்'; கேளிக்கை - மகிழ்ச்சி தரும் நிகழ்ச்சி.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. ஊராட்சி மன்றம் நிறுவப்பட்டதன் நோக்கம் யாது?
2. பழங்காலத்திலும் ஊராட்சி மன்றம் அமைந்திருந்தது என்பதற்குச் சான்று தருக.
3. ஊராட்சி மன்றத்தின் அமைப்பு முறையை விளக்குக.
4. ஊராட்சி மன்றம் செய்யும் பணிகள் யாவை?
5. ஊராட்சி ஒன்றியம் எவ்வாறு அமைக்கப்படுகிறது?
6. ஊராட்சி ஒன்றியத்தின் கடமைகள் யாவை?
7. ஊராட்சி மன்றத்துக்கும் ஒன்றியத்துக்கும் பொருள் கிடைக்கும் வழிகள் யாவை?

II. உனது ஊராட்சி அல்லது நகராட்சி செய்துவரும் சிறப்பான பணிகளைக் குறித்துப் பத்து வரிகள் எழுதுக.

III. பிரித்து எழுதுக:

ஐந்நூறு, படிப்பகம், மேற்கட்டணம், நல்லாட்சி.

IV. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

வீடு வீடாய், ஏறக்குறைய, ஊதியம், கண்காணித்தல், செப்பனிடுதல், ஒத்துழைப்பு.

V. தெரிந்துகொள்க.

ஓர் ஊர் - ஒரு நாடு. அஃது ஊர் - அது மரம்.

வருமொழியின் முதல் எழுத்து உயிரெழுத்தானால் 'ஓர்' என்றும், உயிர்மெய்யெழுத்தானால் 'ஒரு' என்றும் எழுத வேண்டும்.

வருமொழியின் முதல் எழுத்து உயிரானால், சுட்டு அஃது, இஃது என்றும் வருமொழியின் முதல் எழுத்து உயிர்மெய் யானால் அது, இது என்றும் வரவேண்டும். அங்ஙனம் சில தொடர்களை எழுதிக்காட்டுக.

இலக்கணம்

காலம்

தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் ஊராட்சியை நடத்தினார்கள்.

தம்பி! நான் கூறுகிறேன்.

அலுவலர் செய்வார்.

இத்தொடர்களில் உள்ள நடத்தினார்கள், கூறுகிறேன், செய் வார் என்னும் சொற்களைக் கவனியுங்கள். இவை நடத்துதல், கூறுதல், செய்தல் என்னும் தொழில்களையும் காலத்தையும் உணர்த்துகின்றன. எனவே, இவை வினைச்சொற்களாம்.

இவற்றுள் நடத்தினார்கள் என்னும் வினைச்சொல் தொழில் முடிந்துவிட்டதை அறிவிக்கிறது. கூறுகிறேன் என்பது தொழில் நிகழ்ந்துகொண்டிருப்பதை உணர்த்துகிறது. செய்வார் என்பது தொழில் இனி நடக்கப்போவதைத் தெரிவிக்கிறது.

தொழில் முடிந்துவிட்டதை உணர்த்துவது இறந்த காலம் எனப் படும். தொழில் நிகழ்ந்துகொண்டிருப்பதை உணர்த்துவது நிகழ் காலம் எனப்படும். தொழில் இனி நடக்கப்போவதை உணர்த்து வது எதிர்காலம் எனப்படும்.

எனவே இறந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் எனக் காலம் மூவகைப்படும் என அறிக.

பயிற்சி

1. காலம் எத்தனை வகைப்படும்? அவற்றை விளக்குக.
2. கோடிட்ட இடங்களில் பின்வரும் வினைச்சொற்களுக்கு உரிய வேறு கால வினைச்சொற்களை எழுதுக:

இறந்தகாலம்	நிகழ்காலம்	எதிர்காலம்
————	ஆளுகின்றன	————
————	————	தேர்ந்தெடுப்பர்
படித்தேன்	————	————
————	வருகிறாள்	————
————	————	காண்பேன்
உண்டாய்	————	————

3. கோடிட்ட இடங்களில் பொருத்தமான காலத்தையுடைய வினைச்சொற்களை எழுதுக.

(1) வள்ளி நாளை வானொலியில் ————.

(2) நான் நேற்றுப் படக்காட்சிக்கு ————.

(3) இப்பொழுது மழை ————.

(4) வளவன் பாடங்களைப் படித்து ————.

(5) நாங்கள் ஆண்டு இறுதியில் தஞ்சைக்கு ————.

18. முக்கனிகள்

நாம் உண்ணும் உணவு பலவகைச் சத்துகளும் உடையதாக இருத்தல்வேண்டும். சத்துள்ள உணவே உடலை வளர்க்கிறது; உழைக்கும் ஆற்றலைத் தருகிறது. பழங்களில் உடலுக்கு ஊட்டம் தரும் உயிர்ச்சத்துகள் நிரம்ப உள்ளன. அதனாலேயே மருத்துவர்கள் நோயால் வருந்துகின்றவர்களுக்கும், வளரும் குழந்தைகளுக்கும் பழங்களையும் பழச்சாற்றையும் உணவாகக் கொடுக்குமாறு கூறுகிறார்கள். மக்கள் யாவருமே இயன்ற அளவு பழங்களை உண்ணும் பழக்கத்தை மேற்கொள்ளுதல் சிறந்ததாகும்.

இயற்கை அன்னை நாம் உண்டு மகிழத் தந்துள்ள பழவகைகளுள் சிறந்த மூன்றைத் தேர்ந்தெடுத்து நம்

முன்னோர் **முக்கனிகள்** என்று வழங்கினர். அவை **மா, பலா, வாழை** என்பனவாம். இவை தமிழகத்தில் மிகுதியாகக் கிடைக்கக்கூடிய பழவகைகளாகும். மா, பலா, வாழை ஆகிய மரங்கள் செழித்து வளர்வதற்கு ஏற்ற தட்பவெப்ப நிலை தமிழகத்தில் சிறப்பாக அமைந்துள்ளது. அதனால் இங்கு அம்மரங்கள் நன்கு வளர்ந்து பயன் தருகின்றன. அவற்றைப் பயிரிடுவோரும் மிக்க நன்மை அடைகின்றனர்.



முக்கனிகளுள் முதன்மையானது மாங்கனியாகும். 'மாதா ஊட்டாத சோற்றை மாங்கனி ஊட்டும்' என்பர். மாங்கனியின் சிறப்பை நம் தமிழ் நூல்கள் பாராட்டுகின்றன. நாரதர் கொண்டுவந்த மாம்பழம் தனக்குக் கிடைக்கவில்லையே என்னும் சினத்தால் முருகன் குடிகொண்ட இடமே பழனிமலை எனப் புராணம் கூறுகிறது. மாந்தளிர் மேனி, மாவடுபோன்ற கண் என, மாவின் இலை, காய் முதலியவற்றையும் புலவர்கள் உவமைகளாகக் கூறியுள்ளார்கள். மாவிலை மங்கலப் பொருள்களுள் ஒன்றாகக் கருதப்படுகிறது.

மாமரத்தில் இருவகை உண்டு. இனிய கனிகளைத் தரும் மரங்கள் **தேமாமரம்** எனப்படும். சிலவகை மரங்கள் புளிப்பான கனிகளையே தரும். அவை **புளிமாமரம்** எனப்படும். புளிமாமரத்தைப் பழுக்க விடமாட்டார்கள்; அவற்றின் காய்களைப் பறித்து ஊறுகாய்க்குப் பயன்படுத்துவார்கள்.

மாமரம் வெப்பம் மிகுந்த நாடுகளில் செழித்து வளரும். மாம்பழத்தின் முற்றிய கொட்டைகளைப் பத்து செண்டி மீட்டர் ஆழம் உள்ள குழிகளில் ஊன்ற வேண்டும். ஊன்றிய மூன்றாவது மாதத்தில் அது முளைவிட்டுச் செடியாக வளரும். மாஞ்செடிகளை **மாங்கன்றுகள்** என்பர். பின்னர் அந்த மாங்கன்றுகளைப் பெயர்த்து ஒரு மீட்டர் சதுரமும் ஆழமும் உள்ள குழி களில் ஆறு மீட்டர் இடம் விட்டு நடவேண்டும். நல்ல உரம் இட்டுப் போதிய தண்ணீர் பாய்ச்சிக் கருத்தாகக் கவனித்து வளர்த்தால் மாங்கன்று வேரூன்றி ஏழெட்டு ஆண்டுகளில் மரமாக வளர்ந்து பயன் கொடுக்கத் தொடங்கும்.

மாமரங்களை வளர்ப்பதில் இப்போது ஒரு புதிய முறை கையாளப்படுகிறது. உயர்ந்த இன மாமரத்தின் சிறு கிளையையும் தாழ்ந்த மாங்கன்றின் சிறு கிளையையும் சீவி ஒட்டி, ஒருவகைப் புது இனத்தை உருவாக்குகின் றனர். இவ்வகை மரம் ஒட்டு **மாமரம்** எனப்படும். ஒட்டு மாமரம் விரைந்து வளர்ந்து இரண்டு, மூன்று ஆண்டு களிலேயே பலன் தரும்.

மாங்கனிகளுள் பல வகைகள் உள்ளன. **மல்கோவா, பங்கனபள்ளி, குண்டு, உருமாணி, நீலம், பாதிரி** போன்றவை சிறந்த சுவையுடையனவாம். ஆந்திர மாநிலத் தில் சித்தூர் மாவட்டமும் தமிழகத்தில் சேலம் மாவட்டமும் மாம்பழத்தால் புகழ் பெற்றவை யாகும். அங்கிருந்து மாம்பழங்கள் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இங்கிலாந்து நாட்டின் அரசியான எலிசபெத் பேரரசியார் முடி சூட்டிக் கொண்டபோது பண்டித ஜவாஹர்லால் நேரு மாம் பழங்களையே பரிசாக அனுப்பிவைத்தார்.

முக்கனிகளுள் நடுநாயகமாக விளங்குவது பலாக்கனி யாகும். தமிழகத்தில் பலா மரங்கள் அதிகம். **வேர்ப்பலா, ஆசினிப் பலா, வருக்கைப் பலா, குறும் பலா** எனப் பலாவில் பலவகை உள்ளன. பலா மரங்கள் மலைப்பகுதிகளில்

செழிப்பாக வளரும். பாரியின் பறம்பு மலையில் பலா மரங்கள் மிகுந்திருந்ததாகவும் அதனால் பறம்பு நாடு உணவுப் பற்றாக்குறை இல்லாத நாடாக விளங்கிய தாகவும் கபிலர் என்னும் புலவர் பாடியுள்ளார்.

பலாக் கொட்டைகளை வண்டல் மண் நிறைந்த தொட்டிகளில் நட்டு, நீர் தெளித்து வந்தால் பதினைந்து நாள்களில் முளைத்துத் தளிர்விடும். தொட்டிகளில் ஈரக்கசிவு எப்போதும் இருந்துகொண்டே இருக்கவேண் டும். பலாக் கன்றுகள் சிறிது வளர்ந்தவுடன் தோட்டங் களில் குழி தோண்டி, எருவிட்டுப் பத்து மீட்டருக்கு ஒன்றாக இடம் விட்டு நடவேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை எருவிடுதல் இன்றியமையாததாகும். இங்ஙனம் கவனித்து வளர்த்தால் மரம் வேரூன்றிச் செழித்து வளர்ந்து பன்னிரண்டாம் ஆண்டு முதல் காய்க்கத் தொடங்கும். பலா மரம் பதினைந்து மீட்டர் உயரம் வளரும்; ஆண்டுக்கு நூறு காய்கள்வரை காய்க்கும்; நூறாண்டுகள் வரை வாழ்ந்து பயன்தரும்.

பழங்களில் மிகப் பெரியது பலாப்பழமேயாகும். பலாப்பழத்தின் சுளைகள் மிக்க சுவையுடையனவாகும். பலாப்பழங்களில் வேர்ப்பலா மிகச் சிறந்ததாகும். இது வேரிலேயே காய்ப்பதால் வேர்ப்பலா என்பப்பட்டது. பலாப் பழத்தில் பலவகை உணவுச் சத்துகளும் உள்ளன. எனினும், பலாப்பழத்தை மிகுதியாக உண்டால் வயிற்று நோய் உண்டாகும். 'அளவுக்கு விஞ்சினால் அமுதமும் நஞ்சு' அன்றோ?

முக்கனிகளுள் மூன்றாவதாக உள்ளது வாழைக்கனி. ஏழைகளும் வாங்கி உண்ணும் அளவுக்கு வாழை விலை மலிவானது. வாழை மரங்கள் நம் நாட்டில் ஏராள மாகப் பயிராவதே அதற்குக் காரணம். வாழை மரங்கள் இல்லாத ஊரே இல்லை எனலாம். ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் வாழை பயிர் செய்யப்படுகிறது. வாழைக்கு இடைவிடாத நீர்வளம் வேண்டும். அதனால் ஆற்றங்கரைகளில் வாழை செழிப்பாக வளரும்.

வாழை மரத்தை விதை நட்டுப் பயிர் செய்வதில்லை. வாழை மரத்தின் அடியில் வளரும் கன்றுகளையே பெயர்த்தெடுத்து நுனியைச் சீவி நட்டுப் பயிர் செய்யலாம். வாழைக் கன்றுகளை இரண்டரை மீட்டருக்கு ஒன்று வீதம் அரை மீட்டர் ஆழமுள்ள குழிகளில் நட வேண்டும். குறுக்கிலும் நெடுக்கிலும் ஆழமான கால்வாய்களை அமைத்து எப்போதும் நீர்பாய்ச்சி வரவேண்டும். அப்படி வளர்த்தால் வாழைக் கன்றுகள் ஓராண்டுக்குள் வளர்ந்து பயன்கொடுக்கும்.

வாழை குலையாகக் காய்க்கும். ஒவ்வொரு மரமும் ஒரு குலையே தள்ளும். வாழைக்குலை முற்றியவுடன் அம்மரத்தால் பயன் இல்லை. அதனால் அதனை வெட்டி விடுவர். அதனாலேயே 'மெல்லிய வாழைக்குத் தான் ஈன்ற காய் கூற்றம்' என்று நம் முன்னோர் பாடினர். ஒவ்வொரு மரத்தின் அடியிலும் பல கன்றுகள் தோன்றும். அவையும் தாய் மரத்தைப்போல வளர்ந்து பயன் தரும். இத்தகைய வாழையின் பண்பைத் தமிழ்ப் புலவர்கள் வியந்து பாராட்டியுள்ளனர். ஒருவரை வாழ்த்தும்போது 'வாழையடி வாழை என வாழ்க' என்று வாழ்த்துவது மரபு.

கனிவகைகளுள் ஆண்டு முழுதும் கிடைக்கக்கூடியது வாழைக்கனியேயாகும். அதனால் பழம் என்பது சிறப்பாக வாழைப் பழத்தையே குறிக்கும். **இரஸ்தாளி, மொந்தன், பூவன், பேயன், பச்சை நாடன்** என்று வாழையில் பலவகை உண்டு. இவையேயன்றிக் கற்பூர வாழை, மலை வாழை, செவ்வாழை, தேங்கதலி என்பன வாழைக் கனியில் மிகச் சிறந்தவையாகும். வாழைக் கனியே அன்றி அதன் இலை, பூ, காய், தண்டு, நார் முதலியனவும் மக்களுக்குப் பலவகைகளில் பயன்படுகின்றன. திருமணம், திருவிழாப்போன்ற காலங்களில் மங்கலச் சின்னமாகக் குலையுடன்கூடிய வாழை மரத்தை வாயிலில் கட்டி வைப்பது தமிழ் நாட்டு வழக்கமாகும்.

முத்தமிழ்போலச் சுவையுடைய இம்முக்கனிகளையும் தக்க வகையில் பயன்படுத்தி நல்வாழ்வு வாழ நாம் முயல்வோமாக.

அருஞ்சொற்பொருள்

ஆற்றல் - ஊட்டம், வலிமை; உயிர்ச்சத்து - 'வைட்டமின்'; இயன்ற அளவு - முடிந்த அளவு; தட்பவெப்ப நிலை - சீதோஷ்ண நிலை; மாதா - தாய்; மேனி - உடம்பு; மாவடு - மாம்பிஞ்சு; ஊன்றுதல் - நடுதல்; உரம் - எரு; பற்றாக்குறை - போதாமை; விஞ்சினால் - மிகுந்தால்; நஞ்சு - விடம்; கூற்றம் - இயமன்; மரபு - வழக்கம்; கதலி - வாழை; சின்னம் - அடையாளம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. பழங்களை உண்ணுதல் இன்றியமையாதது. ஏன்?
2. முக்கனிகள் யாவை? அவற்றின் சிறப்புகளை எழுதுக.
3. மாங்கனியின் பெருமையைக் கூறுக.
4. மாமரத்தைப் பயிர் செய்யும் முறையை விளக்குக.
5. மாம்பழங்களில் சிறந்த வகைகள் யாவை?
6. பலா எங்கு மிகுதியாக வளரும்? அதன் வகைகள் யாவை?
7. பலாவைப் பயிரிடும் முறையை விளக்குக.
8. வாழையின் வகைகள் யாவை?
9. வாழை பயிர் செய்யும் முறையை எழுதுக.
10. வாழையின் சிறப்புகள் யாவை?

II. குறிப்பு வரைக:

தேமா, வேர்ப்பலா, ஒட்டுமாமரம், பறம்பு நாடு.

III. பிரித்து எழுதுக:

பழச்சாறு, முக்கனி, ஆற்றங்கரை, செவ்வாழை, தண்ணீர்.

IV. சேர்த்து எழுதுக:

மா + தளிர்	மூன்று + தமிழ்
வாழை + கன்று	நூறு + ஆண்டு

V. வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

இயன்ற அளவு, தட்பவெப்ப நிலை, ஏற்றுமதி, மங்கலச் சின்னம்.

VI. தெரிந்துகொள்க:

கண்ணன் கடைக்குச் சென்றான். குருவிகள் வானத்தில் பறந்தன.—இங்ஙனம் சொற்கள் தகுதியான முறையில் பொருள் பொருத்தமுற அமைந்து நின்று ஒரு முடிந்த கருத்தைத் தெரிவிப்பது வாக்கியம் எனப்படும்.

பாவை கடைக்குப் போய் வந்தாள். — இங்ஙனம் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் முடிந்து நிற்பது முற்றுச் சொற்றொடர் எனப்படும்.

பாவை கடைக்குப் போய் — இங்ஙனம் சொற்கள் ஒன்றை ஒன்று தொடர்ந்து பொருள் முடியாமல் நிற்பது எச்சச் சொற்றொடர் எனப்படும்.

இலக்கணம்

வினைமுற்று

வேலன் விளையாடினான்.
வள்ளி பாடுகிறாள்.
உழவர் பயிரிடுவர்.

இத்தொடர்களில் உள்ள விளையாடினான், பாடுகிறாள், பயிரிடுவர் என்னும் சொற்கள் என்ன சொற்கள்? இவை தொழில்களை உணர்த்துவதால் வினைச்சொற்கள் அல்லவா? விளையாடினான் என்பது வேலன் செய்து முடித்த தொழிலை உணர்த்துகிறது. பாடுகிறாள் என்பது வள்ளி செய்துகொண்டிருக்கும் தொழிலை உணர்த்துகிறது. பயிரிடுவர் என்பது உழவர் செய்ய இருக்கும் தொழிலைத் தெரிவிக்கிறது.

விளையாடினான் என்பது என்ன திணை? என்ன பால்? உயர் திணை, ஆண்பால் அன்றோ? அவை எப்படித் தெரிகின்றன? அச் சொல்லின் ஈற்றில் உள்ள 'ஆன்' என்பதால் தெரிகிறது அன்றோ? ஆன் என்பதற்குப் பதில் 'ஆள்' என்பதைச் சேர்த்துப் பாருங்கள். விளையாடினாள் என்பது உயர்திணைப் பெண்பாலாகி விடும். இந்த ஆன், ஆள் என்பன 'விகுதிகள்' எனப்படும். 'ஆள்' விகுதி பெண்பாலை உணர்த்தும். 'அர்' விகுதி பலர்பாலை உணர்த்தும். பாடுகிறாள் என்பது பெண்பால். பயிரிடுவர் என்பது பலர்பால்.

இங்ஙனம் தொழிலையும் காலத்தையும் உணர்த்துவதோடு திணை, பால் காட்டும் விகுதியும் பெற்றுப் பொருள் முடிந்து நிற்கும் வினைச்சொல் முற்றுவினை அல்லது வினைமுற்று எனப்படும்.

வினைமுற்று இட வகையால் மூன்று வகைப்படும். அவற்றையே கால வகையால் பகுத்தால் ஒவ்வொன்றும் மூன்று வகைப்படும்.

வினைமுற்று எழுவாய்க்குப் பயனிலையாக அமையும்.

இடம்	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்	
நான்	உண்டேன்	உண்கிறேன்	உண்பேன்	தன்மை
நாம்	உண்டோம்	உண்கிறோம்	உண்போம்	
நீ	உண்டாய்	உண்கிறாய்	உண்பாய்	முன்னிலை
நீர்	உண்டீர்	உண்கிறீர்	உண்பீர்	
அவன்	உண்டான்	உண்கிறான்	உண்பான்	படர்க்கை
அவள்	உண்டாள்	உண்கிறாள்	உண்பாள்	
அவர்	உண்டார்	உண்கிறார்	உண்பார்	
அது	உண்டது	உண்கிறது	உண்ணும்	
அவை	உண்டன	உண்கின்றன	உண்ணும்	

பயிற்சி

1. வினைமுற்று என்பது யாது?
2. வினைமுற்று இடவகையாலும், கால வகையாலும் எத்தனை வகைப்படும்?
3. பின்வரும் வினைமுற்றுகள் என்ன வினைமுற்றுகள் என்று எழுதுக:

   தருகின்றன, பயன்படுத்துவர், சிறந்தது, முயல்வோம், தொடுக்கிறாள், கூறினான், நிற்கிறீர், கண்டாய், எழுதினேன்.

4. கோடிட்ட இடங்களில் தக்க வினைமுற்றுகளை அமைத்து எழுதுக:

   (1) நம் முன்னோர் முக்கனிகள் என்று ————.
   (2) தமிழ் நூல்கள் ————.
   (3) இளவரசி இனிமையாக ————.
   (4) நான் இலக்கணத்தை விருப்பமுடன் ————.
   (5) நெடுஞ்செழியன் பகைவரை ————.
   (6) இன்று நாம் படிக்க ————.
   (7) பலாக்கொட்டை பதினைந்து நாள்களில் ————.
   (8) நீங்கள் நாளை விரைவாக ————.
   (9) நீ என்று ————.

19. கைவிளக்கேந்திய காரிகையார்

மக்களாகப் பிறந்தவர்கள் விலங்குகளைப்போலத் தனித்து வாழ்பவர் அல்லர்; ஒரு சமூகமாகச் சேர்ந்து வாழும் இயல்புடையவர்கள். அத்தகைய மக்கள் சமூகத்தில் நோய் நொடியினாலோ, வறுமையினாலோ, எதிர்பாராத துன்பங்களாலோ வருந்துகின்றவர்களுக்கு மற்றவர்கள் தம்மால் இயன்ற உதவிகளைச் செய்து அவர்தம் துயர் துடைக்கவேண்டும். அதுவே சிறந்த சமூகத் தொண்டாகும். அங்ஙனம் தம் நலம் கருதாமல் பிறர்நலமே கருதிச் சமூகத்தொண்டு புரிந்து அழியாப் புகழ் பெற்றவர்களுள் **பிளாரன்சு நைட்டிங்கேல்** அம்மையாரும் ஒருவராவார்.

நைட்டிங்கேல் அம்மையார் இத்தாலி நாட்டில் உள்ள **பிளாரன்சு** என்னும் நகரில் கி.பி. 1820ஆம் ஆண்டில் பிறந்தார். அவர் தந்தையார் பெயர் **நைட்டிங்கேல்** என்பதாகும். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பெருஞ்செல்வர். அவர் பிளாரன்சு நகரில் வாழ்ந்தபோது பிறந்த தம் பெண் குழந்தைக்கு அவ்வூர்ப் பெயரையே சூட்டினார். அதனால், அந்தப் பெண்மணியார் பிளாரன்சு நைட்டிங் கேல் என்று வழங்கப்பட்டார்.

பிளாரன்சு நைட்டிங்கேல் இளமையிலேயே பல கலைகளிலும் வல்லவராக விளங்கினார். இசை, நாட்டியம், குதிரை ஏற்றம் ஆகியவற்றில் அவர் தேர்ச்சி பெற்றார்; தமது தாய்மொழியாகிய ஆங்கிலத்தோடு பிரெஞ்சு, ஜெர்மன், இத்தாலியன், கிரீக்கு, இலத்தீன் முதலிய மொழிகளையும் கற்றுத் தேர்ந்தார்; கணிதத்தில் தனித் திறமை பெற்றார். அவர் தந்தையார் தம் மகள் சிறந்த உலக அறிவு பெறுவதற்காக அயல் நாடுகளுக்கெல்லாம் அவரை அழைத்துச் சென்றார். அதனால், அவர் பல

திறப்பட்ட மக்களோடு கலந்து பழகித் தம் உலக அறிவையும் வளர்த்துக்கொண்டார்.

பின்னர்ப் பேரருட் செல்வியாராக விளங்கிய பிளாரன்சு நைட்டிங்கேல் அம்மையாரிடம் இளமையிலேயே அந்தப் பண்பு இயல்பாக அமைந்திருந்தது. அவர் செல்வம் மிக்க குடும்பத்தில் பிறந்தும் செருக்கில்லாமல் ஏழை எளியவர்களிடமும் அன்பாகப் பழகுவார். துன்பப்படுவோரிடம் தாமே சென்று அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்வார்; நோயால் வருந்துவோர்க்குத் தம்மாலான தொண்டுகளைச் செய்து ஆறுதல் கூறுவார்; அவர்களுக்கு மகிழ்ச்சிதரும் கதைகளைப் படித்துக்காட்டிக் களிப்பூட்டுவார். அதனால், ஊர் மக்கள் அவர் வரவை அன்புடன் எதிர்பார்ப்பர்; அவரிடம் பேசிப் பழகுவதில் மனநிறைவு கொள்வர். இங்ஙனம் பிளாரன்சு நைட்டிங்கேல் சிறுமியாக இருந்தபோதே சமூக சேவை செய்யும் செல்வியாராக விளங்கினார்.

அவருக்குப் பதினெட்டு வயதானபோது அவருடைய தந்தையார் அவரை இலண்டனுக்கு அழைத்துச் சென்று விக்டோரியா மகாராணியாரிடம் அறிமுகப்படுத்தினார்; இராணியாரிடம் அலுவல் செய்யும் வாய்ப்பினையும்

தேடித் தந்தார். ஏழைகளுக்குத் தொண்டு செய்யும் அவர் உள்ளம் அந்த வாய்ப்பை விரும்பவில்லை. அவர் இலண்டனிலிருந்த மருத்துவ நிலையத்திற்குச் சென்று நோயாளிகளுக்குத் தாதியராகப் பணிபுரியும் முறைகளைத் தெரிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டார். அப்பணி அவருக்கு மனநிறைவையும் மகிழ்ச்சியையும் தந்தது. அதனால், அவர் பிரான்சு, இத்தாலி, ஜெர்மன் முதலிய நாடுகளுக்கெல்லாம் சென்று தாதியர் தொழிலில் பயிற்சி பெற்றார். அப்பயிற்சியால் ஒரு மருத்துவ நிலையத்தைத் தலைமை ஏற்று நடத்தும் திறமையை அடைந்தார்.

நைட்டிங்கேல் அம்மையார் தம் திறமையால் இலண்டன் நகரத்திலிருந்த ஒரு பெரிய மருத்துவ நிலையத்தில் தாதியர் தலைவியாக நியமிக்கப்பட்டார். மேற்பார்வைக் குறைவினால் சீர்கெட்டிருந்த அந்த மருத்துவ நிலையம் அம்மையாரின் நன்முயற்சியால் மிகவும் சீர்பட்டது. அல்லும் பகலும் நோயாளிகளுக்கு உதவி செய்து ஆறுதல் அளித்தமையால் தாயைக் காணத் துடிக்கும் சேய்களைப்போல அவர்கள் அம்மையாரின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தார்கள். அவருடைய அன்பும் பொறுமையும் நகைமுகமும் இன்சொல்லும் யாவரையும் ஈர்த்தன. அவர் தொண்டின் சிறப்பை அறிந்த பொதுமக்கள் அவரைப் போற்றினர்.

இங்ஙனம் நைட்டிங்கேல் அம்மையார் இலண்டனில் தொண்டு புரிந்துகொண்டிருந்தபோது ஆங்கிலேயருக்கும் இரஷ்யருக்கும் கிரிமியா என்னும் இடத்தில் பெரும்போர் மூண்டது. ஆங்கிலேயருடன் பிரெஞ்சுக்காரரும் சேர்ந்து கொண்டமையால் போர் மிகவும் கடுமையானது. போரில் காயம் பட்டும் கை கால்களை இழந்தும் உயிர் துடித்துக்கொண்டிருந்த வீரர்களை எல்லாம் ஸ்குட்டாரி என்னும் இடத்தில் அமைக்கப்பட்டிருந்த மருத்துவ மனையில் சேர்த்தனர். அங்குப் புண்பட்ட வீரர்களை நல்ல முறையில் கவனித்து வேண்டிய உதவிகளைச்

செய்யச் சிறந்த தாதியர்கள் இல்லை. அதனால் படை வீரர் பலர் உயிர் துறந்தனர்.

போர் வீரர்கள் படும் துன்பத்தை அறிந்த நைட்டிங்கேல் அம்மையார் மிகவும் வேதனைப்பட்டார்; அவர்களுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்ய ஆவல் கொண்டார். அரசாங்கம் அம்மையாருடைய தொண்டின் சிறப்பை அறிந்து, அவர் தலைமையில் தாதியர் பலரை ஸ்குட்டாரிக்கு அனுப்ப முன்வந்தது. அதனால் மகிழ்ச்சியடைந்த அம்மையார் தந்நலமற்ற தாதியர் முப்பத்து நால்வருடன் ஸ்குட்டாரியை அடைந்தார்.

அந்த மருத்துவ மனை துப்புரவின்றி மிகவும் சீர்கேடான நிலையில் இருந்தது. புண்பட்ட வீரர்களுக்கு அங்கு வசதியான படுக்கைகள் இல்லை. நல்ல உணவும் நீரும் உடையும் அவர்களுக்குக் கிடைக்கவில்லை. அதனால் பலர் உயிர் துறந்தனர். அவற்றையெல்லாம் கண்ட நைட்டிங்கேல் அம்மையார் அம்மருத்துவ மனையைச் சீர்திருத்துவதையே தம் முதற் கடமையாகக் கொண்டார்.

அவர் இரவு பகலாகத் தம் தோழியருடன் பாடுபட்டு உழைத்து அம்மருத்துவ மனையைத் தூய்மைப்படுத்தினார்; வசதியான படுக்கைகளுக்கு ஏற்பாடு செய்தார்; தம் செலவிலேயே நல்ல உணவும் உடையும் கிடைக்க வழி செய்தார்; அம்மருத்துவ மனையின் அவல நிலையை அரசுக்கும் மக்களுக்கும் சுட்டிக் காட்டிக் கடிதங்கள் எழுதினார். அதனால் அரசிடமிருந்தும் பொது நிறுவனங்களிடமிருந்தும் மக்களிடமிருந்தும் வேண்டிய உதவிகள் கிடைத்தன. அவற்றைக்கொண்டு அம்மையார் அந்த மருத்துவ மனையை மேலும் சீர்திருத்தினார்; அமைதி தவழும் அன்புக் கோயிலாக்கினார்.

நைட்டிங்கேல் அம்மையார் போரில் புண்பட்ட வீரர்களுக்கு எல்லா வகையிலும் உதவி செய்தார். தாமே

ஒவ்வொரு நோயாளியிடமும் சென்று ஆறுதல் கூறினார்; இரவெல்லாம் கண்விழித்துத் தம் தோழியர் தம் கடமைகளைச் சரியாகச் செய்கின்றனரா என்று கண்காணித்தார்; கைவிளக்கு ஒன்றை ஏந்தி ஒவ்வொருவரிடமும் சென்று அவர் குறைகளைக் கேட்டு அவற்றை நீக்கினார்; அவர்களைத் தம் மென்மையான கைகளால் தடவிக் கொடுத்தார்; இன்சொல் பேசினார். அவருடைய அன்பும் இன்சொல்லும் நோயாளிகளுக்கு அருமருந்தாக அமைந்தன. அவருடைய அருட்பார்வை அவர்களுக்கு ஆறுதல் அளித்தது. அதனால், அவ்வீரர்கள் அவர் வரவை ஆவலுடன் எதிர்பார்த்தனர். **கைவிளக்கேந்திய காரிகையார்** என்றே அவரை அன்புடன் அழைத்தனர். அம்மையாருடைய முயற்சியால் அம்மருத்துவ மனையில் நூற்றுக்கு நாற்பத்திரண்டு பேர் இறந்த நிலை மாறி, நூற்றுக்கு இரண்டு பேரே இறக்கும் நிலை ஏற்பட்டது. இதன்மூலம் அவருடைய தொண்டின் சிறப்பு விளங்கும் அன்றோ?

கிரிமியாப் போர் முடிந்ததும் அம்மையாரது தொண்டின் பெருமை உலகெங்கும் பரவியது. விக்டோரியா மகாராணி அவரைப் பாராட்டி ஓர் இரத்தின மாலையைப் பரிசாக வழங்கினார். 'அரசின் தகுதிச் சுற்றம்' (The Order of Merit) என்னும் உயரிய பட்டமும் அளித்துச் சிறப்பித்தார். துருக்கி நாட்டு மன்னரும் ஓர் இரத்தின மாலையைப் பரிசாக வழங்கினார். பொதுமக்கள் 'நைட்டிங்கேல் நிதி' என்னும் பெயரால் பெரும்பொருள் திரட்டி வழங்கினர். அம்மையார் அந்த நிதியைத் தமக்குப் பயன்படுத்திக்கொள்ளாமல் மருத்துவ நிலையங்கள் அமைப்பதற்கும், தாதியர் பயிற்சிப் பள்ளிகள் நிறுவுவதற்குமே செலவிட்டார்.

நைட்டிங்கேல் அம்மையார் முதுமையில் உடல் தளர்ந்த நிலையிலும் பிறர் நலம் கருதிப் பாடுபட்டார். தாம் கண்டறிந்த உண்மைகளையும், பிணியாளர்களைக் காப்பதற்குரிய முறைகளையும், மருத்துவ நிலையங்

களைச் சீராக வைத்துக்கொள்வதன் இன்றியமையாமை யையும் விளக்கி அவர் நூல் ஒன்று எழுதி வெளியிட்டார். இன்று மருத்துவ நிலையத்தில் பணியாற்றும் தாதியர்க்கு அந்த நூல் ஒரு வழிகாட்டியாக விளங்குகிறது.

இங்ஙனம், தம் வாழ்நாள் முழுதும் பிறர்க்கெனவே உழைத்த அந்த அம்மையார் 1910ஆம் ஆண்டில் பொன் னுடல் நீத்துப் புகழுடம்படைந்தார். சமூக சேவையின் சின்னமாக விளங்கிய அம்மையாரின் புகழ் என்றும் நின்று நிலவும் என்பதில் ஐயம் இல்லை.

அருஞ்சொற்பொருள்

சமூகம் - மக்களினம்; செருக்கு - கர்வம்; களிப்பு - மகிழ்ச்சி; மனநிறைவு - திருப்தி; தாதி - பணிப்பெண்; அல் - இரவு; சேய் - குழந்தை; ஈர்த்தன - இழுத்தன, கவர்ந்தன; துப்புரவு - தூய்மை; அவல நிலை - தாழ்ந்த நிலைமை, துன்பமான நிலை; பொது நிறு வனம் - பொதுத்தொண்டு செய்யும் சங்கம்; கண்காணித்தார் - மேற்பார்வையிட்டார்; நிறுவுதல் - ஏற்படுத்துதல்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. பிளாரன்சு நைட்டிங்கேல் எங்கு எப்போது பிறந்தார்? அவர் அப்பெயர் பெறக் காரணம் யாது?
2. நைட்டிங்கேல் அம்மையார் அறிவிற் சிறந்து விளங்கியது எங்ஙனம்?
3. நைட்டிங்கேல் அம்மையாரிடம் இளமையில் விளங்கிய உயர் பண்புகள் யாவை?
4. நைட்டிங்கேல் அம்மையார் எங்ஙனம் தாதியர் தொழிலில் தேர்ச்சி பெற்றார்?
5. இலண்டன் மருத்துவ மனையில் அம்மையார் புரிந்த அருந் தொண்டினை எழுதுக.
6. ஸ்குட்டாரி மருத்துவ மனையின் அவல நிலையினையும், நைட்டிங்கேல் அதனைச் சீர்திருத்திய திறனையும் விளக்குக.

7. ஸ்குட்டாரி மருத்துவ மனையில் நைட்டிங்கேல் புரிந்த தொண்டுகளைப்பற்றி எழுதுக.
8. கைவிளக்கேந்திய காரிகையார் யார்? அப்பெயர் அவருக்கு எவ்வாறு பொருந்தும்?

II. நைட்டிங்கேல் அம்மையாரின் தந்நலம் கருதாத் தன்மையை ஒரு கட்டுரையாக வரைக.

III. கோடிட்ட இடங்களில் ஏற்ற சொற்களை நிரப்பி எழுதுக:

1. தமக்கென வாழாமல் ———— ———— உலகில் ———— வாழ்பவராவர்.
2. அவருடைய ———— ———— நோயாளிகளுக்கு அரு மருந்தாக விளங்கின.
3. விக்டோரியா மகாராணியார் நைட்டிங்கேல் அம்மையாரைப் பாராட்டி ———— பரிசாக வழங்கினார்; ———— என்னும் பட்டம் அளித்துச் சிறப்பித்தார்.

IV. சேர்த்து எழுதுக:

அவனது + கடிதம் பசுவினது + கொம்பு
என்னுடைய + பெட்டி தாயோடு + சென்றாள்.

V. சொந்த வாக்கியங்களில் அமைத்து எழுதுக:

மனநிறைவு, அறிமுகம், அல்லும் பகலும், அவலநிலை, தாயைக் காணத் துடிக்கும் சேய்போல.

VI. தெரிந்து கொள்க:

கிளி பழத்தைத் தின்றது.

கிளி - எழுவாய்; பழத்தை - செயப்படுபொருள்; தின்றது - பயனிலை.

இங்ஙனம் ஒரு வாக்கியத்தில் முதலில் எழுவாயும் இடையில் செயப்படுபொருளும் இறுதியில் பயனிலையும் அமைவது முறையாகும்.

இலக்கணம்

எச்சவினை — பெயரெச்சம்

கைவிளக்கு ஏந்திய காரிகையார்
மக்கள் தருகின்ற பரிசு
தாதியர் செய்யும் வேலை

இத்தொடர்களில் உள்ள ஏந்திய, தருகின்ற, செய்யும் என்னும் வினைச்சொற்களைக் கவனியுங்கள். அவை திணை, பால் காட்டுகின்றனவா? திணை, பால் காட்டும் விகுதிகள் இல்லாமையால் அவை திணை, பால் காட்டவில்லை. இத்தகைய வினைச் சொற்களுக்கு **எச்ச வினைகள்** என்பது பெயர். எச்சவினை **பெயரெச்ச வினை, வினையெச்ச வினை** என்று இருவகைப்படும்.

ஏந்திய என்னும் எச்சவினை காரிகை என்னும் பெயரைச் சேர்த்தால் பொருள் முடிந்து திணை, பால் உணர்த்துகிறது. அவ்வாறே **தருகின்ற** என்பது பரிசு என்னும் பெயரையும், **செய்யும்** என்பது வேலை என்னும் பெயரையும் சேர்த்தால் பொருள் முடிகின்றன.

இங்ஙனம் திணை, பால் காட்டும் விகுதி குறைந்து பெயரைச் சேர்த்தால் பொருள் முடியும் எச்சவினை **பெயரெச்சம்** எனப்படும். பெயர் எஞ்ச நிற்றலால் இப்பெயர் பெற்றது.

ஏந்திய என்பது ஏந்துதலாகிய தொழிலையும் இறந்த காலத்தையும் தெரிவிக்கின்றது. தருகின்ற என்பது தருதலாகிய தொழிலையும் நிகழ்காலத்தையும் உணர்த்துகின்றது. செய்யும் என்பது செய்தலாகிய தொழிலையும் எதிர்காலத்தையும் காட்டுகின்றது.

எனவே, பெயரெச்சம் இறந்த காலப் பெயரெச்சம், நிகழ்காலப் பெயரெச்சம், எதிர்காலப் பெயரெச்சம் என்று மூவகைப்படும்.

பயிற்சி

1. எச்சவினை என்றால் என்ன? விளக்குக.
2. எச்சவினை எத்தனை வகைப்படும்?
3. பெயரெச்சம் என்றால் என்ன? விளக்குக.
4. முக்காலப் பெயரெச்சங்களுக்கு வேறு எடுத்துக்காட்டுகள் தருக.
5. பின்வரும் தொடர்களில் உள்ள பெயரெச்சங்கள் எவ்வகைப் பெயரெச்சங்கள்?

(1) பிறந்த குழந்தை (2) புண்பட்ட வீரர்கள்
(3) படுகின்ற துன்பம் (4) கூறும் மொழிகள்
(5) உண்ணும் சோறு (6) பாடுகின்ற பாட்டு

20. நல்லவர் நட்பு

(நாடகம்)

இடம்: *காவிரிக்கரை*

நேரம்: *முற்பகல்*

உறுப்பினர்கள்: *கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார், கண்ணகனார், பொத்தியார், எயிற்றியனார், புலவர்கள்.*

[சோழ நாட்டு மன்னனாகிய கோப்பெருஞ்சோழன் தீயவர்களாகிய மைந்தர்களைப் பெற்ற பழிக்கு நாணி வடக்கிருந்து உயிர்விடத் துணிந்து காவிரிக் கரையை அடைந்தான். அவன் அவைப் புலவர்களும் அவனுடன் வடக்கிருக்கத் துணிந்து வந்தார்கள்.]

கோப்பெருஞ்சோழன்: *அருந்தமிழ்ப் புலவர்களே! என் ஆருயிர் நண்பர்களே! உங்களை எல்லாம் பிரிய வேண்டுமே என்பதை எண்ணும்போதுதான் என் மனம் நெருப்பிலகப்பட்ட புழுவைப்போலத் துடிக்கிறது. என்செய்வேன்!*

எயிற்றியனார்: *வேந்தே! தீய மைந்தர்களின் தீச்செயலுக்காகத் தாங்கள் உயிர்விடத்தான் வேண்டுமா? அதனால் அவர்கள் திருந்திவிடுவார்களா?*

கோப்பெருஞ்சோழன்: *திருந்த மாட்டார்கள். பாற்கடலில் படுவிடம் தோன்றியதுபோலச் சோழர் குடிக்கே களங்கம் விளைக்கத் தோன்றிய அவர்களைப் போர் புரிந்து அழித்திருப்பேன். நீங்கள் தடுத்துவிட்டீர்கள். அக்கொடியவர்களைப் பெற்ற பழிதீர நான் உண்ணாமலிருந்து உயிர்விடுவதைத் தவிர வேறு வழியில்லை.*

கண்ணகனார்: அப்படியானால் எங்களுக்கும் வேறு வழியில்லை. நாங்களும் தங்களுடன் வடக்கிருக்கத் துணிந்துவிட்டோம்.

கோப்பெருஞ்சோழன்: ஐயோ! இஃது என்ன கொடுமை! தவறு செய்தவன் தண்டனை அனுபவிப்பதுதான் முறை. நீங்கள் எல்லாம் ஏன் உயிர்விடவேண்டும்? நான் ஒருகாலும் இதற்கு இசையேன். நீங்கள் சென்று வாருங்கள். நீங்கள் எனக்குச் செய்யக்கூடிய உதவி ஒன்று உண்டு. என் மைந்தர்களால் நாட்டு மக்கள் நல்வாழ்வு குலையாமல் காப்பாற்றுங்கள். அது போதும்.

பொத்தியார்: அரசே! எங்களை நீர்வற்றிய குளத்தை விட்டு நீங்கிச் செல்லும் பறவைகள் என்று நினைத்துவிட்டீர்களா? அக்குளத்தில் உள்ள கொட்டியும் ஆம்பலும்போலத் தங்களுடன் ஒட்டி உயிர்விடும் உத்தம நண்பர்கள் நாங்கள் என்பதனை மறந்துவிட்டீர்களா? அருள்கூர்ந்து இன்பத்தில் தங்களுடன் இணைந்து மகிழ்ந்த நாங்கள் துன்பத்திலும் பங்குகொள்ள இசையுமாறு வேண்டுகிறோம். தங்களை விட்டுப்பிரிய நாங்கள் இசையோம். இஃது உறுதி.

கோப்பெருஞ்சோழன்: புலவர் பொத்தியாரா இவ்வாறு கூறுகிறார்? புலவரே! மற்றவர்கள் வேண்டுமானாலும் அவ்வாறு சொல்லலாம். நீங்கள் சொல்லக்கூடாது. உங்கள் குடிவிளங்க ஒரு மைந்தன் இல்லாத நிலையில் நீங்கள் என்னுடன் உயிர்விடுதல் அறமாகாது. நீங்கள் விரும்பினால் மைந்தன் பிறந்த பிறகு இம்முடிவை மேற்கொள்ளலாம். இஃது என் வேண்டுகோள் மட்டுமன்று; அரச ஆணை.

கண்ணகனார்: ஆமாம்! அரசர் கூறுவது மிகவும் சரி. பொத்தியாரே! நீங்கள் நட்புக் கடனாற்றச் சிறிது காலம் காத்திருக்க வேண்டியதுதான்.

பொத்தியார்: *அருமை நண்பர்களே! நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். நான் பாவியாகிவிட்டேன். அரச ஆணையை எவ்வாறு மீறுவேன்! நீங்கள் உண்ணாமல் உடல் உலர்ந்து, உயிர் ஊசலாட அணுவணுவாக உயிர் துறக்கும் அவலக் காட்சியை எவ்வாறு காண்பேன்? இப்பாழும் கண்களைப் பெயர்த்தெறியாமல் நிற்கிறேனே!*

கோப்பெருஞ்சோழன்: *என் இனிய நண்பரே! உங்கள் தூய அன்பை எண்ணி உவக்கின்றேன். நண்பனுடைய ஆவலை நிறைவேற்றுவதும் நட்புக் கடன்தானே? அருந்தமிழ்ப் புலவர்களே! எல்லாருக்கும் வடக்கிருக்க இடம் ஒதுக்குங்கள். என் பக்கத்தில் ஓர் இடத்தை வெறுமையாய் விட்டு வையுங்கள்.*

புலவர்கள்: *வேந்தே! மிக்க மகிழ்ச்சி. தங்களுடன் உயிர் விட எங்களுக்கு வாய்ப்பு அளித்ததற்கு நன்றி, நன்றி!*

எயிற்றியனார்: *வேந்தே! தங்களுடன் வடக்கிருக்க எங்களுக்கும் இடம் தந்தது குறித்து மகிழ்கிறோம். ஆனால், தங்களுக்குப் பக்கத்தில் ஓர் இடம் விடச் சொன்னது ஏன் என்பதுதான் புரியவில்லை.*

கோப்பெருஞ்சோழன்: *என் உயிரினும் சிறந்த நண்பர் பிசிராந்தையாரும் வடக்கிருக்க வருவார். அவருக்காகத்தான் இடம் ஒதுக்கச் சொன்னேன்.*

கண்ணகனார்: *வேந்தே! கனவு காண்கிறீர்களா? பிசிராந்தையாரை நீங்கள் கண்டதும் இல்லை; அவருடன் பழகியதும் இல்லை. அவர் பெருமையைக் கேட்டறிந்து அவரிடம் அன்புகொண்டீர்கள். அங்ஙனம் இருக்க எங்கோ பாண்டிய நாட்டில் பிசிர் என்னும் சிற்றூரில் வாழும் அப்புலவர் இப்போது இங்கு வருவார்; தங்களுடன் வடக்கிருந்து உயிர்விடுவார் என்பதை எண்ணிப் பார்க்கவே முடியவில்லையே!*

கோப்பெருஞ்சோழன்: *அன்பு நண்பர்களே! நல்ல நட்புக்கு நேரில் காண்பதும் நெருங்கிப் பழகுவதும் தேவையில்லை. நட்பு என்னும் உணர்ச்சி இருந்தால்*

போதும். அதுவே உடனுயிர்விடும் உள்ள உறுதியைத் தரும். பிசிராந்தையாரை நான் காணாவிட்டாலும் அவருடன் பழகாவிட்டாலும் நான் வேறு; அவர் வேறு அல்லர். அவர்தம் பெயரைக் கேட்டால் கோப்பெருஞ்சோழன் என்றே கூறுவார். அவ்வளவு நட்புப் பூண்ட அவர், நான் செல்வத்தில் மகிழ்ந்திருந்த போது வாராவிட்டாலும் இந்தத் துன்பத்தில் பங்கு கொள்ள உறுதியாக வருவார்; ஆதலால், அவருக்கும் இடம் ஒதுக்குங்கள்.

(பிசிராந்தையார் வருதல்)

பொத்தியார்: வேந்தே! அதோ யாரோ நம்மை நோக்கி வருவதுபோல் தோன்றுகிறது.

எயிற்றியனார்: வருபவர் ஒரு புலவரைப்போலத் தோன்றுகிறாரே!

கண்ணகனார்: ஆமாம்! புலவரேதான். ஒருவேளை வேந்தர் கூறியவாறு பிசிராந்தையார்தாம் வருகிறாரா?

புலவர்கள்: அருகில் வந்தால் தெரிந்துபோகிறது.

(பிசிராந்தையார் அருகில் வருதல்)

பிசிராந்தையார்: வேந்தே! தண்ணார மார்பின் தமிழர் பெருமானே! தங்களை இந்தக் கோலத்தில் காணவா ஓடோடி வந்தேன்! நான்தான் பிசிராந்தை. தங்களிடம் உயிரை வைத்திருக்கும் உத்தம நண்பனாகிய என் மனத்தில் தங்கட்கு ஏதோ துன்பம் ஏற்பட்டுவிட்டது போன்ற ஓர் உணர்ச்சி ஏற்பட்டது. அதனால் மிக்க கவலை கொண்டேன். என் கண்கள் தங்களைக் காணத் துடித்தன. உடனே புறப்பட்டேன். நெடுவழி கடந்துவர இவ்வளவு நாள்களாகிவிட்டன. வரும் வழியிலேயே செய்தி அறிந்து துடித்துப் போனேன்! தங்களோடு வடக்கிருந்து உயிர்விடத் துணிந்துவிட்டேன்! உயிர் போனபின் உடல் வாழ்வதுண்டோ?

கோப்பெருஞ்சோழன்: (பிசிராந்தையாரை மார்புறத் தழுவி) என் உயிரனைய நண்பரே! இப்பிறப்பில்

உங்களைக் காணக் கொடுத்துவைக்கவில்லையே என்று குறைபட்டுக்கொண்டிருந்தேன். அக்குறையும் தீர்ந்து விட்டது. உங்களைக் கண்டு நான் கொள்ளும் மகிழ்ச்சியை எவ்வாறு எடுத்துரைப்பேன்!

பொத்தியார்: ஆகா! என்னே வியப்பு! ஒருமுறையேனும் பார்த்தும் பழகியும் இராத இப்புலவர், தம் நண்பனுடன் உயிர்விடப் பாண்டிய நாட்டிலிருந்து வந்துள்ளாரே! பிசிராந்தையார் வருவார் என்று அரசர் உரைத்ததும், அவ்வுரை தவறாமல் இப்புலவர் இங்கு வந்ததும் எண்ணுந்தோறும் வியப்பாக இருக்கிறதே!

கண்ணகனார்: பொன் மண்ணுக்கடியில் மறைந்து கிடக்கிறது. இரத்தினங்கள் மலையில் இருக்கின்றன. முத்தும் பவளமும் கடலுக்கடியில் உள்ளன. இவை ஒன்றுக்கொன்று நெடுந்தொலைவில் இருந்தாலும் ஓர் அணிகலன் செய்யப்படும்போது யாவும் ஓரிடத்தில் கூடுகின்றன அல்லவா? அதுபோலச் சான்றோர்கள் எங்கிருந்தாலும் தக்க சமயத்தில் ஒருங்கு கூடுவதில் வியப்பில்லையே!

புலவர்களில் ஒருவர்: புலவர் பெருந்தகையே! எங்களுக்கு ஓர் ஐயம். நாங்கள் இளைஞர்களாக இருந்தபோதே உங்களைப்பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நாங்கள் யாவரும் இப்போது மூப்படைந்து நரை முதிர்ந்து விட்டோம். ஆனால், நீங்களோ நரை திரை இல்லாமல் இளமையாகவே இருக்கிறீர்களே!

பிசிராந்தையார்: (புன்னகை புரிந்து) நண்பர்களே! ஆண்டு பலவாகியும் நான் நரையில்லாமல் இருப்பதற்குக் காரணம் கூறுகிறேன் கேளுங்கள். என் மனைவி நற்குண நற்செயல்கள் வாய்ந்தவள். என் மக்கள் அறிவு நிரம்பியவர்கள். என் பணியாளர்களோ என் குறிப்பறிந்து ஏவல் செய்யும் நல்லியல்பு உடையவர்கள். இவற்றால் எனக்குக் குடும்பக் கவலை என்பதே இல்லை. என் நாட்டு அரசனாகிய பாண்டியன் அல்லவை செய்யாமல் நல்லவை செய்து நாட்டு

மக்களை அன்புடன் காத்து வருகிறான். அதனால், நாட்டுக் கவலையும் எனக்கு இல்லை. இவற்றிற்கு எல்லாம் மேலாக நான் வாழும் ஊரில் அறிவும் ஒழுக்கமும் நிரம்பிய சான்றோர் பலர் வாழ்கின்றனர். நான் அவர்களோடு பழகிக் கவலையற்று வாழ்கிறேன். இவ்வின்ப வாழ்வே நான் இளமையாக இருப்பதற்குக் காரணம்.

எயிற்றியனார்: நன்று நன்று! மனக் கவலையே வலிமைக் குறைவு என்பது உண்மைதான். இங்ஙனம் கவலையற்று வாழ்ந்த நீங்கள் நட்புக்காகக் கவலை கொண்டு ஓடி வந்ததை எண்ணி உவக்கிறோம். 'உங்கள் நட்பு வாழ்க! உங்கள் புகழ் என்றும் நிலவுக!' என்று வாழ்த்துகிறோம்.

பொத்தியார்: வேற்று நாட்டுப் புலவரின் உள்ளத்தையும் கொள்ளைகொண்ட வேந்தன் புகழ் வாழ்க!

புலவர்கள்: வாழ்க! வாழ்க!

பொத்தியார்: இத்தகைய நட்புக்குரிய நல்லவர்களைப் பிரிந்து இந்நாடு என்ன துன்பத்தை அடையுமோ என்பதுதான் எனக்குக் கவலை தருகிறது.

பிசிராந்தையார்: கவலைவேண்டா! நல்லவர்கள் பலர் வழி வழி தோன்றுவர்; உலகம் வாழும்.

அனைவரும்: வாழ்க வையகம், வளம் பல பெற்றே.

அருஞ்சொற்பொருள்

வடக்கிருத்தல் - வடக்கு நோக்கி அமர்ந்து உண்ணா நோன்பு மேற்கொண்டு உயிர்விடுதல்; படுவிடம் - கொல்லும் நஞ்சு; ஆம்பல் - அல்லி; ஆணை - கட்டளை; கடன் ஆற்ற - கடமையைச் செய்ய; அணுவணுவாக - சிறிது சிறிதாக; அவலக் காட்சி - துன்பக் காட்சி; தண் ஆரம் - குளிர்ந்த சந்தனம், மாலையுமாம்; அணிகலன் - ஆபரணம்; பெருந்தகை - பெரிய தகுதி வாய்ந்தவர்; நரை - வெண்மயிர்; திரை - தோலின் சுருக்கம்; ஏவல் - வேலை; அல்லவை - துன்பச் செயல்கள்; நிலவுக - விளங்குக; வையகம் - உலகம்.

பயிற்சி

I. விடை எழுதுக:

1. கோப்பெருஞ் சோழன் வடக்கிருக்கத் துணிந்தது ஏன்?
2. வடக்கிருத்தல் என்றால் என்ன?
3. சோழனின் அவைப் புலவர்களின் நட்பின் சிறப்பை விளக்குக.
4. கோப்பெருஞ் சோழன் பொத்தியார் வடக்கிருத்தலை ஏன் தடுத்தான்? அதனால் அவர் எவ்வாறு வருந்தினார்?
5. சோழன் தன் பக்கத்தில் ஓர் இடம் ஒதுக்கச்சொன்ன காரணம் யாது?
6. புலவர்களுக்கு ஏற்பட்ட ஐயம் யாது?
7. பிசிராந்தையாரின் நட்பின் சிறப்பாக மன்னன் கூறியது யாது?
8. பிசிராந்தையார் வரவுகண்டு பொத்தியார் வியந்து கூறியது யாது?
9. கண்ணகனார் பிசிராந்தையாரின் வரவைப் பாராட்டிக் கூறியது யாது?
10. நரை இல்லாமைக்குப் பிசிராந்தையார் கூறிய காரணங்கள் யாவை?
11. இந்நாடகத்தால் விளங்கும் உண்மை யாது?

II. பிரித்து எழுதுக:

பாற்கடல், அவலக் காட்சி, சிற்றூர், ஓடோடி.

III. சொந்த வாக்கியங்களில் பயன்படுத்தி எழுதுக:

நெருப்பில் அகப்பட்ட புழுவைப்போல, பாற்கடலில் படுவிடம் தோன்றியதுபோல, அணுவணுவாக, பங்கு கொள்ள, ஒருங்கு கூடுதல், நற்குண நற்செயல்கள், வழி வழி.

IV. தெரிந்துகொள்க:

1. என் மனைவி நற்குண நற்செயல்கள் வாய்ந்தவள்.
2. வேந்தே! கனவு காண்கிறீர்களா?

3. ஐயோ! இஃது என்ன கொடுமை!

4. புலவர்களே! என் பக்கத்தில் ஓர் இடத்தை விட்டு வையுங்கள்.

இவற்றில் முதல் வாக்கியம் ஒரு செய்தியை எடுத்துக் கூறுவதால் செய்தி வாக்கியம் எனப்படும். இரண்டாம் வாக்கியம் கேள்வியாக அமைந்திருப்பதால் வினா வாக்கியம் எனப்படும். மூன்றாவது இரக்க உணர்ச்சியைப் புலப்படுத்துவதால் உணர்ச்சி வாக்கியம் எனப்படும். நான்காவது கட்டளையிடுவதாக அமைந்திருப்பதால் கட்டளை வாக்கியம் எனப்படும். இவ்வாறு பொருள் கருதி வாக்கியம் நான்கு வகையாக அமையும். இந்நான்கு வகைக்கும் வேறு இரண்டிரண்டு எடுத்துக்காட்டுகள் தருக.

இலக்கணம்

வினையெச்சம்

பிசிராந்தையார் கோப்பெருஞ் சோழனை நோக்கி வந்தார்.

நீங்கள் கூற அறிகின்றோம்.

கண்ணால் பார்த்தால் நம்புவோம்.

இத்தொடர்களைக் கவனியுங்கள். இவற்றில் நோக்கி, கூற, பார்த்தால் என்பன பொருள் முடியாமல் இருப்பதால் எச்சவினைகளாம். நோக்கி என்பது வந்தார் என்னும் வினைச்சொல்லைச் சேர்த்தால் பொருள் முடிகிறது. அங்ஙனமே கூற என்பது அறிகின்றோம் என்ற வினைச்சொல்லையும், பார்த்தால் என்பது நம்புவோம் என்ற வினைச்சொல்லையும் கொண்டு பொருள் முற்றுப்பெறுகின்றன.

இங்ஙனம் திணை, பால் காட்டும் விகுதி குறைந்து வினைச் சொல்லைச் சேர்த்தால் பொருள் முடியும் எச்சவினையே வினையெச்சம் எனப்படும். வினையெஞ்ச நிற்றலால் இப்பெயர் பெற்றது.

நோக்கி என்பது இறந்த காலத்தையும், கூற என்பது நிகழ் காலத்தையும், பார்த்தால் என்பது எதிர்காலத்தையும் உணர்த்துகின்றன அல்லவா? இங்ஙனம், வினையெச்சம் தொழிலையும் காலத்தையும் உணர்த்துவதால் இறந்தகால வினையெச்சம், நிகழ் கால வினையெச்சம், எதிர்கால வினையெச்சம் என மூவகைப்படும்.

பயிற்சி

1. வினையெச்சம் என்றால் என்ன? விளக்குக.

2. முக்கால வினையெச்சங்களுக்கு வேறு எடுத்துக்காட்டுகள் தருக.

3. பின்வரும் தொடர்களில் உள்ள வினையெச்சங்களை எடுத்து எழுதுக.

   (1) தாங்கள் விரும்பினால் பிறகு இந்த முடிவை மேற்கொள்ளலாம்.

   (2) செய்தி அறிந்து துடித்தேன்!

   (3) அரசன் காக்க மக்கள் நலமுடன் வாழ்கின்றார்கள்.

   (4) பிசிராந்தையார் என் துன்பத்தில் பங்குகொள்ள வருவார்.

   (5) தங்கள் அன்பை எண்ணி உவக்கிறேன்.

தமிழ்நாட்டுப் பாடநூல் நிறுவனம்

கற்க கசடற

WRAPPER PRINTED BY OFFSET AT THE DIOCESAN PRESS, MADRAS-600 007